ஹகீகத் நூலக வெளியீடு இல. 14

# பிரிட்டிஷ் உளவாளியின் ஒப்புதல் வாக்கு மூலமும்

## இஸ்லாத்துக்கு எதிரான பிரிட்டனின் பகையும்

எழுதியது
**M. சித்தீக் குமுஸ்**

**19வது பதிப்பு**

**Hakikat Kitâbevi**
Darüşşefeka Cad. 53/A P.K.: 35
**34083** Fatih-IS TAN BUL/TURKEY
Tel: 90.212.523 4556–532 5843 Fax: 90.212.523 3693
http://www.hakikatkitabevi.com
e-mail: info@hakikatkitabevi.com
AUGUST -2020

## ஹுஸைன் ஹில்மி இஸிக்

ரஹ்மத்துல்லாஹி அலைஹி

ஹகீக்கத் புத்தக நிலையத்தின் வெளியீட்டாளர். அவர்கள் இஸ்தான்புலில் உள்ள அய்யூப் சுல்தான் என்ற இடத்தில 1329 /1911 ல் பிறந்தார்கள். அவர்கள் வெளியிட்ட 144 புத்தக வெளியீடுகளில் 60 அரபியிலும் 25 பாரசீக மொழியிலும் 14 துருக்கிய மொழியிலும், மீதி பிரெஞ்சு ஜேர்மன், ஆங்கில, ரஷிய மொழியிலும் உள்ளன.

இவர்கள் செய்யித் அப்துல் ஹக்கீம் அர்வாசி 'ரஹ்மத்துல்லாஹ்' அவர்களினால் நன்கு வழிநடத்தப்பட்டவர்கள். இவர்கள் பிரபல்யமான மார்க்க அறிஞரும் தஸவ்வுப் கலையில் முழுமையான தேர்ச்சி பெற்றதுடன் இறையருள் ஞானத்தை நிரம்பப்பெற்று முரீதுகளை செம்மையாக வழிநடத்தி மக்களை மீட்டெடுக்கும் தகுதி பெற்றவர்கள். இவர்கள் 8 ஷ'பான்1422 [25அக்டோபர் 2001] 9 ஷ'பான்1422 [26 அக்டோபர் 2001] இடைப்பட்ட இரவில் காலமாகி அயூப் சுல்தான் என்ற இடத்தில அடங்கப்பெற்றார்கள்.

---

## வெளியீட்டாளரின் குறிப்பு

இந்நூலினை அதன் அசல் வடிவத்திலோ அல்லது வேறு எந்த மொழியிலோ மொழிபெயர்த்து அச்சிட விரும்பும் எவருக்கும் எங்கள் அனுமதி முன்கூட்டியே தரப்படுகின்றது. மற்றும் இந்த நன்மைபயக்கும் முயற்சியை மேற்கொள்ளும் அன்பர்களுக்காக அல்லாஹ்விடம் அவனது ஆசியை பிரார்த்திப்பதோடு எங்களது நன்றியையும் தெரிவிக்கின்றோம். எனினும் எங்கள் அனுமதி அச்சிடுவதற்குப் பயன்படுத்தப்படும் காகிதம் நல்ல தரத்துடன் இருக்க வேண்டும், மொழிபெயர்ப்பு, எழுத்துக்கள், வடிவமைப்பு, அச்சு பதிப்பு என்பன அழகாகவும் தவறுகள் அற்றவையாகவும் இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

---

## உங்கள் கவனத்திற்கு

மிஷனரிகள் கிறிஸ்தவத்தை விளம்பரப்படுத்துவதற்கும் யூதர்கள் தல்மூதின் போதனைகளை பரப்புவதற்கும், மார்க்கமற்றவர்கள் எல்லாமதங்களையும் அழித்துவிடுவதற்கும் முயற்சி செய்கிறார்கள். இஸ்தான்புளில் உள்ள எங்கள் (ஹக்கீக்கத் பதிப்பகம்) தூய இஸ்லாத்தை விளங்கப்படுத்துவதற்காக மிகவும் பிரயத்தனப்படுகின்றோம். அறிவு ஞானமும் மனசாட்சியுமுள்ள ஒருவர் நிச்சயமாக இதில் நல்லதைத் தெரிவு செய்து பின்பற்றுவதுடன் மானிட இரட்சிப்புக்கும் இம்மை மறுமை மேம்பாட்டுக்குமாக இதை பரப்பவும் உதவி செய்வர்.

**TYPESET AND PRINTED IN TURKEY BY:**

Ihlas Gazetecilik A.S.

Merkez Mah. 29 Ekim Cad. Ihlas Plaza No: 11 A/41

34197 Yenibosna-ISTANBUL, TURKEY
Tel: 90.212.454 3000
ISBN: 978-975-8883-61-5

# முகவுரை

அல்லாஹுதஆலா குர்’ஆன் அல்-கரீமின் **சூரா ‘மாயிதா**’வின் எண்பத்து இரண்டாவது ஆயத்தில் பிரகடனப்படுத்துகிறான்; இஸ்லாத்தின் மிகப்பெரிய எதிரிகள் யூதர்களும் **முஷ்ரிக்குகளும்** (அல்லாஹு தஆலாவுக்கு இணை வைப்பது ஷிர்க். இந்த ஷிர்க்கை செய்பவர்கள்) இதில் முதலில் இஸ்லாத்தை உள்ளிருந்து அழிப்பதற்கு முயற்சி செய்தவன் எமனை சேர்ந்த அப்துல்லா இப்னு சபா என்று அழைக்கக் கூடிய யூதனாகும். அவன் அஹ்லுஸ் சுன்னா எனும் உண்மையான முஸ்லிம்களுக்கு எதிராக ஷீ’ஆ மதப்பிரிவை தோற்று வித்தான். இதற்கு பிறகு ஷீ’ஆ அறிஞர்களின் கோட்டுக்குள் இருக்கும் யூதர் கள் ஒவ்வொரு நூற்றாண்டிலும் இந்த பிரிவை உறுதிப்படுத்திக் கொண்டே இருந்தார்கள். ஈசா (அலைஹி-சலாமி)ன் வான் உயர்வுக்கு பிறகு பல குளறு படியான பைபிள்கள் எழுதப்பட்டன. பெரும்பாலான கிறிஸ்தவர்கள் முஷ்ரிக் ஆனார்கள். மற்றவர்கள் முஹம்மது ‘அலாஹி ஸலாமை’ நம்பாத காரணத் தினால் காபிர்கள் ஆனார்கள். அவர்களும், யூதர்களும் அஹ்லுல் கிதாப் (வேத புத்தகம் கொண்ட மக்கள்) என்று அழைக்கப்பட்டனர். இஸ்லாமிய மதம் நிறுவப்பட்டதும் கிறிஸ்தவ மற்றும் யூதமத போதகர்களின் இருண்டகால (ஆரம்பகால இடைக்காலத்தில் ஐரோப்பாவின் பின்தங்கிய நிலை) ஆதிக்கம் ஒழிக்கப்பட்டது. அதனால், அவர்கள் இஸ்லாத்தை ஒழிப்பதற்காக மிஷனரி அமைப்புகளை நிறுவினார்கள். ஆங்கிலேயர்கள் இந்த விஷயத்தில் முன்னோடியாக இருந்தனர். இஸ்லாத்திற்கு எதிராக போராடும் நோக்கத்தில் ஒரு காமன் வெல்த் அமைச்சு லண்டனில் நிறுவப்பட்டது. இந்த அமைச்சில் பணியாற்றியவர்களுக்கு யூத தந்திரங்களை கற்றுக் கொடுத்தார்கள். நினைத்துப்பார்க்க முடியாத தீய திட்டங்களை உருவாக்கி, அவர்கள் அனைத்து இராணுவ மற்றும் அரசியல் சக்திகளைப் பயன்படுத்தி கடைசி வரைக்கும் இஸ்லாத்தைத் தாக்கினார்கள். இந்த அமைச்சு மூலம் பணிக்கு அமர்த்தப்பட்டு அனைத்து நாடுகளுக்கும் அனுப்பப்பட்ட ஆயிரக்கணக்கான ஆண்,பெண் உளவு முகவர்களில் ஹம்பர் என்பவரும் ஒருவர். இவர் நஜ்தை சேர்ந்த பதினான்கு வயதுடைய முஹம்மத் என்பவரை பசறாவில் அவர்கள் பிடியில் சிக்கவைத்து அவரை பல வருடங்கள் தவறாக வழிநடத்தி அவர் மூலமாக அவர் பெயரில் வஹ்ஹாபி என்ற பிரிவை 1713/1125ல் நிறுவி னார்கள். நஜ்தி என்றும் அழைக்கப்படும் இப்பிரிவினர் சுன்னிகளுக்கும் மற்றும் ஷியாக் களுக்கு விரோதமானவர்கள். அவர்கள் ஃபிர்கத் அல்-மலுனா, சபிக்கப்பட்ட வர்கள் என்றும் அழைக்கப்படுகிறார்கள். இந்த பிரிவு 1150இல் அறிமுகப்படுத்த ப்பட்டது.

ஹம்பர் என்பவர் எகிப்து, ஈராக், ஈரான், ஹிஜாஸ் மற்றும் இஸ்லாமிய கிலாப த்தின் மத்திய நிலையமான இஸ்தான்புல் ஆகிய இடங்களில் முஸ்லிம் களை வழி தவற செய்வதற்கும் கிறிஸ்தவ மதத்துக்கு சேவை செய்வதற்கும் பிரிட்டிஷ் காமன்வெல்த் அமைச்சினால் பணிக்கு அமர்த்தப்பட்ட பிரிட்டிஷ் மிஷனரி ஆவார். இஸ்லாத்தின் எதிரிகள் இஸ்லாத்தை அழிக்க எவ்வளவு உறுதியுடன் முயற்சி செய்தாலும், அல்லாஹு தஆலாவின் இந்த ஒளியை அவர்களால் ஒருபோதும் அணைக்க முடியாது. அல்லாஹு தஆலா குர்ஆன் அல்-கரீமின் சூரா யூசுபின் பன்னிரண்டாவது மற்றும் அறுபத்து மூன்றாவது ஆயத்துகள், மற்றும் சூரா ஹிஜ்ரின் ஒன்பதாவது ஆயத்தில் பின்வருமாறு அறிவிக்கிறான்: **"இந்த குர்ஆனை உங்களுக்கு நான் வெளிப்படுத்தினேன். உண்மையாக நான் அதன் பாதுகாவலனாக இருப்பேன்"** நம்பிக்கை கொள்ளாதவர்களால் அதை இழிவுபடுத்தவோ, மாற்றவோ அல்லது அதை களங்கப்படுத்தவோ முடியாது. அவர்களால் அதன் ஒளியை அணைக்க முடியாது. பதினான்கு நூற்றாண்டுகளாக முஸ்லிம்கள் குர்ஆன் கற்றுத்தந்த ஒளியின் வழியில் வேலை செய்தனர். நெறிமுறைகளில், விஞ்ஞானஅறிவில், கலை வணிகம், மற்றும் அரசியலில் முன்னேற்றம் அடைந்தார்கள். அவர்கள் பெரிய மாநிலங்களையும் ஆட்சிகளையும் நிறுவினார்கள்.

1789/1204 இல்நடந்த பிரெஞ்சு புரட்சியின் பின்னர், ஐரோப்பிய இளைஞர்கள் அவர்களின் நாடுகளில் தேவாலயங்களாலும் பாதிரியார்களாலும் நடத்தப் படும் ஒழுக்கக்கேடுகள், கொடுமைகள், கொள்ளைகள் மற்றும் ஏமாற்று வேலைகளை கண்டனர். இதன் விளைவாக, சிலர் முஸ்லிம்களாக மாறினார் கள், மற்றும் சிலர் நாத்திகர்களாக மாறினர். அவர்கள் கிறிஸ்தவத்தில் இருந்து எவ்வளவு தூரம் விலகினார்களோ, அவ்வளவு தூரம் அவர்கள் அறிவியலிலும் தொழில்நுட்பத்திலும் அதிக முன்னேற்றம் அடைந்தனர். கிறிஸ்தவம் உலகாயுத முயற்சிகளுக்கும் முன்னேற்றத்திற்கும் தடையாக இருந்தது.

சில முஸ்லிம்கள், கிறிஸ்தவத்தை விமர்சிப்பதற்காக இந்த இளைஞர்களால் எழுதப்பட்ட புத்தகங்களைப் படிக்கிறார்கள். பிரிட்டிஷ் மிஷனரிகளினால் இஸ்லாத்திற்கு எதிராக எழுதப்பட்ட பொய்கள் மற்றும் அவதூறுகளை நம்பி இஸ்லாத்தைப் பற்றி முற்றிலும் அறியாத முட்டாளாகி விடுகிறார்கள். அதன்படி, அவர்கள் இஸ்லாத்திலிருந்து அந்நியப்பட்டனர். அறிவியலில் அவர்கள் வீழ்ச்சியடையத் தொடங்கினர். உலக முன்னேற்றத்துக்காக வேலை செய்யவேண்டும் என்பது இஸ்லாத்தின் முக்கிய கட்டளைகளில் ஒன்றாகும்.

பிரிட்டிஷ் சாம்ராஜியக் கொள்கை, உலகின் இயற்கை வளங்கள் மற்றும் செல்வங்களை சுரண்டுவதாகும். குறிப்பாக, ஆப்பிரிக்கா மற்றும் இந்தியா வில் உள்ள மக்களை மிருகங்களை போன்று

வேலைக்கு அமர்த்துவதன் மூலம் மற்றும் இதன் விளைவாக வரும் வருவாயையும், வளங்களையும் பிரிட்டனுக்கு மாற்றுவதை அடிப்படையாகக் கொண்டது. இஸ்லாம் மதத்தை அடையும் அதிர்ஷ்டத்தை பெற்ற மக்கள், அது நீதி, பரஸ்பர அன்பு மற்றும் தொண்டு என்பவற்றை கட்டளையிடுவதுடன் மற்றும் பிரிட்டிஷ் கொடுமை கள் மற்றும் பொய்களுக்கு முரணாக தடையை ஏற்படுத்துகின்றன என்பதை அறிந்து கொண்டனர்.

இந்த புத்தகம் மூன்று பிரிவுகளாக தயாரிக்கப்பட்டுள்ளது: முதல்பிரிவு ஏழு பகுதிகளைக் கொண்டது. அது பிரிட்டிஷ் உளவாளிகளின் இஸ்லாத்தை அழிப்பதற்காக ஆங்கிலேயர்களால் வடிவமைக்கப்பட்ட அவதூறுகளையும் துரோகங்களையும் விளக்குகின்றது.

இரண்டாவது பிரிவு பிரிட்டிஷார் எவ்வாறு நயவஞ்சகமான தங்கள் திட்டங்களை முஸ்லிம் நாடுகளில் நடைமுறையில் புகுத்தினர் என்பதை விவரிக்கின்றது. அவர்கள் அந்நாட்டின் அரசியல்வாதிகளை எவ்வாறு ஏமாற்றினார்கள், கற்பனை செய்ய முடியாத அளவிற்கு முஸ்லிம்கள் மீதான சித்திரவதைகளை செய்தனர், எப்படி இந்திய மற்றும் ஒட்டோமான் மாநிலங்களுக்கு நாசத்தை ஏற்படுத்தினார்கள் என்பதை விளக்குகின்றது. யூதர்களும் ஆங்கிலேயர்களும் இஸ்லாத்தை எவ்வாறு தாக்கினார்கள் என்பதை ஃபுவாத் பின் அப்துர்ரஹ்மான் ருஃபாய் அவர்களால் எழுதப்பட்டு குவைத்-சஃபாத்-சலீமிய்யாவில் மக்தபெதுஸ்ஸஹாபதுல் இஸ்லாமியாவி னால் வெளியிடப்பட்ட **ஹகிகத்-உல்-யஹுாத்** எனும் நூலின் மேற்கோள் களுடன் தெரிவிக்கப்பட்டது. எங்கள் புத்தகத்தின் இந்த பகுதி ஆவணங் களுடன் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால் வஹாபிகளால் கவரப்பட்ட ஏழை முஸ்லிம்கள் அதிலிருந்து விழித்தெழ வேண்டும் மற்றும் அஹ்லுஸ் சுன்னாவின் அறிஞர்களின் எழுத்துக்களை ஆதரிக்க வேண்டும்.

மூன்றாவது பிரிவு **குலாசத் உல் கலாம்** என்று அழைக்கப்படும் கையேட்டின் மொழிபெயர்ப்பு. இது இஸ்லாத்தின் சரியான வழியை காண்பிப்பதற்காக **சிராத்தல்-முஸ்தகிம்** சரியானபாதையை தீயபாதை (வழிகேடுகள்) களிலி ருந்து வேறுபடுத்துகின்றது.

தற்போது, உலகெங்கிலும் உள்ள முஸ்லிம்கள் மூன்று முக்கிய பிரிவினராக பிரிந்துவிட்டனர். முதல் பிரிவில் உண்மையான முஸ்லிம்கள் உள்ளனர். அவர்கள் சஹாபாக்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுபவர்கள். அவர்கள் **அஹ்லுஸ்-சுன்னா** என்று அல்லது **சுன்னி முஸ்லிம்கள்** அல்லது **ஃபிர்கத் அன்-நஜிய்யா**, என்று அழைக்கப்படுகிறார்கள். அதாவது நரகத்திலிருந்து பாதுகாக்கப்படுபவர்கள். இரண்டாவது பிரிவு சஹாபாக்களின் எதிரிகளை உள்ளடக்கியது. அவர்கள் ஷியாக்கள் (ஷியா) என்று அழைக்கப்படுகிறார்கள் அல்லது **பிர்கத் அல்-எலாலா** (பிரிந்த குழுவினர்). மூன்றாவது பிரிவு சுன்னிகள் மற்றும் ஷியாக்களுக்கு

விரோதமானவர்கள்; அவை **வஹாபிகள்** அல்லது **நஜ்திகள்** அழைக்கப்படுகின்றனர். ஏனெனில் அவர்கள் முதலில் அரேபியாவில் நஜ்த் நகரத்தில் தோன்றினர். அவர்கள் **ஃபிர்கத் அல்-மலுனா** (சபிக்கப்பட்ட குழு), ஏனெனில், எங்கள் வெளியீடுகள் **முடிவில்லாத பேரின்பம்** மற்றும் **மறுமையில் எழுப்பப்படுதல்** எழுதப்பட்டபடி. அவர்கள் முஸ்லிம்களை '**காஃபிர்கள்**' என்று அழைக்கிறார்கள். மற்றும் எங்கள் நபி அவர்கள் அப்படி கூறுபவர்களை சபித்தார்கள். இந்த முஸ்லிம்களை மூன்று குழுக்களாகப் பிரித்தது யூதர்கள் மற்றும் ஆங்கிலேயர்களுமாகும்.

| மிலாடி | ஹிஜ்ரி சூரிய | ஹிஜ்ரி சந்திரன் |
|---|---|---|
| **2001** | **1380** | **1422** |

**பிரிவு ஒன்று**

## பகுதி ஒன்று

ஹம்பர் [1] கூறுகிறார்:

நமது பிரிட்டிஷ் சாம்ராட்சியம் மிகவும் பெரியது. சூரியன் அதன் கடல்களின் மேல் உதிக்கிறது, மீண்டும், அதன் கடல்களுக்கு கீழே மறைகிறது. ஆனால் நமது நாடு ஒப்பீட்டளவில் இந்தியா, சீனா மற்றும் மத்திய கிழக்கில் உள்ள அதன் காலனிகளுடன் ஒப்பிடும் பொழுது பலவீனமாக உள்ளது. இந்த நாடுகள் முழுமையாக எங்கள் ஆதிக்கத்தின் கீழ் இல்லை. எனினும், நாங்கள் இவற்றில் மிகவும் சுறுசுறுப்பான மற்றும் வெற்றிகரமான கொள்கையை எடுத்து வருகின்றோம். அவை அனைத்தையும் விரைவில் முழுமையாக நாம் கைப்பற்றுவோம். அதற்கு இரண்டுவிஷயங்கள் முக்கியம்:

-நாங்கள் ஏற்கனவே பெற்ற இடங்களைத் தக்கவைக்க வேண்டும்
-இன்னும் பெறாத இடங்களை சொந்தமாக்க முயற்சி செய்யுய வேண்டும்

காமன்வெல்த் அமைச்சு இந்த இரண்டு பணிகளையும் நிறைவேற்றுவதற் காக ஒவ்வொரு காலனியிலிருந்தும் ஒரு கமிஷனை நியமித்தது. நான் காமன் வெல்த்(பொதுநலவாய) அமைச்சில் சேர்ந்தவுடன், அமைச்சர் என்மீது நம்பிக் கை வைத்து

என்னை கிழக்கு இந்தியாவில் உள்ள எங்கள் நிறுவன நிருவாகியாக நியமித்தார். வெளிப்புறமாக இது ஒரு வர்த்தக நிறுவனம். ஆனால் அதன் உண்மையான பணி மிகப்பெரிய இந்தியாவின் நிலங்கள் கட்டுப்படுத்தும் வழிகளைத் தேடுவதாகும்.

இந்தியாவைப் பற்றி எங்கள் அரசு சிறிதும் கவலைப்படவில்லை. இந்தியா பல்வேறு இனங்களைச் சேர்ந்த வெவ்வேறு மொழிகள் பேசும் மாறுபட்ட விருப்பங்கள் தேவைகளைக்கொண்ட மக்கள் ஒன்றாக வாழ்ந்த நாடு. நாங்கள் சீனாவுக்கும் பயப்படவில்லை. பௌத்த மதம் ஆதிக்கம் செலுத்தும் சீனாவில் கன்பூசியனிசம் இருந்தது, இரண்டுமே எங்களுக்கு பெரிய அச்சுறுத்தலாக இருக்கவில்லை. அவை இரண்டுமே வாழ்க்கையின் மீது அக்கறை இல்லாமல் நிறுவப்பட்ட இறந்த மதங்கள். இந்த காரணத்திற்காக, இந்த இரண்டு நாடுகளிலும் வாழும் மக்களுக்கு தேசபக்தி உணர்வு இல்லை. இந்த இரண்டு நாடுகளும் எங்கள் பிரிட்டிஷ் அரசு பற்றி கவலைப்பட வில்லை. ஆனாலும், பின்னர் ஏற்படக்கூடிய நிகழ்வுகளை பற்றி எங்கள் கருத்தில் கொள்ளப்படாமல் இல்லை. எனவே, முரண்பாடுகளை தோற்று விப்பதற்கும் அறியாமை, வறுமை மற்றும் நோய்களை கூட ஏற்படுத்த நீண்ட காலத் திட்டங்களை வடிவமைத்து வந்தோம். எங்கள் நோக்கங்களை

[1] பிரிட்டன், ஹெம்பரின் வாக்குமூலங்களை கிறிஸ்துவ பிரச்சாரத்துக்கு ஒரு வழிமுறையாக வெளியிட்டது. முஸ்லிம்களின் குழந்தைகளை தவறாக வழிநடத்தும் வகையில் இஸ்லாமிய போதனைகள் என்ற பெயரில் பொய்களையும் புனைவு களையும் எழுதினார். எனவே, இந்த பிரிட்டிஷ் பொறியிலிருந்து நமது இளைஞர்களைப் பாதுகாக்கும் நோக்கில், இந்த புத்தகத்தை நாங்கள் வெளியிடுகிறோம், இது அவர்களின் பொய்கள் மற்றும் அவதூறுகளுக்கு எதிரான திருத்தமாகும்.ஹெம்பரின் ஒப்புதல் வாக்குமூலங்கள் மற்றவர்கள் எழுதிய கற்பனைக் கதைகள் என்று கூறும் நபர்களும் கூட உள்ளனர். ஆனால் அவர்களால் அதற்கான சான்றுகள் எதையும் வழங்க முடியாது.

எளிதில் மறைக்க இந்த இரண்டு நாடுகளின் பழக்கவழக்கங்கள் மற்றும் மரபுகளை நாங்கள் பின்பற்றினோம். எங்கள் நரம்புகளை இஸ்லாமிய நாடுகள் தான் மிகவும் குழப்பிவிட்டன. நாங்கள் ஏற்கெனவே அவர்களுடன்; நோய்வாய்ப்பட்ட மனிதனுடன் (ஒட்டோமான் பேரரசு). சில ஒப்பந்தங்கள் செய்திருந்தோம். அவை அனைத்திலும் எங்களுக்கு நன்மைகள் இருந்தன, காமன்வெல்த் அமைச்சின் அனுபவம் வாய்ந்த உறுப்பினர்கள் இந்த நோய்வாய்ப்பட்ட மனிதன் ஒரு நூற்றாண்டிற்குள் இறந்துவிடுவான் என்று முன்னறிவித்தனர். நாங்கள் ஈரானிய அரசாங்கத்துடன் சில இரகசிய ஒப்பந்தங்களை செய்திருந்தோம். அதற்கு மேலாக, இந்த இரண்டு நாடு களிலும் எங்கள் கூலியாட்களை அரசியல்வாதிகளாக உருவாக்கினோம். ஊழல், லஞ்சம், திறமையற்ற நிர்வாகம், மற்றும் குறைவான மார்க்க க்கல்வி என்பவற்றுடன அவை அழகான பெண்களால் ஆக்கிரமிக்கப்பட்டு அதன் விளைவாக கடமைகளை புறக்கணிப்பதால், இந்த இரண்டு நாடுகளின் முதுகெலும்புகளை உடைத்தது. இவை அனைத்தையும்

மீறி, எங்கள் செயல் பாடுகள் நமக்கு எதிர்பார்க்கப்பட்ட முடிவுகளைத் தரவில்லை என்று நாங்கள் கவலைப்பட்டோம். நான் கீழே காட்டப் போகும் காரணங்களுக்காக:

1. முஸ்லிம்கள் இஸ்லாத்தின்மீது மிகுந்த பக்தி கொண்டவர்கள். ஒவ்வொரு முஸ்லீமும் ஆகக்குறைந்தது, ஒரு கிறிஸ்தவ மதகுரு அல்லது துறவியைப் போன்று இஸ்லாத்துடன் வலுவாக இணைக்கப்பட்டுள்ளனர். இல்லை யென்றால். அறியப்பட்டபடி, பாதிரியார்கள் மற்றும் துறவிகள் கிறிஸ்த வத்தை கைவிடுவதை விட இறப்பதை விரும்புவார்கள். அத்தகையவற்றில் மிகவும் ஆபத்தானவர்கள் ஈரானின் ஷியாக்கள். ஏனென்றால் அவர்கள் ஷீஆக்கள் அல்லாதவர்களை அவிசுவாசிகள் மற்றும் தவறானவர்கள் என்று மக்களை வீழ்த்துகிறார்கள். ஷியாக்களின் படி கிறிஸ்தவர்கள் தீங்கு விளை விக்கும் அழுக்கு போன்றவர்கள். இயற்கையாகவே, ஒருவர் அழுக்கிலிருந்து விடுபட முடியுமானதை செய்வார். நான் ஒரு முறை ஒரு ஷியாவிடம்: நீங்கள் ஏன் கிறிஸ்தவர்களை அந்த மாதிரி பார்க்கிறீர்கள்? என்று கேட்டேன். எனக்கு அளித்த பதில் இதுதான்: "இஸ்லாத்தின் தீர்க்கதரிசி மிகவும் புத்திசாலி நபராக இருந்தார். அவர் கிறிஸ்தவர்களை அல்லாஹ்வின் மதம் இஸ்லாத்தில் சேர்ப்பதற்காக அவர்களை ஆன்மீகத்தின் அடக்குமுறையின் கீழ் வைத்தார் அதன்மூலம் அவர்கள் சரியான நேர்வழியை கண்டு கண்டுகொள்வற்காக. உண்மையில், ஒரு அபாயகரமானவரை ஒருவரை ஆன்மீக ஒடுக்குமுறையின் கீழ் அவர் கீழ்ப்படிதலை உறுதியளிக்கும்வரை வைப்பது ஒரு சாம்ராஜிய கொள்கையாகும். நான் கூறும் அழுக்கு பொருள் அல்ல அது ஆன்மிக அழுக்கு; இது கிறிஸ்தவர்களுக்கு மட்டும் அல்லாத ஒரு ஆன்மீக ஒடுக்கு முறை. அது அஹ்லுஸ் சுன்னா மற்றும் அனைத்து அவிசுவாசிகளையும் உள்ளடக்கியது. ஷியாபிரிவினரின் கருத்துப்படி ஈரானிய மூதாதையர்கள் பண்டைய மாகியன் கூட தவறானவர்கள். நான் அவரிடம் சொன்னேன்: "சரி! அஹ்லுஸ் சுன்னா மற்றும் கிறிஸ்தவர்கள் அல்லாஹ், தீர்க்கதரிசிகள் மற்றும் தீர்ப்பு நாளையும் நம்புகிறார்கள்,அவர்கள் ஏன் பிழையாக வேண்டும்? அவர் பதிலளித்தார், "அவர்கள் இரண்டு காரணங்களுக்காக தவறானவர்கள்:

அவர்கள் நம்முடைய தீர்க்கதரிசி, முஹம்மது சல்லால்லாஹு அலைஹி வசல்லமுக்கு பொய்யானதை இட்டுக்கட்டுகிறார்கள். அல்லாஹ் இதுபோன்ற

செயலில் இருந்து[1]எங்களைப் பாதுகாப்பானாக! இந்த கொடூரமான புனைத லுக்கு எதிராக; ஒரு நபர் உங்களைத் துன்புறுத்துகிறார் என்றால், பதிலுக்கு நீங்கள் அவரைத் துன்புறுத்தலாம் 'என்ற கட்டளைக்கு இணங்க: 'நீங்கள் கெட்டவர் என்று சொல்வது. இரண்டாவதாக; கிறிஸ்தவர்கள் அல்லாஹு தஆலாவின் தீர்க்கதரிசிகளை பற்றி அவர்களை பாதிக்கக்கூடிய குற்றச் சாட்டுகளை முன்வை க்கின்றார்கள். உதாரணமாக, அவர்கள்: "ஈசா

(இயேசு) (அலைஹி-சலாம்) மது அருந்தினார்கள் மற்றும் அவர் சபிக்கப்பட்டதனால், சிலுவையில் அறையப்பட்டார்" என்று கூறுகிறார்கள். நான் அதிர்ச்சியுடன், அந்த மனிதரிடம் கூறினேன் கிறிஸ்தவர்கள் அப்படி சொல்லவில்லை என்று. அதற்கு அவர். "ஆம் அவர்கள் கூறுகிறார்கள்" உங்களுக்கு தெரியாது. புனித பைபிளில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது என்று பதில் அளித்தார். நான் அமைதியானேன். அந்த மனிதன் முதலாவதில் விசயத்தில் சரி, இரண்டாவது விசயத்தில் இல்லை. நான் சர்ச்சையை தொடர விரும்பவில்லை. நான் இஸ்லாமிய உடையில் இருந்தபடியால் என்னை அவர் சந்தேகிக்கலாம். அதனால் நான் இதுபோன்ற சர்ச்சைகளைத் தவிர்த்தேன் .

2- இஸ்லாம் ஒரு காலத்தில் நிர்வாகம் மற்றும் அதிகாரத்தின் மதமாக இருந்தது. மேலும் முஸ்லிம்கள் மதிக்கப்பட்டனர். மரியாதைக்குரிய மக்கள் அவர்கள் இப்போது அடிமைகள் என்று சொல்வது கடினமாக இருக்கும். இஸ்லாமிய வரலாற்றை பொய்யாக்கி முஸ்லிம்களிடம் கூற முடியாது. ஒரு காலத்தில் நீங்கள் பெற்ற மரியாதை சில(சாதகமான) நிலைமைகளின் விளைவாகும். அந்த நாட்கள் இப்போது போய்விட்டன, அவை ஒருபோதும் திரும்பி வராது.

3- ஒட்டோமான்கள் மற்றும் ஈரானியர்கள் எங்கள் சதித்திட்டங்களைக் கவனித்து அவற்றை முறியடிக்கலாம் என்று நாங்கள் மிகவும் கவலைப் பட்டோம். இந்த இரண்டு நாடுகளும் ஏற்கனவே கணிசமாக பலவீன மடைந்து ள்ள போதிலும், அவர்களுக்கு ஒரு மத்திய அரசாங்கம் ஆயுதம் மற்றும் அதிகாரம் மற்றும் சொத்துகளுடன் இருந்ததால் எங்களால் உறுதியாக உணர முடியவில்லை.

4- இஸ்லாமிய அறிஞர்கள் பற்றி நாங்கள் மிகவும் கவலையாக இருந்தோம்.

---

[1] எவ்வாறாயினும், நம் நபிக்கு பொய்யை இட்டு கட்டியவர்கள் ஷியாக்கள் மற்றும் கிறிஸ்தவர்கள். ஷியாக்களின் மாறுபட்ட நம்பிக்கைகள், வார்த்தைகள் மற்றும் அழுக்கு வேலைகள் நமது நபி மற்றும் குர்ஆன் அல்-கரீமுடன் ஒத்துப்போகாதவை என அஹ்லுஸ்சுன்னா புத்தகங்களில் ஒவ்வொன்றிலும் எழுதப்பட்டு மறுக்கப்படுகிறது. சவாயிக் உல்-முஹ்ரிகா, துஹ்ஃபா இத்னா அஸ்ஹரியா, தய்யித் அஹ்ல் சுன்னா,நஹியா, அஸ்ஹாப் கிராம், ஹுஜாஜ் கதிய்யா மற்றும் மிலால் வா நிஹால். நூலாசிரியர்: சவாயிக் அகமது இப்னி ஹஜார் மக்கி 1566/974 இல் மக்காவில் இறந்தார்; துஹ்ஃபாவின் ஆசிரியர் அப்துல் அஜீஸ் 1824/1239 இல் டெல்லியில் இறந்தார்; தய்யித் ஆசிரியர் இமாம் ரப்பானி அஹ்மத் ஃபாருகி 1624/1034 செர்ஹெண்டில் இல் மறைந்தார். நஹியாவின் எழுத்தாளர் அப்துல் அஜீஸ் ஃபெர்ஹரேவி 1824/1239 இல் இறந்தார்; **சஹாபாத் அல்-கிராம்** எழுத்தாளர் அப்துல்ஹகிம் அர்வாசி 1943/1362 இல் அங்காராவில் இறந்தார்; ஹுஜாஜின் எழுத்தாளர் அப்துல்லா சுவைதி 1760/1174 இல் பாக்தாத்தில் இறந்தார்; மிலாலின் எழுத்தாளர் முஹம்மது ஷிஹ்ரிஸ்தானி 1154/548 இல் பாக்தாத்தில் இறந்தார்.

அதற்காக, இஸ்தான்புல் மற்றும் அல்-அஸ்ஹார் (இஸ்லாமிய மற்றும் அரபிக் கற்றல் மையம், கெய்ரோவில், ஷியாக்களால் நிறுவப்பட்டது), மற்றும் ஈராக் மற்றும் டமாசீன் அறிஞர்கள் எங்கள் நோக்கங்களுக்கு எதிராக தீர்க்க முடியாத தடைகளை ஏற்படுத்தினர். ஏனென்றால் அவர்கள் ஒருபோதும் அவர்களுடைய கொள்கைகளை நிலையற்ற உலகம் இன்பங்கள் மற்றும் அலங்காரங்களுக்கு மிகச்சிறிய அளவிலேனும் சமரசம் செய்துகொள்ளாத மன நிலையை ஏற்படுத்திக்கொண்ட மனிதர்கள். அவர்கள் எப்பொழுதும் குர்ஆனில் கரீமில் வாக்குறுதியளிக்கப்பட்ட சொர்க்கத்தின் மீது தங்கள் கவனத்தை செலுத்தினார்கள். மக்கள் அவர்களைப் பின்தொடர்ந்தனர். சுல்தான் கூட அவர்களுக்கு பயந்தார். சுன்னிகள் ஷியாக்களை போன்று அறிஞர்களை வலுவாக பின்பற்றவில்லை. ஷியாக்கள் புத்தகங்களை படிப்பதில்லை ஆதலால் அவர்கள் அறிஞர்கள் மட்டுமே அங்கீகரித்தனர். மற்றும் சுல்தானுக்கு உரிய மரியாதை காட்டவில்லை. சுன்னிகள், மறுபுறம், புத்தகங்களைப் படிப்பதிலும், மதிப்பிற்குரிய அறிஞர்களையும் சுல்தானை யும் மதித்தார்கள். நாங்கள் எனவே தொடர்சியாக மாநாடுகளையும் கருத்தரங்குகளையும் தயாரித்தோம். ஆனாலும் ஒவ்வொரு முறையும் நாங்கள் முயற்சிகும்போது எங்களுக்காக வீதிகள் மூடப்பட்டதை நாங்கள் ஏமாற்றத்துடன் பார்த்தோம். எங்களுடைய உளவாளிகளிடமிருந்து பெற்ற அறிக்கைகள் எப்போதும் ஏமாற்றமளிப்பதாக இருந்தன. மாநாடுகள் வீணாகி விட்டன. இருந்தாலும் நாங்கள் நம்பிக்கையை கைவிடவில்லை. நாங்கள் ஒரு ஆழ்ந்த பெரு மூச்சு எடுப்பது, மற்றும் பொறுமையாக இருப்பது போன்ற பழக்கத்தை உருவாக்கியவர்கள். எங்கள் அமைச்சர், மிக உயர்ந்த நிலையிலுள்ள கிறிஸ்தவ மத அறிஞர்கள் மற்றும் ஒரு சில நிபுணர்கள் கலந்து கொண்ட ஒரு மாநாடு நடந்தது. நாங்கள் இருபது பேர் இருந்தோம். எங்கள் மாநாடு மூன்று மணிநேரம் வரை நீடித்தது, இறுதி அமர்வு பலனளிக்காமல் ஒரு தீர்மானம் இல்லாமல் முடிந்தது. ஆயினும் ஒரு பாதிரி: “கவலைப்படாதே! மேசையா(ஈசா-இயேசு)க்கு மற்றும் அவரது தோழர்கள் முன்னூறு ஆண்டுகள் நீடித்த துன்புறுத்தல்களுக்கு பிறகு தான் அதிகாரத்திம் கிடைத்தது. தெரியாத உலகத்திலிருந்து, அவர் நம்மீது ஒரு கண்வைத்து அவிசுவாசிகளை(முஸ்லிம்கள்), அவர்களின் மையங்களில் இருந்து வெளி யேற்றும் நல்ல அதிர்ஷ்டம் நமக்கு அருள்வார். அது முன்னூறு ஆண்டு களுக்குப் பிறகு என்று நம்பப்படுகிறது. ஒரு வலுவான நம்பிக்கை, மற்றும் நீண்டகால பொறுமையுடன் அதிகாரத்தைப்பெறும் பொருட்டு, நாம் ஆயுதம் ஏந்தவேண்டும்! நாம் எல்லா வகையான ஊடகங்களையும் கைப்பற்ற வேண்டும், அனைத்து சாத்தியமான முறைகளையும் முயற்சி செய்ய வேண்டும். நாம் முஸ்லிம்களுக்கிடையே கிறிஸ்தவத்தை பரப்ப முயற்சிக்க வேண்டும். நம் குறிக்கோளை அடைய அது பல நூற்றாண்டுகள் ஆனாலும் கூட நல்லது. தந்தைகள் தங்கள் குழந்தைகளுக்காக உழைக்கிறார்கள்”.

ஒரு மாநாடு நடைபெற்றது, அதில் ரஷ்யா, பிரான்ஸ், மற்றும் இங்கிலாந்தில் இருந்து இருந்து இராஜதந்திரிகளும் மத பிரமுகர்களும் கலந்து கொண்டனர். நான் மிகவும் அதிர்ஷ்டசாலி நானும், கலந்து கொண்டேன். ஏனென்றால் நானும் அமைச்சரும் நல்ல நிலையில் இருந்தோம். மாநாட்டில் முஸ்லிம் களை குழுக்களாக உடைப்பது மற்றும் அவர்களை தங்கள் நம்பிக்கையை கைவிட்டு, ஸ்பெயினை போன்று அவர்களை (கிறிஸ்தவத்துக்கு மாற்று வது) போன்ற திட்டங்கள் விவாதிக்கப்பட்டது. இருந்தும், எதிர்பார்க்கப்பட்ட முடிவுகள் எட்டப்படவில்லை. அந்த மாநாட்டில் நடந்த அனைத்து பேச்சுக் களையும் பற்றி என் புத்தகத்தில் "**இலா மலகூதுல்-மசிஹ்** "இல் நான் எழுதி இருக்கிறேன். பூமியின் ஆழத்திற்கு அதன் வேர்களை அனுப்பிய ஒரு மரத்தை திடீரென வேருடன் பிடுங்குவது கடினம். ஆனால் நாம் கஷ்டங்களை எளிதாக்கி அவற்றை வெல்லவேண்டும். கிறிஸ்தவம் பரவியது. நம்முடைய ஆண்டவர் மேசியா இதை நமக்கு உறுதியளித்தார். கிழக்கிலும் மேற்கிலும் உள்ள மோசமான நிலைமைகள் முஹம்மதுவுக்கு உதவின. அந்த நிலைமை கள் போய்விட்டன, தொல்லைகளை எடுத்துச்சென்று விட்டன (அவர் அர்த்தம் இஸ்லாம்). அவர்களுடன் சேர்ந்து கொண்டது. இன்று நாம் நிலைமை முற்றிலும் மாறிவிட்டதை கவனிக்கிறோம். எங்கள் அமைச்சின் மாபெரும் முயற்சியின் விளைவாகவும், மற்றும் பிற கிறிஸ்தவர்களின் அரசாங்கங் களின் முயற்சியின் விளைவாக முஸ்லிம்கள் இப்போது வீழ்ச்சியடைந்து உள்ளனர். கிறிஸ்தவர்கள் மறுபுறம், உயர்வு பெறுகின்றனர். நாம் பல நூற்றாண்டுகளாக நாங்கள் இழந்த இடங்களை மீட்க வேண்டிய நேரம் இது. சக்திவாய்ந்த பிரிட்டன் சாம்ராஜ்யம் இந்த ஆசீர்வதிக்கப்பட்ட பணியை [இஸ்லாத்தை அழிப்பதற்கான] முன்னோடியாக க் கொண்டுள்ளது.

## பிரிவு ஒன்று

# பாகம் இரண்டு

1710/1122 இல், காமன்வெல்த் அமைச்சர் என்னை எகிப்து, ஈராக், ஹிட்ஜாஸ் மற்றும் இஸ்தான்புல் ஒரு உளவாளியாகச் செயல்படவும் முஸ்லிம்களை உடைப்பதற்கு தேவையான மற்றும் போதுமான தகவல்களை பெறவும் அனுப்பினார். அதே நேரம், அமைச்சகம் சுறுசுறுப்பு மற்றும் தைரியம் மிக்க மேலும் ஒன்பது பேரை அதே பணிக்கு நியமித்தது. எங்களுக்கு தேவைப் படும் பணம் மற்றும் தகவல் வரைபடங்களுக்கு மேலதிகமாக, பழங்குடி யினரின் தலைவர்கள், அரசியல்வாதிகள், அறிஞர்கள், மற்றும் அவர்களின் பெயர்கள் அடங்கிய பட்டியலும் எங்களுக்கு வழங்கப்பட்டது. நான் எப்போதும் மறக்க மாட்டேன்! நான் விடைபெற்றபோது செயலாளர், கூறினார், "எங்கள் ராச்சியத்தின் எதிர்காலம் உங்களை வெற்றியில் தங்கியுள்ளது. எனவே நீங்கள் உங்களின் அதிகபட்ச ஆற்றலை பாவிக்க வேண்டும்”.

நான் இஸ்லாமியர்களின் மையமான இஸ்தான்புல்லுக்கு ஒரு பயணத்தை மேற்கொண்டேன். எனது முதல் கடமை தவிர, நான் அங்குள்ள முஸ்லிம்களின் தாய்மொழி துருக்கிய மொழியை கற்றுக்கொள்ள வேண்டும். நான் ஏற்கனவே லண்டனில் இருந்த பொழுது கணிசமான அளவு துருக்கிய, அரபு மொழி (குர்ஆனின் மொழி) மற்றும் பாரசீக, ஈரானியர்களின் மொழியைக் கற்றுக் கொண்டேன். ஆனாலும், ஒரு மொழியைக் கற்றுக்கொள்வது அந்த மொழியின் சொந்தகாரர்கள் பேசுவது போன்று பேசுவதிலிருந்து வேறு பட்டது. முந்திய திறமை சில வருடங்களில் கற்றுக்கொள்ள முடியும், ஆனால் பிந்தியது இது போன்ற பல மடங்கு காலம் தேவைப்படுகிறது. என்னை மக்கள் சந்தேகிக்காமல் இருக்க துருக்கியை அதன் நுணுக்கங்களுடன் கற்க வேண்டியிருந்தது.

அவர்கள் என்னை சந்தேகிப்பார்கள் என்று நான் கவலைப்படவில்லை. முஸ்லிம்களுக்கு சகிப்புத்தன்மை, திறந்தமனம், கருணையுள்ளம் என்பன அவர்கள் முஹம்மது நபி [அலைஹிஸ் ஸலாம்'] இடமிருந்து கற்றுக் கொண்டது. எங்களைப் போல் அவர்களுக்கு சந்தேகம் இல்லை. எல்லா வற்றிற்கும் மேலாக, அந்த நேரத்தில் துருக்கிய அரசிடம் உளவாளிகளை கைது செய்யும்

அமைப்பு ஒன்று இருக்கவில்லை. மிகவும் சோர்வான பயணத்திற்கு பிறகு நான் இஸ்தான்புல்லுக்கு வந்தேன். நான் என்னுடையது பெயர் முஹம்மது என்றேன், மற்றும் மசூதிக்கு (முஸ்லிம்களின்) செல்லத் தொடங்கினேன், முஸ்லிம்கள் ஒழுக்கம், தூய்மையை கடைபிடிக்கும் விதம் மற்றும் கீழ்ப் படிதல் எனக்கு பிடித்திருந்தது. ஒரு கணம் நான் என்னிடம் சொல்லிக் கொண்டேன்: நாங்கள் ஏன் இந்த அப்பாவி மக்களுடன் சண்டையிடுகிறோம்?. இதுதானா நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்து எங்களுக்கு அறிவுறுத்தியது? ஆனால் இந்த கொடூரமான[!] சிந்தனையிலிருந்து நான் உடனடியாக மீண்டேன். எனது கடமையை சிறந்த முறையில் நிறைவேற்ற முடிவு செய்தேன்.

இஸ்தான்புல்லில் நான் "அகமது எஃபெண்டி" என்ற ஒரு வயோதிப அறிஞரை சந்தித்தேன். எஃபெண்டி என்பது மரியாதைக்கான ஒரு சொல், சேர் என்ற வார்த்தையை பயன்படுத்துவது போன்றது." அவருடைய நேர்த்தியான பழக்கவழக்கங்கள், திறந்த மனது, ஆன்மீக ஈடுபாடு மற்றும் கருணை, நான் பார்த்த எங்கள் மத மனிதர்கள் யாரும் சமனாக இருக்க முடியாது. இந்த மனிதர் இரவும் பகலும் முஹம்மது நபியைப் போல இருக்க முயன்றார். அவரைப் பொறுத்தவரை, முகம்மது நபி மிகவும் சரியானவர், எல்லோரையும் விட உயர்ந்த மனிதர். எப்பொழுதாவது அவரது பெயரைச் சொன்னால் அவரது கண்கள் ஈரமாகிவிடும். நான் மிகவும் அதிர்ஷ்டசாலியாக இருந்திருக்க வேண்டும், ஏனென்றால் நான் யார் அல்லது நான் எங்கிருந்து வந்தேன் என்று கூட அவர் கேட்கவில்லை. அவர் என்னை "முஹம்மது எஃபெண்டி" என்று அழைப்பார். அவர் என் கேள்விகளுக்கு மென்மையாக பதிலளிப்பார் மற்றும் என்னை கருணையுடனும் நடத்துவார். அவர் என்னை இஸ்தான்புல்லில் வேலைக்கு வந்த விருந்தினராகவும் மற்றும் முஹம்மது நபியின் [அலைஹி-சலாம்] பிரதிநிதியான கலீபாவின் நிழலில் வாழ்வதாக கருதினார். உண்மையில், இதுதான் நான் இஸ்தான்புல்லில் தங்கியிருப்ப தற்கு (பொய்யான) காரணமாக இருந்தது.

ஒரு நாள் நான் அகமது எஃபெண்டியிடம் சொன்னேன்: "என் பெற்றோர் இறந்துவிட்டார்கள். எனக்கு சகோதரர்கள் அல்லது சகோதரிகள் இல்லை, எனக்கு எந்த பரம்பரை சொத்தும் இல்லை. நான் இஸ்லாத்தின் மையத்திற்கு வந்து வாழ்வதற்காகவும் குர்ஆன் அல்-கரீம் மற்றும் சுன்னாவை கற்றுக் கொள்ளவும் வந்தேன். அதாவது, எனது உலகியல் தேவைகள் மற்றும் மறுமையில் என் வாழ்க்கை" இரண்டையும் சம்பாதிக்க என்று கூறினேன். என்னுடைய இந்த வார்த்தைகளை கேட்டு மிகவும் மகிழ்ச்சி யடைந்தார்.

"இந்த மூன்று காரணங்களுக்காக. நீங்கள் மதிக்கப்படத் தகுதியானவர்". அவர் சொன்னதை நான் சரியாக எழுதுகிறேன்:

1- நீங்கள் ஒரு முஸ்லீம். அனைத்து முஸ்லிம்களும் சகோதரர்கள்.

2- நீங்கள் ஒரு விருந்தினர். ரசூலுல்லாஹ் [அலைஹி-சலாம்] அறிவித்தார்கள் '**உங்கள் விருந்தினர்களுக்கு அன்பான விருந்தோம்பல் செய்யுங்கள்!.**
3- நீங்கள் வேலை செய்ய விரும்புகிறீர்கள். ஒரு ஹதீஸ் ஷரீப் சொல்கிறது '**ஒரு வேலை செய்யும் நபர் அல்லாஹ்வுக்குப் பிரியமானவர்'.**

இந்த வார்த்தைகள் என்னை மிகவும் மகிழ்வித்தன. நான் என்னிடம் சொல்லி க்கொண்டேன், கிறிஸ்தவத்திலும் இத்தகைய பிரகாசமான உண்மைகள் இருந்திருக்க வேண்டும் என்று!. அது அசிங்கம், அப்படி எதுவும் இல்லை. "என்னை ஆச்சரியப்படுத்தியது இஸ்லாம் போன்ற ஒரு உன்னத மதம், வாழ்க்கையில் என்ன நடக்கிறது என்று தெரியாத இந்த ஆணவமுள்ள மக்களின் கைகளில் சீரழிந்து கொண்டிருந்தது. அஹ்மத் எஃபெண்டியிடம் நான் குர்ஆன் அல்-கரீமை கற்க விரும்புகிறேன் என்று சொன்னேன். அவர் எனக்கு மகிழ்ச்சியுடன் கற்பிப்பேன் என்று பதிலளித்தார், மற்றும் எனக்கு சுரா பாத்திஹாவை கற்பிக்கத் தொடங்கினார். அவர் அர்த்தங்களை விளக்குவார் நாம் படிப்பது போல. சில வார்த்தைகளை உச்சரிப்பதில் எனக்கு மிகவும் சிரமமாக இருந்தது. இரண்டு வருடங்களில் நான் முழு குர்ஆன் அல்-கரீம் மூலம் படித்தேன். ஒவ்வொன்றிற்கும் பாடத்துக்கு முன்னும் அவர் வுளு செய்து கொள்வார், மேலும் என்னையும் வுளு செய்து செய்யும்படி கட்டளையிடுவார். அவர் கிப்லாவை நோக்கி உட்காார்வார் [முஸ்லிம்கள் க'ஃபாவின் திசையை நோக்கி தொழுகிறார்கள்] பின்னர் கற்பிக்கத் தொடங்குவார்.

முஸ்லீம்கள் வுளு என்று அழைக்கப்படுது பின்வற்பவற்றை உள்ளடக்கிய தொடர் கழுவுதல் என்று அவர் விளக்கினார். பின்வருமாறு:

1) முகத்தை கழுவுதல்;
2) வலது கையை விரல்களிலிருந்து முழங்கைகள் வரை கழுவுதல்;
3) இடது கையை விரல்களிலிருந்து முழங்கைகள் வரை கழுவுதல்;
4) மஸீஹ் செய்வது (இரண்டு கைகளையும் ஈரப்படுத்தி மெதுவாக) தலையில் தேய்த்தல், காதுகளின் பின்புறம், கழுத்துவரை;
5) இரண்டு கால்களையும் கழுவுதல்.

மிஸ்வாக் பயன்படுத்த வேண்டியிருந்தது என்னை மிகவும் வேதனைப் படுத்தியது. "மிஸ்வாக்" என்பது அவர்கள் (முஸ்லிம்கள்) வாய் மற்றும் பற்களை சுத்தம் செய்யும் ஒரு குச்சி. நான் இந்த மர துண்டு வாய் மற்றும் பற்களுக்கு தீங்கு விளைவிக்கும் என்று நினைத்தேன். சில நேரங்களில் அது என் வாயை காயப்படுத்தி இரத்தப்போக்கு ஏற்படுத்தும். ஆனாலும் நான் அதை பயன்படுத்த வேண்டி இருந்தது. அவர்களைப் பொறுத்தவரை, "மிஸ்வாக்" ஐப் பயன்படுத்துவது ஒரு மு'அக்கத் சுன்னா [நபிகள் நாயகம் 'அலைஹி-சலாம் எப்போதும் செய்யும் செயல்]. இந்த மரம் மிகவும் பயனுள்ளதாக இருந்தது என்று அவர்கள் கூறினர். உண்மையில், என்

பற்களின் இரத்தப்போக்கு முடிவுக்கு வந்தது. மற்றும் எனக்கு அதுவரை இருந்த கெட்ட மூச்சு, மற்றும் பெரும்பாலான பிரிட்டிஷ் மக்களிடம் இருந்தவை போய்விட்டன.

இஸ்தான்புல்லில் நான் தங்கியிருந்த காலத்தில், நான் ஒரு அறையில் இரவுகளைக் கழித்தேன். ஒரு மசூதியில் சேவைக்கு பொறுப்பான ஒருவரிட மிருந்து வாடகைக்கு எடுக்கப்பட்டது. இந்த உதவியாளரின் பெயர் "மார்வான் எஃபெண்டி". மார்வான் என்பது முஹம்மது நபியின் சஹாபாக்களில் ஒருவரின் பெயர். அந்த உதவியாளர் மிகவும் குறுகிய மனப்பான்மை கொண்டவர். அவர் அவரது பெயரை பற்றி பெருமை பேசுவார், மற்றும் எதிர்காலத்தில் எனக்கு ஒரு மகன் வேண்டும் என்றால் சொல்லுங்கள் அவருக்கு மர்வான் என்று பெயரிட வேண்டும் என்று கூறுவார். ஏனென்றால் மர்வான் என்பவர் இஸ்லாத்தில் ஒரு மிகப் பெரிய வீரர். "

"மர்வான் எஃபெண்டி" மாலை உணவை தயார் செய்வார். நான் முஸ்லீம் களுக்கு விடுமுறை தினமான வெள்ளிக்கிழமை வேலைக்கு செல்ல மாட்டேன். மற்ற நாட்களில் வாரத்தில் நான் காலித் என்ற தச்சனுக்காக வேலை செய்தேன், சம்பளம் ஒரு வார அடிப்படையில் கொடுக்கப்பட்டது. ஏனென்றால் நான் பகுதி நேரமாக வேலை செய்தேன், அதாவது காலையி லிருந்து நண்பகல் வரை, அவர் மற்ற ஊழியர்களுக்கு கொடுத்த ஊதியத்தில் பாதி எனக்குக் கொடுப்பார். இந்த தச்சன் தனது ஓய்வு நேரத்தின் பெரும் பகுதியை "காலித் பின் வலிதி"ன் நல்லொழுக்கங்களைப் பற்றி சொல்வதில் செலவிடுவார். காலித் பின் வலித் முஹம்மது நபியின் சஹாபாக்களில் ஒருவர், ஒரு பெரிய முஜாஹித் [இஸ்லாத்தின் ஒரு போர்வீரன்] அவர் பல்வேறு இஸ்லாமிய வெற்றிகளை அடைந்தார். ஆனாலும் உமர் பின் கத்தாப் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அவர்களின் கிலாபத்தின் பிந்திய காலத்தில் அவரை (காலித் பின் வலீத்) பதவி நீக்கம் செய்தது தச்சனை வருத்தப்படுத்தியது. [1].

"காலித்", நான் வேலை செய்த தச்சன் ஒரு ஒழுக்கக்கேடானவன், மிகவும் குறுகிய மனப்பான்மை கொண்டவன். அவர் எப்படியோ என்னை மிகவும் நம்பினார். ஏன் என்று எனக்குத் தெரியவில்லை, ஆனால் நான் எப்போதுமே அவருக்குக் கீழ்ப்படிந்ததால் இருந்திருக்கலாம். அவர் இரகசியத்தில் ஷரீஆவை (இஸ்லாமிய சட்டத்தை) புறக்கணித்தார். ஆனால் அவர் தனது நண்பர்களுடன் இருந்தபோது ஷரியாவின் கட்டளைகளுக்கு கீழ்ப்படியும் பழக்கவழக்கங்களை காண்பிப்பார். வெள்ளிக்கிழமை தொழுகைகளில் அவர் கலந்து கொள்வார், ஆனால் மற்றவை பற்றி எனக்குத் தெரியவில்லை.

நான் காலை உணவு கடையில் சாப்பிடுவேன். வேலைக்குப் பிறகு நான் மதிய நேர தொழுகைக்காக மசூதிக்கு செல்வேன் பின்னர் பிற்பகல் தொழுகை வரை அங்கேயே தங்கி இருப்பேன். பின்னேர தொழுகை முடிந்ததும் அஹ்மத் எஃபெண்டியின் இடத்துக்கு செல்வேன்,அங்கே அவர் எனக்கு குர்ஆன் அல்-கரீம் ஓதுவது, அரபு

மற்றும் துருக்கிய மொழிகள் போன்றவற்றை இரண்டு மணித்தியாலங்களுக்கு கற்பிப்பார். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நான் எனது வாராந்த வருவாயைக் கொடுப்பேன். ஏனென்றால் அவர் எனக்கு நன்றாக கற்பித்தார். உண்மையில், குர்ஆன்அல்-கரீம் எப்படி படிப்பது என்று அவர் எனக்குக் கற்றுக் கொடுத்தார், இஸ்லாமிய மதத்தில் தேவையான வற்றை மற்றும் அரபு மற்றும் துருக்கிய மொழிகளின் நுணுக்கங்களை கற்பித்தார்.

"அஹமட் எஃபெண்டி" நான் தனிமையில் இருப்பதை அறிந்ததும், அவர் அவருடைய மகள்களில் ஒருவருக்கு என்னை திருமணம் செய்து கொடுக்க விரும்பினார். நான் அவருடைய வாய்ப்பை மறுத்தேன். ஆனால் அவர் திருமணம் ஒரு சுன்னா என்று உறுதியாக வலியுறுத்தினார். நபிகள் நாயகம் மற்றும் நபிகள் கூறியது என்று கூறினார் **"ஒரு நபர் என் சுன்னாவிலிருந்து விலகிச் செல்பவர் என்னுடையவர் அல்ல."** இந்த நிகழ்வு எங்கள் தனிப் பட்ட நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம் என்பதை புரிந்து கொண்டு என்னிடம் பாலியல் சக்தி இல்லை என்று நான் அவரிடம் பொய் சொல்ல வேண்டியிருந்தது. இதனால் நான் எங்கள் அறிமுகம் மற்றும் நட்பின் தொடர்ச்சியை உறுதி செய்தேன். இஸ்தான்புல்லில் இரண்டு வருடங்கள் தங்கியிருந்த முடிந்தபோது, நான் "அஹமத் எஃபெண்டியிடம் "நான் வீடு திரும்ப விரும்புகிறேன் என்று கூறினேன். அவர், "போகாதே. நீ ஏன் போகிறாய்? இஸ்தான்புல்லில் நீ தேடும் எதையும் நீ காணலாம். அல்லாஹு தலா மதம் மற்றும் உலகம் இரண்டையும் இந்த நகரத்தில் வைத்துள்ளான். அதேநேரத்தில். உங்கள் பெற்றோர் இறந்து விட்டதாகவும், சகோதரர்கள், சகோதரிகள் இல்லை என்றும் கூறுகிறீர்கள். நீங்கள்ஏன் இஸ்தான்புல் குடியேறவில்லை?."அகமது எஃபெண்டி" என்னை சார்ந்திருத்தல் மீது ஒரு கட்டாயத்தை உருவாக்கியிருந்தார். இந்த காரணத்தினால் அவர் என்னை பிரிய விரும்பவில்லை. மற்றும் நான் என் வீட்டை இஸ்தான்புலில் கட்ட

[1] [அபு உபைதா பின் ஜெர்ரா, காலித் வலிதின் இடத்துக்கு நியமிக்கப்பட்ட போது, வெற்றிகள் தொடர்ந்தது, வெற்றிகளுக்கு காரணம் அல்லாஹு தலாவின் உதவி என்று உணரப்பட்டது, காலித் அல்ல.]

வேண்டும் என்று வலியுறுத்தினார். ஆனால் என் தேசபக்தி கடமை உணர்வு கிலாபத்தின் மையம் பற்றிய விரிவான அறிக்கையை லண்டனுக்கு வழங்கவும் புதிய ஆர்டர்களை எடுக்கவும் என்னை திரும்பி செல்ல கட்டாய ப்படுத்தியது.

இஸ்தான்புல்லில் நான் தங்கியிருந்த காலம் முழுவதும் எனது அவதானிப்பு அறிக்கைகளை மாதந்தோறும் காமன்வெல்த் அமைச்சுக்கு அனுப்பினேன். நான் அனுப்பிய அறிக்கை ஒன்றில் நான் வேலை செய்யும் நபர் அவருடன் ஆண்பால் புனர்ச்சிக்கு உடன்பாடுமாறு கேட்டதாகவும் அதற்கு என்ன செய்ய வேண்டும் என்று கேட்டிருந்தேன். அதற்கு: இது உங்கள் இலக்கை அடைய

உதவும் என்றால் உங்களால் முடியும் என்று பதில் கிடைத்தது. இந்த பதில் எனக்கு மிகவும் கோபத்தை ஏற்படுத்தியது. நான் முழு உலகமும் என் தலையில் விழுந்ததை உணர்ந்தேன். இந்த தீய செயல் இங்கிலாந்தில் பொதுவானது என்பது எனக்கு முன்பே தெரியும். ஆயினும் அது எனக்கும் நிகழும், அதைச் செய்ய உயர் அதிகாரிகள் எனக்குக் கட்டளையிடுவார்கள் என்று எனக்கு ஒருபோதும் தோன்றவில்லை. நான் என்ன செய்ய முடியும்? என்னிடம் இருந்த மருந்தை காலி செய்வதைத் தவிர வேறு வழியில்லை. அதனால் நான் அமைதியாக இருந்தேன், மேலும் என் கடமைக்கு சென்றேன்.

நான் "அகமது எஃபெண்டி"யிடம் விடைபெற்றபோது, அவருடைய கண்கள் ஈரமாகிவிட்டன. அவர் என்னிடம், "என் மகனே! அல்லாஹு தலா உங்களுடன் இருக்கட்டும்! நீங்கள் இஸ்தான்புல்லுக்கு மீண்டும் திரும்பி வந்தால், நான் இறந்துவிட்டேன் என்றால் என்னை நினைவில் வைத்து கொள்ள வேண்டும். என் ஆத்மாவுக்கு (சூரா) ஃபாத்திஹா ஓதுங்கள்!. நாங்கள் தீர்ப்பு நாள் அன்று 'ரசூலுல்லா'வுக்குப் பக்கத்தில் சந்திப்போம். உண்மையில், நான் மிகவும் சோகமாக உணர்ந்தேன்; அதனால் நான் கண்ணீர் விட்டேன். எனினும், என் கடமை உணர்வு இருந்தது என் உணர்ச்சி உணர்வுகளை விட வலிமையானது.

### பிரிவு ஒன்று

## பகுதி மூன்று

நான் வருவதற்கு முன்பே என் நண்பர்கள் லண்டனுக்குத் திரும்பியிருந்தனர். அவர்கள் அமைச்சிடமிருந்து ஏற்கனவே புதிய

உத்தரவுகளைப் பெற்றுரு ந்தார்கள். எனக்கும் புதிய உத்தரவுகள் கொடுக்கப்பட்டது. துரதிர்ஷ்டவச மாக, நாங்கள் ஆறு பேர் மட்டுமே திரும்பி இருந்தோம்.

செயலாளர் கூறினார்; மற்ற நான்கு பேரில் ஒருவர் முஸ்லீம் ஆகி எகிப்தில் தங்கி விட்டார். ஆயினும், செயலாளர் இன்னும் மகிழ்ச்சியுடன் இருப்பதாக கூறினார். ஏனெனில் அவர் எந்த ரகசியத்தையும் காட்டிக் கொடுக்கவில்லை. இரண்டாவது நபர் ரஷ்யா சென்று அங்கே தங்கிவிட்டார். அவர் அடிப்படை யில் ரஷ்யர். செயலாளர் அவரைப் பற்றி மிகவும் வருத்தப்பட்டார், அவர் தனது தாயகத்திற்கு திரும்பினார் என்றதால் அல்ல, ஆனால் ஒருவேளை அவர் ரஷ்யாவுக்காக காமன்வெல்த் அமைச்சின் மீது உளவுபார்த்து இருக் கலாம். அவரது பணி முடிந்ததால் வீடு திரும்பினார். மூன்றாவது நபர், பாக்தாத்தின் சுற்றுப்புறத்தில்"இமாரா" என்ற ஒரு நகரத்தில் பிளேக் நோயால் இறந்தார். நான்காவது நபர் யேமனில் உள்ள சனா நகரம் வரை இருந்ததாக அமைச்சினால் கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் அவரிடம் இருந்து ஒரு வருடத் திற்கான அறிக்கைகள் மட்டும் பெறப்பட்டது. அதன்பிறகு அவருடைய அறிக்கை முடிவுக்கு வந்துவிட்டது. அனைத்து வகையான முயற்சிகள் எடுத்த போதிலும் அவரைப் பற்றிய எந்த தடயமும் கிடைக்கவில்லை. அமைச்சு இந்த நான்கு பேரின் மறைவை ஒரு பேரழிவாக வைத்துள்ளது. ஏனென்றால் நாங்கள் ஒரு சிறிய மக்கள்தொகைக்கு எதிராக பெரும் கடமைகளைக் கொண்ட நாடு. எனவே நாங்கள் ஒவ்வொரு மனிதனுக்கும் மிகச்சிறந்த கணக்கீடுகளைச் செய்பவர்கள்.

நாங்கள் நால்வரும் கொடுத்த அறிக்கைகளை ஆராய்வதற்கு எனது சில அறிக்கைகளுக்குப் பிறகு, செயலாளர் ஒரு சந்திப்பை நடத்தினார். எனது நண்பர்கள் அவர்களின் பணிகள் தொடர்பான அறிக்கைகளை சமர்ப்பித் தார்கள், எனது அறிக்கை நான் சமர்ப்பித்தேன். அவர்கள் எனது அறிக்கை யிலிருந்து சில குறிப்புகளை எடுத்துக்கொண்டனர். அமைச்சர், செயலாளர் மற்றும் கூட்டத்தில் கலந்து கொண்ட சிலர் என் வேலையை பாராட்டினர். இருப்பினும், நான் சிறந்தவற்றில் மூன்றாவது. முதல் தரம் என் நண்பர் "ஜார்ஜ் பெல்கூட்" வென்றார். இரண்டாவது சிறந்தது"ஹென்றி ஃபிரான்ஸ்" வென்றார்.

நான் துருக்கி, அரபுமொழி குர்ஆன் மற்றும் ஷரியாவைக் கற்றுக்கொள்வதில் வெற்றியடைந்தேன். ஆயினும், ஒட்டோமான் பேரரசின் பலவீனங்களை வெளிப்படுத்தும் அறிக்கை ஒன்றை தயாரிக்க முடியவில்லை. இரண்டு மணி நேர சந்திப்புக்கு பிறகு, செயலாளர் என்னிடம் என் தோல்விக்கு காரணம் என்ன என்று கேட்டார். நான், “மொழிகள், குர்ஆன் மற்றும் ஷரீஅத்தை கற்றுக்கொள்வதே என் முக்கிய கடமை மற்றவை எதற்கும் என்னால் நேரத்தை ஒதுக்க முடியவில்லை என்றேன். ஆனால் நீங்கள் நம்பினால் இம்முறை உங்களை மகிழ்விப்பேன் என்றேன்."

செயலாளர் கூறினார், "நீர் நிச்சயமாக வெற்றி பெறுவீர், முதலில் வருவதற்கு நான் விரும்புகிறேன்" அவர் மேலும் கூறினார்:"ஓ ஹம்பர்!, உனது அடுத்தபணி இந்த இரண்டையும் உள்ளடக்கியது:

1- முஸ்லிம்களின் பலவீனமான விடயங்களை தேடிப்பிடியுங்கள், மற்றும் உடலின் எந்த வழியின்மூலம் உட்புகுந்தால் அவர்களின் பாகங்களை சிதறடிக்கலாம் என்பதையும் கண்டறிக. உண்மையில், எதிரிகளை வெல்ல இதுவே வழி.

2- நீர் இந்த பலவீனமான விடயங்களை கண்டறிந்து நான் ஏற்கனவே கூறியதை செய்த பிறகு [வேறு வார்த்தைகளில் கூறுவதானால், முஸ்லீம்களி டையே கருத்து வேறுபாட்டை ஏற்படுத்தி அவர்களை ஒருவருடன் மற்றவரை முரண்பட வைக்கவேண்டும்] இதை செய்தால் நீர் மிகவும் வெற்றிகரமான முகவராக இருப்பீர் மற்றும் அமைச்சிலிருந்து பதக்கம் பெறுவீர்"என்றார்.

நான் ஆறு மாதங்கள் லண்டனில் இருந்தேன். நான் முதலில் என் தந்தை வழி உறவினர், "மரியா ஷ்வாய்"யை திருமணம் செய்தேன். அந்த நேரத்தில் எனக்கு 22 வயது, அவள் வயது 23. "மரியா ஷ்வாய் சராசரி நுண்ணறிவுடன் மிகவும் அழகான பெண் மற்றும் ஒரு சாதாரண கலாச்சார பின்னணியை கொண்டவள். என் வாழ்வின் மிகவும் மகிழ்ச்சியான நாட்கள் ஆவலுடன் நான் கழித்த நாட்கள். என் மனைவி கர்ப்பமாக இருந்தார். நாங்கள் எங்கள் புதிய விருந்தினரை எதிர்பார்த்து கொண்டிருந்தபோது, நான் ஈராக்கிற்கு புறப்பட வேண்டும் என்று உத்தரவு அடங்கிய செய்தியைப் பெற்றேன்.

நான் மகனின் பிறப்புக்காகக் காத்திருந்த நேரத்தில் இந்த ஆர்டரைப் பெறுகிறேன். என் மகன் என்னை வருத்தப்படுத்தினான். இருப்பினும், ஒரு கணவராக மற்றும் ஒரு தந்தையாக என் உணர்ச்சிகளுக்கு மேலாக, எனது சக ஊழியர்களில் சிறந்தவராக தேர்ந்தெடுக்கப்பட்டு புகழ்அடைய வேண்டும் என்ற எனது லட்சியத்துடன், எனது முக்கியத்துவத்தை நாட்டுடன் இணைத் தேன். அதனால் நான் தயக்கம் இல்லாமல் பணியை ஏற்றுக் கொண்டேன். நான் என் பணியை என் குழந்தையின் பிறப்பு வரை ஒத்தி வைக்க வேண்டும் என்று என் மனைவி விரும்பினாள். ஆனாலும் அவள் சொன்னதை நான் புறக்கணித்தேன். நாங்கள் இருவரும் ஒருவருக்கொருவர் விடைபெறும் பொழுது அழுதோம். என் மனைவி அவளுக்கு எழுதுவதை நிறுத்த வேண்டாம் என்றாள். நமது புதிய குடும்பத்தைப்பற்றி நான் உங்களுக்கு கடிதங்கள் எழுதுவேன், அது தங்கத்தைப் போன்ற மதிப்புமிக்கது. அவளுடைய இந்த வார்த்தைகள் எனக்குள் என் இதயத்தில் புயலை கிளப்பின. நான் கிட்டத்தட்ட பயணத்தை ரத்துச் செய்தேன். ஆனாலும் என் உணர்ச்சிகளை என்னால் கட்டுப்பாட்டுக்கு கொண்டுவர முடிந்தது. அவளிடம் என் பிரியாவிடைபெற்று நான் இறுதி அறிவுறுத்தல்களைப் பெற அமைச்சகம் புறப்பட்டேன்.

ஆறு மாதங்களுக்குப்பிறகு நான் ஈராக்கின் பஸ்ரா நகரில் இருந்தேன். நகரத்தில் உள்ள சில மக்கள் சுன்னி மற்றும் சிலர் ஷியா பிரிவினர். பஸ்ரா அரேபியர்கள், பெர்சியர்கள் மற்றும் கலப்புமக்கள் தொகை கொண்ட பழங்குடியினரின் நகரமாக இருந்தது. ஒப்பீட்டளவில் குறைந்த எண்ணிக்கை யிலான கிறிஸ்தவர்கள் இருந்தனர். இது என்னுடைய ஷியாக்கள் மற்றும் பெர்சியர்களுடன் நான் சந்தித்தது இது வாழ்க்கையில் முதல் முறையாகும். அத்துடன், ஷீயிசம் மற்றும் சுன்னிசம் ஆகியவற்றை பற்றி சில விடயங்கள்.

ஷியாக்கள் அவர்கள் அலி பின் அபுதாலிபை பின்பற்றுவதாக கூறுகிறார்கள். அவர் முஹம்மதுவின் [அலைஹி-சலாம்] அவர்களின் மகள் பாத்திமாவின் கணவர் மற்றும் அதேநேரத்தில் முஹம்மது [அலைஹி-சலாம்] அவர்களின் தந்தைவழி முதல் உறவினர். முஹம்மது [அலைஹி-சலாம்] அவருக்கு பின் கலீபாவாக அலியையும் மற்ற பதினொரு இமாம்களையும் நியமித்தார் என்று அவர்கள் கூறுகிறார்கள். மற்றும் அலியின் வழித்தோன்றல்கள் அவருக்குப் பின் கலிபாவாக வர வேண்டும்.

என்கருத்துப்படி, ஷியாக்கள் இந்த விஷயத்தில் அலி, ஹசன், மற்றும் ஹுசைன் ஆகியோரின் கிலாபத்துக்கு சரியானவர்கள். ஏனென்றால், நான் இஸ்லாமிய வரலாற்றிலிருந்து புரிந்து கொண்ட வரையில், அலி தனித்துவ மான ஒரு நபர் மற்றும் கலிபாவிற்கு தேவையான உயர் தகுதிகள் உள்ளவர். நான் அதை அன்னியமாக காணவில்லை. முஹம்மது [அலைஹி-சலாம்] ஹசன் மற்றும் ஹுசைன் கலீபாவாக நியமித்திருக்க வேண்டும். எனினும் என்னை சந்தேகப்பட வைப்பது என்னவென்றால் முஹம்மதுவின் [அலைஹி-சலாம்] ஹுசைனின் மகனையும் அவருடைய பேரர்களில் எட்டுப்பேரை கலீபாவாக நியமித்தார் என்பதுதான். முஹம்மது [அலைஹி-சலாம்] மரணிக் கும் போது ஹூசைன் ஒரு குழந்தையாக இருந்தார். அவருக்கு எப்படி தெரியும் எட்டு பேரன்கள் இருப்பார்கள் என்று. முஹம்மது [அலைஹி-சலாம்] உண்மையில் ஒரு நபியாக இருப்பதன் மூலம் அவர் எதிர்காலத்தை அறிந்து கொள்வது சாத்தியமானது. ஏனெனில், அல்லாஹுதஆலாவின் முன் அறிவிப் பினால், இயேசு கிறிஸ்து எதிர்காலம் பற்றி முன்னறிவித்தார். இன்னும் முஹம்மது[அலைஹிஸ்ஸலாம்]இன் தீர்க்கதரிசனம் கிறிஸ்தவர்களாகிய எங்களுக்கு சந்தேகமான ஒரு விடயம். முஸ்லிம்களகள் கூறுகிறார்கள் "முஹம்மது[அலைஹி-சலாம்] இன் நபித்துவத்துக்கு பல சான்றுகள் உள்ளன என்று. அவற்றில் ஒன்று குர்ஆன்." எங்களிடம் உள்ளது. குர்ஆனைப் படித்திருக் கிறேன். உண்மையில், இது மிகஉயர்ந்த புத்தகம். இது தோரா மற்றும் பைபிளைவிட இன்னும் உயர்ந்தது. அது விதி முறைகள், தார்மீக விதிகள் போன்ற கொள்கைகளைக் கொண்டுள்ளது.

படிப்பறிவு இல்லாத முஹம்மது [அலைஹி-சலாம்] இவ்வளவு உயர்ந்த புத்தகத்தை கொண்டு வந்திருப்பது என்பது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. மற்றும் அவர் எப்படி, அதிகம் படித்து

பயணம் செய்த மனிதன் ஒருவரிடம் கூட இருக்க முடியாத தனிப்பட்ட தகுதிகள் அந்த தார்மீக, அறிவார்ந்த மற்றும் அனைத்தையும் கொண்டிருந்தார் என்பது. ஒருவர் ஆச்சரியப் படலாம், இந்த உண்மைகள்தான் முஹம்மது (அலைஹி-சலாம்) இன் தீர்க்கதரிசனத்திற்கு சான்றுகளா?.

நான் முஹம்மது அலைஹி-சலாமின் தீர்க்கதரிசனத்தைப் பற்றிய உண்மை அறிவதற்கு அவதானிப்புகளை, ஆராய்ச்சிகளையும் செய்தேன். ஒருமுறை நான் லண்டனில் உள்ள ஒரு பாதிரியாரிடம் எனது ஆர்வத்தை வெளிப்படு த்தினேன். அவரது பதில் வெறித்தனமான மற்றும் பிடிவாதமானது, மற்றும் நம்பகரமானதாக இல்லை. நான் துருக்கியில் இருந்தபோது அஹமட் எஃபெண்டியிடம் பல முறை கேட்டேன், ஆனால் நான் அவரிடமிருந்தும் திருப்திகரமான பதிலைப் பெறவில்லை. உண்மையைச் சொல்லபோனால்,

என் உளவுபற்றி அவர்கள் சந்தேகப்பட வேண்டாம் என்பதற்காக அகமது எஃபெண்டியிடம் நேரடியாக தொடர்புடைய கேள்விகளை கேட்பதைத் தவிர்த்தேன். நான் நான் முஹம்மது [அலைஹி-சலாம்] பற்றி அதிகம் நினைக்கிறேன். சந்தேகம் இல்லை, முஸ்லிம்கள் ஒரு தீர்க்கதரிசி என்று நம்புகிறார்கள். அவர் நாம் படித்தபுத்தகங்களில் ஆனாலும், நான் ஒரு கிறிஸ்தவனாக இருப்பதால், நான் அவரின் நபித்துவத்தை நம்பவில்லை. அவர் மிகவும் உயர்ந்தவர் மேதை என்பதில் சந்தேகமில்லை.

மறுபுறம் சுன்னிகள், "நபிகளாரின் மறைவுக்கு பிறகு முஸ்லிம்கள் அபுபக்கர், உமர், உதுமான், மற்றும் அலி ஆகியோரை கலிபாவிற்கு பொருத்த மானவர்கள் என்று கருதினார்கள். இது போன்ற சர்ச்சைகள் எல்லா மதங்களிலும், கிறிஸ்தவத்தில் மிக அதிகமாக உள்ளன. உமர் மற்றும் அலி இருவரும் இன்று இறந்து விட்டதால், இந்த சர்ச்சைகளை நீடிப்பதால் எந்த பயனும் இல்லை. எனக்கு முஸ்லிம்கள் நியாயமானவர்களாக இருந்தால், அவர்கள் இன்றய நிலை பற்றி சிந்திக்க வேண்டும், அந்த பழைய நாட்களை[1]அல்ல.

காமன்வெல்த் அமைச்சகத்தில் ஒரு நாள் இருக்கும்போது நான் சுன்னிகளுக் கும் ஷியாக்களுக்கும் இடையிலான வேறுபாட்டைக் குறிப்பிட்டேன். "முஸ்லிம் களுக்கு வாழ்க்கையைப் பற்றி ஏதாவது தெரிந்திருந்தால், அவர்கள் அதைத் தீர்ப்பார்கள் தங்களுக்குள் இந்த ஷியா-சுன்னி வேறுபாடுகளை விட்டு ஒன்றாகுவார்கள் என்றேன்." யாரோ என்னை குறுக்கிட்டு, "உங்களுக்கு இந்த வேறுபாட்டைத் தூண்டுவதே கடமை, எப்படி முஸ்லிம்களை ஒன்றாக கொண்டு வருவது என்று யோசிப்பது அல்ல என்று கூறினார்.

நான் ஈராக்கிற்கான பயணத்தை தொடங்குமுன், செயலாளர் கூறினார், "ஒ ஹம்பர்! இயற்கையாக கடவுள் ஆபெலையும் கெய்னையும் படைத்ததில் இருந்து மனிதர்களிடையே வேறுபாடுகள் தோன்றின என்பதை நீங்கள்

தெரிந்துகொள்ளவேண்டும்.இயேசுகிறிஸ்து திரும்பும்வரை இந்த சர்ச்சைகள் தொடரும். இன, பிராந்திய, தேசிய, மற்றும் மத சர்ச்சைகள் இவ்வாறு தான். "இந்த நேரத்தில் உங்கள் கடமை இந்த சர்ச்சைகளை நன்கு கண்டறிந்து அமைச்சுக்கு தெரிவிக்க வேண்டும். முஸ்லீம்களிடையே உள்ள

---

[1] [ஷியா பிரிவில் கலிபா பற்றி பேசுவது மற்றும் அதில் ஒரு குறிப்பிட்ட நம்பிக்கை இருப்பது அவசியம். சுன்னி நம்பிக்கையின் படி இவை தேவையானது இல்லை. இளம் ஆங்கிலேயர் மதம் சார்ந்த தகவல்களை உலக விஷயங்களுடன் குழப்புகிறார்.

உலக அறிவில்,முஸ்லிம்கள் அவர் அறிவுறுத்துவது போல், எப்போதும் புதுமை பற்றியும் முன்னேற்றம் பற்றியும், மற்றும் அறிவியல், நுட்பம், கணிதம், கட்டிடக்கலை மற்றும் மருத்துவம் முன்னேற்றம் பற்றியும் எப்போதும் சிந்திக்கிறார்கள். பிரபல இத்தாலிய வானியலாளர் கலிலியோ பூமி சுழல்கிறது என்று கூறியபோது சந்தேகமில்லாமல் அந்த உண்மையை முஸ்லிம்களிடமிருந்து கற்றுக்கொண்டார். அவர் பாதிரிகளால் மயக்க மடைந்தது மட்டுமல்ல, ஆனால் சிறையிலும் அடைக்கப்பட்டார். அவரது முன்னாள் அறிக்கையை கைவிட்டு அவர் மன்னிப்பு கேட்டு "இல்லை, அது சுழல வில்லை" என்றுகூறி அவர் பாதிரிகளின் கைகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டார். முஸ்லிம்கள் ஈமான், மற்றும் இஸ்லாம் பற்றிய அறிவில் குர்ஆன் அல்- கரீம் மற்றும் ஹதீஸ் ஷரீஃப்களைப் பின்பற்றுகிறார்கள். கிறிஸ்தவர்களைப் போல், அவர்கள் மனதின் செயல்பாட்டின் எல்லைக்கு அப்பாற்பட்ட இடைக்கணிப்புகள் செய்வதில்லை.]

வேறுபாடுகளை அதிகமாக்குவதில் நீங்கள் பெறும் வெற்றி இங்கிலாந்துக் கான உங்கள் சேவையை அதிகமாக்கும். "ஆங்கில மக்களாகிய நாம், ஆடம்பரமாகவும், நலனுடனும் வாழ்வதற்காக ஏமாற்று வேலைகள் செய்து உலகெங்கிலும் எங்கள் எல்லா காலனிகளிலும் பிளவுகளையும் பிரச்சினை களையும் உருவாக்க வேண்டும். இத்தகைய தூண்டுதல்களால் மட்டுமே நாம் ஒட்டோமான் பேரரசை இடிக்க முடியும். இல்லையெனில், எப்படி ஒரு சிறிய மக்கள்தொகை கொண்ட ஒருநாடு அதிக மக்கள் தொகையை கொண்ட மற்றொரு தேசத்தை அதன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முடியும்? நீங்கள் உள்ளே செல்வதற்கான வழியை உங்கள் முழு சக்தியையும் பாவித்து இடைவெளியைக் கண்டறியுங்கள். அதைக் கண்டுபிடித்தவுடன் உள்ளே செல்லுங்கள். நீங்கள் ஒட்டோமான் பேரரசு மற்றும் ஈரானின் இருப்பின் மத்தியை விரைவில் அடைய வேண்டும் என்பதை அறிந்து கொள்ளுங்கள். எனவே, உங்கள் முதல் கடமை அரசு நிர்வாகத்திற்கு எதிரான மக்களின் கிளர்ச்சிகளை தூண்டுவது. எல்லா வகையான புரட்சிகளுக்கும் ஆதாரம் மக்களின் பொதுக் கிளர்ச்சிகள். முஸ்லீம்களின் ஒற்றுமை உடைந்துவிட்டால் அவர்களுக்கிடையில் பொதுவான அனுதாபம் பலவீனமடைந்து விடும். அவர்களின் படைகள் கலைக்கப்படும், இதனால் நாம் அவரகளை எளிதில் அழிக்கலாம்."

### பிரிவு ஒன்று

## பகுதி நான்கு

நான் பஸ்ராவுக்கு வந்தபோது, நான் ஒரு மசூதியில் குடியேறினேன். மசூதியின் இமாம் ஷேக் உமர்தாய் என்ற அரபு வம்சாவளியைச் சேர்ந்த சுன்னி முஸ்லிம். நான் அவரை சந்தித்த போது அவருடன் உரையாட ஆரம்பித்தேன். ஆனாலும் அவர் சந்தேகப்பட்டார். ஆரம்பத்தில் நான் என்னை ஒரு கேள்வி மழைக்கு உட்படுத்தினார். நான் இந்த அபாயகரமான அரட்டையில் இருந்து பின்வாங்க முடிந்தது: "நான் துருக்கியின் இக்திர் பகுதியைச் சேர்ந்தவன். நான் இஸ்தான்புல்லில் அகமது எஃபெண்டியின் சீடர். நான் காலித் என்ற தச்சனிடம் வேலை செய்தேன். நான் அவருக்கு துருக்கியில் தங்கியிருந்த காலத்தில் நான் பெற்ற அனுபவத்திலிருந்து துருக்கி பற்றிய சில தகவல்களை கூறினேன். மேலும், நான் சில வாக்கியங்களை துருக்கியில் சொன்னேன். இமாம் அங்கிருந்தவர்களில் ஒருவருக்கு ஒரு கண் சிக்னல் செய்தார், மற்றும் நான் துருக்கி சரியாக பேசுகிறேனா என்று அவரிடம் கேட்டார். அவரின் பதில் ஒப்புதலாக இருந்தது. இமாமை சமாளித்த பிறகு , நான் மிகவும் கிழ்ச்சியாக இருந்தேன். ஆனாலும் நான் தவறு செய்தேன். ஏனென்றால் சில நாட்களின் பின்னர், நான் துருக்கிய

உளவாளி என்று இமாம் சந்தேகப்படுவதைக் கண்டேன். பின்னர், அவருக்கும் (ஒட்டோமான்)சுல்தானால் நியமிக்கப்பட்ட ஆளுநருக்கும் இடையே விரோதம் கருத்து வேறுபாடுகள் இருப்பதை நான் கண்டறிந்தேன்.

ஷேக் உமர் எஃபெண்டியின் மசூதியைவிட்டு வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. , நான் பயணிகள் மற்றும் வெளி நாட்டினருக்கான ஒரு விடுதியில் ஒரு அறையை வாடகைக்கு எடுத்து அங்கு சென்றேன். விடுதியின் உரிமையாளர் முர்ஷித் எஃபெண்டி என்ற முட்டாள் தினமும் அதி காலையில் தொழுகைக்கான அழைப்பு அஸான் ஒலித்தவுடன் வந்து என்னை எழுப்பு வதற்கு என் கதவை கடுமையாகத் தட்டுவதன்மூலம் என்னைத் தொந்தரவு செய்வார். நான் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டியிருந்தது. அதனால், நான் எழுந்து காலை தொழுகையில் பங்குகொள்வேன். பின்னர் அவர் கூறுவார், "நீங்கள் காலை தொழுகைக்கு பிறகு குர்ஆன் அல்-கரீமை ஓத வேண்டும் என்பார். நான் அவரிடம் குர்ஆனைப் படிப்பது இஸ்லாத்தின் கட்டளை அல்ல அவர் ஏன் இவ்வளவு வலியுறுத்த வேண்டும் என்று கேட்டேன். அதற்கு அவர் பதில், "இந்த நேரத்தில் தூங்குவது வறுமையை கொண்டு வரும், விடுதியாளருக்கு துரதிர்ஷ்டம். நான் அவரது கட்டளை செயல்படுத்த வேண்டி யிருந்தது. இல்லையெனில் அவர் என்னை விடுதியை விட்டு வெளியே அனுப்புவேன் என்று சொன்னார். ஆகையால், அஸான் அழைக்கப்பட்டவுடன், நான் தொழுகையை நிறை வேற்றுவேன் பின்னர் குர்ஆன் அல்-கரீமை ஒரு மணி நேரம் படிப்பேன்.

ஒரு நாள் முர்ஷித் எஃபெண்டி என்னிடம் வந்து, "நீங்கள் இந்த அறையை நீங்கள் வாடகைக்கு எடுத்ததிலிருந்து எனக்கு துரதிர்ஷ்டங்களை ஏற்படுத் தியது. நீங்கள் திருமணமாகாதது கெட்ட சகுனத்தைக் என்மீது ஏற்படுத்து கிறது. நீங்கள் ஒன்று திருமணம் செய்து கொள்ளுங்கள் அல்லது விடுதியை விட்டு வெளியேறுங்கள் என்றார். என்னிடம் திருமணம் செய்ய போதுமான சொத்துக்கள் இல்லை என்று சொன்னேன். நான் அகமதுவிடம் சொன்னதை அவரிடம் சொல்ல முடியவில்லை. எஃபெண்டி. முர்ஷித் எஃபெண்டி ஒரு வகையான நபர், அவர் உண்மையை நான் சொல்கின்றேனா என்று பார்ப்பதற்கு எனது உடையை கழற்றி என் பிறப்புறுப்பை பரிசோதிக்க கூடிய மனிதன்.

நான் அவ்வாறு சொன்னபோது, முர்ஷித் எஃபெண்டி என்னை கண்டித்தார், "என்ன உங்களிடம் பலவீனமான நம்பிக்கை! அல்லாஹ்வின் ஆயத்தை நீங்கள் படிக்கவில்லையா, **"அவர்கள் ஏழைகளாக இருந்தால், அல்லாஹு தலா அவனுடைய கருணையினால் அவர்களை பணக்காரர்களாக ஆக்குவான்?"** (சூரா நூர், ஆயத்: 32). நான் திகைத்துப் போனேன். கடைசியில் நான் சொன்னேன், "எல்லாம் சரி, நான் திருமணம் செய்து கொள்வேன். ஆனால் நீங்கள் தேவையான பணம் வழங்கத் தயாரா? அல்லது

எனக்கு இலவசமாக ஒரு பெண்ணை நீங்கள் கண்டுபிடிக்க முடியுமா?" சிறிது நேரம் சிந்தித்த பிறகு, முர்ஷித் எஃபெண்டி கூறினார், "எனக்கு அது எல்லாம் கவலை இல்லை, ரஜப் மாதத்தின் தொடக்கத்தில் திருமணம் செய்துகொள்ளுங்கள், அல்லது விடுதியை விட்டு வெளியேறு" என்றார். ரஜப் மாதம் ஆரம்பிப்பதற்கு இன்னும் இருபத்தைந்து நாட்களே இருந்தது. தற்செயலாக, நான் குறிப்பிட வேண்டும்: அரபு மாதங்கள்: முஹர்ரம், சஃபர், ரபியுல்-அவ்வால், ரபியுல்-அகீர், ஜமாதி-உல்-அவ்வால், ஜமாதியுல்-ஆகீர், ரஜப், ஷாபான், ரமலான்,ஷவ்வால், தில்க'தா, தில்ஹிஜ்ஜா. அவர்களின் மாதங்கள் முப்பது நாட்களை விட அதிகமாக இல்லை, அல்லது இருபத்தி ஒன்பதுக்கு கீழேயும் இல்லை. அவை சந்திரனை அடிப்படையாகக் கொண்ட கணக்கீடுகள்.

ஒரு தச்சருக்கு உதவியாளராக வேலை எடுத்துக்கொண்டு, நான் முர்ஷித் எஃபெண்டியின் விடுதியை விட்டுசென்றேன். நாங்கள் மிகக் குறைந்த ஊதிய த்தில் ஒப்பந்தம் செய்தோம், ஆனால் என்னுடையது தங்குமிடம் மற்றும் உணவு முதலாளியின் செலவில் இருக்கும். நான் ரஜபுக்கு ஒரு மாதத்திற்கு முன்பே தச்சரின் கடைக்கு என் உடமைகளை எடுத்துக்கொண்டு இடம் மாறினேன். தச்சன் அவரது வார்த்தையில் ஒரு மனிதன். அவர் என்னை அவருடைய மகன் போல் நடத்தினார். அவர் ஈரானின் கொரசனைச் சேர்ந்த ஒரு ஷியா மற்றும் அவரது பெயர் அப்துர்ரிசா. அவருடைய தொடர்பை பயன் படுத்தி, நான் பாரசீக மொழியைக் கற்க ஆரம்பித்தேன். ஒவ்வொரு பிற்பகலி லும் ஈரானிய ஷியாக்கள் அவரை சந்திப்பார்கள் அரசியல் முதல் பொருளாதாரம் வரை பல்வேறு விஷயங்களைப் பற்றி பேசுவார்கள். மேலும் பெரும்பாலும், அவர்கள் தங்கள் சொந்த அரசாங்கத்தைப் பற்றியும் இஸ்தான்புல்லில் உள்ள கலிபாவை பற்றியும் தவறாக பேசுவார்கள். ஒரு அந்நியன் உள்ளே வரும்போதெல்லாம் தலைப்பை மாற்றி தனிப்பட்ட விஷயங்களைப் பற்றி பேசத் தொடங்குவார். அவர்கள் என்னை மிகவும் நம்பினார்கள். இருப்பினும், நான் பின்னர் கண்டுபிடித்தபடி, நான் துருக்கிய மொழி பேசுவதால் நான் ஒரு அசர்பைஜானி என்று அவர்கள் நினைத்தார்கள்.

அவ்வப்போது ஒரு இளைஞர் எங்கள் தச்சரின் கடைக்கு வருவார். அவரது ஆடை அறிவியல் ஆராய்ச்சி செய்யும் மாணவரின் உடையும், மற்றும் அவருக்கு அரபு, பாரசீகம் மற்றும் துருக்கியும் தெரியும். அவர் பெயர் **முஹம்மது பின் அப்துல் வஹ்ஹாப் நஜ்தி**. இந்த இளைஞன் மிகவும் அசாதாரணமானவன். மிகவும் ஆணவம் மற்றும் குறுகிய மனப்பான்மை

கொண்ட நபர். ஒட்டோமான் அரசாங்கத்தை வாய்வழியாக தூற்றும்போது அவர் ஒருபோதும் ஈரானிய அரசை தவறாக பேசமாட்டார். அவர் கடை உரிமையாளர் அப்துர் ரிசாவுடன் மிகவும் நட்பாக இருந்தார். அவர்கள் இருவருக்குமிடையே பொதுவான ஒற்றுமை அவர்கள் இஸ்தான்யிபுல்லில் உள்ள கலீபாவுக்கு

விரோதமானவர்கள். ஆனால் அது எப்படி சாத்திய மானது, ஒரு சுன்னியாக இருந்த இந்த இளைஞன் பாரசீகத்தைப் புரிந்து கொண்டான். ஆனால் அப்துர் ரிசா ஒரு ஷியா? இந்த நகரத்தில் சுன்னிகள் ஷியாக்களுடன் நட்பாகவும் சகோதரனாகவும் நடித்தார். பெரும்பாலான நகரவாசிகள் அரபு மற்றும் பாரசீக மொழிகளைப் புரிந்து கொண்டனர். மற்றும் பலர் துருக்கியையும் புரிந்து கொண்டனர்.

முஹம்மது நஜ்தி வெளிப்புறமாக ஒரு சுன்னி. பெரும்பாலான சுன்னிகள் ஷியாக்களைக் கண்டித்தனர். உண்மையில், அவர்கள் ஷியாக்கள் ஈமான் அற்றவர்கள் என்று கூறுகிறார்கள். இந்த மனிதன் ஷியாக்களை ஒருபோதும் திட்ட மாட்டான். முஹம்மது நஜ்தியின் படி சுன்னிகள் நான்கு மத்ஹப்களில் ஒன்றை பின்பற்றுவதற்கு எந்த காரணமும் இல்லை. "அல்லாஹ்வின் புத்தகத் தில் மத்ஹபுகள் தொடர்பான எந்த ஆதாரமும் இல்லை என்று அவர் கூறுவார்".இந்த விசயத்தில் அவர் ஆயத்-கரிமாக்களை வேண்டு மென்றே புறக்கணித்தார் மற்றும் ஹதீஸ் ஷெரீஃப்களைக் குறைத்து மதிப்பிட்டார்.

நான்கு மத்ஹபுகளின் விடயத்தில்: நபி முஹம்மது 'அலைஹி-சலாம்' அவர்களின் மறைவின் ஒரு நூற்றாண்டின் பின்னர் சுன்னி முஸ்லீம்களிடை யே நான்கு அறிஞர்கள் முன்வந்தார்கள்: அபு ஹனிஃபா, அஹ்மத் பின் ஹன்பல், மாலிக் பின் அனஸ் மற்றும் முஹம்மது பின் இத்ரிஸ் ஷாஃபி. சில கலீபாக்கள் சுன்னிகளை இந்த நான்கில் ஒன்றைப் பின்பற்றும்படி கட்டாயப் படுத்தினர். இந்த நான்கு அறிஞர்களைத் தவிர வேறு யாராலும் குர்ஆன் அல்-கரீம் அல்லது சுன்னாவில் இஜ்திஹாத் செய்ய முடியாது என்று அவர்கள் கூறினார்கள். இந்த இயக்கம் முஸ்லிம்களின் அறிவு மற்றும் புரிதலின் வாயில்களை மூடியது. இந்த இஜ்திஹாத்தின் தடை என்பது இஸ்லாத்தின் அசைவற்ற நிலைப்பாட்டிற்கு காரணம் கருதப்படுகிறது.

ஷியாக்கள் இந்த தவறான அறிக்கைகளை அவர்களின் பிரிவை பிரகடனப் படுத்துவதற்கு பயன்படுத்தினர். ஷியாக்களின் எண்ணிக்கை சுன்னிகளின் எண்ணிக்கையில் பத்தில் ஒரு பங்கை விட குறைவாக இருந்தது. ஆனால் இப்போது அவை அதிகரித்து சமமாகிவிட்டனர். இந்த முடிவு இயற்கையானது.

இஜ்திஹாத் என்பது ஆயுதம் போன்றது. இஸ்லாத்தின் ஃபிக்ஹு சட்டம் [குர்ஆன்அல்-கரீம் மற்றும் ஹதீஸின் போதனைகளை அடிப்படையாகக் கொண்டது] இது பிக்ஹு சட்டத்தை முன்னேற்றமடைய செய்யும், குர்ஆன் அல்-கரீம் மற்றும் சுன்னா பற்றிய புரிதலையும் சரி செய்யும். மறுபுறம், இஜ்திஹாதின் தடை ஒரு சிதைந்த ஆயுதம் போன்றது. அது ஒரு குறிப்பிட்ட மத்ஹபுகளின் கட்டமைப்பிற்குள் கட்டுப்படும். அதன் விளைவாக, இஜ்தி ஹாதின் வாயில்களை மூடுவதுடன் மற்றும் காலத்துக்கான தேவை களை புறக்கணிப்பது என்று பொருள். உங்கள் ஆயுதம் சிதைந்துவிட்டால்,

அல்லது உங்களின் எதிரி பூரணமாக இருந்தால், விரைவில் உங்கள் எதிரியால் அடித்து நொறுக்கப்படுவீர்கள். சுன்னிகளின் புத்திசாலிகள் இஜ்திகாதின் கதவை எதிர்காலத்தில் மீண்டும் திறப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். அவர்கள் இதைச் செய்யாவிட்டால், அவர்கள் சிறுபான்மை ஆகிவிடுவார்கள். ஷியாக்கள் சில நூற்றாண்டுகளில் பெரும்பான்மை பெறுவார்கள்.

[இருப்பினும்,நான்கு மத்ஹபுகளின் இமாம்கள்(தலைவர்கள்) ஒரே நம்பிக்கை யை கொண்டவர்கள். அவர்களுக்கிடையே நம்பிக்கையில் எந்த வித்தியா சமும் இல்லை. அவர்களின் வேறுபாடு வழிபாடுகளில் மட்டுமே உள்ளது. மேலும், இது முஸ்லிம்களுக்கு கிடைத்த ஒரு வசதி. மறுபுறம் ஷியாக்கள் பன்னிரண்டாகப் பிரிவுகளாக பிரிந்தனர், இதனால் சிதைந்த ஆயுதமாக மாறினார்கள். **மிலால் வா நிஹால்** புத்தகத்தில் இது தொடர்பான தகவல் விரிவாக உள்ளது.]

வைராக்கியமுள்ள இளைஞன், முஹம்மதுநஜ்தி, தனது நப்ஸை [அல்லாஹு தலாவுக்கு விரோதமான மனிதரில் உள்ள ஒரு வீரியம் மிக்க சக்தி] பின்பற்று வான். குர்ஆன் அல்-கரீம் இல் மற்றும் சுன்னாவைப் புரிந்து கொள்வதில் அவர் முற்றிலுமாக அவரது காலத்து அறிஞர்கள் மற்றும் நான்கு மத்ஹபு களின் அறிஞர்களின் கருத்துக்களை மட்டுமல்ல அபுபக்கர் மற்றும் உமர் போன்ற குறிப்பிடத்தக்க சஹாபாக்களை கூட புறக்கணிப்பார். குர்ஆன் அல் -கரீமின் வசனங்களுக்கு அவருடைய கருத்துக்கு முரணான அந்த சகாபாக் களின் கருத்துக்களை காணும் போதெல்லாம் அவர்கூறுவார்; **"நான் குர்ஆனையும் சுன்னாவையும் உங்களுக்காக விட்டுவிட்டேன்"** என்று நபி அவர்கள் கூறினார்கள் என்பார். அவர் நான் குர்ஆனையும் சுன்னாவையும், சஹாபக்களையும், மதுஹபுகளின் இமாம் களையும்'[1] உங்களுக்காக விட்டு செல்கிறேன் என்று கூறவில்லை. ஆகவே குர்ஆன் அல்-கரீம் மற்றும் சுன்னாவைப் பின்பற்றுவது பர்ளு, சஹாபாக்கள் மற்றும் மத்ஹபுகள் அல்லது அறிஞர்களின் கருத்துகளுக்கு[2] எவ்வளவு முரண்பட்டதாக இருந்தாலும் பரவாயில்லை.

அப்துர் ரிசாவின் இடத்தில் இரவு உணவின் போது முஹம்மது நஜ்திக்கும் 'கும்' இலிருந்து வந்த ஷேக் ஜவாத் என்ற ஷியா அறிஞர் (விருந்தினருக்கும்) இடையே நடைபெற்ற உரையாடலின் போது, பின்வருபவற்றில் தகராறு ஏற்பட்டது:

**ஷேக் ஜவாத்**:- அலி ஒரு முஜ்தஹித் என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்வதால், ஏன் ஷியாக்களைப் போல நீங்கள் அவரைப் பின்பற்றவில்லை?

---

[1] [அவருடைய இந்த அறிக்கை சஹாபாவைப் பின்பற்றவும் என்று நமக்கு கட்டளையிடும் ஹதீஸ் ஷெரீப்பை மறுக்கின்றது.]

[2] [இன்று அனைத்து இஸ்லாமிய நாடுகளிலும் அறிவற்ற மற்றும் மதவாதிகளாக மாறுவேடமிட்டுள்ள இஸ்லாத்தின் துரோகிகள் அஹ்லுஸ் சுன்னா அறிஞர்களை தாக்கி வருகின்றனர். அவர்கள் சவுதி அரேபியாவிலிருந்து அவர்கள் பெறும் பெரிய தொகைக்காக பதிலுக்கு வஹாபிஸத்தை பாராட்டி வருகின்றனர். அவர்கள் அனைவரும் முஹம்மது நஜ்தியின் மேற்கண்ட கூற்றுகளை ஒரு ஆயுதமாக ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பயன்படுத்துகின்றனர். உண்மை என்னவென்றால், அஹ்ல்-சுன்னா அல்லது நான்கு மதுகபுகளின் அறிஞர்கள் குர்ஆன் அல்- கரீம் மற்றும் ஹதீஸ் ஷெரீப் க்கு எதிரான எந்த அறிக்கையும் விடவில்லை. இவற்றில் அவர்கள் எந்த ஆதாரங்கள் சேர்க்கவும் இல்லை., ஆனால் அவர்கள் அவற்றை விளக்கினார்கள். வஹாபிகள், அவர்களின் பிரிட்டிஷ்காரர்கள் போல் பொய்களை இட்டுக்கட்டி முஸ்லிம்களை வழி கெடுக்கிறார்கள்.

**முஹம்மது நஜ்தி**:- அலி, உமர் அல்லது மற்ற சஹாபாக்களிடமிருந்து வேறுபட்டவர் அல்ல. அவர் கூறியவைகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆவணமாக இருக்க முடியாது. குர்ஆன் அல்-கரீம் மற்றும் சுன்னா என்பன உண்மையான ஆவணங்கள்.[உண்மை என்னவென்றால், சஹாபா கிராமினால் கூறப்பட்ட ஏதேனும் ஒரு அறிக்கை (ஹதீத்) ஆவணத் திறன் கொண்டது. அவர்களில் எவராயினும் ஒருவரை [1] பின்பற்றுமாறு நம்முடைய தீர்க்கதரிசி எங்களுக்கு கட்டளையிட்டுள்ளார்கள்.]

**ஷேக் ஜவாத்**: - எங்கள் நபி "**நான் அறிவின் நகரம், மற்றும் அலி அதன் வாயில்,**"என்று கூறியதிலிருந்து, அலி மற்றும், மற்ற சஹாபாக்களுக்கு இடையே வித்தியாசம் இருக்கக் கூடாதா?

**முஹம்மது நஜ்தி:** - அலியின் அறிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படும் என்றால், நபி அவர்கள் சொல்லியிருக்க மாட்டார்களா, "நான் உங்களுக்கு குர்ஆன், சுன்னா மற்றும் அலியை உங்களுக்கு விட்டுச் செல்கிறேன் என்று.?

**ஷேக் ஜவாத்:** - ஆம், அவர் (நபி) அவ்வாறு சொன்னதாக நாம் கருதலாம். ஏனெனில், அவர் ஒரு ஹதீஸ் ஷரீபில், "நான் அல்லாஹ்வுடைய புத்தகம் மற்றும் என் அஹ்லு பைத்துகளை (முகம்மது நபியின் குடும்பம்'அலைஹி-சலாம்). விட்டுச் செல்கிறேன்." மேலும், அலி அஹ்லு பைத்துகளில் மிகப் பெரிய உறுப்பினர்.

**நஜ்தின் முஹம்மது:** நபி அவர்கள் அவ்வாறு கூறியதை மறுத்தார். ஷேக் ஜவாத் முஹம்மது நஜ்தியை சான்றுகளுடன் சமாதானப்படுத்த முயற்சி செய்தார். எனினும், முஹம்மது நஜ்தி இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, "நீங்கள் நபிகள் நாயகம் சொன்னதை உறுதிப்படுத்துங்கள், 'நான் உங்களுக்கு அல்லாஹ்வின் புத்தகம் மற்றும் என்னுடைய அஹ்லு பைத்துகள். பின்னர் நபியின் சுன்னாவுக்கு என்ன ஆனது? "

**ஷேக் ஜவாத்** - அல்லாஹ்வின் தூதரின் சுன்னா என்பது குர்ஆனின் விளக்கம். அல்லாஹ்வின் தூதர், "**நான் உங்களுக்கு அல்லாஹ்வின் புத்தகம் மற்றும் என் அஹ்லு பைத்துகளை விட்டுச் செல்கிறேன்.**"

"அல்லாஹ்வின் புத்தகம்" என்ற சொற்றொடர் முந்தையதை விளக்கும் ‘சுன்னா’வையும் அடக்கும்.

**முஹம்மது நஜ்தி:** அஹ்லு பைத்துகளின் அறிக்கைகள் குர்ஆனின் விளக்க மாக இருந்தால் , ஹதீஸ்களால் அதை ஏன் விளக்க வேண்டும்?

**ஷேக் ஜவாத்** - ஹஸ்ரத் நபி அவர்கள் மறைந்த போது, அவருடைய உம்மா (முஸ்லிம்கள்)வுக்கு காலத்தின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் குர்ஆனின் விளக்கம் இருக்க வேண்டும் என்று கருதினார். இந்த காரணத்தி னால் ஹஸரத் நபி அவர்கள் தனது உம்மாவுக்கு கட்டளையிட்டார்கள்: அசலான குர்ஆனையும், காலத்தின் தேவைகளை திருப்திப்படுத்தும் வகையில் குர்ஆனை விளங்குவதற்காக அவருடைய அஹ்லு-பைத்தின ரையும் பின்பற்றுங்கள் என்று கூறினார்கள்.

---

[1] [நபி அவர்களின் அழகான முகத்தைப்பார்த்த ஒருமுஸ்லீம் சஹாபா என்று அழைக்கப்படுகிறார்.சஹாபாவின் பன்மை சஹாபாத் அல்-கிராம் அல்லது அஸ்ஹாப்]

இந்த சர்ச்சை எனக்கு மிகவும் பிடித்திருந்தது. முஹம்மது நஜ்தி ஷேக் ஜவாத்தின் முன் அசைவற்று, ஒரு வேட்டைக்காரனின் கையில் ஒரு வீட்டு சிட்டுக்குருவி போல இருந்தார். முஹம்மது நஜ்தி நான் தேடுகின்ற ஆள் மாதிரி. அக்கால அறிஞர்களை அவமரியாதைக்கு உட்படுத்தும் அவர் (முந்தைய) நான்கு கலிபாக்களுக்கு சிறிதளவு கூட மதிப்பு கொடுக்காத அவருடைய ஒரு சுயாதீனமான பார்வை இருந்தது. **குர்ஆன் அல்-கரீம்** மற்றும் சுன்னாவைப் புரிந்துகொள்வது அவருக்கு இருக்கும் மிகவும் அதிகமான ஆர்வம், அவரை வேட்டையாடவும் அவரை தன்பக்கம் இழுப்பதற்கும் அவரின் மிகவும் மலினமான புள்ளியாக காணப்பட்டது. இந்த வித்தியாசமான ஆணவம் மிக்க இளைஞர், இஸ்தான்புல்லில் எனக்கு கற்பித்த அந்த அறிஞர் அகமது எஃபெண்டியை விட வித்தியாசமானவன். அறிஞர் அகமது எஃபெண்டி அவரது முன்னோடிகளைப் போலவே ஒரு மலை க்கு ஒப்பானவராக இருந்தார். எந்த சக்தியாலும் அவரை நகர்த்த முடியாது. அவர் எப்போது அபு ஹனிபாவின் பெயரைக் குறிப்பிட்டாரோ, அப்போது அவர் எழுந்து நிற்பார், சென்று வுளூ செய்வார். அவர் புகாரி என்ற ஹதீஸ் புத்தகத்தை கையில் எடுத்து வைத்திருக்க நினைத்த போதெல்லாம் அவர் திரும்பவும் சென்று சென்று வுளூ செய்வார். சுன்னிகள் இந்த புத்தகத்தை மிகவும் நம்புகிறார்கள்.

மறுபுறம் முகம்மது நஜ்தி, அபு ஹனிஃபாவை மிகவும் வெறுத்தார். அவர் "அபு ஹனிஃபாவை விட தனக்கு நன்றாக தெரியும்[1]"என்று கூறுவார்,மேலும், அவரைப் பொறுத்தவரை புகாரியின் புத்தகத்தில் பாதி தவறு [2] இருந்தது.

[ஹம்பரின் இந்த வாக்குமூலங்களை நான்துருக்கியில்[3] மொழி பெயர்க்கும் போது, நான் பின்வரும் நிகழ்வை நினைவு கூர்ந்தேன்:

நான் உயர்நிலைப் பள்ளியில் ஒரு ஆசிரியராக இருந்தேன். ஒரு பாடத்தின்போது என் மாணவன் ஒருவன், "ஐயா, ஒரு போரில் முஸ்லீம் கொல்லப்பட்டால், அவர் தியாகியாக மாறுவாரா?என்று கேட்டான். "ஆமாம், அவர் ஆகுவார்,"என்று நான் கூறினேன். "நபி அப்படி சொன்னாரா?" "ஆம் அவர் கூறினார்." ஒருவர் கடலில் மூழ்கினால் அவரும் தியாகி ஆகிவிடுவாரா? "ஆமாம்" என்பது என் பதில். "இந்த விஷயத்தில் அவர் அதிக தவாப்பை அடைவார் (நல்ல செயல்களுக்கும் பக்திக்கும் மறு உலகில் வழங்கப்படும் வெகுமதிகள்) பின்னர் அவன் கேட்டான், "ஒருவர் விமானத்தில் இருந்து விழுந்தால் தியாகி ஆகிவிடுவாரா? "ஆமாம், அவர் ஆகுவார்," என்று நான் கூறினேன். "நம்முடைய தீர்க்கதரிசி இவற்றையும் கூறினாரா?" "ஆம் அவர் கூறினார்." இதன்போது அவன் ஒரு வெற்றிகரமான காற்றில் புன்னகைத்து, "ஐயா! அந்த நாட்களில் விமானங்கள் இருந்தனவா?. "அவருக்கான எனது பதில் பின்வருமாறு: "என் மகனே! நமது நபிக்கு தொண்ணூற்றொன்பது பெயர்கள் உள்ளன. அவரின் ஒவ்வொரு பெயரும் அழகான பண்பு அவருக்கு வழங்கப்பட்டது. அவருடைய பெயர்களில் ஒன்று ஜாமிஉல் கலீம். அவர் ஒரே வார்த்தையில் பல

---

[1] இன்று ஒரு குறிப்பிட்ட மத்ஹப் இல்லாத சில அறிவற்றவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்.

[2] இந்த நபரின் இந்த குற்றச்சாட்டு, அவருக்கு ஹதீது பற்றி அறிவு கிடையாது என்பதை காட்டுகிறது

[3] ஹம்பரின் வாக்குமூலங்கள், ஆசிரியரின் விளக்கங்களுடன் துருக்கியில் மொழிபெயர்க்கப்பட்டன,

உண்மைகளை கூறுவார். உதாரணமாக, அவர் கூறினார்' "உயரத்தில் இருந்து விழுந்தவன் தியாகியாகிவிடுவான்" என்றார். அந்த சிறுவன் என்னுடைய இந்த பதிலை போற்றுதலுடனும் நன்றியுடனும் ஏற்றுக் கொண்டான்.

அதே மாதிரி, குர்ஆன் அல்-கரீம் மற்றும்ஹதீஸ் ஷெரீஃப்களில் பல வார்த்தைகள், விதிகள், கட்டளைகள் மற்றும் தடைகள் ஒவ்வொன்றும் வேறு பல அர்த்தங்களைக் குறிக்கின்றவை உள்ளன. இந்த அர்த்தங்களை ஆராய்ந்து தேவையான விடயங்களுக்கு சரியானவற்றை பயன்படுத்து வதற்காக மேற்கொள்ளப்பட்ட அறிவியல்பணி **இஜ்திஹாத்** என்று அழைக்க ப்படுகிறது. இஜ்திஹாத் செய்வதற்கு ஆழ்ந்த அறிவு மற்றும் ஞானம் இருக்க வேண்டும். இந்த காரணத்திற்காக, சுன்னிகள் அறிவு குறைந்தவர்கள் இஜ்திஹாத் செய்வதை தடைசெய்தனர். இதற்கு அர்த்தம் இஜ்திஹாத்தை தடை செய்வது என்பது அல்ல. ஹிஜ்ரி நான்காம் நூற்றாண்டுக்குப் பிறகு, முழுமையான முஜ்தஹித் தரத்தை அடைவதற்கு [இஜ்திஹாத் செய்ய போதுமான]ஆழ்ந்த அறிவை கற்றுக்கொண்ட அறிஞர்கள் எவரும் தோன்ற வில்லை. எனவே, யாரும் இஜ்திஹாத்தை செய்யவில்லை இது இயற்கை யாகவே இஜ்திஹாத்தின் வாயில்களை மூடுவது என்று பொருள். உலக முடிவை நெருங்கும் போது ஈசா(இயேசு) (அலைஹி-சலாம்)

வானத்திலிருந்து இறங்குவார்கள். மற்றும் மஹ்தி அலைஹிஸ் சலாம் (எதிர்பார்க்கப்படும் இஸ்லாமிய ஹீரோ) தோன்றுவார்; இவர்கள் இஜ்திஹாத் செய்வார்கள்.

எங்கள் நபி (ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், **“எனக்குப் பிறகு முஸ்லிம்கள் எழுபத்து மூன்று குழுக்களாகப் பிரிவார்கள். இவற்றில் ஒரு கூட்டம் மட்டுமே சொர்க்கத்தில் நுழைவார்கள்**” என்று கூறினார்கள். அவர்கள் யார் நாயகமே என்று அவர்களிடம் கேட்டபோது; அவர்கள் பதிலளித்தார்கள், "**என்னையும் என் அஸ்ஹாபிகளையும் தழுவிக் கொண்டவர்கள் (பின்பற்றியவர்கள்**). மற்றொரு ஹதீஸ் ஷரீபில் அவர், **“என் அஸ்ஹாபிகள் வானத்தில் உள்ள நட்சத்திரங்களைப் போன்றவர் கள். நீங்கள் அவர்களில் எவரை பின்பற்றினாலும் ஹிதாயத்தை** (வழிகாட்டுதல்) **அடைவீர்கள்**. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், "நீங்கள் சொர்க்கத்திற்கு செல்லும் வழியை அடைவீர்கள்”.

எமனை சேர்ந்த ஒரு யூதன், அப்துல்லா பின்சபா என்பவன் முஸ்லிம்களிடை யே அஸ்ஹாபுக்கு எதிரான விரோதத்தை தூண்டி விட்டான். இந்த யூதனை நம்பி பகை கொண்ட அந்த அறிவற்ற மக்கள் அஸ்ஹாபுக்கு எதிராக விரோதம் கொண்டார்கள். அவர்கள் ஷீத் (ஷியா) என்று அழைக்கப்பட்டனர். ஹதீஸ் ஷரீப்களுக்கு கீழ்ப்படிந்து, சஹாபத் அல்-கிராம்களை விரும்பி அவர்களை பின்பற்றியவர்கள் சுன்னிகள் என்று அழைக்கப்பட்டார்கள் (அஹ்ல் அஸ்-சுன்னத் வல்-ஜமாஅ).]

நான் முஹம்மது நஜ்தி பின் அப்துல் வஹ்ஹாப் உடன் மிக நெருக்கமான நட்பை ஏற்படுத்தினேன். நான் அவரை பாராட்டும் பிரச்சாரத்தை தொடங்கி னேன். எல்லா இடங்களிலும். ஒரு நாள் நான் அவரிடம் சொன்னேன்: “உமரை மற்றும் அலியை விட நீங்கள் பெரியவர். நபிகள் இப்போது உயிரோடு இருந்திருந்தால், அவர் அவர்களுக்கு பதிலாக அவரது கலீபாவாக உங்களை நியமிப்பார். இஸ்லாம் உங்கள் கைகளில் புதுப்பிக்கப்படும் மற்றும் மேம்படுத்தப்படும் என்று நான் எதிர்பார்க்கிறேன். நீங்கள் மட்டுமே அறிஞர் இஸ்லாத்தை உலகம் முழுவதும் பரப்புவீர்கள்.

அப்துல் வஹாபின் மகன் முஹம்மதுவும் நானும் **குர்ஆன் அல்-கரீமுக்கு** புதிய விளக்கம் செய்ய முடிவு செய்தோம்: இந்த புதியவிளக்கம் என்பது எமது பார்வையை மட்டுமே பிரதிபலிப்பதாக இருந்தது. சஹாபாக்கள், மத்ஹபு களின் இமாம்கள் மற்றும் குர்ஆன் அல்-கரீம் விளக்கத்தில் நிபுணத்துவம் பெற்ற ஆழமாக கற்ற அறிஞர்கள் முஃபஸ்ஸிர்களினால் செய்யப்பட்ட விளக்கங்களுக்கு முற்றிலும் முரணானதாக இருந்தது. நாங்கள் குர்ஆன் அல்-கரீமை வாசித்தல் மற்றும் சில ஆயத்களை பற்றி பேசுவதாக இருந்தோம். இதைச் செய்வதன் நோக்கம் முஹம்மதுவை தவறாக வழிநடத்துவதாகும். எல்லாவற்றிற்கும் மேலாக, அவர் தன்னை ஒருபுரட்சியாளராக காட்டிக் கொள்வதற்கு

முயல்பவராக இருந்தார். நான் அவரை நம்ப வேண்டும் என்பதற்காக என் கருத்துகளையும் யோசனைகளையும் அவர் மகிழ்ச்சி யுடன் ஏற்றுக் கொள்வார். இன்னும் அதிகமாக, ஒரு சந்தர்ப்பத்தில் நான் அவரிடம் கூறினேன்,"ஜிஹாத் (இஸ்லாத்துக்காக போராடுவது ) பர்ளு இல்லை என்று கூறினேன். அவர் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தார், "சூரா தவ்பாவில் ஆயத்73: '**அவிசுவாசிகளுக்கு எதிராக போர் செய்**.'என்று அல்லாஹ்வின் கட்டளை இருந்தும் ஏன் அது இருக்கக்கூடாது என்றார்".

நான் கூறினேன் "**காஃபிர்கள் மற்றும் முனாஃபிக்குகள் ஆகியோருக்கு எதிராக ஜிஹாத் செய்யுங்கள்."** என்று "சூரா தவ்பாவில் ஆயத் 73: அல்லாஹ்வின் கட்டளை இருந்த போதிலும் நபிகள் நாயகம் ஏன் முனாஃபிக் குகளுக்கு (குர்ஆன் அல்-கரீமின் திறந்த அர்த்தங்களுடன் எந்த நாசிலும் அவிசுவாசத்தை மறைப்பவர்கள்) எதிராக போர் செய்யவில்லை.

[மறுபுறம், நிராகரிப்பவர்களுக்கு எதிராக இருபத்தேழு ஜிஹாத்கள் செய்யப் பட்டது என்று **மவாஹிபு லதுன்னியா**வில் எழுதப்பட்டுள்ளது. அவர்களின் வாள்கள் இஸ்தான்புல்லில் அருங்காட்சியகங்களில் காட்சிப்படுத்தப்பட்டு உள்ளன. முனாஃபிக்குகள் முஸ்லிம்களை போல் நடிப்பார்கள். அவர்கள் பகலில் மஸ்ஜிதுன் நபியில் அல்லாஹ்வின் தூதருடன் தொழுகையை நிறைவேற்றுவார்கள். ரசூலுல்லாஹ் (ஸல்லள்ளாஹு அலைஹி வசல்லம் அவர்கள் இதை அறிந்திருந்தார்கள். ஆயினும் அவர்களில் எவரிடமும் "நீ ஒரு முனாஃபிக்" என்று அவர் சொல்லவில்லை. ஏன் என்றால், அவர் அவர்களுக்கு எதிராக போர் செய்து அவர்களை கொன்றால், , "முஹம்மது (அலை) தன்னை நம்பிய மக்களை கொன்றார்."என்று மக்கள் கூறுவார்கள். எனவே அவர் அவர்களுக்கு எதிராக வாய்மொழி ஜிஹாத் செய்தார்.

ஜிஹாது செய்வது பர்ளு அது ஒருவர் உடல் மூலம் மற்றும்/அல்லது ஒருவரின் சொத்து மூலம் மற்றும்/அல்லது ஒருவரின் பேச்சுமூலம் செய்யப்படுகிறது. மேலே குறிப்பிட்டுள்ள ஆயத் கரிமா அவிசுவாசிகளுக்கு எதிராக ஜிஹாத் செய்ய கட்டளையிடுகிறது. இது எந்த வகையான ஜிஹாத் என்று வரையறுக்கவில்லை. செய்யப்பட வேண்டிய ஜிஹாத்தின் வகை. நிராகரிப் பவர்களுக்கு எதிராக ஜிஹாது சண்டையிடுவதன் மூலம் செய்யப்பட வேண்டும், மற்றும் முனாஃபிக்குகளுக்கு எதிராக தகவல் மற்றும் ஆலோசனை மூலம் செய்யப்பட வேண்டும். இந்த ஆயத்கரிமா இந்த வகையான ஜிஹாத்தை உள்ளடக்கியது.]

அவர் கூறினார், "நபிகள் நாயகம் அவர்களுக்கு எதிராக பேச்சு மூலம் ஜிஹாத் செய்தார். " நான் சொன்னேன், பர்ளு (கட்டளையிடப்பட்ட) ஜிஹாத் ஒன்று தான், ஒருவரின் பேச்சு மூலமா செய்ய வேண்டும்?" அவர் கூறினார், "ரசூலுல்லாஹ் அவிசுவாசிகளுக்கு எதிராக போர் செய்தார்".

நான் சொன்னேன், "நபிகள் நாயகம் தன்னை தற்காத்துக் கொள்வதற்காக மறுப்பவர்களுக்கு எதிராகப் போர் புரிந்தனர். அவிசுவாசிகள் அவரைக் கொல்ல எண்ணினர். அவர் தலையசைத்தார்.

மற்றொரு சமயத்தில் நான் அவரிடம், "முத்ஆ நிக்காஹ் [1] அனுமதிக்கப் படுகிறது" என்று சொன்னேன். அவர், "இல்லை, என்று எதிர்த்தார். நான் சொன்னேன், "அல்லாஹ் அறிவிக்கிறான், **நீங்கள் அவர்களை பயன் படுத்துவதற்கு பதிலாக அவர்களுக்கு நீங்கள் பொருந்திக்கொண்ட மஹரை** (கட்டாய பெறுமதி , தொகை ) **கொடுங்கள்** . (சூரா நிசா, ஆயத்: 24).

அவர் கூறினார், "உமர் முத்'ஆவின் இரண்டு நடைமுறை உதாரணங்களைத் தடை செய்தார். அவரது காலத்தில் நடைமுறையில் இருந்தது மற்றும் இதை செய்யும் யாரையும் தண்டிப்பேன் என்று கூறினார்.

நான் சொன்னேன், "நீங்கள் உமரை விட உயர்ந்தவர்கள் என்று கூறினீர்கள் ஆனால் அவரை பின்பற்றுகிறீர்கள். மேலும், உமர் கூறினார், நபியவர்கள் அதை அனுமதித்ததை[2] அறிந்திருந்தாலும் அதை தடைசெய்வதாக கூறினார். ஏன் நபிகளாரின் வார்த்தையை ஒதுக்கி வைக்கிறீர்கள் மற்றும் உமரின் வார்த்தைக்கு கீழ்ப்படிய வேண்டுமா? " அவர் பதில் சொல்லவில்லை.

அவர் உறுதியாக இருப்பதாக எனக்குத் தெரியும். முஹம்மது நஜ்தி அந்த நேரத்தில் ஒரு பெண்ணை விரும்பினார் என்பதை நான் உணர்ந்தேன். அவர் தனியாக இருந்தார். நான் அவரிடம் கூறினேன், வாருங்கள், நாம் ஒவ்வொரு வரும் முத்'ஆ நிகாஹ் மூலம் ஒரு பெண்ணைப் பெறுவோம். நாங்கள் வைத்திருப்போம். அவர்களுடன் நேரத்தை நன்றாக களிக்கலாம் என்றேன். அவர் தலையசைத்து ஏற்றுக்கொண்டார். இது எனக்கு மிகச்சிறந்த வாய்ப் பாக இருந்தது. அதனால் அவரை மகிழ்விப்பதர்க்காக ஒரு பெண்ணைக் கண்டுபிடிப்பேன் என்று உறுதியளித்தேன்.

---

[1] நிக்காஹ் என்றால் இஸ்லாத்தில் நிர்ணயிக்கப்பட்ட திருமண ஒப்பந்தம். முத் ஆ நிக்காஹ் ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே ஒரு குறிப்பிட்ட காலத்துக்கான உடன்படிக்கை ஒப்பந்தம்.. இத்தகைய திருமணத்தை இஸ்லாம் தடை செய்கிறது.

[2] முத்தா நிக்கா என்பது ஒரு பெண்ணை வாடகைக்கு எடுக்கும் இன்றைய நடைமுறையைப் போன்றது. இது ஷியாக்களின் படி அனுமதிக்கப்படுகிறது. உமர் (ரலியல்லாஹு அன்ஹு) அவ்வாறு சொல்லவில்லை. மற்ற கிறிஸ்தவர்களைப் போலவே, ஆங்கில உளவாளி ஹஸ்ரத் உமரை நோக்கி விரோதப் போக்கை கொள்கிறார். , இந்த சந்தர்ப்பத்திலும் அவருக்கு எதிராகப் பார்க்கிறார். அது ஹுஜாஜ்-இ-கதிய்யா புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளது: "உமர் (ரலியல்லாஹு அன்ஹு) ரசூலுல்லா முத் ஆ நிக்காவை தடைசெய்ததாகவும் அல்லாஹ்வின் தூதரால் தடைசெய்யப்பட்ட ஒரு நடைமுறையை அனுமதிக்கப் போவதில்லை என்றும் கூறினார். அனைத்து சஹாபாத் அல்-கிராமும் கலீபாவின் இந்த அறிக்கையை

ஆதரித்தனர்.அவர்களில் ஹஸ்ரத் அலி (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களும் இருந்தார். (தயவு செய்து சரியான வார்த்தையின் ஆவணங்கள் புத்தகத்தைப் பார்க்கவும்.)

அவருக்கு மக்கள் மீது இருந்த பயத்தை போக்க வேண்டும் என்பதே எனது நோக்கம். ஆனால் இந்த விஷயத்தை எங்களுக்கும் அந்த பெண்ணுக்கு மிடையே மிக ரகசியமாக வைக்க வேண்டும் என்று அவர் ஒரு நிபந்தனையை கூறினார். அந்தப் பெண்ணிடம் அவருடையது பெயர் என்னவென்று கூட சொல்லக்கூடாது என்று கூறினார். நான் இந்த பணிக்காக காமன்வெல்த் அமைச்சகத்தால் அங்குள்ள முஸ்லிம் இளைஞர்களை மயக்குவதற்காக அனுப்பப்பட்ட கிறிஸ்தவ பெண்களிடம் விரைந்து சென்றேன். நான் அவர்களில் ஒருவருக்கு விஷயத்தை விளக்கினேன். அவள் உதவ ஒப்புக்கொண்டாள்,அதனால் நான் அவளுக்கு சஃபியா என்ற புனைப் பெயரை வழங்கினேன். நான் முஹம்மது நஜ்தியை அவளது வீட்டிற்கு அழைத்துச்சென்றேன். சஃபியா வீட்டில் தனியாக இருந்தாள். முஹம்மதுவுக்கு ஒரு வாரதிருமண ஒப்பந்தம் செய்தோம். மஹர் என்ற பெயரில் அந்தப் பெண்ணுக்கு கொஞ்சம் தங்கத்தைக் கொடுத்தார் நஜ்தி. இதிலிருந்து நாங்கள் முஹம்மது நஜ்தியை சஃபிய்யா மூலம் தவறாக வழிநடத்த ஆரம்பித்தோம். நான் வெளியே இருந்தேன்.

முஹம்மது நஜ்தி இப்போது சஃபியாவின் கைகளில் முழுமையாக இருந்தார். தவிர, அவர் இஜ்திஹாத் மற்றும் யோசனைகளின் சுதந்திரம் என்ற போர்வை யில் ஷரீஅத்தின் கட்டளைகளுக்கு கீழ்ப்படியாத மகிழ்ச்சியை ருசித்தார்.

முத்ஆ நிக்காவின் மூன்றாவது நாள் அவருடன் எனக்கு கடின பானங்கள் ஹராம் அல்ல (இஸ்லாத்தால் தடைசெய்யப்பட்டதல்ல) என்ற நீண்ட வாக்கு வாதம் ஏற்பட்டது. அவர் மதுபானம் குடிப்பது ஹராம் என்று பல ஆயத்து களையும் ஹதீஸ்களையும் அவர் மேற்கோள் காட்டி இருந்தாலும், நான் அவை அனைத்தையும் ரத்துசெய்து இறுதியாக கூறினேன், யசித் மற்றும் உமையாத் மற்றும் அப்பாசித் கலீஃபாக்கள் சிலர் கடின பானங்கள் பாவித்தார்கள் என்பது உண்மை, அவர்கள் அனைவரும் தவறான மனிதர் களாக இருந்தார்களா, நீங்கள் மட்டுமே சரியான வழியைப் பின்பற்றுபவரா? அவர்கள் சந்தேகமின்றி, உங்களைவிட குர்ஆனையும் சுன்னாவையும் சிறந்த முறையில் அறிந்தவர்கள் மதுபானம், ஹராம் அல்ல மக்ருஹ் என்றேன் .

மேலும், அது யூத மற்றும் கிறிஸ்தவ புத்தகங்களில் ஆல்கஹால் முபா (அனுமதிக் கப்பட்டது)என்று எழுதப்பட்டுள்ளது. அனைத்து மதங்களும் அல்லாஹ்வின் கட்டளைகள். உண்மையாக, ஒரு கதையின்படி, உமர்: **'நீங்கள் அனைவரும் அதை விட்டுவிட்டீர்கள், இல்லையா?"** (சூரா மாயிதா, ஆயத்: 91). என்ற ஆயத் வெளிப்படும் வரை கடின பானங்களை உட்கொண்டார். அது ஹராமாக இருந்திருந்தால், நபிகள் நாயகம் அவரை தண்டித்திருப்பார். நபிகள்

நாயகம் அவரை தண்டிக்க வில்லை என்பதால், ஹார்ட் ட்ரிங்க் ஹலால் ஆகும்.

[ உண்மை என்னவென்றால் உமர் (ரலியல்லாஹு தஅலா அன்ஹு ) ஹராம் ஆக்கப்படுவதற்கு முன்பு பானங்கள் எடுத்துக்கொள்வார். அதன் தடை அறிவிக்கப்பட்ட பிறகு அவர் குடித்ததில்லை. உமையாத் மற்றும் அப்பாசித் கலிபா சிலர் மதுபானங்களை உட்கொண்டார் என்றால் ஆல்கஹால் குடிப்பதை மக்ருஹ் என்று ஆகாது, அவர்கள் பாவிகள் என்பதை அது காட்டும். அவர்கள் ஹராத்தை செய்தனர். உளவாளியால் மேற்கோள் காட்டப்பட்ட ஆயத் கரிமாவும், மற்ற ஆயத் கரிமாக்களும் மற்றும் ஹதீஸ் ஷரீஃப்களும், மதுபானம் குடிப்பது ஹராம் என்று தெரிவிக்கின்றன. இது **ரியாத்-அன்-நாசிஹினில்** கூறப்பட்டுள்ளது, "முன்பு மது அருந்துவது அனுமதிக்கப்பட்டது. ஹஸ்ரத் உமர், சஃத் இப்னி வக்காஸ்,மற்றும் வேறு சில சஹாபாக்கள் மது அருந்தும் பழக்கம் கொண்டிருந்தார்கள். சூரா பகாராவின் இரு நூற்றி பத்தொன்பதாவது ஆயத் இது பெரும்பாவம் என்று அறிவித்தது. சிறிது காலத்தின் பின் சூரா நிசாவின் நாற்பத்தி இரண்டாவது ஆயத்: **"நீங்கள் குடிபோதையில் தொழுகைக்கு வரவேண்டாம்!"** என்று அறிவித்தது. இறுதி யில், சூரா மாயிதாவின் தொண்ணூற்றி மூன்றாவது ஆயத் வெளிவந்ததும் மது ஹராம் ஆக்கப்பட்டது.

ஹதீஸ் ஷெரீஃப்களில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது**: "ஏதாவது அது பெரிய அளவில் எடுக்கப்படும்போது போதையை கொடுக்குமாக இருந்தால், அதை ஒரு சிறிய அளவில் எடுத்துக்கொள்வதும் ஹராம்".** மற்றும் **"வைன் (மது குடிப்பது) பாவங்களின் மிகவும் கடுமையானது."** மற்றும் **"மது அருந்தும் ஒருவருடன் நட்பு கொள்ள வேண்டாம்! அவரின் இறுதி சடங்கு (அவர் இறந்தபோது) கலந்து கொள்ளாதீர்கள்! அவனுடன் திருமண உறவை உருவாக்க வேண்டாம்!"** மேலும் **"மது அருந்துவது சிலைகளை வணங்குவது போன்றது."** மற்றும் **"அல்லாஹு தலா மது அருந்துபவனை யும், விற்பவனையும், அதை உற்பத்தி செய்பவனையும், அல்லது கொடுப் பவனையும் சாபமிடுகிறான்."**]

முஹம்மது நஜ்தி கூறினார், "சிலஅறிவிப்புகளின் படி, உமர் ஆல்கஹோலை தண்ணீரில் கலந்த பிறகு குடித்தார், அது மயக்கத்தை ஏற்படுத்தாத வரை ஹராம் அல்ல. உமரின் பார்வை சரியானது, ஏனெனில் அது குர்ஆனில் அறிவிக்கப்பட்டுள்ளது,'**ஷைத்தான் உங்களுக்குள் பகை மற்றும் வெறுப் பை உருவாக்குவதற்கு விரும்புகிறான் உங்கள் பானங்கள் மற்றும் சூதாட்டம் அல்லாஹ்வின் திக்ர்** (அல்லாஹு தலாவை நினைவு கூர்வது) **செய்வதி லிருந்தும் தொழுகையிலிருந்தும் தடுப்பதற்காக**. **நீங்கள் இப்போது இவற்றை விட்டுவிடுவீர்கள், இல்லையா?"**(சூரா மாயிதா, ஆயத்: 91). மது அருந்துவதால் அவர்கள் மயக்கமடையாத போது பாவங்கள்

ஏற்படாது. ஆயத்தில் வரையறுக்கப்படுகிறது. எனவே, கடினமான போதை விளைவு [1] இல்லாத போது பானங்கள் ஹராம் அல்ல என்று கூறினார்.

நான் சஃபிய்யாவிடம் குடிப்பழக்கத்தில் இருந்த இந்த சர்ச்சையைப் பற்றி சொன்னேன். அவரை மிகவும் வலுவான மதுவை குடிக்கச் செய்யும்படி அவளுக்கு அறிவுறுத்தினேன். பிறகு, அவள் சொன்னாள், "நீ சொன்னபடியே செய்து அவனை குடிக்க வைத்தேன். அவன் நடனமாடினான் மற்றும் அந்த இரவில் என்னுடன் பல முறை இணைந்தான். அதிலிருந்து சஃபிய்யாவும் மற்றும் நானும் நஜ்தின் முஹம்மதுவை முழுமையாகக் கட்டுப்படுத்தினோம். எங்கள் பிரியாவிடையில் காமன்வெல்த் அமைச்சர் என்னிடம் கூறினார், "நாங்கள் அவிசுவாசிகளிடமிருந்து [முஸ்லிம்கள்] ஆல்கஹால், விபச்சாரம் மூலம் ஸ்பெயினைக் கைப்பற்றினோம். எங்கள் நிலங்கள் அனைத்தையும்

[1] எனினும், நம் தீர்க்கதரிசி கூறினார், "ஏதாவது அது பெரிய அளவில் எடுக்கப்படும் போது போதை ஏற்படுமாயின், அதில் சிறிதளவு கூட எடுத்துக்கொள்வது ஹராம்

இந்த இரண்டு பெரிய சக்திகளை மீண்டும் பயன்படுத்தி திரும்பப் பெறுவோம். " அது எவ்வளவு உண்மை என்று இப்போது எனக்குத் தெரியும்.

ஒருநாள் நான் முஹம்மது நஜ்தியிடம் நோன்பை பற்றி கதையை தொடுத்தேன். குர்ஆனில், (சூரா பகாரா, ஆயத்: 184) இல் **'உங்கள் நோன்பு உங்களுக்கு மிகவும் உகந்தது**' என்று கூறப்பட்டுள்ளது. நோன்பு பர்ளு என்று குறிப்பிடப்படவில்லை (சாதாரண கட்டளை)என்றேன். பிறகு, இஸ்லாத்தில் நோன்பு சுன்னாதான், பர்ளு அல்ல" என்றேன். அவர் எதிர்ப்பு தெரிவித்து, "நீங்கள் என்னை என் நம்பிக்கை யிலிருந்து வெளியேற்ற முயற்சிக் கிறீர்களா? என்று கேட்டார். நான் பதில் அளித்தேன், "ஒருவரின் நம்பிக்கை ஒருவரின் இதயத்தின் தூய்மையைக் கொண்டுள்ளது, ஒருவரின் ஆன்மாவின் இரட்சிப்பு, மற்றவர்களின் உரிமைகளை மீறமல் இருப்பது என்று கூறினேன். நபி கூறவில்லையா?, நம்பிக்கை என்பது காதல்'? குர்ஆன் அல்-கரீமில் அல்லாஹ் அறிவிக்க வில்லையா, 'உங்கள் ரப்பை(அல்லாஹ்) வணங்குங்கள் யக்கீன் வரும் வரை[1]. உங்களிடம் யக்கீன் வருகிறதா? (சூரா ஹிஜ்ர், ஆயத்:99). பிறகு, ஒருவர் அல்லாஹ் மீதும், தீர்ப்பு நாள் மீதும் யக்கீனை அடைந்தவுடன், அவரின் இதயம் அழகுபெறுகிறது ஒருவரின் இதயம் மற்றும் செயல்கள் தூய்மை அடைகின்றன. அவர் மனிதகுலத்தின் மிகவும் நல்லொழுக்கமுள்ளவராக மாறுவார். என்னுடைய இந்த வார்த்தைகளுக்கு பதிலாக அவரது தலையை அசைத்தார். ஒருமுறை நான் அவரிடம், "தொழுகை ஃபர்ளு அல்ல" என்று கூறினேன். அது எப்படி ஃபர்ளு இல்லை?" "குர்ஆனில் **'என்னை நினைவு கூறும் வகையில் தொழுகையை நிறைவேற்றுங்கள்'** என்று அல்லாஹ் அறிவிக்கிறான். (சூரா தாஹா, ஆயத்: 14). பிறகு,

தொழுகையின் நோக்கம் அல்லாஹ்வை நினைவு செய்வதாகும். எனவே, நீங்கள் தொழுகையை நிறைவேற்றாமல் அல்லாஹ்வை நினைவு கூரலாம். அவர்,"ஆம்.சிலர் (அல்லாஹுுதலாவை) தொழுவதற்கு பதிலாக[2] நினைத்து திக்ர் செய்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன் என்றார். அவரது இந்த அறிக்கையில் மிகவும் மகிழ்ச்சியாக நான் இருந்தேன். நான் இந்த எண்ணத்தை வளர்த்து, அவருடைய இதயத்தைக் கைப்பற்றுவதற்கு கடுமையாக முயற்சித்தேன். அப்போது அவர் அவர் தொழுகைக்கு (சலாத்து) அதிக முக்கியத்துவம் கொடுக்காமல் இருப்பதை நான் கவனித்தேன். காலை தொழுகையில் அவர் மிகவும் போடு போக்காக குறிப்பாக அலட்சியமாக செய்து கொண்டிருந்தார். ஏனென்றால் நான் அவரை படுக்கைக்கு செல்ல விடாமல் அவருடன் நள்ளிரவு வரை பேசிக்கொண்டிருப்பேன். அதனால் அவர் காலை தொழுகைக்காக எழுந்திருப்பதற்கு மிகவும் சோர்வாக இருப்பார். நான் முஹம்மது நஜ்தியின் நம்பிக்கையின் சால்வையை மெதுவாக தோள்களிலிருந்து கீழே இழுக்க ஆரம்பித்தேன்.

---

[1] அனைத்து இஸ்லாமிய புத்தகங்களும் (யக்கின்) என்பது இந்த சூழலில் (மரணம்) என்று ஒப்புக்கொள்கின்றன. எனவே,"**இறக்கும் வரை வணங்குங்கள்**" என்று இந்த ஆயத்கரிமா கூறுகிறது.

[2] நமது நபி கூறினார், "(சலாத்) தொழுகை இஸ்லாத்தின் தூண். தொழுபவர் அவரது நம்பிக்கையை நிலைநிறுத்தியுள்ளார். தொழாதவர் அவரது நம்பிக்கையை கெடுத்து விட்டார். (மற்றொரு ஹதீஸில்); தொழுகையை "நான் செய்வது போல் நிறைவேற்றவும்." அதன்படி நிறைவேற்றாதது ஒரு பெரும் பாவம். எது இதயத்தின் தூய்மை என்பது சலாத்தை சரியாகச் செய்வதாகும்.

ஒரு நாள் நான் அவருடன் தீர்க்கதரிசியைப் பற்றியும் தகராறு செய்ய விரும்பினேன். .அவர் "இனிமேல், நீங்கள் என்னுடன் இந்த தலைப்புகளை பற்றி பேசினால், எங்கள் உறவு கெட்டுப்போகும், நான் உன்னுடன் எனது நட்பை முடிவுக்கு வருவேன்" என்றார். எனது எல்லா முயற்சிகளையும் ஒருமுறை அழித்துவிடுமோ என்ற பயத்தில் இதைப் பற்றி நான் பேசுவதை கைவிட்டேன்.

சுன்னி, ஷீ'ஆ இருந்து முற்றிலும் மாறுபட்ட படிப்பை தொடர நான் அவருக்கு அறிவுறுத்தினேன். என்னுடைய இந்த யோசனையை அவர் விரும்பினார். ஏனென்றால் அவர் ஆணவம் கொண்ட நபர். சஃபிய்யாவுக்கு நன்றி, நான் அவருக்கு வாய்பூட்டை வைத்தேன்.

ஒரு சந்தர்ப்பத்தில் நான் கூறினேன், "நபி செய்ததை நான் கேள்விப்பட்டேன் அவரது அஸ்ஹாபுகளை ஒருவருக்கொருவர் சகோதரர்களாக இருக்க செய்தார்கள், இது உண்மையா?" என்று கேட்டேன். அவரது பதில் ஆம், இந்த இஸ்லாத்தில் அது தற்காலிகமானதா அல்லது இல்லையா என்பதை நான் அறிய விரும்பினேன். நிரந்தரமாக என்று அவர் விளக்கினார், "இது நிரந்தர மானது. நபி முஹம்மதுவின் ஹலால் உலகின் முடிவு வரை ஹலால், மற்றும் அவரது ஹராம் உலக முடிவு வரை ஹராம் ஆகும் என்றார். பின்னர் நான் அவரை என்னுடைய சகோதரனாக இருக்க அவருக்கு

வாய்ப்பளித்தேன். அதனால் நாங்கள் சகோதரர்களாக இருந்தோம். அன்று முதல் நான் அவரை தனியாக விடவில்லை. நாங்கள் ஒன்றாக இருந்தோம். அவரது பயணங்களில் கூட. அவர் எனக்கு மிகவும் முக்கியமானவராக இருந்தார். அந்த மரத்தை நான் நட்டு வளர்த்தேன், என்னுடைய மிக மதிப்புமிக்க இளைமை நாட்களை அதற்கு செலவிட்டேன். இப்போது அதன் பலனைத் தரத் தொடங்கியது. நான் லண்டனில் காமன் வெல்த் அமைச்சகத்திற்கு மாதாந்திர அறிக்கைகளை அனுப்புகிறேன். நான் பெற்ற பதில்களில் ஊக்குவித்தல், உறுதியளித்தல் மிக அதிகம். முஹம்மது நஜ்தி நான் அவருக்காக வரைந்த பாதையில் பின் தொடர்ந்தார். எனது கடமை சுதந்திர உணர்வுகளை அவருக்கு ஊக்குவிப் பதாகும். சுதந்திரம் மற்றும் சந்தேகம். நான் எப்பொழுதும் அவருக்கு பிரகாசமான எதிர்காலம் காத்திருப்பதாக அவரைப் புகழ்ந்தேன் P- 32.

ஒரு நாள் நான் பின்வரும் கனவை புனைந்தேன்: “நேற்று இரவு நான் எங்கள் நபியை கனவு கண்டேன். நான் இஸ்லாமிய ஆசிரியர்களிடமிருந்து கற்றுக் கொண்ட பண்புகளுடன் அவருடன் உரையாற்றினேன். அவர் ஒரு மேடையில் (உயர்ந்த மேடையில்) அமர்ந்திருந்தார். அவரைச் சுற்றி எனக்குத் தெரியாத அறிஞர்கள் இருந்தனர். நீங்கள் நுழைந்தீர்கள். உங்கள் முகம் ஒளிவட்டம் போல பிரகாசமாக இருந்தது. நீங்கள் நபியை நோக்கி நடந்தீர்கள், மற்றும் நீங்கள் போதுமான அளவு நெருக்கமாக இருந்தபோது நபி எழுந்து நின்று உங்கள் இரண்டு கண்களுக்கும் இடையில் முத்தமிட்டார். அவர் கூறினார், “நீங்கள் என் பெயரின் வாரிசு எனக்குத் தெரிந்தவரை, உலக மற்றும் மத விஷயங்களில் எனது துணை”. நீங்கள், ’அல்லாஹ்வின் தூதரே! என்னுடைய அறிவை மக்களுக்கு விளக்க நான் பயப்படுகிறேன். நபி பதிலளித்தார். ” நீங்கள் மிகப் பெரியவர். பயப்பட வேண்டாம்”.

முஹம்மது பின் அப்துல் வஹ்ஹாப் கனவைக் கேட்டதும் ஆனந்தத்தை வெளிப்படுத்தினார். நான் அவரிடம் சொன்னது உண்மைதானா என்று அவர் என்னிடம் பலமுறை கேட்டார். அவர் கேட்கும் ஒவ்வொரு முறையும் நேரான பதிலைப் பெற்றார். இறுதியாக அவரிடம் உண்மையைச் சொன்னேன் என்பது அவருக்கு உறுதியாக இருந்தது என்று நினைக்கிறேன், அப்போது இருந்து, நான் அவருக்கு ஊக்குவித்த ஒரு புதிய பிரிவை நிறுவுவதற்கு[1] யோசனையை விளம்பரப்படுத்த முடிவு செய்தேன்.

---

[1] பாக்தாத்தின் ஜமீல் சித்கி ஜஹாவி எழுதிய புத்தகம் **அல்-ஃபஜ்ர்-உஸ்-சாதிக்,** 1905/1323 இல் எகிப்தில் அச்சிடப்பட்டது. அவர் இஸ்தான்புல்லின் தாருல் ஃபுனுன் பல்கலைக்கழகத்தில், அகாயிட்-இ-இஸ்லாமியா (இஸ்லாமிய நம்பிக்கைகள்) துறையில் பேராசிரியராக இருந்தார். அவர் 1936/1354 இல் காலமானார். இந்நூல் ஆஃப்செட் செயல்முறை மூலம் மீள்பதிப்பு செய்யப்பட்டு இஸ்தான்புல்லில் ஹக்கிகட் நூல்நிலையத்தால் வெளியீடு செய்யப்பட்டது. இந்த புத்தகத்தில் கூறப்பட்டுள்ளது, "வழிதவறிய வஹாபி பிரிவின் கருத்துக்கள் முஹம்மது பின் அப்துல் வஹ்ஹாப்

இனால்1730/1143 இல் நஜ்தில் உருவாக்கப்பட்டது.. அவர் 1699/1111 இல் பிறந்து, 1792/1207ல் இறந்தார்.

இந்தப் வஹாபி பிரிவை நிறுவுவதற்காக தரியாவின் அமீர் முஹம்மது பின் சுஊத் கணிசமான அளவு முஸ்லீம்களின் இரத்தத்தை ஓட்டினார். வஹாபிகள் தங்களுக்கு உடன்படாத முஸ்லிம்களை வழி தவறியவர்கள் என்று அழைத் தார்கள். வஹாபிகள் அல்லாதவர்கள் அனைவரும் கட்டாயம் புதிதாக ஹஜ் செய்ய வேண்டும் என்று கூறினார்கள். அதை (முந்தி) செய்திருந்தாலும் கூட. மேலும் அவர்களின் முன்னோர்கள் அறுநூறு ஆண்டுகளாக விசுவாசம் கொள்ளாதவர்களாக இருந்தனர் என்று கூறினார்கள். வஹாபி பிரிவை ஏற்காத எவரையும் கொன்று, அவர்களின் உடைமைகள் கொள்ளையடித்து தூக்கிச் சென்றார்கள். நபி முஹம்மது அலைஹி-சலாம் அவர்களுக்கு அவர்கள் அவமரியாதையாக நடந்து கொண்டனர். அவர்கள் ஃபிக்ஹ், தஃப்சீர் மற்றும் புத்தகங்களை எரித்தனர். குர்ஆன் அல்-கரீமை, ஹதீஸ்களை தங்களின் சொந்த கருத்து களுக்கு ஏற்ப தவறாக வியாக்கியானம் செய்தனர். முஸ்லீம்களை ஏமாற்றுவதற்காக, அவர்கள் தாங்கள் ஹன்பலி மத்ஹபில் இருப்பதாக கூறினார்கள். இருப்பினும், பெரும்பாலான ஹன்பலி மதுஹபு அறிஞர்கள் இவர்களை மறுத்து புத்தகங்களை எழுதினார்கள். அவர்களை வழி தவறியவர்கள் என்று கூறினார்கள். அவர்கள் ஹராமை 'ஹலால்' என்று அழைப்பதால், மற்றும் தீர்க்கதரிசிகள் மற்றும் அவ்லியாக்களை இழிவு படுத்துவதால் அவர்கள் காஃபிர்கள் என்று எழுதினார்கள். வஹாபி மதம் அத்தியாவசியமான பத்து விடயங்களை அடிப்படையாக கொண்டது:

1- அல்லாஹ் ஒரு உருவமுள்ள பொருள். அவனுக்கு கைகள், முகம் மற்றும், திசைகள் உள்ளன [அவர்களுடைய இந்த நம்பிக்கை கிறிஸ்தவ மதத்தைப் போன்றது.(தந்தை, மகன் மற்றும் பரிசுத்த ஆவி)];
2- அவர்கள் குர்ஆன்அல்-கரீமை அவர்களின் சொந்த புரிதலின் படி விளக்குகிறார்கள்;
3- அவர்கள் சஹாபா-கிராம் அறிவித்த உண்மைகளை நிராகரிக்கி றார்கள்;
4- இஸ்லாமிய அறிஞர்கள் கூறிய உண்மைகளை செய்த அறிக்கைகளை அவர்கள் நிராகரிக்கிறார்கள்;
5- மத்ஹபுகள் நான்கில் ஒன்றைப் பின்பற்றும் நபர் நிராகரிப்பவர் என்று கூறுகிறார்கள்
6- வஹாபிகள் அல்லாதவர் நிராகரிப்பவர் என்று அவர்கள் கூறுகிறார்கள்;
7 நபியையும் அவ்லியாவையும் வஸீலாவாக்கும் (தனக்கும் அல்லாஹு தஆலாவுக்கும் இடையில் இடைத்தரகர்கள்), பிரார்த்தனை செய்பவர் நிராகரிப்பவர் என்று அவர்கள் கூறுகிறார்கள்
8- நபியின் மற்றும் அவ்லியாவின் கல்லறைகளை தரிசிப்பது அல்லது அந்த இடங்களுக்குச் செல்வது ஹராம் என்று அவர்கள் கூறுகிறார்கள்
9- அல்லாஹு தலா தவிர வேறு எந்த உயிர்மீதும் சத்தியம் செய்பவர் ஒரு முஷ்ரிக் ஆகிவிடுவார் (அல்லாஹு தலாவுக்கு பங்குதாரர் அல்லது இணை கற்பிப்பவர்கள், அதாவது ஷிர்க்) என்று கூறுகிறார்கள்.

10-அல்லாஹுதலாவை தவிர வேறு யாருக்கும் அல்லது அவ்லியாவின் கல்லறைகளுக்காக மிருகத்தை பலியிட உறுதிமொழி (நேர்ச்சை) (ஒரு தியாகமாக) செய்பவர், ஒரு முஷ்ரிக் ஆகிவிடுவார்கள்.

இந்த புத்தகத்தில் அவர்கள் கூறிய சொல் ஆவண சான்றுகளுடன் நிரூபிக்கப்படும். இந்த பத்து நம்பிக்கைகளும் தவறானவை. இந்த பத்து அடிப்படைகள் ஹம்பர் முஹம்மது நஜ்தி க்குத் தூண்டிய வஹாபி மதம் மதக்கொள்கைகளுடன் குறிப்பிடத்தக்க வகையில் ஒத்திருக்கிறது பிரிட்டிஷார் ஹம்பரின் வாக்குமூலங்களை கிறிஸ்தவருக்கான பிரச்சார வழிமுறையாக வெளியிட்டனர்.

முஸ்லிம்களின் குழந்தைகளை தவறாக வழிநடத்தும் பொருட்டு இஸ்லாமிய போதனைகள் என்ற பெயரில் அவர்களின் பொய்களை புனைவுகளையும் எழுதினார்கள். எனவே, இந்த பிரிட்டிஷ் பொறியிலிருந்து நமது இளைஞர்களை பாதுகாக்கும் நோக்கில், நாங்கள், அவர்களின் பொய்கள் மற்றும் அவதூறுகளுக்கு எதிராக திருத்தமாக இந்த புத்தகத்தை வெளியிடுகிறோம். ]

## பிரிவு ஒன்று

# பகுதி ஐந்து

முஹம்மது நஜ்தியும் நானும் மிகவும் நெருங்கிய நண்பர்களாக ஒன்றாக இருந்த அந்த நாட்கள் ஒன்றில், நான் லண்டனிலிருந்து என்னை **கர்பலா** மற்றும் **நஜாஃப்** நகரங்களுக்கு செல்லுமாறு கட்டளையிடுகின்ற ஒரு செய்தியைப் பெற்றேன். அவை அறிவு மற்றும் ஆன்மீகத்தின் இரண்டு மிகவும் பிரபலமான ஷியா மையங்கள். அதனால் நான் நஜ்தின் முஹம்மது வுடனான எனது நட்பிற்கு முற்றுப்புள்ளி வைத்து மற்றும் பாஸ்ராவை விட்டு போக வேண்டியிருந்தது. ஆனாலும் நான் மகிழ்ச்சியாக இருந்தேன், ஏனென்றால் அறியாமை மற்றும் ஒழுக்கக்கேடான ஒரு மனிதன் ஒரு புதியதை பிரிவை நிறுவப்போகிறான் அது இஸ்லாத்தை உள்ளே இருந்து தகர்க்கும் என்று எனக்கு உறுதியாக இருந்தது. நான் இந்த புதிய பிரிவின் மதவெறியின் கோட்பாடுகளை இயற்றியவன்.

அலி, சுன்னிகளின் நான்காவது கலீஃபா, மற்றும் ஷியாக்களின் முதலாவது இடத்தில் இருக்கக்கூடிய மனிதர் நஜாப்பில் அடக்கம் செய்யப்பட்டுள்ளார். **குஃபா** நகரம், நஜாஃபில் இருந்து ஒரு மணிநேர நடைதூரம்,அதாவது ஒரு ஃபெர்சா (லீக்) தூரம். அது அலியின் கிலாபத்தின் தலைநகராக இருந்தது. அலி கொல்லப்பட்டபோது, அவருடைய மகன்கள் ஹசன் மற்றும் ஹுசைன் அவரை குஃபாவுக்கு வெளியே நஜாஃப் என்ற இடத்தில் அடக்கம் செய்தனர். இன்று காலப்போக்கில் நஜாஃப் வளரத் தொடங்கியது. அதே நேரத்தில் குஃபா படிப்படியாக சிதைவில் விழுந்தது. ஷியா பிரிவினர் ஒன்று சேர்ந்து நஜாஃபில் வீடுகள், சந்தைகள், மதரஸாக்கள் மற்றும் கல்வி நிறுவனங்களை கட்டினார் கள். இஸ்தான்புல்லில் உள்ள கலிபா பின்வரும் காரணங்களுக்காக அவர்களுக்கு அன்பாகவும் தாராளமாகவும் இருந்தார்.

1- ஈரானில் ஷியா நிர்வாகம் ஷியாக்களை ஆதரித்தது. கலீபா அவர்களுடன் குறுக்கிடுவது மாநிலங்களுக்கு இடையில் பதற்றத்தை ஏற்படுத்தும். இது போருக்கு வழிவகுக்கும்.

2- நஜாஃபில் வசிக்கும் பல ஆயுதம் தாங்கிய பழங்குடியினர் ஷியாக்களை ஆதரிக்கின்றனர். அவர்களிடம் ஆயுதம் மற்றும் அமைப்பு அடிப்படையில் முக்கியத்துவம் அதிகம் இல்லை என்றாலும், அது கலீஃபாவை சிக்கலில் மாட்டிக்கொள்ளும் அபாயத்தில் இயங்குவது ஞானமற்றதாக இருக்கும்.

3- நஜாஃபில் உள்ள ஷியா பிரிவினர் உலகம் முழுவதும், குறிப்பாக ஆபிரிக்கா மற்றும் இந்தியாவில் உள்ள ஷியாக்கள்மீது அதிகாரம் செலுத்தினர். கலீஃபா அவர்களைத் தொந்தரவு செய்தால், அனைத்து ஷியாக்களும் அவருக்கு எதிராக எழுவார்கள். ஹுசைன் பின் அலி, நபியின் பேரன், அதாவது அவரது மகள் பாத்திமாவின் மகன், கர்பெலாவில் வீரமரணம் அடைந்தார். ஈராக் மக்கள் மதீனாவில்

இருந்த ஹுசைனை அவர்கள் கலீபாவாக தேர்ந்தெடுப் பதாக கூறி ஈராக்கிற்கு அழைத்தார்கள். ஹுசைன் மற்றும் அவரது குடும்பத்தினர் அழைக்கப்பட்ட பிரதேசத்துக்கு வந்து சேரும் பொழுது ஈராக்கியர்கள் தங்கள் முந்தைய நோக்கத்தை உமையாத் கலீபாவான யாசித் பின் முஆவியாவின் உத்தரவின் பேரில் கைவிட்டனர்., டமஸ்கஸில் வசித்த உமையாத் கலீபா அவரை கைது செய்யும் நோக்கத்துடன் புறப்பட்டார். ஹுசைன் மற்றும் அவரது குடும்பத்தினர் ஒரு ஈராக் இராணுவத்தை எதிர்த்து போராடினர். போர் அவர்களின் வீர மரணத்தில் முடிந்தது, அதனால் ஈராக் இராணுவம் வென்ற பக்கம் சென்றது. அன்று முதல், ஷியாக்கள் கர்பெலாவை அவர்களின் ஆன்மீக மையமாக ஏற்றுக்கொண்டனர். அதனால் உலகம் முழுவதிலுமிருந்து ஷியாக்கள் இங்கே வந்து மிகவும் பெரிய கூட்டத்தை உருவாக்கினார்கள். எங்கள் கிறிஸ்த்துவ மதத்திற்கு அதை போன்ற ஒரு ஒப்புவமை இல்லை.

ஷீஆ நகரமான கர்பெலாவில் ஷியா மதரஸாக்கள் உள்ளன. இந்த நகரம் மற்றும் நஜாஃப் ஒன்றுக்கொன்று ஆதரவளிக்கின்றன. இந்த இரண்டு நகரங்களுக்கும் செல்லுமாறு கட்டளை கிடைத்தவுடன், நான் பஸ்ராவி லிருந்து பக்தாத்துக்குச் சென்றேன், அங்கிருந்து 'ஹுல்லா' என்று பெயரிடப் பட்ட நகரத்திற்குச் சென்றேன். அது யூப்ரடீசு நதியோரம் அமைந்துள்ளது. டைக்ரிஸ் மற்றும் யூப்ரடீஸ் நதிகள் துருக்கியிலிருந்து வறுகின்றன, ஈராக்கை குறுக்கறுத்து பாரசீக வளைகுடாவில் பாய்கிறது. ஈராக்கின் விவசாயம் மற்றும் நலன்களுக்கு இந்த இரண்டு ஆறுகள் ஆதாரமாக இருக்கின்றது.

நான் மீண்டும் லண்டனில் இருந்தபோது, நான் காமன்வெல்த் அமைச்சக த்திற்கு இந்த இரண்டு ஆறுகளின் படுக்கைகளை மாற்றியமைப்பதற்கு ஒரு திட்டத்தை முன்மொழிந்தேன். அது தண்ணீர் துண்டிக்கப்படும் போது, ஈராக் எங்கள் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ள செய்யவேண்டும் என்பதற்காக.

ஹுல்லாவிலிருந்து நஜாஃப் வரை நான் அஜர்பைஜானி வர்த்தகர் என்ற போர்வையில் பயணித்தேன். ஷியா மக்களுடன் நெருங்கிய நட்பை ஏற்படுத்தி க் கொண்டு, நான் அவர்களை தவறாக வழிநடத்த ஆரம்பித்தேன். நான் அவர்களின் மத வட்டங்களில் சேர்ந்தேன். அவர்கள் சுன்னிகளைப் போல அறிவியலைப் படிக்கவில்லை என்பதையும் அவர்களிடம் அழகான தார்மீக குணங்கள் இல்லை என்பதை நான் பார்த்தேன். உதாரணத்திற்கு:

1- அவர்கள் ஒட்டோமான் ஆட்சியின் விதிமுறைக்கு மிகவும் விரோதமாக இருந்தனர். ஏனெனில் அவர்கள் ஷியாக்கள் மற்றும் துருக்கியர்கள் சுன்னிகள். அவர்கள் சுன்னிகளை நிராகரிப்பவர்கள் என்று கூறினார்கள்.

2- ஷியா மத அறிஞர்கள் மதபோதனைகளில் முழுமையாக உள்வாங்கப் பட்டனர், மற்றும் உலக அறிவில் மிகக்குறைந்த ஆர்வம்

இருந்தது. நமது வரலாற்றில் நிலைகுலைந்த காலத்தில் பாதிரியார்களை போன்று.

3- இஸ்லாத்தின் உள்சாராம்சம் பற்றி, உன்னதமான தன்மை பற்றி அவர்களுக்கு தெரியாது அல்லது அவர்களுக்கு காலத்தின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மேம்பாடுகள் பற்றி மிகச்சிறிதளவு எண்ணம் கூட இல்லை. நான் என்னிடமே சொன்னேன்: இந்த ஷியாக்கள் எவ்வளவு மோசமான மனிதர்கள் உலகம் முழுவதும் விழித்திருக்கும்போது அவர்கள் நன்றாக தூங்குகிறார்கள். ஒன்று ஒரு வெள்ளம் வந்து அனைவரையும் அழைத்துச் செல்லும். பல முறை நான் கலீபாவுக்கு எதிராக கிளர்ச்சி செய்ய அவர்களை கவர்ந்திழுக்க முயன்றேன். துரதிர்ஷ்டவசமாக, யாரும் என் பேச்சைக் கேட்கவில்லை. அவர்களில் சிலர், நான் அவர்களிடம் பூமியை அழிக்க சொன்னது போல் சிரித்தனர். அவர்கள் கலிபாவை கைப்பற்ற முடியாத கோட்டையாக பார்த்தார்.

அவர்களின் கருத்துப்படி, வாக்குறுதியளிக்கப்பட்ட மஹ்தியின் வருகையுடன் அவர்கள் கலிபாவை அகற்றுவார்கள். மேலும், அவர்களின் கருத்துப்படி, மஹ்தி அவர்களின் பன்னிரண்டாவது இமாம், அவர் இஸ்லாத்தின் தீர்க்கதரிசி யின் வழித்தோன்றல் மற்றும் ஹிஜ்ரி 255 இல் மறைந்தவர். அவர் இன்னும் உயிருடன் இருக்கிறார். கொடுமை மற்றும் அநீதிகள் அதிகரிக்கும் போது மீண்டும் ஒரு நாள் தோன்றி உலகை அதிலிருந்து மீட்பார், அதை நீதியால் நிரப்புவார் என்று அவர்கள் நம்பினர். இது அதிர்ச்சியாக இருக்கிறது! இந்த ஷியா மக்கள் எப்படி நம்புகிறார்கள் இந்த மூடநம்பிக்கைகள்! இது மூடநம்பிக்கை கோட்பாடு, "இயேசு கிறிஸ்து திரும்பி வந்து உலகை நீதியால் நிரப்புவார்,"என்று எங்க கிறிஸ்தவர்களால் கூறுவது போல் இருந்தது.

ஒரு நாள் நான் அவர்களில் ஒருவரிடம் சொன்னேன்: இஸ்லாமிய தீர்க்கதரிசி செய்தது போல் "நீங்கள் அநீதியை தடுப்பது உங்களுக்குத் கடமையல்லவா? அவருடைய பதில்: "அவர் அல்லாஹ் அவருக்கு உதவியதால் அநீதியை தடுக்க முடிந்தது".அப்பொழுது நான் "**நீங்கள் அல்லாஹ்வின் மதத்திற்கு உதவி செய்தால், அவன் பதிலுக்கு உங்களுக்கு உதவுவான்.**'[1]"என்று குர்ஆனில் எழுதப்பட்டுள்ளது, உங்கள் சித்திரவதைக்கு எதிராக நீங்கள் 'ஷா வுக்கு (பெர்சியன் தேசத்தின் ஆட்சியாளர்) எதிராக கிளர்ச்சி செய்தால், அல்லாஹ் உங்களுக்கு உதவுவான் என்று கூறிய போது "அவர் பதிலளித்தார், "நீங்கள் ஒரு வர்த்தகர். இவை அறிவியல் சார்ந்த விஷயங்கள். நீங்கள் இதை புரிந்து கொள்ள முடியாது. "

அமீர் உல்-முமினீன் அலி (விசுவாசிகளின் தலைவர்) உடைய அடக்கஸ்தலம் பெருமளவில் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அது ஒரு பிரம்மாண்டமான தங்கத்தால் மூடப்பட்டிருந்த குவிமாடம்(dome) மற்றும் இரண்டு உயரமான மினாரெட்டுகள் முற்றத்தில் இருந்தது. ஒவ்வொரு நாளும் ஷியாக்கள் அதிக எண்ணிக்கையில் இந்த இடத்துக்கு வருகை தந்தனர். அவர்கள் ஜமாஅத்தில்

ஸலாத்(தொழுகை) நடத்தினர். அதில் ஒவ்வொரு பார்வையாளரும் முதலில் அடக்கஸ்தலத்தின் வாசலுக்கு முன்னால் குனிந்து, முத்தமிட்டு, பின்னர் வாழ்த்தினார்கள். அவர்கள் அனுமதி கேட்டு பின்னர் உள்ளே நுழைந்தனர். அடக்கஸ்தலம் ஒரு பரந்த முற்றத்தில் இருந்தது, அதில் முஸ்லிம் அறிஞர்கள் மற்றும் மக்களுக்கான பல அறைகள் இருந்தன. கர்பெலாவில் அதை ஒத்த இரண்டு சியாரம்கள் அலிக்கு இருந்தன. ஒன்று அவர்களில் ஹுசைனுக்கும் மற்றொன்று அவருடையது சகோதரர் **அப்பாஸ்**, கர்பெலாவில் அவருடன் வீரமரணம் அடைந்தார்கள். ஷீஆக்கள் கர்பெலாவில் அவர்கள் நஜாஃப் இல் செய்த அதே நடைமுறைகளை இங்கும் செய்தனர். கர்பெலாவின் காலநிலை நஜாப்பை விட சிறப்பாக இருந்தது. அது இருந்தது அழகிய பழத்தோட்டங்கள் மற்றும் அழகான ஓடைகளால் சூழப்பட்டுள்ளது. ஈராக்கிற்கான எனது

---

[1] சூரா முஹம்மது, ஆயத்: 7. அல்லாஹு தலா மதத்திற்கு உதவுவது என்பதன் பொருள் ஷரீஅத்துக்கு ஏற்ப தன்னை மாற்றிக்கொள்ளவும், அதை பிறருக்கு அறிவிக்க முயற்சி செய்வதும். அரசுக்கு எதிராக கிளர்ச்சி செய்வது மதத்தை அழிப்பதாகும்.

பணியின் போது நான் எனது இதயம் நிம்மதி பெறும் காட்சியை பார்த்தேன். அங்கு நடந்த சில நிகழ்வுகள் ஒட்டோமான் பேரரசின் முடிவை அறிவித்தன.

ஒன்று, இஸ்தான்புல் நிர்வாகத்தால் நியமிக்கப்பட்ட ஆளுநர் ஒரு படிக்காத மற்றும் கொடூரமான நபர். அவர் விரும்பியதை செய்தார். மக்கள் அவரை விரும்பவில்லை. சுன்னிகள் அசௌகரியமாக இருந்தனர், ஏனெனில் கவர்னர் அவர்களின் சுதந்திரத்தை கட்டுப்படுத்தினார் மற்றும் மதிப்பளிக்கவில்லை., மற்றும் ஷியாக்கள் ஒரு துருக்கியரால் ஆளப்படுவதில் கோபமடைந்தனர். அவர்களில் ஸய்யித் (ஹஸ்ரத் ஹுசைன் ரலியல்லாஹு தஆலா அன்ஹு) வின் வாரிசுகள் இருந்தனர். மற்றும் ஷெரிப்கள் (ஹஸ்ரத் ஹசன் ரலியல்லா ஹுதஆலா அன்ஹு) வின் வாரிசுகள், நபியின் வழித்தோன்றல்கள், கவர்னர் பதவிக்கு தகுதியானவர்கள்.

ஷியாக்கள் முற்றிலும் சோகமான சூழ்நிலையில் அவர்கள் வாழ்ந்தனர். மோசமான மற்றும் பாழடைந்த சூழல்கள். சாலைகள் பாதுகாப்பாக இல்லை. கொள்ளையர்கள் எப்போதும் கரவன்களுக்காக காத்திருந்தனர், அவர்களை அழைத்துச்செல்ல பாதுகாப்பு வீரர்கள் இல்லை என்பதை அவர்கள் எப்போதாவது கண்டால் அவர்களை தாக்கினர். அவர்களை அழைத்துச் செல்ல அரசாங்கம் ஒரு பிரிவை நியமிக்காமல் விட்டால் வியாபார கூட்டங்கள் புறப்படாது. ஷியா பழங்குடியினர் பெரும்பாலும் ஒருவருக் கொருவர் போர்க்குண மிக்கவர்களாக இருந்தனர். அவர்கள் தினமும் ஒருவரையொருவர் கொன்று கொள்ளையடித்தனர். அறியாமை மற்றும் கல்வியறிவின்மை பயங்கரமாக பரவலாக இருந்தன. ஷியாக்களின் இந்த நிலை

ஐரோப்பா தேவாலயங்களின் படையெடுப்புகளின் கீழ் இருந்த காலத்தை எனக்கு நினைவூட்டியது.

நஜாஃபிலும் மற்றும் கர்பலாவிலும் வாழ்ந்த மதத் தலைவர்கள், மற்றும் மதத்திற்காக சேவைக்கு அர்ப்பணிக்கப்பட்டவர்கள் என்று ஒரு சிறிய சிறுபான்மையினர் தவிர மற்றவர்களில் ஒவ்வொரு ஆயிரம் ஷியாக்களில் ஒருவருக்கு கூட எழுதவோ அல்லது படிக்கவோ தெரியாது. பொருளாதாரம் முற்றிலும் சரிந்தது, மக்கள் முழு வறுமையை அனுபவித்தனர். நிர்வாக அமைப்பு முற்றிலும் நின்று விட்டது. ஷியாக்கள் அரசாங்கத்திற்கு எதிராக தேசத்துரோகங்களை செய்தனர். அரசும் மக்களும் ஒருவரை ஒருவர் சந்தேகத்துடன் பார்த்தனர். இதன் விளைவாக, அவர்களுக்கு இடையே பரஸ்பர உதவி இல்லை. ஷியா மதத்தின் தலைவர்கள், சுன்னிகளை அறிவு, வணிகம், மதம் மற்றும் உலக அளவில் ஒரே மாதிரி விடுபட்டு முற்றிலுமாக விலகி இருந்தார்கள்.

நான் கர்பலாவிலும் நஜாஃபிலும் நான்கு மாதங்கள் தங்கியிருந்தேன். நான் நஜாப்பில் மிகவும் கடுமையான நோயினால் அவதிப்பட்டேன். நான் மிகவும் மோசமாக உணர்ந்தேன், நான் சுகமாகும் நம்பிக்கையை முற்றிலும் இழந்திருந்தேன். எனது நோய் மூன்று வாரங்கள் நீடித்தது. நான் மருத்துவரிடம் சென்றேன். அவர் எனக்கு ஒரு மருந்து கொடுத்தார். மருந்தைப் பயன்படுத்தி, நான் குணமடைய ஆரம்பித்தேன். எனது நோய் முழுவதும் நான் ஒரு நிலத்தடி அறையில் தங்கினேன். ஏனெனில் நான் உடல்நிலை சரியில்லாமல் இருந்தேன், என்னை பராமரித்தவர் ஒரு அற்பமான தொகையை பெற்றுக் கொண்டு எனக்காக என் மருந்தையும் உணவையும் தயார் செய்தார், மற்றும் நான், அமீறுல்-முமினீன் அலியின்

ஒரு பார்வையாளர் என்பதற்காக பெரிய தவாபை (வெகுமதிகள் நற்செயல்கள் மற்றும் இறையச்சத்திற்காக மறுமையில் வழங்கப்படுகிறது) எதிர்பார்த்தார். முதல் சமயத்தில் கோழி குழம்பு மட்டுமே சில நாட்களுக்கு சாப்பிட வேண்டும் என்று மருத்துவர் அறிவுறுத்தினார். பின்னர் அவர் கோழியையும் சாப்பிட அனுமதித்தார். மூன்றாவது வாரம் எனக்கு அரிசி சூப் இருந்தது. உடல் நலம் தேறிய பிறகு மீண்டும் பாக்தாதுக்கு கிளம்பினேன். பாக்தாத் மற்றும் வழியில் செல்லும் போது வழியில் என்னுடைய நஜாஃப், ஹுல்லா மற்றும் அவதானிப்புகள் பற்றி நூறு பக்கங்களில் அறிக்கையைத் தயாரித்தேன். நான் காமன்வெல்த் அமைச்சு பக்தாத் பிரதிநிதியிடம் அறிக்கையை சமர்ப்பித்து விட்டு நான் ஈராக்கில் இருக்க வேண்டுமா அல்லது லண்டனு க்குத் திரும்ப வேண்டுமா என்று அமைச்சின் உத்தரவுக்காக காத்திருந்தேன்.

நான் மீண்டும் லண்டன் செல்ல விரும்பினேன். ஏனென்றால் வெளிநாட்டில் நீண்ட காலம் இருந்தேன். நான் எனது தாயகத்தையும் எனது குடும்பத்தை யும் இழந்துவிட்டேன். குறிப்பாக, நான்எனக்குப் பிறகு பிறந்த என் மகன் ரஸ்புடினைப் பார்க்க

விரும்பினேன். இந்த காரணத்திற்காக, நான் எனது அறிக்கையுடன் குறைந்தபட்சம் சிறிது நேரம் லண்டனுக்குத் திரும்ப அனுமதி கேட்டு ஒரு மனுவை இணைத்தேன். எனது மூன்று ஆண்டு பணி பற்றிய பதிவுகள் பற்றிய வாய்மொழி அறிக்கையை கொடுக்க நான் விரும்பினேன். ஈராக்கில் மற்றும் இதற்கிடையில் சிறிது ஓய்வு பெறுவதற்கு.

அவர் மீது நான் சந்தேகத்தைத் தூண்டக்கூடாது என்பதற்காக அமைச்சின் ஈராக் பிரதிநிதி அவரை அடிக்கடி அழைக்க வேண்டாம் என்று அறிவுறுத் தினார். அவர் என்னை டைகிரிஸ் நதியுடன் சேர்ந்த ஒரு விடுதியில் ஒரு அறையை வாடகைக்கு எடுக்கும்படி அறிவுறுத்தினார். நாங்கள் லண்டனில் இருந்து மின்னஞ்சலைப் பெறும்போது அமைச்சின் பதிலை உங்களுக்குத் தெரிவிப்போம் என்றார். நான் பக்தாத்தில் தங்கியிருந்த சமயத்தில் கலிபாவின் தலைநகரான இஸ்தான்புல்லுக்கும் பக்தாத்துக்கும் இடையே யான ஆன்மீக தூரத்தை கவனித்தேன்.

நான் பஸராவை விட்டு கர்பலா மற்றும் நஜாஃப் சென்றபோது, நான் முஹம்மது நஜ்தி நான் அவரை வழிநடத்திய திசையிலிருந்து விலகி விடுவாரோ என்று மிகவும் கவலையாக ஆர்வமாக இருந்தேன். ஏனெனில் அவர் மிகவும் நிலையற்றவராக இருந்தார். குறுகிய மனப்பான்மை கொண்ட நபர். நான் அவர் மீது கட்டிய இலக்குகள் கெட்டு இருக்கலாம் என்பது பற்றி நான் பயந்தேன். நான் அவரை விட்டு விலகியபோது அவர் இஸ்தான்புல் லுக்கு செல்ல நினைத்தார். அவரை அந்த எண்ணத்திலிருந்து விலக என்னால் முடிந்ததை செய்தேன். நான் கூறினேன், "நான் மிகவும் கவலைப்படுகிறேன், நீங்கள் அங்கு சென்று நீங்கள் ஒரு அறிக்கையை வெளியிடலாம், உங்களை ஒரு வழி கேடன் என்று கூறி, அவர்கள் உன்னைக் கொன்றுவிடலாம். "

என் பயம் வேறு வழியில் இருந்தது. நான் கவலையுடன் இருந்தேன். அவர் அங்கு சென்று அவர் திறமையான ஆழ்ந்த அறிஞர்களை சந்தித்து அவரது தவறுகளை சரிசெய்து அவரை சுன்னி நம்பிக்கைக்கு மாற்றினால் எனது கனவுகள் அனைத்தும் வீணாகி விடும் என்று பயந்தேன்.

இஸ்தான்புல்லில் அறிவு மற்றும் இஸ்லாத்தின் அழகான ஒழுக்கம் இருந்த தால். முஹம்மது நஜ்தி பஸ்ராவில் தங்க விரும்பவில்லை என்பதை நான் அறிந்து, அவரை இஸ்ஃபஹான் மற்றும் ஷிராஸுக்கு செல்லுமாறு நான் பரிந்துரைத்தேன். இந்த இரண்டு நகரங்களும் அழகாக இருந்தன. மேலும் அங்கு மக்கள் ஷியாக்களாக இருந்தனர். ஷியாக்களால் முஹம்மதுநஜ்திக்கு அழுத்தத்தை பிரயோகிக்க முடியாது. ஷியாக்கள் அறிவு மற்றும் நெறிமுறை களில் திறமையற்றவர்கள். இதனால் நான் பட்டியலிட்ட போக்கை அவர் மாற்ற மாட்டார் என்று உறுதி செய்தேன்.

நாங்கள் பிரிந்தபோது நான் அவரிடம் சொன்னேன், "நீங்கள் **தக்கிய்யா**வை (துன்புறுத்தலை எதிர்கொள்ளும்போது ஒருவரின் நம்பிக்கையை மறுப்பது) நம்புகிறீர்களா? "ஆமாம், நான் நம்புகிறேன்" என்று அவர் பதிலளித்தார். "நிராகரிப்பவர்கள் சஹாபாக்களில் ஒருவரை கைது செய்தனர். அவரை துன்புறுத்தி பெற்றோரை கொன்றார்கள். இதன்போது அவர் தகிய்யாவை செய்தார்; அதாவது,அவர் தனது அவநம்பிக்கையை வெளிப்படையாகக் காட்டினார். (அவர் திரும்பி வந்து என்ன நடந்தது என்று கூறினார்), நபிகள் நாயகம் அவரை கண்டிக்கவில்லை. நான் அவருக்கு அறிவுரை கூறினேன், "நீங்கள் ஷியாக்களிடையே வாழும்போது, தகிய்யாவை செய்யுங்கள்; நீங்கள் சுன்னி என்று சொல்லாதீர்கள், அவர்கள் தொந்தரவு செய்ய மாட்டார்கள். நீங்கள். அவர்கள் நாட்டையும் அறிஞர்களையும் பயன்படுத்துங்கள். அவர்களின் பழக்கவழக்கங்கள் மரபுகளைக் கற்றுக் கொள்ளுங்கள். ஏனென்றால் அவர்கள் அறியாமை மற்றும் பிடிவாதமான மக்கள்."

நான் கிளம்பும்போது, அவருக்கு கொஞ்சம் பணம் ஜகாத் கொடுத்தேன். ஜகாத் ஒரு இஸ்லாமியர் தேவைப்படும் மக்களுக்கு வழங்குவதற்காக வசூலிக்கப்படும் வரி. மேலும், கூடுதலாக, நான் அவருக்கு ஒரு சேணம் செய்யப்பட்ட விலங்கை பரிசாக கொடுத்தேன். அத்துடன் நாங்கள் பிரிந்தோம். நான் சென்ற பிறகு அவருடனான தொடர்பை இழந்தேன். இது எனக்கு முற்றிலும் அசௌகரியத்தை உருவாக்கியது.

நாங்கள் பிரிந்தபோது நாங்கள் இருவரும் பஸ்ராவுக்குத் திரும்புவோம் என்று முடிவு செய்தோம். யார் முதலில் திரும்பி வந்ததோ இல்லையோ மற்றவரை கண்டுபிடித்து ஒரு கடிதம் எழுதி அதை அப்துர் ரிசா விடம் கொடுத்துவிட வேண்டும் என்று முடிவு செய்தோம்.

### பிரிவு ஒன்று

## பகுதி ஆறு

நான் பாக்தாத்தில் சிறிது காலம் தங்கியிருந்தேன். பின்னர், லண்டனுக்குத் திரும்பும்படி கட்டளையிட்டு செய்தியைப் பெற்றேன். லண்டனுக்கு சென்று அங்கு நான் செயலாளர் மற்றும் அமைச்சின் சில அதிகாரிகளுடன் பேசினேன். எனது நீண்ட பணியின் போது

செய்த நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றி அவர்களிடம் கூறினேன். அவர்கள் மகிழ்ச்சியடைந் தனர். ஈராக்கைப் பற்றி நான் கொடுத்த தகவலில் பெரிதும் திருப்தி அடைந்தனர். மறுபுறம், முஹம்மது நஜ்தியின் பெண் நண்பர் சஃபிய்யா எனது அறிக்கையை ஏற்றுக்கொண்டு ஒரு அறிக்கையை அனுப்பியிருந்தார். நான் என்பணி முழுவதும் என்னை அமைச்சு ஆட்கள் பின் தொடர்ந்தனர் என்பதையும் அறிந்து கொண்டேன். நான் செயலாளருக்கு அனுப்பிய அறிக்கைகள் மற்றும் கணக்குகளுடன் ஏற்றுக்கொள்ள கூடிய அறிக்கை களை இந்த ஆட்களும் ஒரே நேரத்தில் அனுப்பி இருந்தார்கள்.

செயலாளர் எனக்கு அமைச்சரை சந்திக்க வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத் தார். நான் அமைச்சரைச் சந்தித்தபோது, அவர் என்னை இஸ்தான்புலில் இருந்து நான் வந்ததிலிருந்து சந்தித்ததாக என்னிடம் காட்டிக்கொள்ள வில்லை. நான் இப்போது அவரது இதயத்தில் விதிவிலக்கான ஒரு இடத்தை ஆக்கிரமித்துள்ளேன் என்று அறிந்தேன். நான் முஹம்மது நஜ்தியை பெற்றதை அறிந்து அமைச்சர் மிகவும் மகிழ்ச்சி யடைந்தார். "அவர் எங்கள் அமைச்சு தேடும் ஆயுதம். அவருக்கு எல்லா வகையான வாக்குறுதிகளையும் கொடு. நீ உமது நேரம் அனைத்தையும் அவருக்கு உபதேசம் செய்வதில் செலவழித்தாலும் பயனுள்ளது” என்றார்.

நான் முஹம்மது நஜ்தி மனம் மாறியிருக்கலாம் என்பது பற்றி கவலைப் பட்டேன் என்று நான் சொன்ன போது, அவர் பதிலளித்தார். “கவலைப்படாதே. நீ அவரை விட்டு விலகியபோது அவர் கொண்டிருந்த யோசனைகளை அவர் கைவிடவில்லை. எங்கள் அமைச்சின் ஒற்றர்கள் அவரை இஸ்பஹானில் சந்தித்து அவர் மாறவில்லை என்பதை எங்கள் அமைச்சிற்கு அறிக்கை அளித்துள்ளார்கள். நான் என்னிடமே கூறிக்கொண்டேன், முஹம்மது நஜ்தி எப்படி தனது ரகசியங்களை ஒரு அந்நியரிடம் வெளிப்படுத்துகிறார்? இதை நான் அமைச்சரிடம் கேள்வி கேட்கத் துணியவில்லை. எனினும், முஹம்மது நஜதியை பின்னர் சந்தித்த போது, இஸ்ஃபஹானில் அப்துல் கரிம் என்ற ஒரு மனிதர் இருப்பதை நான் அறிந்தேன். அவரைச் சந்தித்த போது அவருடைய ரகசியங்களை வெளிப்படுத்தினார், "நான் ஷேக் முஹம்மதுவின் [என்னை] சகோதரர். அவர் உன்னை பற்றி தனக்குத் தெரிந்த அனைத்தையும் என்னிடம் கூறினார் என்றார். முஹம்மது நஜ்தி என்னிடம் கூறினார், “சஃபியாவும் என்னுடன் சென்றார் இஸ்பஹானில் நாங்கள் இன்னும் இரண்டு மாதங்களுக்கு முத்ஆ நிகாவுடன் வாழ்ந்தோம். அப்துல் கரிம் என்னுடன் ஷிராஸுக்கு வந்து ஒரு எனக்கு ஆசியா என்ற பெண்ணைக் கொடுத்தார். ஆசியா சஃபியாவை விட அழகாகவும் கவர்ச்சியாகவும் இருந்தார். அந்த பெண்ணுடன் முத்’ஆ நிகாஹ் செய்து நான் மிகவும் மகிழ்ச்சியுடன் கழித்தேன். அவளுடன் எனது வாழ்வின் தருணங்கள் மகிழ்ச்சியானவை. "

அப்துல் கரிம் ஒரு கிறிஸ்தவ முகவர் இஸ்பஹானின் ஜெல்ஃபா மாவட்டத் தில் வாழ்ந்து வருவதையும் அமைச்சகத்தில் வேலை செய்கிறார் என்பதை யும் நான் பின்னர் கண்டுபிடித்தேன். மற்றும் ஆசியா, ஷிராஸில் வசிக்கும் ஒரு யூதர், அமைச்சகத்தின் மற்றொரு முகவராக இருந்தார். முஹம்மது நஜ்திக்கு பயிற்சி அளிக்க நாங்கள் நான்கு பேரும் ஒருங்கிணைந்தோம். எதிர்காலத்தில் அவரிடமிருந்து எதிர்பார்த்ததை அவர் சிறந்த முறையில் செய்வதற்காக.

அமைச்சரின், செயலாளர், மற்றும் எனக்கு அறிமுகமில்லாத அமைச்சின் மற்ற இரண்டு உறுப்பினர்கள் முன்னிலையில் நான் நிகழ்வுகளை விபரித்த போது, அமைச்சர் தெரியும் என்று என்னிடம் கூறினார், "நீங்கள் அமைச்சின் மிகப்பெரிய விருதைப் பெற தகுதியானவர், ஏனெனில் நீங்கள் அமைச்சின் மிக முக்கியமான முகவர்களில் சிறந்தவர். சில மாநில ரகசியங்கள் பற்றி செயலாளர் உங்களுக்கு கூறுவார், அது உங்கள் பணியில் உங்களுக்கு உதவும். பின்னர் அவர்கள் எனது குடும்பத்தை பார்க்கக்கூடிய ஒரு பத்து நாள் விடுப்பு கொடுத்தார்கள். அதனால் நான் உடனே வீட்டிற்குச்சென்று என்னை மிகவும் ஒத்த என் மகனுடன் நேரங்களை இனிமையாக கழித்தேன். என் மகன் சில வார்த்தைகள் பேசினான், அவன் நன்றாக இருந்தான் என்று நான் உணர்ந்தேன். என் உடலில் இருந்து ஒரு துண்டு. இந்த பத்து நாள் விடுமுறை யை நான் மிகவும் மகிழ்ச்சியுடன் கழித்தேன். நான் மகிழ்ச்சியில் பறப்பது போல் உணர்ந்தேன். அது வீடு திரும்பியதில், என் குடும்பத்துடன் இருப்பதில் மிக்க மகிழ்ச்சி. இதன் போது பத்துநாள் விடுப்பில் நான் என்னை மிகவும் நேசித்த என் பழைய தந்தை சித்தியை சந்தித்தேன். எனது எனது மூன்றாவது பணிக்காக புறப்பட்ட பின் அவள் இறந்து விட்டதால், அவளைப் பார்த்தது எனக்கு புத்திசாலித்தனமானது. அவளது மறைவு குறித்து நான் மிகவும் வருத்தப்பட்டேன்.

இந்த பத்து நாள் விடுப்பு ஒரு மணிநேரம் போல வேகமாக கடந்துவிட்டது. அதேசமயம் மகிழ்ச்சியானது. இது போன்ற நாட்கள் ஒரு மணிநேரம் போல விரைவாகச் செல்கின்றன, துக்கத்தின் நாட்கள் நூற்றாண்டுகள் போன்று தோன்றும். நான் அதை அனுபவித்த நாட்கள் எனக்கு நினைவிருக்கிறது. நஜாஃபில் நோய் துன்பத்தின் அந்த நாட்கள் வருடங்கள் போல் இருந்தன.

புதிய ஆர்டர்களைப் பெற அமைச்சுக்கு நான் சென்றபோது, செயலாளரை தனது மகிழ்ச்சியான முகம் மற்றும் உயரிய அந்தஸ்துடன் சந்தித்தேன். அவர் மிகவும் அன்புடன் எனக்கு கை கொடுத்தார். அவரது பாசம் உணரக்கூடிய தாக இருந்தது. அவர் என்னிடம், எங்கள் அமைச்சர் மற்றும் காலனிகளுக்கு பொறுப்பான குழுவின் அனுமதியுடன், நான் உங்களுக்கு இரண்டு மாநில ரகசியங்களைச் சொல்வேன் என்று கூறினார். இந்த இரகசியங்களிலிருந்து பின்னர் நீங்கள் மிகவும் பயனடைவீர்கள்.

நம்பிக்கையான சிலரை தவிர வேறு யாருக்கும் இந்த இரண்டு ரகசியங்களும் தெரியாது என்றார்."

என் கையைப் பிடித்து, அவர் என்னை அமைச்சகத்தில் ஒரு அறைக்கு அழைத்துச் சென்றார். இந்த அறை மிகவும் கவர்ச்சிகரமான முறையில் இருந்தது. ஒரு வட்ட மேசையைச் சுற்றி பத்து ஆண்கள் அமர்ந்திருந்தனர். முதல் மனிதன் ஒட்டோமான் பேரரசர் என்ற போர்வையில் இருந்தார். அவர் துருக்கியம் மற்றும் ஆங்கிலம் பேசினார். இரண்டாவது ஒருவர் இஸ்தான்புல்லின் ஷேக்-உல்-இஸ்லாமின் உடையணிந்திருந்தார் (தலைவர் இஸ்லாமிய விடயங்கள்). மூன்றாவது ஈரானின் ஷாவைப் போன்ற ஆடை அணிந்திருந்தார். நான்காவது ஈரானிய அரண்மனையில் மந்திரியின் ஆடையுடன் இருந்தார். ஐந்தாவது நஜாஃபில் ஷியாக்களை வழிநடத்தும் பெரிய அறிஞர்போல் ஆடை அணிந்திருந்தார். கடைசி மூன்று பேரும் பாரசீக மற்றும் ஆங்கிலம் மொழியில் பேசினார்கள். இந்த ஐந்து நபர்களில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு எழுதுவினைஞர் அவர்களுக்கு பக்கத்தில் உட்கார்ந்து அவர்கள் கூறுவதை எழுதுவதற்கு இருந்தார்கள். இந்த எழுது வினைஞர், ஒற்றர்கள் இஸ்தான்புல், இரான், மற்றும் நஜாஃப் இல் சேகரித்த விடயங்களை பற்றி ஐந்து பேருக்கும் தகவல் கொடுத்தார்கள்.

செயலாளர் கூறினார், "இந்த ஐந்து பேரும் அங்கிருக்கும் இஸ்தான்புல், தெஹ்ரான் மற்றும் நஜாஃபிலுள்ள அசல் ஐந்து பேரை பிரதிநிதித்துவ படுத்து கிறார்கள். நாங்கள் அவர்களைப் போலவே இந்த நபர்களுக்கு கல்வி மற்றும் பயிற்சி அளித்துள்ளோம். இவர்கள், தங்களை அங்குள்ள அசல் நபர்கள் என்று கற்பனை செய்கிறார்கள். அங்குள்ள அவர்களின் அசல் நபர்கள் பற்றி நாங்கள் சேகரித்த தகவல்களை அவர்கள் என்ன நினைக்கின்றனர் என்பதை அறிவதற்காக, இவர்களிடம் அந்த தகவல்கள் பற்றி கேள்வி கேட்கிறோம் அவர்கள் பதில் சொல்கிறார்கள். இவர்கள் அளித்த பதில்கள் எழுபது வீதம் அசல் நபர்கள் கொடுக்கும் பதில்களுடன் ஏற்றுக்கொள்ள தக்கது என்று தீர்மானிக்கப் பட்டுள்ளது.

"நீங்கள் விரும்பினால், மதிப்பீட்டிற்காக நீங்கள் கேள்விகளைக் கேட்கலாம். நீங்கள் நஜாஃபின் அறிஞரை ஏற்கனவே சந்தித்தீர்கள். நான் பெரிய அறிஞரை நஜாஃபில் சந்தித்து அவரிடம் சில விடயங்களை கேட்டேன் என்று உறுதியாக பதிலளித்தேன்.

இப்போது நான் அவருடைய நகலை அணுகி, "அன்புள்ள ஆசிரியரே, நாங்கள் அரசாங்கத்திற்கு எதிராக நாங்கள் போர் தொடுப்பது அனுமதிக்கப்படுமா? ஏனென்றால் அவர்கள் சுன்னி மற்றும் தவறானவர்கள்?" அவர் சிறிது நேரம் உற்றுப்பார்த்தார், பின்னர் அவர் கூறினார், "இல்லை, அவர்கள் சுன்னி என்பதால் எங்களுக்கு அரசாங்கத்துக்கு எதிராக போர் தொடுப்பது அனுமதிக்கப்படாது. ஏனெனில் அனைத்து முஸ்லிம்களும் சகோதரர்கள். அவர்கள் (சுன்னி முஸ்லீம்கள்) உம்மா (முஸ்லிம்கள்) மீது கொடுமை மற்றும்

துன்புறுத்தல் செய்தால் மட்டுமே எங்களால் போரை அறிவிக்க முடியும். மற்றும் இந்த விஷயத்தில் கூட நாங்கள் அம்ர் பில் மாருஃப்[1] மற்றும் நஹி அனில் முன்கர்[2]. கொள்கைகளைக் கவனிப்போம். அவர்கள் தங்கள் துன்புறுத்தலை நிறுத்தியவுடன். நாங்கள் தலையிடுவதை நிறுத்துவோம். "நான் சொன்னேன், "அன்புள்ள ஆசிரியரே, யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் தவறானவர்களா? இது பற்றி உங்கள் கருத்து என்ன? "ஆம், அவர்கள் தவறானவர்கள்," என்று அவர் கூறினார். "அவர்களிடமிருந்து விலகி இருப்பது அவசியம்." நான் காரணம் என்ன என்று கேட்டபோது,அவர் பதிலளித்தார். "இது அவர்களின் அவமதிப்புக்கான பதிலடியாக செய்யப்படுகிறது.

---

[1] இஸ்லாமிய கட்டளைகளை கற்பித்தல், போதித்தல் மற்றும் பாராட்டுதல்.
[2] இஸ்லாமிய தடைகளுக்கு எதிராக எச்சரிக்கை, எச்சரிக்கை.

ஏனென்றால் அவர்கள் எங்களை அவிசுவாசிகளாகப் பார்ப்பதுடன் எங்கள் நபி முஹம்மது (அலைஹி-சலாம்)மை மறுக்கிறார்கள். எனவே நாங்கள் இதற்கு பதிலடி கொடுக்கிறோம்." நான் சொன்னேன் அவரிடம், "அன்புள்ள ஆசிரியரே, தூய்மை என்பது ஈமானின் விடயம் அல்லவா? இருந்தாலும், இந்த உண்மை சான்-இ-ஷெரிபை (ஹஸ்ரத் அலியின் அடக்கஸ்தலத்தை சுற்றி) உள்ள வழிகள் மற்றும் தெருக்களில் சுத்தமாக இல்லை. அறிவின் இடங்களான மதரஸாக்கள் கூட சுத்தமானது என்று சொல்ல முடியாது" அவர் பதிலளித்தார்,"ஆம்,அது உண்மைதான்; தூய்மை ஈமானில் இருந்து வருகிறது. ஆனாலும் அது ஷியாக்கள் தூய்மையில் அலட்சியமாக இருப்பதால் மன்னிக்க முடியாது."

அமைச்சில் இந்த மனிதன் அளித்த பதில்கள் துல்லியமாக இருந்தன. நஜாஃபில் ஷியா அறிஞரிடமிருந்து நான் பெற்ற பதில்களுக்கு இணையாக. இந்த மனிதனுக்கும் அறிஞருக்கும் இடையில் அவ்வளவு துல்லியமான அடையாளம். நஜாஃப் அறிஞர் என்னை முற்றிலும் வியப்பில் ஆழ்த்தியது. இந்த நபர், கூடுதலாக பாரசீக மொழி பேசினார்.

செயலாளர் கூறினார், "நீங்கள் மற்றவர்களின் அசல் நான்கு ஆளுமைகள் நபர்களை சந்தித்திருந்தால், நீங்கள் இப்போது அவர்களின் சாயல்களுடன் பேசுவீர்கள், பார்க்கலாம் அவை அவற்றின் மூலங்களுடன் எவ்வளவு ஒத்தவை என்று." ஷேக்-உல்-இஸ்லாம் எப்படி நினைக்கிறது என்று எனக்குத் தெரியும் என்று நான் சொன்னபோது,. இஸ்தான்புல் அகமது எஃபெண்டி, என் ஆசிரியர், ஷேக்-உல்-இஸ்லாமை பற்றி எனக்கு விரிவான விளக்கத்தை அளித்தது., "செயலாளர் கூறினார், "பிறகு நீங்கள் அவரின் மாதிரியுடன் சென்று பேசலாம் என்றார்."

நான் ஷேக்-உல்-இஸ்லாமின் மாதிரியின் அருகே சென்று அவரிடம்," கலீபாவுக்கு கீழ்ப்படிவது இஸ்லாத்தில் கட்டளையா (ஃபர்ளு)? "ஆமாம், அது வாஜிப் (அவசியமானது, இஸ்லாத்தில் கட்டாயமானது),"

என்று அவர் பதிலளித்தார். "இது வாஜிப், அல்லாஹ்வுக்கும் நபிகளுக்கும் கீழ்ப்படிவது பர்ளு போன்றது". நான் இதை நிரூபிக்க கூடிய சான்றுகள் என்ன என்று கேட்ட போது, அவர் பதிலளித்தார், "நீர் கேட்கவில்லையா? ஜனப்-இ-அல்லாஹ்வின் ஆயத்பற்றி, **'அல்லாஹ்வுக்கும், அவனுடைய தீர்க்கதரிசி க்கும் மற்றும் உலுல் அம்ருக்கும் கீழ்ப்படியுங்கள்** (அதிகாரம் கொடுக்கப் பட்டவர்களுக்கு) **உங்களுக்கு மத்தியில்?"**. (சூராநிசா, ஆயத்: 59). நான் கேட்டேன், "யசித் போன்ற கலீபாக்களுக்குக் கீழ்ப்படியுங்கள் என்று அல்லாஹ் நமக்கு கட்டளையிடுகிறானா? அவர் தனது இராணுவத்தை மதீனாவில் கொள்ளையடிக்க அனுமதித்தார், எங்கள் நபியின் பேரன் ஹுசைனை கொன்றது யார், மற்றும் மது அருந்திய கலீஃபா வலித்? அவருடைய பதில் இதுதான்: "என் மகனே! யாசித் அல்லாஹ்வுடைய அனுமதியுடன் அமீர் உல்-முமினீன் ஆவார். ஹுசைனைக் கொல்ல அவர் கட்டளையிடவில்லை. ஷியாக்களின் பொய்களை நம்ப வேண்டாம்! புத்தகங்களை நன்றாகப் படியுங்கள்! அவர் தவறு செய்தார். பின்னர் அவர் இதற்காக தவ்பா செய்தார் (அவர் மனம் வருந்தி அல்லாஹ்விடம் மன்னிப்பு மற்றும் கருணைக்காக கெஞ்சினார்). அவர் மதீனாவை கட்டளையிட்டது சரியாக இருந்தது. மதீனாவில் வசிப்பவர்கள் கீழ்ப்படியாத மிகவும் கட்டுப்பாடற்றவர்களாக மாறினர் என்பதற்காக. மதீனா முனவ்வாரா (ஒளி வீசும் நகரம் மதினா) கொள்ளை யடிக்கப்பட்டது. வலிதைப் பொறுத்தவரை; ஆம், அவர் ஒரு பாவி. அவருக்கு கீழ்படிவது வாஜிப் அல்ல. ஆனால் ஷரீஅத்துடன் இணங்கினால் அவருடைய கட்டளைகளுக்கு கீழ்படிவது அவசியம்." இதே கேள்விகளை நான் எனது ஆசிரியர் அஹமது எஃபெண்டி யிடம் கேட்டேன். அதே பதில்களை பெற்றேன் இலேசான வேறுபாடுகளுடன்.

பிறகு நான் செயலாளரிடம்,"இந்த மாதிரிகள் இவ்வாறு தயாராக காரணம் என்ன? என்று கேட்டேன்"அவர் கூறினார், "இந்த முறையினால் நாங்கள் (ஒட்டோமான்) சுல்தானின் மற்றும் முஸ்லீம் அறிஞர்கள், அவர்கள் ஷியா அல்லது சுன்னியாக இருந்தாலும் சரி அவர்களின் மனத்திறன்களை மதிப்பீடுசெய்கிறோம். நாங்கள் அவர்களை சமாளிக்க உதவும் நடவடிக்கை கள் தேடுகிறோம். உதாரணமாக, நீங்கள் எதிரி படைகள் எந்த திசையில் இருந்து வரும் என்பதை நீங்கள் அறிவீர்களாக இருந்தால், அதற்கேற்ப ஏற்பாடுகளைச் செய்வீர்கள், உங்கள் படைகளை பொருத்தமான நிலைகள் வைக்கவும், இதனால் எதிரியை வீழ்த்தவும். மறுபுறம், நீங்கள் எதிரியின் தாக்குதலின் திசைபற்றி உறுதியாக தெரியவில்லை என்றால் உங்கள் படைகள் அங்கும் இங்குமாக ஒரு அபாயகரமான வழியில் தோல்வியை சந்திக்கிறது. அதே பாணியில், முஸ்லிம்களின் நம்பிக்கை, அவர்களின் மத்ஹப் சரியானது என்பதை நிரூபிக்க சான்றுகள் தெரிந்தால், அதனை மறுதலிக்க எதிரான சான்றுகளை நீங்கள் தயார் செய்ய முடியும். அந்த சான்றுகளுடன் அவர்களின் நம்பிக்கையை குறைமதிப்பிற்கு

உட்படுத்த முடியும். பின்னர் அவர் ஆயிரம் பக்கங்களைக் கொண்ட ஒரு புத்தகத்தை கொடுத்தார். இராணுவம், நிதி, கல்வி மற்றும் மதம் போன்ற பகுதிகளில் ஐந்து பிரதிநிதிகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் மற்றும் திட்டங்களின் முடிவுகள் என்று பெயரிடப்பட்டிருந்தது. அவர், "தயவுசெய்து இந்தப் புத்தகத்தைப் படித்து விட்டு அதை எங்களுக்குத் திருப்பித் தரவும்." புத்தகத்தை வீட்டுக்கு எடுத்துச்சென்றேன். நான் மூன்று வார விடுமுறையின் போது மிகுந்த கவனத்துடன் புத்தகத்தை படித்தேன். புத்தகம் ஒரு அற்புத மான வகையாக இருந்தது. முக்கியமான பதில்களுக்கு மற்றும் அதில் உள்ள நுட்பமான அவதானிப்புகள் உண்மையானவை. நான் நினைக்கிறேன் அந்த பிரதிநிதிகள் ஐந்துபேர் அளித்த பதில்கள். அவர்களின் பதில்களுடன் எழுபது சதவிகிதத்திற்கு அதிகமானவை ஏற்றுக்கொள்ளப்படுபவை. உண்மையில், செயலாளர் அதைச் சொன்னார் பதில்கள் எழுபது சதவீதம் சரியாக இருந்தன.

புத்தகத்தைப் படித்த எனக்கு இப்போது என் மாநிலத்தில் அதிக நம்பிக்கை இருந்தது. எனக்குத் தெரியும், ஒரு நூற்றாண்டுக்கும் குறைவான காலத்தில் ஒட்டோமானை தகர்ப்பதற்கான திட்டங்கள் பேரரசு ஏற்கனவே தயாரித்து இருந்தது. செயலாளர் மேலும் கூறினார், "இதே போன்ற மற்ற அறைகளில் எங்களிடம் ஒரே மாதிரியானவை உள்ளன. நாங்கள் காலனித்துவப்படுத்தும் நாடுகளுக்காக திட்டமிட்ட அட்டவணைகள். நாங்கள் குடியேறியவை மற்றும் நாங்கள் குடியேற திட்டமிட்டுள்ளவை." இவ்வளவு திறமையான விவேகமான நபர்களை எங்கு கண்டுபிடித்தீர்கள் என்று நான் செயலாளரிடம் கேட்ட போது, அவர் எங்கள் முகவர்கள் உலகம் முழுவதும் எங்களுக்கு உளவுத் தகவல்கள் தொடர்ந்து வழங்குகிறார்கள். நீங்கள் பார்க்கின்றபடி, இந்த பிரதிநிதிகள் தங்கள் வேலையில் நிபுணர்கள். இயற்கையாகவே உங்களுக்கு குறிப்பிட்ட ஒருவரின் அனைத்து தகவல் களும் வழங்கப்பட்டால், நீங்கள் அவரைப்போல சிந்திக்கவும், அவர் எடுக்கும் முடிவுகள் போல் முடிவு எடுக்கவும் உங்களால் முடியும். ஏனென்றால் நீங்கள் இப்போது அவருக்கு மாற்றீடாக இருப்பீர்கள். செயலாளர் தொடர்ந்தார்; "இதுதான் உங்களுக்கு வழங்க அமைச்சகம் உத்தரவிட்ட எனது முதல் ரகசியம். "இரண்டாவது இரகசியத்தை நான் ஒரு மாதத்திற்குப் பிறகு ஆயிரம் பக்கங்கள் கொண்ட புத்தகத்தை திருப்பி கொடுத்த பின்னர் உங்களுக்குச் சொல்கிறேன். ஆரம்பத்தில் இருந்து இறுதி வரை புத்தகத்தை எனது முழு கவனத்தையும் அதில் செலுத்தி பகுதி பகுதியாக படித்தேன். . இது முகமதியர்கள் பற்றிய எனது தகவலை அதிகரித்தது. அவர்கள் எப்படி நினைக்கிறார்கள், அவர்களின் பலவீனங்கள் என்ன, அவர்களை சக்தி வாய்ந்ததாக்கியது எது, அவர்களின் சக்திவாய்ந்த குணங்களை பாதிக்க க்கூடிய பலவீனமானமாக மாற்றுவது எப்படி என்று இப்போது எனக்குத்

தெரியும். புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள முஸ்லிம்களின் பலவீனமான இடங்கள் பின்வருமாறு:

1- சுன்னி-ஷியா முரண்பாடு; மக்கள் இறையாண்மை முரண்பாடு [1]; துருக்கி-ஈரானிய முரண்பாடு; பழங்குடி முரண்பாடு; மற்றும் அறிஞர்கள்-மாநில முரண்பாடு. [2]

2- சில விதிவிலக்குடன், முஸ்லிம்கள் அறிவற்றவர்கள், படிப்பறிவற்றவர். [3]

3- ஆன்மீக, அறிவு, மற்றும் மனச்சாட்சி [4] குறைவு,

---

[1] இந்த கூற்று முற்றிலும் தவறானது. இது அவரது முந்தைய அறிக்கைக்கு முரணானது. "பாதுஷாவுக்கு (பேரரசர்களின் தலைவருக்கு) கீழ்ப்படிவது பர்ளு."

[2] இது சுத்த அவதூறாகும். (முதல் ஒட்டோமான் பாதுஷா) உஸ்மானின் (உதுமான்) காஜி,யினால் எழுதப்பட்ட உயில், மதிப்புக்கும் மரியாதைக்கும் ஒரு விரிவான உதாரணம்; அறிஞர்களை கொண்டு ஒட்டோமான் நிர்வாகம் அமைக்கப்பட்டது. எல்லா பாதுஷாக்களும் அறிஞர்களுக்கு மிக உயர்ந்த பதவிகளை வழங்கினார்கள். மவ்லானா காலிடி பாக்தாதியின் மீது பொறாமை கொண்ட எதிரிகள் அவருக்கு எதிராக அவர் தூக்கிலிடப்பட வேண்டும் என்று கோரிய போது, மஹ்மூத் கான் II பின்வருமாறு பதில் கொடுத்தார்: "அறிஞர்கள் எந்த வகையிலும் அரசுக்கு தீங்கு விளைவிக்காதவர்கள். ஒட்டோமான் சுல்தான் ஒவ்வொரு அறிஞருக்கும் ஒரு வீடு வழங்கினார், அதிக சம்பளம் மற்றும் வசதிகள் செய்து கொடுத்தார்.

[3] மதநெறிமுறைகள், ஈமான் மற்றும் அறிவியல் புத்தகங்கள் ஆயிரக்கணக்கானவர் களால் எழுதப்பட்டன. ஒட்டோமான் அறிஞர்கள் உலகளவில் அறியப்பட்டவர்கள். விவசாயிகள், மிகவும் படிப்பறிவில்லாத நபர்கள், அவர்களின் விசுவாசம், வழிபாடுகள் மற்றும் கைவினைப்பொருட்களில் திறமையாக இருந்தனர். அனைத்து கிராமங் களிலும் பள்ளிகள், மதரஸாக்கள் மற்றும் மசூதிகள் இருந்தன,. கிராமவாசிகளுக்கு எப்படி படிக்க வேண்டும் என்று கற்பிக்கப்பட்டது. இந்த இடங்களில் உள்ள பெண்கள் மதம் மற்றும் உலக அறிவுகளில், எழுதுவதில் சிறந்து விளங்கினர். கிராமங்களில் உள்ளவர்களுக்கு குர்ஆன் அல்-கரீமை வாசிக்கத் தெரிந்திருந்தார்கள். பெரும்பாலான அறிஞர்கள் மற்றும் அவ்லியாக்கள் கிராமங்களில் வளர்க்கப்பட்டு கல்வி கற்றனர்.

[4] ஒட்டோமான் முஸ்லிம்கள் ஆன்மீகத்தில் மிகவும் உறுதியாக இருந்தனர். மக்கள் தியாகம் செய்வதற்காக (ஜிஹாத்திற்கு) ஓடுவார்கள். தினசரி ஐந்துநேர சலாத்தின் தொழுகை ஒவ்வொன்றிற்கும் பிறகு, அதே போல் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் குத்பாவின் போது (சொற்பொழிவு) இமாம் இஸ்லாமிய கோட்பாடு குறித்து மத அறிஞர்களும் மக்களும் கலிபா மற்றும் மாநிலத்தின் மீது பிரார்த்தனை புரிவார்கள். மற்றும் முழு ஜமாவும் "ஆமீன்" என்று கூறுவார்கள். மறுபுறம், கிறிஸ்தவ கிராம மக்கள், பெரும்பாலும் படிப்பறிவற்றவர்கள், அவர்களின் நம்பிக்கை மற்றும் உலகியல் அறிவு பற்றி முற்றிலும் தெரியாது, எனவே போதகர்களின் பிரசங்கங்களை எடுத்துக் கொள்வார்கள். அந்த பிரசங்கங்களை சாதாரணமாக அவர்கள் பெயரில்

4- அவர்கள் உலக வணிகத்திலிருந்து முற்றிலும் நின்றுவிட்டனர் மற்றும் மறுமை [1] தொடர்பான விஷயங்களில் உள்வாங்கப்பட்டு இருக்கிறார்கள்.

5- பேரரசர்கள் கொடுமையான சர்வாதிகாரிகள். [2]

6- சாலைகள் போக்குவரத்து மற்றும் பயணங்கள் பாதுகாப்பற்றவை,[3]

7- பிளேக் மற்றும் போன்ற காலரா, போன்ற நோய்கள் ஒவ்வொரு ஆண்டும் பல்லாயிரக்கணக்கான மக்களைக் கொல்கிறது; சுகாதாரம் தொற்று நோய்களுக்கு எதிராக எந்த முன்னெச்சரிக்கையும் எடுக்கப்படவில்லை முற்றிலும் புறக்கணிக்கப்பட்டது. **[4]**

8- நகரங்கள் இடிந்து கிடக்கின்றன, நீர்விநியோகிக்கும் முறை இல்லை. **[5]**

9- நிர்வாகத்தால் கிளர்ச்சியாளர்களை சமாளிக்க முடியவில்லை கிளர்ச்சி யாளர்கள், ஒரு பொதுவான கோளாறு உள்ளது, குர்ஆனின் விதிகளில், அவர்கள் மிகவும் பெருமைப்படுகிறார்கள், கிட்டத்தட்ட நடைமுறையில் இல்லை. **[6]**

10- பொருளாதார சரிவு, வறுமை மற்றும் பின்னடைவு.

11- ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட இராணுவம் அல்லது போதுமான ஆயுதங்கள் இல்லை; மற்றும் கையிருப்பில் உள்ள ஆயுதங்கள் கிளாசிக்கல் மற்றும் உடைந்து விழுகின்றன. [அவர்கள் ஓர்ஹான் காஜியால் நிறுவப்பட்ட முறையான இராணுவம் பற்றி தெரியாது 1326/726 இல் (ஒட்டோமான்) சிம்மாசனத்தில் ஏறினார், யில்டிரிம் பேய்சிட்

---

புனையப்பட்ட பொய்கள் மற்றும் மூடநம்பிக்கைகளை கடைபிடிக்கவும் எடுத்துக் கொள்வார்கள். அவர்கள் உணர்வற்ற விலங்குகளின் மந்தைகள் போன்றவர்கள். P-46

[1] கிறிஸ்தவத்தைப் போலல்லாமல், இஸ்லாம் மார்க்கத்தை உலக விடங்களிளிருந்து பிரிக்கவில்லை. உலக விஷயங்களில் தன்னை ஈடுபடுத்திக் கொள்வது ஒரு வழிபாட்டுச் செயல். நமதுநபிகள் நாயகம் கூறினார், "**நீங்கள் ஒருபோதும் இறக்க மாட்டீர்கள் போல் உலகத்திற்காக வேலை செய்யுங்கள், நீங்கள் நாளை இறக்கப் போவது போல் மறுமைக்கு"(**வேலை செய்யுங்கள்).

[2] பேரரசர்கள் மக்கள் மீது ஷரீஅத்தின் கொள்கைகளை நிறைவேற்றுவதற்கு அழுத்தம் கொடுத்தனர். அவர்கள் ஐரோப்பிய அரசர்களைப் போன்று ஒடுக்குமுறை குற்றம் செய்யவில்லை.

[3] சாலைகள் மிகவும் பாதுகாப்பாகவும் இருந்தன. பொஸ்னியாவிலிருந்து புறப்பட்டு மக்கா வரை செல்லும் ஒரு முஸ்லீம்கள் சாலைகளில் மிகவும் வசதியாகவும் இலவசமாகவும் பயணம் செய்வதற்கும், மற்றும் வழியில் கிராமங்களில் தங்குவது, சாப்பிடுவது , குடிப்பது மற்றும் அந்த கிராமவாசிகள் அந்த நேரங்களில் பரிசுகளையும் கொடுபார்கள்

[4] எல்லா இடங்களிலும் மருத்துவமனைகள் மற்றும் புகலிடங்கள் இருந்தன. நெப்போலியன் கூட ஒட்டோமான்களால் குணப்படுத்தப்பட்டார். அனைத்து முஸ்லிம்களும் தங்களை, "**ஈமான் உள்ளவன் சுத்தமாக இருப்பான்.**"என்ற ஹதீஸி ஷெரீபுக்கு ஏற்ப மாற்றிக் கொள்கிறார்கள்.

[5] இந்த அவதூறுகளுக்கு பதில் சொல்லுமலவுக்கு கூட மதிப்பு இல்லை. ஃபைருஸ் ஷா, டெல்லியின் சுல்தான் 1388/790 இல் காலமானார். பழத் தோட்டங்கள் மற்றும் மற்ற விவசாய நிலங்களும் அவரால் கட்டப்பட்ட அகலமான மற்றும் 240 கிலோமீட்டர் நீளமுள்ள கால்வாய் மூலம் நீர்பாசனத்தை பெற்றது. அது பிரிட்டிஷ் படையெடுப் பின்போது கட்டளையினால் ஒரு தரிசு நிலத்திற்குள் திருப்பப் பட்டது. ஒட்டோமான் கட்டிடக்கலை எச்சங்கள் இன்னும் சுற்றுலா பயணிகளின் கண்களை திகைக்க வைக்கிறது.

[6] அவர்கள் ஓட்டோமான்களை, சீன் நதியில் தங்கள் அரசர்களின் மலத்தை ஊற்றியதற்காக பரிசுகள் வழங்கப்பட்ட பிரெஞ்சு தளபதிகளுடன் குழம்பிக் கொண்டிருக்க வேண்டும்.

கானின் குறிப்பிடத்தக்க இராணுவம், 1399/799 இல் நைபோலுவில் சிலுவைப் போரில் பெரும் கிறிஸ்தவர்களின் பெரிய இராணுவத்தை துவம்சம் பண்ணியது.]

12- பெண்களின் உரிமை மீறல். [1]

13- சுற்றுச்சூழல் சுகாதாரம் மற்றும் தூய்மை இல்லாதது. [2]

முஸ்லிம்களின் பாதிக்கப்படக்கூடிய இடங்களாக கருதப்பட்டவைகளை மேலே குறிப்பிடப்பட்டுள்ள பந்திகளில் மேற்கோள் காட்டிய பிறகு, புத்தகம் இஸ்லாமியர்கள் அவர்களின் பொருளாதாரம் மற்றும் ஆன்மீகத்தின் மீதான நம்பிக்கையின் மேன்மையை பொருட்படுத்தாமல் மறந்து இருக்க செய்ய வேண்டும். பின்னர், இஸ்லாம் பற்றிய பின்வரும் தகவல்களை கொடுத்தது:

1- இஸ்லாம் ஒற்றுமையையும் ஒத்துழைப்பையும் கட்டளையிடுகிறது. ஒற்றுமையின்மையை தடை செய்கிறது. குர்ஆனில் கூறப்பட்டுள்ளது, **"அல்லாஹ்வின் கயிற்றை பிடித்துக்கொள்ளுங்கள்."(**சூரா ஆல இம்ரான் , ஆயத்: 103).

2- இஸ்லாம் கல்வி மற்றும் விழிப்புணர்வுடன் இருக்க கட்டளையிடுகிறது. இது குர்ஆனில், **"பூமியில் பயணம் செய்யுங்கள்"** என்று கூறப்பட்டுள்ளது. (சூரா ஆல இம்ரான், ஆயத்:137).

3- அறிவைப்பெற இஸ்லாம் கட்டளையிடுகிறது. இது ஒரு ஹதீஸ் இல் குறிப்பிடப் பட்டுள்ளது.**"அறிவை கற்றல் என்பது ஒவ்வொரு முஸ்லீமு க்கும் பர்ளு, ஆண் மற்றும் பெண் இருபாலாருக்கும். "**

4- இஸ்லாம் உலகிற்காக செயல்படுமாறு கட்டளை இடுகிறது. குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளது, **"அவர்களில் சிலர்:ஓ எங்கள் அல்லாஹ்! எதுவாக இருந்தாலும் இவ்வுலகிலும் மறுமையிலும் அழகாக இருக்கிறதை எங்களுக்கு கொடு. "** (சூரா பகரா, ஆயத்: 201).

5- இஸ்லாம் ஆலோசனையை கட்டளையிடுகிறது. இது குர்ஆனில் கூறப்பட்டு ள்ளது, **"அவர்களின் செயல்கள் தங்களுக்குள் கலந்தாலோ சித்தபின்** (செய்யப்படுகின்றனர்)."(சூரா ஷூரா, ஆயத்: 38).

6- சாலைகள் அமைக்க இஸ்லாம் கட்டளையிடுகிறது. இது குர்ஆனில் கூறப் பட்டுள்ளது, "**பூமியில் நடக்க**." (சூரா முல்க், ஆயத்: 15).

7- இஸ்லாமியர்கள் தங்கள் ஆரோக்கியத்தை பராமரிக்கும்படி இஸ்லாம் கட்டளையிடுகிறது. இது ஒரு ஹதீஸில்

கூறப்பட்டுள்ளது, "**அறிவு** என்பது **நான்கு** (பாகங்கள்) **கொண்டது** i): **நம்பிக்கையைப் பராமரிக்க ஃபிக்ஹ் பற்றிய அறிவு; ii) அறிவு ஆரோக்கியத்தை பராமரிக்க மருத்துவம்;**

---

[1] ஒரு காலத்தில் பிரிட்டிஷார் கலைகள், ஆயுதங்கள் மற்றும் பெண்கள் உரிமைகள் ஆகியவற்றை முற்றிலும் மறந்துவிட்டனர், ஒட்டோமான்கள் இந்த கருத்துக்களை மிக நேர்த்தியான வழி உருவாக்கியுள்ளனர். என்ற உண்மையை மறுக்க அவர்களுக்கு முகம் இருக்குமா? ஸ்வீடிஷ் மற்றும் பிரெஞ்சு மன்னர்கள் ஒட்டோமானியர்களிடம் உதவி கேட்டார்கள்?

[2] தெருக்கள் மிகவும் சுத்தமாக இருந்தன. உண்மையில், சுகாதார சேவைகள் இருந்தன தெருக்களில் துப்பலை சுத்தம் செய்ய ஒதுக்கப்பட்டது.

**iii) சர்ஃப் மற்றும் நஹ்வு (**அரபு இலக்கணம்**) மொழி பராமரிப்புக்கான அறிவு; iv) வானியல்பற்றிய அறிவு, காலநிலை பற்றிய விழிப்புடன் இருப்பதற்கு.**"

8- இஸ்லாம் வளர்ச்சிக்கு கட்டளையிடுகிறது. குர்ஆனில் கூறப்பட்டுள்ளது, "**பூமியில் அனைத்தையும் அல்லாஹ் உங்களுக்காக படைத்தான்."** (சூரா பகாரா, ஆயத்: 29).

9- இஸ்லாம் ஒழுங்கை கடைபிடிக்க கட்டளை யிடுகிறது. குர்ஆனில் கூறப்பட்டுள்ளது,"**எல்லாம் கணக்கீடுகள், ஆர்டர்களை அடிப்படை யாகக் கொண்டது."** (சூரா ஹிஜ்ர், ஆயத்: 19).

10- பொருளாதார ரீதியாக வலுவாக இருக்க இஸ்லாம் கட்டளையிடுகிறது. இது ஒரு ஹதீஸ்இல் குறிப்பிடப்பட்டுள்ளது; "**நீங்கள் இறக்க மாட்டீர்கள் போல் உங்கள் உலகத்திற்காக வேலை செய்யுங்கள்.** மற்றும், **நாளை இறக்கப் போவது போல் உங்கள் மறுமைக்கு வேலை செய்யுங்கள்**."

11- ஒரு சக்திவாய்ந்த ஆயுதங்களுடன் இராணுவத்தை நிறுவ இஸ்லாம் கட்டளையிடுகிறது; இது குர்ஆனில் கூறப்பட்டுள்ளது, "**அவர்களுக்கு எதிராக எவ்வளவோ, உங்களால் முடிந்தவரை படைகளை தயார் செய்யுங்கள். "** (சூரா என்ஃபால், ஆயத்: 60).

12- இஸ்லாம் பெண்களின் உரிமைகள் மற்றும் மதிப்பைக் கடைப்பிடிக்கிறது அவர்களுக்கு. இது குர்ஆனில் கூறப்பட்டுள்ளது, **ஆண்களுக்கு சட்ட பூர்வமாக பெண்கள் மீது (உரிமை) உள்ளது**, **அதனால் பெண்களுக்கு அவர்கள் மீது உரிமை உள்ளது**. (சூரா பகாரா, ஆயத்:228).

13- இஸ்லாம் தூய்மையை கட்டளையிடுகிறது. இது ஒரு ஹதீஸில் கூறப்பட்டு ள்ளது,"**தூய்மை என்பது இமானில் உள்ளது."**

அந்த புத்தகம் பின்வரும் சக்தி மூலம்களை பலவீனப்படுத்துவதையும் செயல் இழக்க செய்வதையும் பரிந்துரைத்துள்ளது.

1- இஸ்லாம் இனம், மொழி, வழமையான, பாரம்பரியத்தை மற்றும் தேச வேறுபாடுகளை மறுத்துள்ளது
2- வட்டி, கொள்ளை இலாபம், விபச்சாரம், மது பானம், பன்றி இறைச்சி என்பவற்றை தடை செய்யப்பட்டுள்ளது.
3- முஸ்லீம்கள் தங்கள் மதஅறிஞர்களை உறுதியாக பின்பற்று கிறார்கள்
4- பெரும்பாலான சுன்னி முஸ்லிம்கள் கலீபாவை நபியின் பிரதிநிதியாக ஏற்றுக்கொள்கிறார்கள். அல்லாஹ்வுக்கும் நபிகளுக்கும் காட்டப்பட வேண்டிய அதே மரியாதை அவருக்கும் காண்பிப்பது ஃபர்ளு என்று அவர்கள் நம்புகிறார்கள்.
5- ஜிஹாத் ஃபர்ளு.
6- ஷிஆ முஸ்லிம்களின் கூற்றுப்படி, அனைத்து முஸ்லீம் அல்லாதவர்களும் மற்றும் சுன்னி முஸ்லிம்களும் தவறான மக்கள்.
7- அனைத்து முஸ்லிம்களும் இஸ்லாம் மட்டுமே உண்மையான மதம் என்று நம்புகிறார்கள்.
8- பெரும்பாலான முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் யூதர்களை அரபு தீபகற்பத்தில் இருந்து வெளியேற்றுவது பர்ளு என்று நம்புகிறார்கள்.
9- அவர்கள் தங்கள் வழிபாடுகளைச் செய்கிறார்கள், (சலாத், நோன்பு, ஹஜ் ...), மிக அழகான வழியில்.
10- ஷியா முஸ்லிம்கள் முஸ்லீம் நாடுகளில் தேவாலயங்கள் கட்டுவது ஹராம் (தடைசெய்யப்பட்டது) என்று நம்புகிறார்கள்.
11- இஸ்லாமிய நம்பிக்கையை முஸ்லிம்கள் உறுதியாக பிடித்துக்கொள் கின்றனர்.
12- ஷியா முஸ்லிம்கள் **ஹுமுஸ், புனிதப்போரில்** பெறப்பட்டவை களில் இருந்து ஐந்தில் ஒரு பங்கைக் உலமாக்களுக்கு கொடுப்பது பர்ளு என்று கருதுகின்றனர்
13- முஸ்லிம்கள் தங்கள் குழந்தைகளை கல்வியோடு வளர்க்கிறார்கள் அவர்களின் முன்னோர்கள் பின்பற்றிய வழியை கைவிட வாய்ப்பில்லை.
14- முஸ்லீம் பெண்கள் தங்களை நன்றாக மறைத்துக் கொள்கிறார்கள். தவறான வைகள் அவர்களை எந்த வகையிலும் அணுகாதவாறு..
15- முஸ்லிம்கள் தினமும் ஐந்து முறை ஜமாவில் சலாத்தை நிறைவேற்று கிறார்கள். அது அவர்களை ஒன்றிணைக்கிறது.
16- நபியின் கல்லறை மற்றும் அலி மற்றும் பிற பக்தியுள்ள முஸ்லிம்களின் கல்லறைகள் அவர்களைப் பொறுத்தவரை புனிதமான இடங்கள் என்பதால், அங்கு அவர்கள் கூடுகிறார்கள்.
17- நபியிலிருந்து பல சந்ததியினர் [செய்யித் மற்றும் ஷெரீப்ஸ் என்று அழைக்கப்படுபவர்கள்] இறங்குகின்றனர். இவர்கள் நபியை நினைவூட்டு வதுடன் அவர்கள் எப்போதும் முஸ்லிம்களின் பார்வையில் உயிருடன் இருக்கின்றார்.
18- முஸ்லிம்கள் கூடும்போது, அறிஞர்கள் அவர்களின் ஈமானை ஒருங்கிணை க்கிறார்கள், நற்செயல்களை செய்ய அவர்களை ஊக்குவிக்கின்றார்கள்.

19- அம்ர் பில் மஃரூஃப் [பயபக்தியை அறிவுறுத்துவது] செய்வதும். நஹி அனில் முன்கர் [தவறுக்கு எதிராக அறிவுறுத்தல்] பர்ளு ஆகும்.
20- ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களை திருமணம் செய்வது சுன்னா முஸ்லீம் மக்கள் தொகை அதிகரிப்புக்கு பங்களிப்பு.
21- ஒருநபரை இஸ்லாத்திற்கு மாற்றுவது ஒரு முஸ்லிமுக்கு உலகம் முழுவதும் கிடைப்பதை விட மிகவும் மதிப்புமிக்கது.
22- ஹதீஸ், "**ஒரு நபர் ஒரு நல்ல வழியை காட்டினால், அந்த வழியைப் பின்பற்றுபவர்கள் செய்யும் நன்மைகளின் தவாப்களை போன்ற தவாபை அடைவார்.** "இது முஸ்லிம்கள் மத்தியில் நன்கு அறியப்பட்ட தாகும்.
23- முஸ்லிம்கள் குர்ஆன் மற்றும் ஹதீஸ்கள் மீது மிகவும் ஆழமான பக்தியை வைத்திருக்கிறார்கள். இந்த ஆதாரங்களுக்குக் கீழ்ப்படிவதே சொர்க்கத் தை அடைவதற்கு ஒரே வழி என்று அவர்கள் நம்புகிறார்கள்

புத்தகம் முஸ்லிம்களின் உறுதியான இடங்களை கொச்சைபடுத்துவதற்கும் அவர்களின் பலவீனங்களை பிரபலப்படுத்துவரற்கும், அதை நிறைவேற்று வதற்கான பின்வரும் நடவடிக்கைகளை அறிவுறுத்தியது.

1- அவர்கள் மத்தியில் விரோதத்தை தூண்டுவதன் மூலம் முரண்பாடுகளை ஏற்படுத்துவது, சர்ச்சைக்குரிய குழுக்கள், பிழையான நம்பிக்கையை ஊக்குவித்தல் மற்றும் பிழையான, முரணான புத்தகங்களை வெளியிடுவதன் மூலம் மேலும் சர்ச்சைகளை தூண்டுவது.

2- பள்ளிக்கல்விமுறை மற்றும் வெளியீடுகளைத் தடுப்பது, எப்பொழுது முடிமோ அறிவு நூற்களை எரிப்பது, மத ஸ்தாபனங்கள் மற்றும் அறிஞர்கள் மீது வெறுப்பை ஏற்படுத்தி முஸ்லிம் பெற்றோர்கள் தமது குழந்தைகளை மதக் கல்விக்கு அனுப்பாமல் இருக்க செயவதன்மூலம் முஸ்லீம் குழந்தைகள் அறிவற்றவர்களாக இருப்பதை உறுதி செய்வது. [இந்த பிரிட்டிஷ் முறை இஸ்லாத்துக்கு மிகவும் தீங்கு விளைவிக்கும்.]

3-4- அவர்கள் முன்னிலையில் சொர்க்கத்தை புகழ்ந்து அவர்களை அவர்களின் உலக வாழ்க்கைக்கு வேலை செய்ய வேண்டியதில்லை என்று அவர்களை திருப்திப்படுத்துவது. தசவ்வுஃப் (இதயத்தை தூய்மைப்படுத்தல், ஆன்மீக வளர்ச்சி) வட்டங்களை விரிவுபடுத்துவது. அவர்களை மயக்க நிலையில் புத்தகங்களைப் படிக்க ஊக்குவிப்பதன் மூலம் ஜுஹ்த் (உலக விஷயங்களிலிருந்து விலக்கிவைப்பது) உதாரணத்திற்கு இமாம் கஸ்ஸாலி யின் **இஹ்யா-உலுமுத்தீன்,** மௌலான ரூமியின் ம**ஸ்னவி,** முஹ்யித்தீன் அரபி எழுதிய[1] பல்வேறு புத்தகங்களை கற்பதற்கு ஊக்கிவிப்பது .

5- பொய்களை பரப்புவதன்மூலம் கலிபாக்களை கீழ்த்தரமான கொடுமைகளை செய்வதற்கு தூண்டுவது மற்றும் சர்வாதிகாரத்தில் ஈடுபடுவதற்கு வற்புறுத்துவது: பூமியில் நீங்கள் அல்லாஹ்வின்

நிழல். உண்மையில், அபூபக்கர், உமர், உதுமான், அலி,உமையாக்கள் மற்றும் அப்பாசியர்கள் வாளின் சத்தியினால் அதிகாரத்தைக் கைப்பற்றி வந்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் இறையாண்மை கொண்டவர்கள். உதாரணமாக, அபுபக்கர் உமரின் வாளின் உதவியுடன் அவருக்குக் கீழ்ப்படியாத வர்களின் பாத்திமாவின் வீடு போன்றவைகளுக்கு[2] தீ வைப்பதன் மூலம் பிறகு, உமர் அபுபக்கரின் சிபாரிசின் மூலம் கலீபா ஆனார். மறுபுறம் உஸ்மான் உமரின் கட்டளையுடன் கலீபா ஆனார். அலியைப் பொறுத்தவரை கொள்ளைக் காரர்கள் மத்தியில் நடைபெற்ற தேர்தலின் மூலம் அவர் மாநிலத்தின் தலைவரானார். முவாவியா வாளினால் அதிகாரத்தை பெற்றுக் கொண்டார். (ஹஸ்ரத் முஆவியா ஹஸ்ரத் ஹசன் அவருக்கு மரியாதை செலுத்தும் பொருட்டு பார்க்க சென்றபோது கலிபாவானார். தயவுசெய்து (சரியான வார்த்தையின் ஆவணங்கள்) “Document of the right words” புத்தகத்தைப் படிக்கவும்). உமையாட்கள் காலத்தில், இறையாண்மை பரம்பரைக்கு மாற்றப்பட்டது. தந்தை வழி சங்கிலி மூலம் மாறுகின்றது. அப்பாஸிட்களும் அதே முறையை பின்பற்றினர். இவை இஸ்லாமிய இறையாண்மை என்பது சர்வாதிகாரத்தின் ஒரு வடிவம் என்பதற்கு சான்றுகள்.

---

[1] தசவ்வுஃப் புத்தகங்களால் பாராட்டப்பட்ட ஜுஹ்த் என்பது அர்த்தம் உலக உழைப்பிலிருந்து நிறுத்துவது என்ற பொருள் அல்ல. இதன் பொருள் உலகத்தை விரும்பாமல் இருப்பது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், அஹ்காம் இஸ்லாமியா வுடன் இணக்கமாக உலகத்திற்காக உழைத்தல், உலக தேவைகளை சம்பாதித்தல் மற்றும் பயன்படுத்துதல். இதற்கு மற்ற வழிபாட்டு செயல்களைப் போல அதிகமான தவாப் வழங்கப்படும்.

[2] ஹதீஸ் ஷரீஃப்களில் ஹஜ்ரத் அபுபக்கர், ஹஜ்ரத் உமர், ஹஸ்ரத் உதுமான் மற்றும் ஹஸ்ரத் அலி (ரலியல்லாஹு தலா அன்ஹும்) கலீஃபாவாக ஆகுவார்கள் என்று குறிப்பு கள் உள்ளன. ஆயினும் அவர்களின் காலங்கள் குறித்து தெளிவான அறிக்கை இல்லை. ரசூலுல்லாஹ் (சல்லல்லாஹு அலைஹி வசல்லம்) இந்த விஷயத்தை அவரது சஹாபாக்களின் தெரிவுக்காக விட்டுவிட்டார்கள். சஹாபாக்களுக்கு கலீபாவைத் தேர்ந்தெடுப்பதில் மூன்று வகையான இஜ்திஹாத் இருந்தது. கலிபா என்பது ஒருவரின் உறவினர் என்பதால் மரபுரிமையாகப் பெற வேண்டிய சொத்து அல்ல. ஹஜ்ரத் அபுபக்கர், இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட முதல் நபராக இருந்தார். மற்றவர்கள் முஸ்லீம் ஆகுவதற்கு காரணமாகவும் இருந்தார். எங்கள் நபி (ஸல்-அல்லாஹு அலைஹி வசல்லம்) அவர்களை இமாமாக சலாத்தை நடத்துமாறு ஏவி, அவருக்குப் பின்னால் நபியவர்கள் சலாத்தை நிறைவேற்றியிருந்தார்கள். அவர்களுடனேயே (மதீனாவுக்கு) இடம்பெயர்ந்தார்கள். அவர்கள் மிகவும் பொருத்தமான வேட்பாளர். சஹாபாக்களில் சிலர் ஹஸ்ரத் அலியின் இடத்திற்கு சென்றனர்.

6- கொலைக்கான மரண தண்டனையை தண்டனைச் சட்டத்தில் இருந்து நீக்கவேண்டும். [கொலைகளுக்கும் கொள்ளைகளுக்கும் மரண தண்டனை மட்டுமே தடையாக உள்ளது. மரணதண்டனை இல்லாமல் அராஜகம் மற்றும் கொள்ளைகளை தடுக்க முடியாது]. கொள்ளையர்களை தண்டிப்பதிலிருந்து நிர்வாகத்தை தடுக்க வேண்டும். கொள்ளையர்களுக்கு ஆயுதம் மற்றும் ஆதரவு அளிப்பதன்மூலம் பயணம் பாதுகாப்பற்றது என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

7- பின்வரும் திட்டத்தின் மூலம் அவர்களை ஆரோக்கியமற்ற வாழ்க்கையை நடத்தச் செய்யலாம்: எல்லாம் அல்லாஹ்வின் முன்னறிவிப்பைப் பொறுத்தது. ஆரோக்கியத்தை மீட்டெடுப்பதில் மருத்துவ சிகிச்சைக்கு எந்தப் பங்கும் இல்லை. குர்ஆனில் அல்லாஹ் கூறுகிறான்: **"எனது ரப்** (அல்லாஹ்) **என்னை சாப்பிட வைக்கிறான், இன்னும் அருந்த வைக்கிறான். நான் நோய்வாய்ப் பட்டால் அவன் என்னை குணப்படுத்துகிறான். அவன் மட்டுமே என்னை மரிக்க செய்வான், என்னை உயிர்ப்பிக்கவும் செய்வான். "(**சூரா ஷுஃரா, ஆயத்: 79-80-81). பிறகு, ஒரு நோயிலிருந்து யாரும் மீளவும் மாட்டார்கள். அல்லது அல்லாஹ்வின் விருப்பத்திற்கு வெளியே மரணத்திலிருந்து தப்பிக்கவும் மாட்டார்கள். [1]

____________________________

அவர்களில் ஒருவர், அபு சுஃப்யான், "உங்கள் கையை நீட்டுங்கள்! நான் உங்களுக்கு மரியாதை! செலுத்துவேன், நீங்கள் விரும்பினால், நான் எல்லா இடங்களையும் குதிரை வீரர்கள், மற்றும் காலாட்படை வீரர்களாள் நிரப்புவேன் என்று கூறினார். " ஹஸ்ரத் அலி இதை மறுத்து, "நீங்கள் முஸ்லிம்களை குழுக்களாக உடைக்கவா முயற்சி செய்கிறீர்கள்? நான் தங்கியிருக்கும் வீடு கலீபாவாக தேர்ந்தெடுக்கப்படும் நோக்கம் கொண்டதல்ல. ரசூலுல்லா "சல்லல்லாஹு அலைஹி வசல்லம்" அவர்களின் இழப்பு என்னை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. நான் மனச்சோர்வை உணர்கிறேன் என்று கூறிவிட்டு அவர் பள்ளிவாசல் சென்றார். அனைவரின் முன்னிலையிலும் அவர் ஹஸ்ரத் அபூபக்கருக்கு தனது ஒப்புதலை வழங்கினார். ஹஸ்ரத் அபுபக்கர் கூறினார், "நான் கலிபாவாக இருக்க விரும்பவில்லை.குழப்பத்தைத் தடுக்க நான் தயக்கத்துடன் ஏற்றுக்கொள்கிறேன்". ஹஸ்ரத் அலி கூறினார்கள் "நீங்கள் கலீஃபாவாக இருப்பதற்கு மிகவும் தகுதியானவர். ஹஸ்ரத் அலியினால் ஹஸ்ரத் அபுபக்கரை புகழ்ந்து உரைக்கப்பட்ட அறிக்கை எங்கள் **ச'ஆதத் இல் அபிதிய்யா** எனும் (துருக்கிய) நூலில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. ஹஸரத் உமறும் ஹஸரத் அலியுடன் அவரது வீட்டிற்கு சென்றார். ஹஸ்ரத் அலி கூறுவார், "ரசூலுல்லாஹ் "அலைஹி வசல்லமுக்கு" பிறகு , ஹஸ்ரத் அபூபக்கர் மற்றும் ஹஸ்ரத் உமர் ஆகியோர் இந்த உம்மாவில் (முஸ்லிம்கள்) உயர்ந்தவர்கள். ஷீஆ க்களின் பொய்களையும் அவதூறு களையும் நம்பிய மக்கள் தான் இன்றைய முஸ்லிம்களின் அவல நிலைக்கு காரணம். பிரிட்டிஷார் இன்னும் இந்த தூண்டுதலை முன்னெடுத்து வருகின்றனர்.

[1] பிரிட்டிஷ் முகவர்கள் முஸ்லிம்களை தவறாக வழி நடத்துவதற்காக குர்'ஆன் ஆயத்துகளை, ஹதீஸ் ஷெரீஃப்களின் அர்த்தங்களை சிதைக்கின்றனர். மருத்துவ சிகிச்சை செய்வது சுன்னா (நபி (ஸல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது). அல்லாஹு தலா மருந்துகளுக்கு குணப்படுத்தும் விளைவை உருவாக்கியுள்ளான். எங்கள் நபியவர்கள் மருந்து எடுக்க உத்தரவிட்டார்கள் அல்லாஹுதலா எல்லாவற்றையும் உருவாக்கியவன், குணப்படுத்துபவன். ஆனாலும் அதற்கு ஒரு காரண சட்டத்தை உருவாக்கியுள்ளான். இந்த சட்டத்துக்கு கீழ்படிவதன் மூலம் பின்பற்றுவதன் மூலம் இந்த காரணங்களை கடைபிடிக்க எங்களுக்கு கட்டளையிடுகிறான். நாம், காரணங்களைக் கண்டறிந்து அவற்றைப் பயன்படுத்த கடினமாக உழைக்க வேண்டும். அவன் சுகப்படுத்து கிறான் என்பதன் அர்த்தம் அவன் சுகப்படுத்தக்கூடிய பொருட்களை தந்துள்ளான் என்பது. அவற்றை பெற்றுக்கொள் வதற்கு ஆராய்ச்சிகளை செய்யவேண்டும் என்பது இஸ்லாத்தின் கட்டளை."**ஆண் மற்றும் பெண்களுக்கு கல்வியை கற்றுக்கொள்வது பர்ளு**". இன்னொரு சந்தர்ப்ப த்தில் "**அல்லாஹுதஆலா வேலை செய்து உழைப்பவர்களை விரும்புகிறான்"**

8-அவர்களை கொடுமையின் பால் ஊக்குவிப்பதற்கு பின்வரும் அறிக்கையை செய்யுங்கள். இஸ்லாம் ஒரு வழிபாட்டு மதம்.

நாட்டின் விவகாரங்களில் அதற்கு ஆர்வம் இல்லை. எனவே, முஹம்மது மற்றும் அவரது கலீபாக்களுக்கு அமைச்சர்கள் அல்லது சட்டங்கள். [1] இருக்கவில்லை.

9- பொருளாதார வீழ்ச்சி என்பது இதுவரை அறிவுறுத்தப்பட்ட தீங்கு விளை விக்கும் நடவடிக்கைகளின் இயற்கையான விளைவு. நாம் இதை, பயிர்களை அழுகவைப்பதன் மூலம்,வர்த்தக கப்பல்களை மூழ்கடித்தல், சந்தைகளுக்கு தீவைப்பது, நீர்ப்பாசன அணைகள் மற்றும் தடுப்பணைகளை அழித்தல் மற்றும் இதனால் விவசாய பகுதிகளை விட்டு வெளியேறுதல், தொழில்துறை மையங்களை நீரில் மூழ்க வைப்பது, இறுதியாக அவர்களின் குடிநீர் வசதி களை மாசுபடுத்துவதன் மூலம்[2] மேலும் அழிவுகரமானதாக ஆக்கலாம்.

10- [செக்ஸ், விளையாட்டு,] போன்ற இன்பங்களுக்கும், மது, சூதாட்டம், ஊழல் ஆகியவைகளை அரசியல்வாதிகளுக்கு பழக்கப்படுத்த வேண்டும். அரச சொத்துக்களை அவர்களின் தனிப்பட்ட நலன்களுக்காக செலவழிப் பதற்கும் தேசத்துரோக செயல்கள் மற்றும் சூழ்ச்சிகளை ஏற்படுத்துவதற்கு, அரசு ஊழியர்களை ஊக்குவிக்கவும். இந்த வழியில் எங்களுக்கு சேவை செய்பவர்களுக்கு ஊக்குவிப்பு வெகுமதிகளை கொடுங்கள். பின்னர் புத்தகம் பின்வரும் ஆலோசனையை குறிப்பிட்டது: இந்த கடமைகளை செய்ய அமர்த்த பட்ட பிரிட்டிஷ் உளவாளிகள் இரகசியமாக அல்லது வெளிப் படையாக பாதுகாக்கப்பட வேண்டும், முஸ்லிம்களால் கைது செய்யப் பட்டவர்களை மீட்பதற்கான செலவை மிச்சப்படுத்த வேண்டும்.

11- அனைத்து வகையான வட்டிகளையும் பிரபலப்படுத்துங்கள். வட்டியினால் தேசிய பொருளாதாரம் மட்டும் பாதிக்கப்படுவது அல்ல, முஸ்லிம்கள் குர்ஆனின் விதிகளுக்கு கீழ்ப்படியாமல் இருக்கவும் ஊக்கப்படுத்துகின்றது. ஒரு நபர் சட்டத்தின் ஒரு விதியை மீறியவுடன் மற்றவைகளை மீறுவது அவருக்கு எளிதாக இருக்கும். அவர்களுக்கு கண்டிப்பாக கூறப்பட வேண்டும் "வட்டி என்பது பன்மடங்காக இருக்கும்போது ஹராம், ஏனெனில் குர்ஆனில் கூறப்பட்டுள்ளது: '**மடங்குகளில் வட்டி பெறாதீர்கள்.**' (சுரா ஆல இம்ரான், ஆயத்: 130). எனவே, ஒவ்வொரு வட்டி வடிவமும் ஹராம் அல்ல.

[கடனின் திருப்பிச் செலுத்தும் நேரம் முன்கூட்டியே நியமிக்கப்படக்கூடாது. (கடன் கொடுக்கும் நேரத்தில்) ஒப்புக்கொள்ளப்பட்ட எந்த கூடுதல் ட்டணமும் வட்டியாகும். இந்த வகை கூடுதல் கட்டணம் ஒரு திர்ஹம் மதிப்புள்ளதாக இருந்தாலும் ஒரு பெரும்பாவமாகும். (கடன் வாங்கப்பட்ட) அதே அளவு தொகை ஒரு குறிக்கப்பட்ட காலத்துக்குள் திரும்பவும் செலுத்தப்பட வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டால் அதுவும் ஹனபி மதுஹபின் படி

[1] வணக்கம் என்பது சலாத், நோன்பு மற்றும் ஹஜ் ஆகியவற்றை மட்டும் உள்ளடக்கியது அல்ல. வணிகம் செய்ய அல்லாஹு தலா

கட்டளையிடுகிறான் ஆனால் இது அஹ்காமுல் இஸ்லாமியாவுடன் இணக்கமான முறையில் செய்யப்பட்டால் வணக்கமும் கூட. பயனுள்ள விஷயங்களுக்கு வேலை செய்வதற்கு தவாப்(மறுமையில் தகுதியான வெகுமதி) கிடைக்கும்.

[2] காட்டுமிராண்டித்தனம், ஆங்கிலேயர்களால் நிகழ்த்தப்பட்ட கொடூரத்தைப் பாருங்கள். தங்களை நாகரிகமாணவர்கள், 'மனித உரிமைகள்' என்று அடிக்கடி சொல்கிறார்கள்!

வட்டி ஆகும். கடன் விற்பனையில், திருப்பிச் செலுத்துவதற்கு நிர்ணயிக் கப்பட்ட காலம் இருக்க வேண்டும்; இன்னும் கடனாளியால் குறிப்பிட்ட காலத்தில் திருப்பிச் செலுத்த முடியாவிட்டால் காலத்தை நீடித்து கூடுதல் கட்டணம் விதிக்கப்படும், இந்த வகை வட்டி **முதாஃப்** என்று அழைக்கப் படுகிறது. மேலே மேற்கோள் காட்டப்பட்ட ஆயத் அல்-கரிமா வர்த்தகத்தில் இந்த வகையான வட்டியை குறிப்பிடுகிறது.]

12- அறிஞர்களுக்கு எதிராக தவறான வன்கொடுமைகள் குற்றச்சாட்டுகளை பரப்புங்கள். அதனால் முஸ்லிம்களை அவர்களிடமிருந்து தூரப்படுத்துங்கள். இதற்காக நாங்கள் எமது உளவாளிகள் சிலரை அவர்களை போல் மாறுவேட மிடுவார்கள். பின்னர் நாம் அவர்களைவைத்து மோசமான செயல்களை செய்விப்போம். இதனால் அவர்கள் அறிஞர்களுடன் குழப்பமடைவார்கள், மேலும் ஒவ்வொரு அறிஞரும் சந்தேகத்துடன் பார்க்கப்படுவார்கள். இந்தவகை உளவாளிகளை அல்-அஷ்ஹர், இஸ்தான்புல், நஜாஃப் மற்றும் கர்பெலா ஆகிய இடங்களுக்கு அனுப்புவது அவசியமானது. அறிஞர்களிட மிருந்து முஸ்லிம்களைப் பிரிப்பதற்காக நாங்கள் பள்ளிகள், கல்லூரிகளைத் திறப்போம். இந்த பள்ளிகளில் நாம் பைசான்டைன், கிரேக்க மற்றும் ஆர்மீனிய குழந்தைகளுக்கு கல்வியளிப்போம் மற்றும் அவர்களை முஸ்லிம் களின் எதிரிகளாக வளர்ப்போம். முஸ்லிம் குழந்தைகளைப் பொறுத்தவரை; நாம் அவர்களை அவர்களின் மூதாதையர்கள் அறிவற்றவர்கள் என்ற நம்பிக்கையை ஊக்குவிப்போம். இந்த குழந்தைகளை கலீபாக்கள், அறிஞர்கள், மற்றும் அரசியல்வாதிகளின் விரோதிகளாக ஆக்கும் பொருட்டு அவர்களின் தவறுகளைப் பற்றி நாங்கள் அவர்களுக்குச் சொல்லி அவர்கள் தங்கள் உணர்ச்சிகரமான இன்பங்களில் பிஸியாக இருந்தார்கள் என்று கூறி அவர்களை நம்ப வைப்போம். அந்த கலீபாக்கள் வைப்பாட்டிகளுடன் தங்கள் நேரத்தை செலவழித்தனர், அவர்கள் மக்களின் சொத்து தவறாக பயன் படுத்தினர், அவர்கள் செய்த எதிலும் நபிகளாருக்கு கீழ்ப்படியவில்லை என்று கூறுவோம்.

13- இஸ்லாம் பெண்கள் வெறுக்கின்றது என்ற அவதூறை பரப்புவதற்காக நாம் "**ஆண்கள் பெண்கள் மீது மேன்மையானவர்கள், "(**சூரா நிசா, ஆயத்: 34) என்ற ஆயத்தையும் மற்றும் " **ஒரு பெண் முற்றிலும் தீமை."[1] யானவள்**. ஹதீதையும் மேற்கோள் காட்டுவோம்.

[1] ஹதீஸ் ஷெரீபில் கூறப்பட்டுள்ளது,"**அஹ்காமுல் இஸ்லாமியாவுக்கு கீழ்படிந்த ஒரு பெண் (மனைவி) சொர்க்கத்தின் நற்பேறுகளில் ஒன்றாகும். அஹ்காமுல் இஸ்லாமியா வுக்கு கீழ்ப்படியாத, சிற்றின்ப ஆசைகளை பின்தொடரும் ஒரு பெண் தீயவள்".** ஒரு ஏழையான தனிமையான பெண்ணு க்கு அவரின் தந்தை அவளுடைய வாழ்க்கைக்கு பொறுப்பானவர், அவள் திருமணமாகாதவராகவோ அல்லது திருமணம் செய்த விதவை யானாலும் சரி.அவர் அவ்வாறு செய்யாவிட்டால், அவர் சிறையில் அடைக்கப்படுவார். அவளுக்கு தந்தை இல்லை என்றால், அல்லது அவளுடைய தந்தை (கூட) ஏழையாக இருந்தால் (அவளுக்கு வாழ்வதற்கு), அவளுடைய மஹ்ரமான (நெருங்கிய இரத்தம் காரணமாக ஒருவர் திருமணம் செய்ய அனுமதிக்கப்படாத உறவினர் அவளை கவனித்துக்கொள்ள வேண்டும். அவளிடம் அதுவும் இல்லை என்றால் அவளுக்கு அரசாங்கம்சம்பளத்தை ஒதுக்க வேண்டும். ஒரு முஸ்லீம் பெண் ஒரு வாழ்க்கை க்காக ஒரு போதும் வேலைசெய்ய வேண்டியதில்லை. இஸ்லாமிய மதம் பெண்ணின் அனைத்து தேவைகளாலும் ஆணிடம் பொறுப்பு கொடுத்துள்ளது பதிலுக்கு இந்த பாரமான சுமையை சுமப்பதற்காக, அவரது முன்னோர்களின் வாரிசு ஆணுக்கு மட்டுமே ஆக்கப்பட்டிருக்கின்றது; இன்னும்,ஒரு பெண் மீது அல்லாஹு தலாவின் மற்றொரு கருணை, அவளின் சகோதரனால் பெறப்பட்ட சொத்தில் பாதியளவு அவளுக்கு கொடுக்கப்பட வேண்டும் என்று அல்லாஹு த ஆலா கட்டளை பிறப்பித்துள்ளான். அவளின் கணவன் அதில் கட்டாயப்படுத்த முடியாது. அவரது மனைவி வீட்டிற்குள்ளோ அல்லது வெளியிலோ வேலை செய்ய வேண்டும். ஒரு பெண் விரும்பினால் அவள் கணவனின் அனுமதியுடன், அவள்மூடிக்கொண்டு, அந்த வேலைசெய்யும் இடத்தில் ஆண்கள் இருக்கக்கூடாது என்ற நிபந்தனையுடன் அவ்வாறு செய்யலாம். இந்த விஷயத்தில் அவளுடைய வருவாய் அவளுடையதாக இருக்கும். இந்த வகையான வருமானம், மற்றும் அவள் பரம்பரை சொத்தின் வருவாயை, அல்லது மஹரை (திருமணம் நேரத்தில் வழங்கப்படும் கட்டாயம்பணம், ஆபரணம் போன்றவை அல்லது உறுதியளிக்கப் பட்டவை) விட்டுக் கொடுக்க ஒரு பெண்ணை கட்டாயப்படுத்தமுடியாது. அவளது செலவுக்காக அல்லது அவளுடைய குழந்தைகளுக்காக அல்லது வீட்டில் தேவைப்படும் எதற்கும் அதைச் செலவழிக்கும்படி கட்டாயப்படுத்த முடியாது. இது அத்தகைய அனைத்து தேவைகளையும் வழங்கவேண்டியது கணவருக்கு கடமை. இன்றைய கம்யூனிச ஆட்சிகளில், பெண்கள் அதே போல் ஆண்களும் விலங்குகள் மாதிரி உணவுக்காக மட்டுமே அதிக வேலைகளில் ஈடுபடுத்தப் படுகிறார்கள். கிறிஸ்தவ நாடுகள், உலகில் சுதந்திர நாடுகள் என்று கூறப்படு கின்றன, மற்றும் முஸ்லீம்நாடுகள் எனப்படும் சில அரபு நாடுகளில், ஆண்களைப் போல் பெண்களும் தொழிற் சாலைகளில், நிலங்களில், தொழில் துறைகளில், வர்த்தக, வணிக நிலையங்களில் வேலை செய்வது "வாழ்க்கையில் பொதுவானது."தினசரி செய்தித்தாள்களில் அடிக்கடி வருகின்றது; பெரும்பாலான வர்கள் அவர்கள் திருமணம் செய்து கொண்டதற்கு வருந்துகிறார்கள், அதனால் சட்ட நீதிமன்ற ங்கள் விவாக ரத்து வழக்குகள் கோப்புகளால் நிரம்பியுள்ளன.

அல்லாஹ்வின் தூதரின் அருள் நிறைந்த வாயிலிருந்து வரும் வார்த்தைகள் மூன்று வகையானவை : முதல் வகை அல்லாஹுத் தஆலா விடமிருந்து வருபவை காலம் மற்றும் ஊடகம் மூலம் வரும் சொற்கள். இந்த வார்த்தைகள் ஆயத் கரிமா என்றுஅழைக்கப்படுகின்றன,இது **குர்ஆன்அல்கரீமை** கூட்டாக உருவாக்குகிறது. ஒரு வார்த்தை: "**உங்களிடம் வரும் ஒவ்வொரு நல்ல மற்றும் பயனுள்ள விஷயம் அல்லாஹு தஆலாவினால் விரும்பி அனுப்பப்பட்டது. ஒவ்வொரு தீமையும்** மற்றும் **தீங்கு விளைவிக்கும்**

**விஷயங்களும் உங்கள் நஃப்ஸால்** (அதாவது அல்லாஹு தஆலாவுக்கு எதிரான மனிதனில் உள்ள ஒரு வீரியம் மிக்க சக்தி) விரும்பப்பட்டது **இவை அனைத்தும் உருவாக்கி அனுப்பியவன் அல்லாஹு தலா**" என்பது சூராநிசாவின் எழுபத்தெட்டாவது ஆயத் ஆகும்.

இரண்டாவது வகையான வார்த்தைகள் நம் நபிக்கு சொந்தமான சொற்களை உள்ளடக்கியது அவற்றின் அர்த்தங்கள் அல்லாஹு தலாவால் உதிப்பு கொடுக்கப் பட்டவை. இந்த வார்த்தைகள் **ஹதீஸ் குத்ஸி** என்று அழைக்கப்படுகிறது. இந்த வாசகம், **"உங்கள் நஃப்ஸுக்கு விரோதமாக இருங்கள் ஏனென்றால் அது என் எதிரி,**"என்பது ஒரு ஹதீஸ் குத்ஸி. மூன்றாவது வகைகயில் அதன் வார்த்தை களில் மற்றும் அதன் பொருளில் அவை நம் நபிக்கு சொந்தமானது. அவை ஹதீஸ் ஷரீஃப் என்று அழைக்கப்படுகின்றன. உச்சரிப்பு, "**அஹ்காம் இஸ்லாமியாவுக்கு கீழ்ப்படிந்த ஒரு பெண் சொர்க்கத்தின் நற்பேறுகளில் ஒன்றாகும். அவளது நஃப்சைப் பின்பற்றுவது ஒரு பெண் தீயவள்**" என்பது ஒரு ஹதீஸ் ஷெரீப்.

ஹஜ்ரத் முஹ்யித்தீன் இப்னி அரபி இந்த ஹதீஸ் ஷெரீப்பை முதலில் அவரது புத்தகமான முசமரத் இல் விளக்குகிறார். பிரிட்டிஷ் உளவாளி முதல் பாதியை நிறுத்தி விட்டு ஹதீஸின் பிந்திய பாதியை மட்டுமே வெளிப்படுத்துகிறார். உலகம் முழுவதும் உள்ள பெண்களுக்கு இஸ்லாம் அவர்களுக்கு வழங்கியுள்ள மதிப்பு, ஆறுதல் மற்றும் அமைதி, சுதந்திரம் மற்றும் அவர்களுக்கு வழங்கியுள்ள விவாகரத்து செய்யும் உரிமை பற்றி தெரியும் என்றால் உடனடியாக முஸ்லிம்கள் ஆகி இஸ்லாத்தை அனைவரும் பரப்புவதற்கு முயற்சி செய்வார்கள். உலகம் முழுவதும். இந்த உண்மைகளை அவர்களால் உணர முடியவில்லை என்பது அவமானகரமானது. அல்லாஹுதலா இஸ்லாத்தை கற்று நேர்வழியை அடையும் அதிர்ஷ்டத்தை அனைத்து மனித இனத்துக்கும் வழங்குவானாக.

14- அழுக்கு என்பது தண்ணீர் பற்றாக்குறையின் விளைவாகும். எனவே, நாம் பல்வேறு திட்டங்களின் கீழ் நீர் விநியோகத்தை தடுக்க வேண்டும். முஸ்லிம் களின்உறுதியை அழிப்பதற்கு பின்வரும் வழிமுறைகளை அறிவுறுத்துகிறது.

1- முஸ்லீம்கள் மத்தியில் இனவாதம் மற்றும் தேசியவாதம் போன்ற பேரினவாத சக்திகளை தூண்டவும். அவர்கள் தங்கள் கவனத்தை தங்கள் பின் நோக்கி திரும்புவதற்கு இஸ்லாமிய வீரம். எகிப்தில் பார்வோன் காலத்தை புத்துயிரூட்ட, ஈரானில் மகி காலம், ஈராக்கில் பாபிலோனிய காலம்,அட்டிலா மற்றும் ஒட்டோமானில் செங்கிஸ் சகாப்தம் [கொடுங் கோன்மை]. [இந்த விஷயத்தில் அவர்கள் ஒரு நீண்ட பட்டியலைக் கொண்டிருந்தனர்.]

2- பின்வரும் தீமைகள் இரகசியமாக அல்லது பகிரங்கமாக செய்யப்பட வேண்டும்: மது பாவனை, சூதாட்டம், விபச்சாரம், பன்றி இறைச்சி, [மற்றும் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் சண்டைகள்,] இதைச் செய்வதில், கிறிஸ்தவர்கள், யூதர்கள், மேஜியன்கள் மற்றும் பிற முஸ்லிம் நாடுகளில் வாழும் முஸ்லீம் அல்லாதவர்கள் பயன்படுத்தப்பட வேண்டும்., இந்த நோக்கத்திற்காக வேலை செய்பவர்களுக்கு அதிகபட்சம் அதிக சம்பளம் காமன்வெல்த் அமைச்சின் கருவூலத் துறையால் வழங்கப்பபட்டது.

3- ஜிஹாத் தொடர்பாக அவர்கள் மத்தியில் சந்தேகத்தை விதைக்கவும்; ஜிஹாத் ஒரு தற்காலிக கட்டளை, அது இருந்ததாகவும் பின்னர் காலாவதி யானது என்று அவர்களை நம்பச் செய்யுங்கள்.

4- ஷியா பிரிவினரின் இதயங்களில் இருந்து "நிராகரிப்பவர்கள் தவறான வர்கள்" என்ற கருத்தை அகற்றவும். குர்ஆனின் வசனத்தை மேற்கோள் காட்டுங்கள், "**அந்த வேதத்தை உடையவர்களின் உணவும் உங்களுக்கு ஹலால், உங்கள் உணவு அவர்களுக்கு ஹலால்."** (சூரா மைதா, ஆயத்: 5) மற்றும் நபிகள் நாயகத்திற்கு யூத மனைவியான சஃபிய்யா மற்றும் கிறிஸ்தவ மனைவி மரியா இருந்தார்கள் என்று அவர்களிடம் கூறுங்கள். மற்றும் நபியின் மனைவிகள் தவறாக இல்லை. [1]

5- "நபிகள் நாயகம் இஸ்லாம் ஒரு மதம் பரிபூரனமான மதம் என்பது பற்றி என்ன கருத்தை கொண்டார்கள் என்பதை குழப்ப வேண்டும்; அது யூத மதமாக அல்லது கிறிஸ்தவமாக அல்லது இஸ்லாமாக இருக்கலாம் என்ற என்ற நம்பிக்கையை முஸ்லிம்களுக்கு ஊட்டவும். அவர்களுக்கு குர்ஆன் எல்லா மதத்தை சேர்ந்தவர்களையும் முஸ்லிம் என்று அழைக்கின்றது என்பதை பின்வரும் வசனத்தை கொண்டு உறுதிப்படுத்துங்கள்

---

[1] பிரிட்டிஷார் யூதர் என்று அழைக்கும் ஹஸ்ரத் சஃபிய்யா அவர் எங்கள் நபி (அலை) அவர்களை மணந்தபோது ஏற்கனவே முஸ்லீம்ஆகி இருந்தார்கள். மரியாவைப் பொறுத்தவரை,எகிப்தியரான அவர், தூதரின் நற்பேறு கொடுக்கப்பட்ட மனைவி களில் ஒருவரல்ல. அவர் ஒரு ஜாரியா (பெண் அடிமை, மறுமனை). அவரும் ஒரு முஸ்லிமாக இருந்தார். அவர் மறைந்தபோது, ஹஜ்ரத் உமர் (ரலியல்லாஹு த ஆலா அன்ஹு), அந்த நேரத்தில் கலீபாவாக இருந்தார், முஸ்லிம்களுக்குரிய சடங்கு பிரார்த்தனைகளை நடத்தினார். அஹ்லுஸ் சுன்னா நம்பிக்கையின் படி ஒரு கிறிஸ்தவப் பெண் ஜரியாவாக வும்(ஒரு முஸ்லிம் ஆணுக்கு) மனைவியாகவும் இருக்கலாம். ஷியா மத நம்பிக்கைக்கு மாறாக (இந்த வகையில்), அவிசுவாசிகள் தவறானவர்கள் இல்லை. அவர்களில் தவறான விஷயம் என்னவென்றால், அவர்கள் வைத்திருக்கும் நம்பிக்கை.

உதாரணமாக, இது யூசுப் நபியை (அலைஹி சலாம்) பிரார்த்தித்தார்கள் "என்னை முஸ்லிமாக கொல்லுங்கள்[1]."இப்ராஹிம் மற்றும் இஸ்மாயில் தீர்க்கதரிசிகள் பிரார்த்தனை செய்தார்கள்."**ஓ எங்கள் ரப்பே (அல்லாஹ்)! உனக்காக எங்களை முஸ்லிம்களாக்கி எங்கள் சந்ததியினரிடமிருந்து உனக்காக முஸ்லீம் மக்களை ஆக்கியருள்**." (சூரா; பகரா, ஆயத்: 128) மற்றும் யாகூப்நபி அவருடைய மகன்கள் கூறியது போல், "**முஸ்லிம்களாக மட்டும் இறக்கவும்**." (சூரா பகாரா, ஆயத்: 132).

6- தேவாலயங்களைக் கட்டுவது ஹராம் அல்ல என்பதை மீண்டும் மீண்டும் கூறவும். நபியும் அவரது கலீபாக்களும் அவர்களை இடிக்கவில்லை, மாறாக அவர்கள் அவற்றை மதித்தனர், குர்ஆன் கூறுகிறது, "அல்லாஹ் சிலரை மற்றவர்களை கொண்டு அகற்றவில்லை என்றால், அல்லாஹ்வின் பெயர் கூறப்பட்ட மடங்கள், தேவாலயங்கள், ஜெப ஆலயங்கள், மசூதிகள் என்பன (இப்போது) மிகவும் அழிக்கப்பட்டிருக்கும்.(சூரா ஹஜ், ஆயத்:40)

இஸ்லாம் கோவில்களை மதிக்கிறது, அது அவற்றை இடிக்க வில்லை, இல்லையெனில் அவற்றை இடிப்பவர்களையும் அது தடுக்கிறது.

7- ஹதீஸ்களைப் பற்றி முஸ்லிம்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தவும், "யூதர்களை அரேபிய தீபகற்பத்திலிருந்து வெளியேற்றவும்" மற்றும் "இரண்டு மதங்கள் அரேபிய தீபகற்பத்தில் இணைந்து வாழமுடியாது" இந்த இரண்டு ஹதீஸ்கள் உண்மையாக இருந்தால், நபிக்கு ஒரு யூத மனைவியும் ஒரு கிறிஸ்தவ மனைவியும் இருந்திருக்க மாட்டார்கள். அவர் நஜ்ரான் கிறிஸ்தவர் களுடன் ஒப்பந்தமும் செய்திருக்க மாட்டார்."

---

[1] அல்லாஹு த ஆலாவிடமிருந்து ஒரு தீர்க்கதரிசி கொண்டு வந்த தகவல்களில் நம்பிக்கை கொள்வது ஈமான் என்று அழைக்கப்படுகிறது. நம்ப வேண்டிய தகவல் இரண்டு வகையானது: முதலாவது தகவல்கள் நம்ப வேண்டியது மட்டும், இரண்டாவது நம்பிக்கை வைக்கவும் வேண்டும் செயல்படுத்தவும் வேண்டும்.

முதல் வகை தகவல், ஈமானின் அடிப்படையாகும். அது ஆறு கோட்பாடுகளை உள்ளடக்கியது. அனைத்து நபிமார்களும் ஒரேஅடிப்படை ஈமானின் கொள்கைகளை கற்பித்தனர். இன்று, அனைத்து யூதர்கள், கிறிஸ்தவர்கள், விஞ்ஞானிகள்,உலகெங்கிலும் உள்ள அரசியல்வாதிகள், தளபதிகள் மற்றும் நவீனத்துவவாதிகள் மறுமையை நம்புகி றார்கள். இவை அனைத்தும் மீள் அழைக்கப்படுபவை,, அதாவது மரணத்திற்குப் பிறகு உயிர்த்தெழுதல். தங்களை நவீன மனிதர்கள் என்று சொல்லிக்கொள்பவர்களும் மற்ற மக்களை போல் நம்ப வேண்டும்.

மறுபுறம், தீர்க்கதரிசிகளின் அஹ்காம் இஸ்லாமியா, அதாவது அவர்களின் மதங்களில் உள்ள கட்டளைகள் மற்றும் தடைகள் ஒரே மாதிரியானவை அல்ல. ஈமான் இருப்பதுடன் அஹ்காமுல் இஸ்லாமியாவுடன் தன்னை மாற்றிக் கொள்வது இஸ்லாம் என்று அழைக்க படுகிறது. ஒவ்வொரு நபிக்கும் வெவ்வேறு அஹ்காம் இஸ்லாமியா இருப்பதால், ஒவ்வொரு தீர்க்கதரிசியின் இஸ்லாம் மற்றவரை விட வேறுபட்டதாக இருக்கும். ஒவ்வொரு அல்லாஹ் வின் தூதரும் அதற்கு முன் இருந்த நபியின் இஸ்லாத்தை ரத்துசெய்து ஒரு புதிய இஸ்லாத்தை கொண்டு வந்தார்கள், கடைசி நபியான முஹம்மது (அலைஹிஸலாம்) கொண்டு வந்த இஸ்லாம் உலக முடிவு வரை செல்லுபடியாகும். சூரா அலி இம்ரானின் ஆயத்துக்கள்:19 மற்றும் 85 இல், அல்லாஹு தலா யூதர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் அவர்களின் முந்திய இஸ்லாம் மார்க்கத்தை விட்டுவிடுமாறு கட்டளையிடுகிறான். முஹம்மது (அலைஹி சலாம்)இன் இஸ்லாத்துக்கு தங்களை மாற்றிக்கொள்ளாதவர்கள் சொர்க்கம் செல்ல முடியாது, அவர்கள் நரகத்தில் நித்திய தண்டனையை அனுபவிப்பார்கள் என்று அவன் அறிவிக்கின்றான். முன்னறிவிக்கப்பட்ட தீர்க்கதரிசிகள் ஒவ்வொருவரும், அதாவது, இப்ராகிம், இஸ்மாயில், யாகூப் மற்றும் யூசுப்,அவர் காலத்தில் செல்லுபடியாகும் இஸ்லாத்திற்காக அர்பணித்தார்கள். அந்த இஸ்லாம்கள்; உதாரணமாக தேவாலயத்திற்கு செல்வது இன்று செல்லுபடியாகாது.

8- முஸ்லீம்களை அவர்களின் வழிபாடுகளை தடுத்து, "அல்லாஹ்வுக்கு அவர்களின் வணக்கங்கள்"[1] தேவையில்லை என்று கூறி அவர்களின் வணக்கங்களின் பலன்களை இல்லாமலாக்க முயற்சி செய்யுங்கள். ஹஜ் மற்றும் அவர்களுக்கு ஒற்றுமையை கொண்டு வரும் எந்த வழிபாட்டையும் தடுக்க முயற்சி செய்யுங்கள், அதே மாதிரி மசூதிகள், அடக்கஸ்தலங்கள் மற்றும் மதரஸாக்கள் கட்டுவதையும் கஃபாவின் மறுசீரமைப்பு செய்வதற் கும் தடைகளை ஏற்படுத்துங்கள்.

9- கனிமத்தின் ஐந்தில் ஒருபங்கு விதி பற்றி அவர்களுக்கு தெளிவின்மையை ஏற்படுத்துங்கள். போரின்போது எதிரியிடமிருந்து கிடைக்கும் பொருட்களில் ஐந்தில் ஒரு பங்கு உலமாக்களுக்கு (முஸ்லிம் அறிஞர்கள்: இஸ்லாமிய புனித சட்டம் மற்றும் இறையியல் பற்றிய சிறப்பு அறிவை பெற்றவர்கள் என்று அங்கீகரிக்கப்பட்டவர்களுக்கு) கொடுக்க வேண்டும். இந்த ஐந்தில் ஒரு பங்கு எடுக்கப்பட்ட கனிமத் சொத்து, வணிக ரீதியான வருவாயுடன் எந்த தொடர்பும் இல்லாதது என்பதுடன் "ஹுமுஸ் (மேலே குறிப்பிட்டுள்ள ஐந்தில் ஒரு பங்கு) உலமாக்களுக்கு அல்ல, நபிகளுக்கு அல்லது கலீஃபாவுக்கு வழங்க படவேண்டும். ஏனெனில் உலமாக்கள் தங்களுக்கு வீடு, விலங்குகள் மற்றும் பழத்தோட்டங்கள் வாங்குவதற்கு பயன் படுத்துவார்கள் என்பதால் அவர்களுக்கு கொடுக்க அனுமதி இல்லை என்று கூறவேண்டும்.

10- முஸ்லிம்களின் கோட்பாடுகளில் வழிகேடுகளை செருகவும், பின்னர் இஸ்லாத்தை பயங்கரவாத மதமாக இருப்பதற்காக குற்றம் சாட்டவும். முஸ்லீம் நாடுகள் பிற்போக்குத்தனமானவை மற்றும் அதனால் அவர்கள் அதிர்ச்சிகளுக்கு உட்பட்டுள்ளனர் என்பதை கூறி இஸ்லாத்தை அவர்கள் பின்பற்றுவதிலிருந்து தர்க்க வேண்டும். [மாறாக, முஸ்லிம்கள் உலகில் மிகப்பெரிய மிகவும் நாகரிகமான பேரரசுகளை நிறுவியது. இஸ்லாத்தை பின்பற்றுவது மோசமாகிவிட்டதால் அவர்கள் மலினப்பட்டனர்.]

11- மிக முக்கியமானது! குழந்தைகளை அவர்களின் தந்தைகளிடமிருந்து பிரித்துவிடுங்கள். அதன்மூலம் அவர்களின் மூதாதையர்களின், பெரியவர் களின் கல்வியை இழப்பார்கள். நாங்கள் அவர்களுக்கு கல்வி கற்பிப்போம். இதன்விளைவாக, குழந்தைகள் தந்தையரின் கல்வி அவர்களிடமிருந்து பிரிந்த தருணம் அவர்களின் நம்பிக்கை மற்றும் மத அறிஞர்களுடன் தொடர் பைப்பேண அவர்களுக்கு இனி எந்த சாத்தியமும் இருக்காது.

12- பெண்கள் தங்கள் பாரம்பரிய ஆடைகளிலிருந்து விடுபதுவதற்கு தூண்டவும். "மறைப்பது உண்மையான இஸ்லாமிய கட்டளை அல்ல என்று சொல்லுங்கள். இது அப்பாசிய காலத்தில் நிறுவப்பட்ட ஒருபாரம்பரியம். முன்பு, நபிகள் நாயகத்தின் மனைவிமார்கலும் மற்றவர்களும் அவர்களது அனைத்து வகையான சமூக செயல்பாடுகளிலும் பெண்கள் பாரம்பரிய மறைப்பு மேலாடைகளை களைந்த பின் இணைவார்கள் என்று கூறுங்கள். இளைஞர்கள் அவர்களை பார்ப்பதால் அவர்களுக்கு இடையே அநாகரிக மான செயல்களை நோக்கி தூண்டுகிறது! இது மிகவும் பயனுள்ள

---

[1] அல்லாஹு தலா கட்டளையிட்டதால் வழிபாடுகள் செய்யப்படுகின்றன. ஆம், அல்லாஹு தலாவுக்கு அவனது மனித படைப்பின் வணக்கங்கள் தேவையில்லை. கிறிஸ்தவர்கள் தேவாலயங்களுக்கு கூட்டமாக செல்கிறார்கள் ,ஆனால் முஸ்லிம்கள் மஸ்ஜிதுக்கு செல்வதை தடுக்க விரும்புகிரார்கள்.

முறையாகும்!. இஸ்லாத்தை அழிப்பதற்கு முதலில் முஸ்லிம் அல்லாத பெண்களை இந்த நோக்கத்திற்காக பயன்படுத்தவும். காலப்போக்கில் முஸ்லிம் பெண்கள் சீரழிந்து தானாக வருவார்கள். அவர்களின் முன்மாதிரி யைப் பின்பற்றத் தொடங்குவார்கள்.[1]

13- ஜமாஅத்தில் தொழுகை (சலாத்) செய்வதற்கு முற்றுப்புள்ளி வைக்க ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்திக் கொள்ளுங்கள். மசூதிகளில் உள்ள இமாம்கள் மீது ஆசைகளை ஏற்படுத்துவதன் மூலம், அவர்களின் தவறுகளை வெளிப்படுத்துவது,மற்றும் முரண்பாடுகளை ஏற்படுத்துவதன் மூலம் அவர்களுக்கும் அவர்களுடன் தொழுகையை நிறைவேற்றும் முஸ்லிம் களுக்கும் இடையில் பிரச்சனைகளை ஏற்படுத்துவது

---

[1] ஹிஜாப் (மறைப்பு) ஆயத்தின் வெளிப்பாட்டிற்கு முன், பெண்கள் தங்களை மறைக்க ஹிஜாப் அணியவில்லை. அவர்கள் அல்லாஹ்வின் தூதரிடம் வருவார்கள், அவரிடம் கேள்வி கேட்பார்கள், மேலும் அவர்களுக்குத் தெரியாததை அவரிடமிருந்து கற்றுக் கொள்வார்கள். அல்லாஹ்வின் தூதர் அவர்களில் ஒருவரின் இல்லத்திற்குச் சென்ற போதெல்லாம், மற்ற பெண்களும் அங்கு செல்வார்கள், கேட்பார்கள், கற்றுக்கொள் வார்கள். ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு சூரா ஹிஜ்ரத் நூர் வெளிப்படுத்தப்பட்டது. பெண்கள் ஆண்களுடன் உட்கார்ந்து அல்லது பேசுவது (மனைவி அல்லது பிற நெருங்கிய உறவினர்களை தவிர) தடை செய்வது தெரியவந்தது. அப்போதிருந்து, அல்லாஹ்வின் தூதர் பெண்களுக்கு அவர்களுக்கு தெரியாதவற்றை அவருடைய சங்கையான மனைவிமார்களை கேட்டு கற்றுக்கொள்ளும்படி கட்டளையிட்டார்கள். நிராகரிப் பவர்கள் இந்த விடயத்தில் முஸ்லிம்களை தவறாக வழிநடத்துகின்றனர். ஹிஜாப் ஆயத்தின் வெளிப்பாட்டிற்குப் பிறகு பெண்கள் தங்களை மறைத்துக் கொண்டனர். ரசூலுல்லாஹ்வின் சங்கையான மனைவி உம்மு-சலமா (ரலியல்லாஹு தஆலா அன்ஹா),, விவரிக்கிறார்: மைமுனா (ரலியல்லாஹு த ஆலா அன்ஹா), ரசூலுல்லாவின் (சல்லல்லாஹு அலைஹி வசல்லம்) மற்றொரு மனைவி மற்றும் நான் அல்லாஹ்வின் தூதருடன் (சல்லல்லாஹுஅலைஹி வசல்லம்)இருக்கும்போது, இப்னி உம்மி மக்தும் (ரலியல்லாஹு த ஆலா அன்ஹு),அனுமதி கேட்டு உள்ளே நுழைந்தார். அல்லாஹ்வின் தூதர் (சல்லல்லாஹு அலைஹி வசல்லம்) அவரைப் பார்த்தபோது அவர் எங்களிடம் "**திரைச்சீலைக்கு பின்னுக்கு போங்கள்!"** என்று கூறினார்கள்." அவர் குருடர் இல்லையா? அவர் எங்களைப் பார்க்க மாட்டார் என்று நான் சொன்ன போது, "அல்லாஹ்வின் தூதர் பதிலளித்தார்," **நீங்களும் கூட குருடா? நீங்கள் அவரை பார்க்கவில்லையா?**" அதாவது,"அவர் குருடராக இருக்கலாம், ஆனால் நீங்கள் இல்லை. "இந்த ஹதீஸ் ஷெரீப் இமாம் அஹ்மத் மற்றும் திர்மிதி மற்றும் அபு தாவூத் (ரஹிமஹுமுல்லாஹி தலா)வில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. இந்த ஹதீஸ் ஷெரீப், ஒரு ஆண் அவரது மனைவி அல்லது நெருங்கிய உறவினர் அல்லாத ஒரு பெண்ணை பார்ப்பது ஹராம். ஒரு பெண்ணுக்கு அவளது கணவன் அல்லது நெருங்கிய உறவினர் அல்லாத ஒரு ஆணை பார்ப்பது ஹராம்.

எங்கள் மதுஹபுடைய இமாம்கள் மற்றுமொரு ஹதீஸ் ஷரீஃப்களையும் கருத்தில் கொண்டு, சொன்னார்கள்"ஒரு பெண் மஹ்ரம் அல்லாத ஆணின் அவ்ரத்தை (அந்தரங்க உறுப்புகளை) பார்ப்பது ஹராம். இதைச் செய்வது எளிது. இந்த எளிதான கட்டளைகள்(ஃபர்ளை) செய்வது, மற்றும் தடைகள் (ஹராமை) தவிர்ப்பது: (**ருக்சத்** - அனுமதி, எளிதான வழி) என்று அழைக்கப்படுகின்றது. மேலும் கட்டளைகளை நிறைவேற்றுவதில் (தகுதியான மற்றும் கடினமான வழி **அஜிமத்)** உதாரணம்; பெண் மஹ்ரம் இல்லாத மனிதனின் தலை மற்றும் முடியைப் பார்க்கக்கூடாது.

ஒரு ஆணுக்கு அவ்ரத் பகுதி அவரது முழங்காலுக்கும் தொப்புளுக்கும் இடையில் உள்ளது. **அஜிமத்**தில் கவனம் செலுத்தாமல் இந்த விதியை மட்டும் கடைபிடிப்பது மேலும் கீழ்ப்படிவது **ருக்ஸத்** என்று அழைக்கப்படுகிறது. அஸ்வாஜ்-இ-தஹிரத் (அல்லாஹ்வின் தூதரின் தூய மனைவிகள்) ரலியல்லாஹு தஆலா அன்ஹுமா மற்றும் அஸ்'ஹாபுல் கிராம் ரலியல்லாஹு த ஆலா அன்ஹும் அஜிமத்தை கடைபிடிப்பார்கள். மேலும் அவர்கள் ருக்சத்தை தவிர்ப்பார்கள். ஜிந்திக்ஸ் (காஃபிர்கள் முஸ்லீம்கள் போல் நடித்து) இஸ்லாத்தை உள்ளிருந்து அழிக்க முயற்சிப்பவர்கள் பெண்கள் ஹிஜாப் ஆயத்தின் வெளிப்பாட்டிற்கு முன் தங்களை மறைக்கவில்லை என்ற உண்மையை முன்வைக்கிறார்கள். மேலும், "நபியாவர்கள் காலத்தில் பெண்கள் தங்களை மறைத்துக் கொள்ளவில்லை. இன்று பெண்கள் தங்களை பேய் போல மறைக்கிறார்கள், இந்த நடைமுறை இன்று பொதுவானது. அந்தக் காலத்தில் இருக்கவில்லை ஹத்ரத் ஆயிஷா ரலியள்ளஹு த ஆலா அன்ஹா தலையை மறைக்காமல் வெளியே செல்வார். மறைக்கும் இன்றைய நடைமுறை ஃபிக்ஹின் பெரிய மனிதர்களால் கண்டுபிடிக்கப்பட்டது" என்று கூறுகிறார்கள். மேற்கோள் காட்டியுள்ள ஹதீஸ் ஷரீஃப்கள் அவர்களின் இந்த அறிக்கைகள் பொய்யானவை மற்றும் அவதூறுகள் என்பதை தெளிவாகக் காட்டுகிறது.

அல்லாஹு தலாவின் கட்டளைகள் மற்றும் தடைகளை வரையறுக்கும் நான்கு சரியான மத்ஹபுகளின் மனிதனின் அவ்ரத் பற்றிய விளக்கங்கள் வேறுபட்டவை; ஆண்களின் உடலின் அவ்ரத் பாகங்கள், மற்றவர்களுக்கு பார்ப்பதற்கு அல்லது மற்றவர்களுக்கு காட்டுவதற்கு தடை செய்யப்பட்டவை. ஒவ்வொரு மனிதனும் அவர் இருக்கும் மத்ஹப் ஹராமாக்கிய தனது உடலின் அந்த பகுதிகளை மூடி வைப்பது ஃபர்ளு என்று பரிந்துரைக்கிறது. வேறொருவரின் அவ்ரத் பாகங்களை பார்ப்பதும் ஹராம். பின்வரும் ஹதீஸ் ஷரீஃப்கள் அஷியத்துல்-லம'அத் என்ற புத்தகத்தில் எழுதப் பட்டுள்ளது: "ஆண்களும் பெண்களும் தங்கள் சொந்த பாலின மக்களின் அவ்ரத் பகுதிகளைப் பார்க்க வேண்டாம். " ஹனஃபி மத்ஹபில், ஒரு ஆணின் அவ்ரத் பகுதி மற்ற ஆணுக்கு தடுக்கப்பட்டமாதிரி, பெண்களின் அவ்ரத்பகுதி மற்ற பெண்களுக்கும்:. முழங்கால்களு க்கும் மற்றும் தொப்புளுக்கும் இடைப்பட்ட பகுதி. மறுபுறம், மஹ்ரம் அல்லாத ஆண்களுக்கு ஒரு பெண்ணின் அவ்ரத் பாகம், அவளது உடல் முழுவதும் கைகள் மற்றும் முகத்தை தவிர. (எதிர் பாலினத்தைச் சேர்ந்த எந்த உறுப்பினரும் ஒருவரின் நெருங்கிய உறவினர்களை (மஹ்ரம் தவிர) மஹ்ரம் அல்லாதவர்கள் என்று அழைக்கப்படும். இஸ்லாம் ஒருவரின் மஹ்ரமான உறவினர்களை பெயரிடுகிறது. அவர்கள் பதினெட்டு). ஒரு பெண்ணின் தலைமுடி அவளது அவ்ரத்துக்குள் அடங்கும். காம உணர்வு இல்லாமல் கூட ஒருவரின் அவ்ரத்தான பாகங்களை பார்ப்பது ஹராம். **"நீங்கள் ஒரு பெண்ணைக் கண்டால், உங்கள் முகத்தை அவளிடமிருந்து விலக்குங்கள்! எதிர்பாராத விதமாக ஒருவரைப் பார்ப்பது பாவம் இல்லை என்றாலும், அவளை மீண்டும் பார்ப்பது பாவமானது. "**

**"ஓ அலி! தொடையைத் திறக்காதே! வேறொருவரின் தொடையையும் பார்க்க வேண்டாம், அது ஒரு பிணமாக இருந்தாலும் அல்லது உயிருடன் இருக்கும் ஒரு நபராக இருந்தாலும் "**

**"உடல் பாகங்களைத் திறப்பவர்களையும், அதை பார்ப்பவர்களையும் அல்லாஹ் சபிக்கட்டும்"**

**"தன்னை ஒரு சமூகத்தைப் போல் ஆக்கிக்கொள்ளும் ஒருவர் அவர்களில் ஒருவராக மாறுவார்"**

இந்த ஹதீஸ் ஷெரீப்: நெறிமுறைகள், நடத்தை அல்லது ஆடை அலங்காரத்தில் இஸ்லாத்தின் எதிரிகளை பின்பற்றும் அல்லது தன்னை மாற்றிக்கொள்ளும் ஒரு நபர் அவர்களில் ஒருவர். தன்னை நிராகரிப்பவர்களின் தீய நாகரிகங்களுக்கு தங்களை மாற்றிக்கொள்பவர்கள், ஹராமை 'நுண்கலை' என்று பெயரிடுபவர்கள்,

ஹராமான வற்றை செய்பவர்களை 'கலைஞர்கள்'என்று அழைப்பவர்கள் இந்த ஹதீஸ் ஷெரீப்பை ஒரு எச்சரிக்கையாக எடுத்துக் கொள்ள வேண்டும். இது 'இமாம் அல்-கஸ்ஸாலிலியின் 'கீமியா சஆதத்தில்' எனும் புத்தகத்தில் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது

"பெண்கள் மற்றும் பெண் சிறுவர்கள் அவர்களின் தலை, முடி, கை மற்றும் கால்களை மறைக்காமல் அல்லது மெல்லியதாக, அலங்கரிக்கப்பட்ட, இறுக்கமான, வாசனை திரவிய ஆடைகள் அணிந்து வெளியே செல்வது ஹராம். ஒரு பெண்ணின் பெற்றோர், கணவர் அல்லது சகோதரர்கள் அவள் இந்த வழியில் வெளியே செல்வதை மன்னிக்கிறார்கள் என்றால் , அவர்கள் அவளின் பாவம் மற்றும் வேதனையை பகிர்ந்து கொள்வார்கள் (இந்த பாவத்திற்காக அவர்கள் ஒன்றாக எரிவார்கள்.) " அவர்கள் தவ்பா செய்தால் அவர்களுக்கு மன்னிப்பு வழங்கப்படும். அல்லாஹு தஆலா தவ்பா செய்பவர்களை விரும்புகிறான்.

14- அனைத்து கபுருஸ்தானகளும் தரைமட்டமாக்கப்பட வேண்டும். அவை நபியின் காலத்தில் அவை இருக்கவில்லை என்று கூறி தீர்க்கதரிசிகள், கலீபாக்கள், மற்றும் சாலிஹான முஸ்லீம்களின் கல்லறைகளை தரிசிப்பதில் முஸ்லிம்களுக்கு சந்தேகத்தை எழுப்புங்கள். உதாரணத்துக்கு, "நபி அவரது தாயார் மற்றும் அபுபக்கர் மற்றும் உமர் ஆகியோருடன் அடக்கம் பக்கீ என்ற மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டார் என்று சொல்லுங்கள். உதுமானின் கல்லறை எங்கு என்று தெரியவில்லை. ஹுசைனின் தலை ஹன்னானாவில் என்ற இடத்தில் அடக்கப்பட்டது. அவரது உடல் எங்கே புதைக்கப்பட்டது என்று தெரியவில்லை. காசிமியாவில் உள்ள கல்லறைகளில் இரண்டு கலீபாக்கள் அடக்கம் செய்யப்பட்டுல்லார்கள். அவை நபியின் இரண்டு சந்ததியினரான காசிம் மற்றும் ஜவாதுக்கு சொந்தமானவைகள் அல்ல. துஸ் எனும் நகரத்தில் உள்ள கல்லறை ஹாருனுக்கு உரியது, அஹ்லு பைத்தினரா ன ரிசாவிக்கு உரியதல்ல. சமேராவில் உள்ள கல்லறைகள் அப்பாசிகளுக்கு சொந்தமானது. அவை அஹ்லு பைத்தினரான ஹாதி, அஸ்கரி மற்றும் மஹ்திக்கு சொந்தமானவை அல்ல. முஸ்லிம் நாடுகளிலுள்ள எல்லா சியாராங்களை, டோம்களை இடிப்பது பர்ளு. எனவே பக்கீ மைதானத்தை புல்டோசர் செய்வது அவசியம்."

15- செய்யிதுகள் நபியின் சந்ததியினர் என்ற உண்மையில் மக்களுக்கு சந்தேகத்தை ஏற்படுத்துங்கள். செய்யிது அல்லாதவர்களுக்கு கறுப்பு மற்றும் பச்சை தலைப்பாகைகளை அணியச் செய்வதன்மூலம் மற்ற மக்களுடன் செய்யதுகளை கலந்து விடவும். இதனால் இந்த விஷயத்தில் மக்கள் குழப்ப மடைந்து சைய்யதுகள் மீது அவநம்பிக்கை தொடங்கும். செயித்களிடமிருந்து மார்க்க அதிகாரிகளிடமிருந்தும் அவர்களின் தலைப் பாகைகளை அகற்றவும்; அதனால் தீர்க்கதரிசன வம்சாவளியை இழந்து விடுவதுடன் மதரீதியாக இருக்கும் அதிகாரிகள் இனி மதிக்கப்பட மாட்டார்கள். [1]

16- ஷியாக்கள் துக்கம் கொண்டாடும் இடங்களை இடிப்பது ஃபர்ளு என்றும் இந்த நடைமுறை ஒரு வழிகேடு மற்றும் தவறு என்றும் சொல்லுங்கள். மக்கள் அந்த இடங்களை பார்வையிடுவதை தடுக்க வேண்டும். இமாம்களின் எண்ணிக்கையை குறைக்கப்பட

வேண்டும். இமாம்கள் மீதும், துக்கம் கொண்டாடும் இடங்களின் உரிமையாளர்கள் மீதும் வரி விதிக்கப்பட வேண்டும்.

---

[1] சையத் அப்துல் ஹகிம் அர்வாசி (ரஹ்மத்துல்லாஹி அலைஹி), ஒரு சிறந்த அறிஞர், இஸ்தான்புல்லில் அவர் எழுதிய (அஸ்ஹாபி-கிராம்) நூலில் கூறுகிறார்: அல்லாஹ்வின் தூதரின் ஆசீர்வதிக்கப்பட்ட மகள் ஹஸ்ரத் பாத்திமா, மற்றும் உலகின் இறுதி வரை தோன்றும் அவரது சந்ததியினர் அனைவரும் அஹ்லு-பைத்தினராகும். அவர்கள் கீழ்ப்படி யாத முஸ்லிம்களாக இருந்தாலும் அவர்களை நேசிப்பது, ஒருவரின் இதயம், உடல், மற்றும் உடைமைகள் மூலம் அவர்களுக்கு உதவுவது, மற்றும் அவர்களை கண்ணியப்படுத்துவது, மற்றும் அவர்களின் உரிமைகளைக் கவனிப்பது ஒருவரை ஒரு விசுவாசியாக மரணிக்கவும் உதவும். எகிப்தில்அப்பாசித் கலீஃபாக்கள் காலத்தில், சிரியாவில் ஒரு நகரம் ஹமாவில் சையிதுகளுக்காக ஒரு சட்ட நீதிமன்றம் ஒதுக்கப்பட்டது. ஹசன் (ரலியல்லாஹு தஆலா அன்ஹு)வின்சந்ததியினர் ஷெரீஃப் என்றும் பெயரிடப்பட்டது. அவர்கள் வெள்ளை தலைப் பாகையும் மற்றும் ஹுசைன் (ரலியல்லாஹுதஆலாஅன்ஹு)வின் சந்ததியினர் செய்யித் என்றும் பெயரிடப்பட்டது. அவர்கள் பச்சை தலைப்பாகை அணிய வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. இந்த இரண்டு குடும்பங்களில் இருந்து பிறந்த குழந்தைகள் ஒரு நீதிபதி மற்றும் இரண்டு சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டனர். சுல்தானின் அப்துல் மஜித் கான் (ரஹ்மதுல்லாஹி அலைஹி) ஆட்சிக்காலத்தில், மேசொனிக் மந்திரி.

17- சுதந்திரம் மற்றும் அன்பு என்பதன் பெயரில், "ஒவ்வொருவரும் தனக்கு விருப்பமானதைச் செய்ய சுதந்திரம் இருக்கின்றது என்று அனைத்து முஸ்லிம்களையும் நம்பவையுங்கள். அம்ர் பில் மஃரூஃப் மற்றும் நஹி அனில் முன்கர்'ஐ நடைமுறை படுத்துவது, மற்றும் இஸ்லாமிய கோட்பாடுகளை கற்பிப்பது பர்ளு இல்லை." [மாறாக, இஸ்லாத்தை கற்றுக்கொள்வதும் கற்பிப்பதும் மிகவும் கட்டாயமானது பர்ளு. இது ஒரு முஸ்லிமின் முதல் கடமை]. மேலும், முஸ்லிம்களுக்கு இவற்றை ஊக்குவிக்கும் போது; "கிறிஸ்தவர்கள் தங்கள் சொந்த நம்பிக்கையில்(கிறிஸ்தவம்) இருக்க வேண்டும். மற்றும் யூதர்கள் தங்களின் (யூதமதம்)க்கு கீழ்ப்படிய வேண்டும். யாரும் மற்றொரு நபரின் இதயத்தில் நுழைய முடியாது. அம்ர் பில் மஃருஃப் மற்றும் நஹி அனில் முங்கர் கலீபாவின் கடமைகள்.

18- முஸ்லிம்களின் எண்ணிக்கை அதிகரிப்பதைத் தடுக்கும் பொருட்டு, பிறப்புவீதம் குறையவேண்டும், அவர்களின் பலதார மணம் தடைசெய்யப்பட வேண்டும். திருமணம் கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும். உதாரணமாக: ஒரு அரேபியன் ஒரு ஈரானியரை மணக்க முடியாது, ஒரு ஈரானியன் ஒரு அரேபியரை திருமணம் செய்ய முடியாது. ஒரு துருக்கியர் ஒரு அரபியை திருமணம் செய்ய முடியாது என்று சொல்ல வேண்டும் .

19- இஸ்லாமிய பிரச்சாரங்கள் மற்றும் மதமாற்றங்கள் நிறுத்தப்பட வேண்டும். இஸ்லாம் அரேபியர்களுக்கு மட்டுமே உரிய ஒரு தனித்துவ மான மதம் என்ற கருத்தை பரப்பவும். இதற்கு ஆதாரமாக, குர்'ஆனின் ஆயத்:" **இது ஒரு திக்ர்** (அல்லாஹு தஆலாவை நினைவுபடுத்துவது) **உனக்கும் உமது மக்களுக்கும்**" என்ற வசனத்தை முன் வைக்கவும் .

20- தனி நபர்களால் புனித நிறுவனங்கள், மதரஸாக்கள் அல்லது பிற ஒத்த தொண்டு நிறுவனங்களை நிறுவுவதற்கு முடியாத அளவுக்கு சாம்ராஜ்ஜிய ஏகபோகத்தினால் கட்டுப்படுத்தப்பட வேண்டும்.

21- முஸ்லிம்களின் மனதில் குர்ஆனின் நம்பகத்தன்மையில் சந்தேகத்தைத் தூண்டவேண்டும். தவிர்த்தல், சேர்த்தல் மற்றும் இடைச்செருகல்களை

---

ரஷீத் பாஷா, தனது ஆங்கிலேய எஜமானர்களின் வழிகாட்டுதலின் கீழ் இந்த சட்ட நீதிமன்றங்களை ரத்துசெய்தார் அறியப்பட்ட பரம்பரை தோற்றம் மற்றும் மார்க்கத்தின் மத்ஹப் இல்லாதவர்கள் சையத் என்று அழைக்கப்படத் தொடங்கி னர்கள். போலி ஈரானிய சையித்மார்கள் எல்லா இடங்களிலும் பரவினார்கள். இது ஃபதாவா-அல் -ஹதிதியாவில் கூறப்பட்டுள்ளது, இஸ்லாத்தின் ஆரம்ப காலங்களில் அஹ்லு-பைத் வம்சாவளியைச் சேர்ந்த எவரையும் ஷெரீப், அதாவது, ஷெரீப் அப்பாசி, ஷெரிப் ஜெய்னாலி என்று அளைக்கப்படளானார்கள். பாத்திமி ஆட்சியாளர்கள் ஷியாக்கள். அவர்கள் ஹசன் மற்றும் ஹுசைன் வாரிசுகளை மட்டுமே ஷெரீப் என்று அழைத்தனர்.

அஷ்ரப் ஷ'பான் பின் ஹுசைன், எகிப்தின் துருக்கிய ஆட்சியாளர்களில் ஒருவர், ஷெரீஃப்களிடமிருந்து வேறுபடுத்தப்பதுவதற்காக சையதுகள் பச்சை தலைப்பாகை களை அணிய வேண்டும் என்று கட்டளையிட்டார். இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் அவைகளுக்கு எந்தமதிப்பும் இல்லை எனினும், இந்த மரபுகள் பரவலாக பரவுகின்றன. இந்த விடயம் பற்றிய விரிவான தகவல்கள் ***மிரத்தில் கைனாத்*** மற்றும் ***மாவாஹபி-லதுன்னியாவின்*** துருக்கிய பதிப்பில் மூன்றாம் அத்தியாயத்தில் ஏழாவது பாகத்தின் ஜர்கானி எனும் விரிவுரைகளை பார்க்கவும்."

கொண்ட குர்ஆனின் மொழிபெயர்ப்புகளை வெளியிட வேண்டும். பின்னர் "குர்ஆன் களங்கப்படுத்தப்பட்டது, அதன் பிரதிகள் பொருத்தமற்றவை. அவற்றில் ஒரு வசனம் மற்றொன்றில் இல்லை என்று கூற வேண்டும். யூதர்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் அனைத்து முஸ்லிம் அல்லாதவர்களை அவமதிக்கும்,மற்றும் ஜிஹாதை கட்டளையிடும் மற்றும் அம்ர் பில் மஃருஃப் மற்றும் நஹிஅனில் முன்கர்[1] வசனங்களை நீக்கிவிட்டு குர்ஆனை துருக்கிய, பாரசீக, இந்திய போன்ற பிறமொழிகளில் மொழிபெயர்க்கவும். இவ்வாறு அரபு மொழியைக் கற்றுக்கொள்வதையும் அரபு நாடுகளுக்கு வெளியே அரபு படிப்பதையும் தடுக்க வேண்டும். மேலும், அரபு நாடுகளுக்கு வெளியே அதான்(தொழுகைக்குஅழைப்பு)அரபியில் சொல்லப்படுவதை, பிரார்த்தனை (துஆ) அரபியில் செய்யப்படுவதை தடுப்பது. அதேபோல், முஸ்லிம்கள் ஹதீதுகளை சந்தேகப்படும் படி செய்யப்படுவார்கள். அவற்றின் மொழி பெயர்ப்புகள், விமர்சனங்கள் மற்றும் குர்'ஆனுக்கு திட்டமிடப்பட்டவாறு ஹதீஸ்களுக்கும் இடைச்செருகல் செய்யப்பட வேண்டும். '**இஸ்லாத்தை தகர்ப்பது எப்படி**' என்ற புத்தகத்தை படித்தபோது, அது மிகவும் சிறப்பான தாக இருந்தது. அது நான் இஸ்லாத்தை வீழ்த்துவதற்கு இணையற்ற வழி முறையாக இருந்தது.நான் தொடரப்போகும் படிப்புக்கான வழிகாட்டி. நான்

புத்தகத்தை செயலாளருக்குப் திரும்ப கொடுத்த போது, அது எனக்குப் பெரிதும் உதவியது அதை வாசிப்பதில் மகிழ்ச்சி என்று சொன்னேன். அவர் கூறினார், "நீங்கள் இந்ததுறையில் தனியாக இல்லை என்பதை நீங்கள் உறுதியாக நம்பலாம். உங்களைப் போலவே நிறையப்பேர் எங்களிடம் வேலை செய்கிறார்கள். தொடர்ந்து செய்து வருகின்றனர். எங்கள் அமைச்சு இந்த பணிக்கு ஐயாயிரத்துக்கும் மேற்பட்டவர்களை நியமித்துள்ளது. இந்த எண்ணிக்கையை ஒரு லட்சமாக அதிகரிப்பதற்கு அமைச்சு பரிசீலித்து வருகிறது. இந்த எண்ணிக்கையை நாம் அடையும்போது, அனைத்து முஸ்லீம் நாடுகளையும், முஸ்லிம்களையும் எங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வருவோம்." சிறிது நேரம் கழித்து செயலாளர் கூறினார்: "உங்களுக்கு ஒரு நல்ல செய்தி! நமது இந்த திட்டத்தை செயல்படுத்த அமைச்சிற்கு அதிகபட்சம் ஒரு நூற்றாண்டு தேவை. நாங்கள் அந்த மகிழ்ச்சியான

---

[1] இந்த பிரிட்டிஷ் சூழ்ச்சிகள் வீணாகின. அல்லாஹு தலா குர்ஆன் அல்-கரீமை இடைச்செருகலில் இருந்து பாதுகாத்து வருகிறான். அவன் ஹஸ்ரத் ஈசா அலைஹி. சலாமுக்கு கொடுக்கப்பட்ட இன்ஜிலை பாதுகாப்பதாக உறுதியளிக்கவில்லை. இந்த காரணத்தினால் பைபிள் என்ற பெயரில் தவறான புத்தகங்கள் எழுதப்பட்டது. இந்த புத்தகங்கள் கூட காலப்போக்கில் மாற்றப்பட்டன. அவற்றில் முதல் இடைச்செருகல் ஒரு மதம் மாறிய போல் என்ற யூதரால் செய்யப்பட்டது. ஒவ்வொரு நூற்றாண்டிலும் செய்யப்பட்ட மாற்றங்களில் மிகப் பெரியது இஸ்தான்புல்லின் முதல் ரோமானிய பேரரசர் உத்தரவின் பேரில்1524/931 இல் நைசியாவில் கூடியிருந்த 325 இல் 318 பாதிரிமார்கள் கூடி ஏற்படுத்தியது. மார்ட்டின் லூதர், ஒரு ஜெர்மன் பாதிரியார், **புராட்டஸ்டன்ட்** பிரிவை நிறுவினார். ரோமில் போப்பைப் பின்பற்றிய கிறிஸ்தவர்கள் **கத்தோலிக்கர்கள்** என்று அழைக்கப்பட்டனர். செயின்ட் பர்தலோமியூவின் படுகொலைக்கு பிறகு, மற்றும் ஸ்காட்லாந்தில் விசாரணை எனப்படும் தீர்ப்பாயங்களின் பின்னர் நடைபெற்ற படுகொலைகள், கிறிஸ்தவ வரலாற்றில் பதிவு செய்யப்பட்டவை. 1054/446 இல், மைக்கேல் கிரோலரியஸ், இஸ்தான்புல் தேசபக்தர், போப்பிலிருந்து புறக்கணித்து ஆர்த்தடாக்ஸ் **தேவாலயத்தை** நிறுவினார். சிரிய மோனோபிசைட் பிரிவு ஜேக்கபஸ் (பரடேயஸ்), டி.571; மாரோவின் சிரிய மரோனைட் பிரிவு, டி. 405; மற்றும் 1872 இல் சார்லஸ் ரஸலின் **ஜெகோவாவின் சாட்சிகள்.**

நாட்களை காண்பதற்கு வாழாமல் இருக்கலாம், ஆனால் நம் குழந்தைகள் வாழ்வார்கள். இது என்ன ஒரு அழகான பழமொழி: 'மற்றவர்கள் விதைத் ததை நான் சாப்பிட்டேன். அதனால் நான் மற்றவர்களுக்காக விதைக்கிறேன். 'ஆங்கிலேயர்கள் இதை நிர்வகிக்கும் போது அவர்கள் முழு கிறிஸ்தவ மண்டலத்தையும் மகிழ்விப்பார்கள், அவர்களின் பன்னிரண்டு நூற்றாண்டு தொல்லையிலிருந்து பாதுகாப்பு பெறுவார்கள்."

செயலாளர் கூறினார்: "சிலுவை யுத்தம் பல நூற்றாண்டுகள் தொடர்ந்தும் எந்த பயனும் இல்லை. மங்கோலியர்களும்[டென்கீசின் படைகள்] இஸ்லாத் தை அழிக்க எதையும் செய்ததாக இல்லை. ஏனெனில் அவர்களுடைய வேலை திடீர்,முறையற்றது மற்றும் முடிவடையாதது. அவர்கள் தங்கள் பகைமை யை வெளிப்படுத்த

இராணுவ படையெடுப்புகளை மேற்கொண்டனர். அதன் விளைவாக , அவர்கள் சிறிது காலத்தில் சோர்வடைந்தனர். ஆனால் இப்போது நமது மதிப்புமிக்க நிர்வாகிகள் இஸ்லாத்தை அழிக்க மிகவும் நுட்பமான திட்டத்துடன் மற்றும் நீண்டகால பொறுமையுடன் முயற்சிக்கின்றனர். நாங்கள் இராணுவத்தையும் பயன்படுத்த வேண்டும். ஆயினும் இது இறுதி கட்டமாக இருக்க வேண்டும், அதாவது, அது நமக்கு கிடைத்த பிறகு, அவை முழுமையாக மீண்டும் எங்களுக்கு எதிராக போராடாமல் இருப்பதற்கு, இஸ்லாத்தை அனைத்து திசைகளிலிருந்தும் நாங்கள் சிதறடிக்க வண்டும்."

செயலாளரின் இறுதி வார்த்தைகள்: "எங்கள் இஸ்தான்புல் மேலதிகாரிகள் மிகவும் புத்திசாலியாகவும் இருந்திருக்க வேண்டும். அவர்கள் எங்கள் திட்டங்களை துல்லியமாக நிறைவேற்றினார்கள். அவர்கள் என்ன செய்தார் கள்? அவர்கள் முகமதியர்களுடன் கலந்தார்கள், அவர்களின் குழந்தைகளு க்கு மதரஸாக்களைத் திறந்தனர். அவர்கள் தேவாலயங்கள் கட்டினார்கள். அவர்கள் மது , சூதாட்டம், அநாகரீகங்களை பிரபலப்படுத்துவதில் முற்றிலும் வெற்றி பெற்றனர், மற்றும் அவர்களைடையே கிளர்ச்சிகளை தூண்டுவதன் மூலம் குழுக்களாக உடைத்தார்கள், மற்றும் கால்பந்து கிளப்புகளை அவர்கள் உருவாக்கி இளம் முஸ்லிம்களின் மனதில் சந்தேகங்கள் மற்றும் சர்ச்சைகளைச் செருகினர். அவர்கள் அரசாங்கங்களில் முரண்பாடுகளையும் எதிர்ப்புகளையும் ஏற்படுத்தினார்கள். அவர்களின் ஏமாற்று வேலைகளை எல்லா இடங்களிலும் பரப்பினார்கள். அவர்கள் நிர்வாகிகள், இயக்குநர்கள் மற்றும் அரசியல் வாதிகள் தங்கள் வீடுகளை கிறிஸ்தவப் பெண்களால் நிரப்புகிறார்கள். இவ்வாறான நடவடிக்கைகளால் அவர்களின் உறுதியை சிதைத்து, அவர்களின் மார்க்க பற்று, குண நலன்கள், மற்றும் அவர்களின் ஒற்றுமை தொடர்பாடல்களை சீர்குலைத்தார்கள். இப்பொழுது திடீர் யுத்தத்தை தொடங்கி இஸ்லாத்தை முற்றாக அழிப்பதற்கான[1] நேரம் வந்துள்ளது.

[1] பிரிட்டிஷ், இரண்டு பெரிய இந்திய மற்றும் ஒட்டோமான் இஸ்லாமிய பேரரசுகளுக்கு எதிராக இஸ்லாத்தை ஒழிப்பதற்காக அவர்கள் தயார் செய்த இருபத்தி ஒரு விடங்கள் கொண்ட அழிவு திட்டத்தை பயன்படுத்தியது. அவர்கள் இந்தியாவில் வழி தவறிய வஹாபி, காதியானி, தப்லிக் ஜமா’அ , ஜமா’அ இஸ்லாமியா போன்ற இஸ்லாமிய குழுக்களை நிறுவினார்கள். பின்னர் பிரிட்டிஷ் இராணுவம் இந்தியாவின் மீது படையெடுத்து எளிதாக முழு இஸ்லாமிய அரசையும் அழித்தது. அவர்கள் சுல்தானை சிறையில் அடைத்தனர், மற்றும் அவரது இரண்டு மகன்களையும் சஹீதக்கினார்கள். மிகவும் மதிப்புமிக்க ஆபரணங்கள் மற்றும் பல நூற்றாண்டுகளாக பாதுகாக்கப்பட்ட சிறந்த பொக்கிஷங்களை கொள்ளையடித்து லண்டனுக்கு கொண்டு சென்றார்கள். அவர்கள் இந்திய சுல்தான் ஷாஜிஹான் 1631/1041 இல் அக்ராவில் உள்ள அவரது மனைவி அர்ஜுமந்த் பேகத்தின் கல்லறை மீது கட்டிய நினைவு மண்டபம் தாஜ்-மஹாலின் சுவர்களை அலங்கரித்த விலைமதிப்பற்ற. வைரங்கள், மரகதங்கள் மற்றும் மாணிக்க கற்களை திருடி சுவர்களை மண்ணால் பூசினார்கள். இன்று இந்த பிளாஸ்டர்கள் பிரிட்டிசாரின் காட்டுமிராண்டித்தனத்தை உலகம் முழுவதும்

பறைசாற்றுகின்றது. ஆங்கிலேயர்கள் இந்த திருடப்பட்ட செல்வத்தை கொண்டு இஸ்லாத்தை அழிப்பதற்கு இன்னும் செலவிடுகின்றார்கள்.

ஒரு முஸ்லீம் கவிஞர் கூறியபடி; "கொடுங்கோலர்களுக்கு அடக்குமுறைகள் இருந்தால், ஒடுக்கப்பட்டவர்களுக்கு அவர்களுடன் அல்லாஹ் இருக்கின்றான். " இரண்டாம் உலகப் போரின்போது தெய்வீக நீதி உயர்ந்தது. ஜேர்மனி பிரிட்டன் மீது படையெடுக்கலாம் என்று பயந்து அவர்களின் பெரும்பாலானவர்கள் தப்பி ஓடினார்கள். பெரும்பாலான பணக்கார பிரிட்டிஷ் மதகுருமார்கள், அமைச்சர்கள், அமைச்சர்களின் குடும்பத்தினர் மற்றும் பல்லாயிரக்கணக்கான இஸ்லாத்தின் எதிரிகள் கப்பல்களில் ஏறி அமெரிக்கா வுக்கு சென்று கொண்டிருந்தனர். ஜெர்மனுக்கு சொந்தமான இரண்டு போர் கப்பல்; கிராஃப் வொன் ஸ்பீ மற்றும் அது போன்ற இரண்டு கப்பல்களில் இருந்து வெளியிடப் பட்ட காந்த சக்தி கொண்ட குண்டுகள் அந்த கப்பல்களைப் பிடித்து மூழ்கடித்தன. அவர்கள் அனைவரும் அட்லாண்டிக் பெருங்கடலில் மூழ்கினர். போருக்குப் பிறகு, ஒரு முடிவின் பேரில் நியூயார்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் மையத்தால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி அவர்கள் உலகம் முழுவதும் வைத்திருந்த தங்கள் காலனிகளில் இருந்து வெளியேறினர். அவர்கள் காமன்வெல்த் அமைச்சகத்தின் பல நூற்றாண்டுகளாக சுரண்டப்பட்டு வந்த வருமான வழங்களில் பெரும்பாலானவற்றை இழந்தனர் கடைசியில் அவர்கள் கிரேட் பிரிட்டன் என்று அழைக்கப்படும் தீவில் அவர்கள் அடைக்கப்பட்டனர். உணவு மற்றும் நுகர்வோர் பொருட்கள் அவர்களுக்கு ரேஷன் செய்யப்பட்டன.1948ல் ஒரு இரவு விருந்து ஒன்றில் துருக்கி பொதுப்பணியாளர் தலைவர், ஜெனரல் சாலிஹ் ஓமுர்தக்,கூறியது எனக்கு நினைவிருக்கிறது,; "நான் லண்டனில் ஒரு அதிகாரப்பூர்வ விருந்தினர், நான் எப்பொழுதும் முழுமையாக உணவு பரிமாறப்படாமல் உணவு மேசையை விட்டு வெளியேறினேன். இத்தாலியில், திரும்பும் வழியில், நான் நிறைய ஸ்பாகெட்டி சாப்பிட்டு எனது பசியை போக்கிக் கொண்டேன். இதை நான் ஏன் மேற்கோள் காட்டுகிறேன் என்றால் நான் சாப்பாட்டு மேசையில் ஜெனரலுக்கு எதிரே அமர்ந்திருந்தேன். அவர் சொன்னதை சரியாக எனக்கு கேட்க முடியுமாய் இருந்தது. அவருடைய வார்த்தைகள் இன்னும் என் காதுகளில் எதிரொலி க்கின்றன.

தெனாவுல்லா தஹ்லாவி (ரஹ்மத்துல்லாஹி அலைஹி) அவர்கள் சூரா மைதாவின் எண்பத்தி இரண்டாவது ஆயத் கரிமாவின் விளக்கத்தில் பின்வருமாறு கூறுகிறார்கள். : "முஹ்யிஸ்- சுன்னா ஹுசைன் பகாவி அனைத்து கிறிஸ்தவர்களும் முஷ்ரிக் இல்லை என்று கூறினார். (அல்லாஹு தாலாவுக்கு ஒரு துணை அல்லது இணை கற்பிப்பது). ஷிர்க் என்றால் எதையாவது தெய்வமாக்குவது, அதாவது அதை வணங்குவது. யூதர்களைப் போல முஷ்ரிக்குகள் முஸ்லிம்கள் மீது கடும் பகை கொண்டவர். அவர்கள் முஸ்லீம்கள் கொல்கிறார்கள், அவர்களின் தாயகங்களை அழித்து, அவர்களின் மசூதிகளை தகர்த்தனர். அவர்கள் குர்ஆன் அல்-கரீமின் நகல்களை எரிக்கிறார்கள். இமாம் ரப்பானி (ரஹ்மதுல்லாஹி அலைஹ்) அவர்களின் **மக்தூபாத்** இன் மூன்றாவது தொகுதியின் மூன்றாவது கடிதத்தில் "அல்லாஹு த ஆலாவைத் தவிர வேறு எதையும் வணங்கும் நபரை முஷ்ரிக் என்று அழைக்கப்படுகிறது. தன்னை நபியின் அஹ்காம் இஸ்லாமியாவை தழுவிக்கொள்ளாத நபர் ஒரு முஷ்ரிக். இன்று உலகில் உள்ள கிறிஸ்தவர்கள் அனைவரும் முஹம்மது அலைஹி சலாமை மறுப்பவர்கள். அவர்களில் பெரும்பாலானோர் முஷ்ரிக், ஏனெனில் அவர்கள் ஈசா 'அலைஹி சலாம்' ஒரு கடவுள் என்று கூறுகிறார்கள். அல்லது அவர் மூன்று கடவுள்களில் ஒருவர். அவர்களில் சிலர், "இயேசு ஒரு மனித உயிரினம் மற்றும் கடவுளின் ஒரு தீர்க்கதரிசி என்று கூறுபவர்கள் "அஹ்ல் அல்-கிதாப்" (புத்தகத்தின் மக்கள்). இவர்கள் அனைவரும் இஸ்லாம் மற்றும் முஸ்லீம்கள் மீது ஒரு விரோத அணுகுமுறையை கொண்டிருக்கிறார்கள். அவர்களது தாக்குதல்கள் ஆங்கிலேயர்களால் நடத்தப்பட்டன.

## பிரிவு ஒன்று

# பகுதி ஏழு

முதல் ரகசியத்தை சுவைத்தபின் இரண்டாவது ரகசியத்தை அறிவதற்கு ஆவலாய் இருந்தேன். ஒரு நாள் செயலாளர் உறுதியளித்த இரண்டாவது ரகசியத்தை விளக்கினார். இஸ்லாத்தை நூற்றாண்டு காலத்துக்குள் முற்றிலு மாக அழிப்பதற்கு பதினான்கு விடயங்களைகொண்ட ஐம்பது பக்கத்திட்டம் அமைச்சில் பணியாற்றும் உயர் அதிகாரிகளுக்காக தயாரிக்கப்பட்டது. இந்த திட்டத்தை முஸ்லிம்கள் பெற்றுக்கொள்ளலாம் என்ற பயத்தில் நெருக்கமாக பாதுகாக்கப் பட்டது. திட்டத்தின் விடயங்கள் பின்வருமாறு:

1- நாம் ரஷ்ய Tசார் உடன் நன்கு நிறுவப்பட்ட கூட்டணியை பரஸ்பர உதவி ஒப்பந்தம் மூலம் உருவாக்கி புகாரா, தஜிகிஸ்தான், ஆர்மீனியா, கோரசன் மற்றும் அதன் சுற்றுப்புறம் மீது படையெடுக்க வேண்டும். மீண்டும், ரஷ்யாவின் எல்லையில் உள்ள துருக்கிய நிலங்களை ஆக்கிரமிப்பதற்கு ரஷ்யர்களுடன் ஒரு நல்ல ஒப்பந்தம் செய்யப்பட வேண்டும்.

2- இஸ்லாமிய உலகத்தை உள்ளேயும் வெளியேயும் இடிப்பதற்கு நாங்கள் பிரான்ஸ் மற்றும் ரஷ்யாவுடன் ஒத்துழைப்பை ஏற்படுத்த வேண்டும்

3- துருக்கி மற்றும் ஈரானிய அரசாங்கங்களுக்கு இடையே மிகவும் தீவிரமான முரண்பாடுகளையும், சர்ச்சைகளையும் தோற்றுவித்து அவர்களுக்கிடையே தேசியவாதம் மற்றும் இனவெறியையும் நாம் விதைக்க வேண்டும். மேலும், அனைத்து முஸ்லீம் பழங்குடியினர், சமூகங்கள் அண்டை நாடுகளுக்கிடையே ஒன்றுக்கொன்று எதிரிகளாக்க வேண்டும். அழிந்து போன அனைத்து மத பிரிவுகளும் உயிர்ப்பித்து அவைகளை ஒருவருக்கொருவர் எதிராக தூண்டவேண்டும்.

4- முஸ்லீம் நாடுகளின் பகுதிகள் முஸ்லிம் அல்லாதவர்களுக்கு ஒப்படை க்கப்பட வேண்டும். உதாரணமாக, மதீனா யூதர்களுக்கு கொடுக்கப்பட வேண்டும், அலெக்ஸாண்ட்ரியா கிறிஸ்தவர்களுக்கும், இமாரா (பலஸ்தீன்) சாய்பா (சேபியன்ஸ் – பழங்காலத்திலிருந்தெ அவர்கள் எந்த மதத்தையும் பின்பற்றாத மக்களுக்கும் (அவர்கள் குர்ஆன்அல்-கரீமில் குறிப்பிடப் பட்டுள்ளார்கள்), கெர்மன்ஷா அலியை தெய்வீகப்படுத்திய நுசைரிய பிரிவினருக்கும், மொசூலை யசிதுகளுக்கும், ஈரானிய வளைகுடா இந்துக் களுக்கும், திரிப்போலி த்ரூஸிகளுக்கும், கார்ஸ் ஆர்மேனியர்களுக்கும் அலவிஸ்களுக்கும், மற்றும் மஸ்கத் காரிஜி குழுவிற்கும் கொடுக்கப்பட வேண்டும். அடுத்த கட்டமாக அவர்கள் ஒவ்வொருவரும் இஸ்லாத்தின் உடலில் ஒரு முள்ளாக இருக்கும் வகையில் இந்த குழுக்களுக்கு

எங்களுக்கு அறிவிக்கப்பட்டது, சமீபத்தில்1992/1412 கிறிஸ்தவர்கள் பத்து கேள்விகளை எழுப்பினர். அவற்றை முஸ்லிம் நாடுகளில் விநியோகித்தனர். பங்களாதேஷில் இஸ்லாமிய அறிஞர்கள், இந்தக் கேள்விகளுக்கான பதில்களைத் தயாரித்து கிறிஸ்தவ பாதிரியார்களை அவமானப்படுத்தியது. இஸ்தான்புல்லில் உள்ள **ஹக்கிகத்** வெளியீட்டாளர்கள், இந்த பதில்களை உலகம் முழுவதும் அல் **அகாசிப்-உல்-ஜதீ தத்துல்- ஹிரிஸ்தியானிய்ய** என்ற தலைப்பில் **சிராத்தல் முஸ்தகீம்** என்ற புத்தகத்தை விநியோகிக்கிறார்கள்.

ஆயுதங்கள் வழங்குவது. இஸ்லாம் சரிந்து அழிந்து விடும் வரை அவர்களின் பகுதிகள் விரிவுபடுத்தப்பட வேண்டும்.

5- முஸ்லிம்களைப் பிரிப்பதற்கு ஒரு அட்டவணை திட்டமிடப்பட வேண்டும். ஒட்டோமான் மாநிலங்கள் முடிந்தவரை சிறிய உள்ளூர் மாநிலங்களாக எப்போதும் ஒருவருக்கொருவர் முரண்பாடுகளுடன் இருக்குமாறு பிரிக்க வேண்டும் . இதற்கு இன்றைய உதாரணம் இந்தியா. பின்வரும் கோட்பாடு பொதுவானது: "பிரித்து வெல்ல வேண்டும்."

6- ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட மதங்களின் பிரிவுகளை சேர்ப்பதன் மூலம் இஸ்லாத்தின் சாராம்சத்தை கலப்படமாக்குவது. நாம் கண்டு பிடிக்க இருக்கும் மதம் யாருக்கு மத்தியில் நாம் அவற்றை பரப்ப போகிறோமோ அந்த மக்களின் உணர்ச்சிகரமான சுவை மற்றும் அபிலாஷைகளுடன் இணக்கமாக இருக்குமாறு அவ்வளவு நுட்பமான முறையில் உருவாக்க வேண்டும். நாங்கள் ஷீயாக்களின் நாடுகளின் மத்தியில் நான்கு வெவ்வேறு மதங்கள் கண்டுபிடிப்போம்:1- ஒருமதம் ஹஸ்ரத் ஹுசைனை தெய்வீகப்படுத்தும்; 2- ஜாஃபர் சாதிக்கை தெய்வீகப்படுத்தும்; 3- மஹ்தியை தெய்வீகப்படுத்தும் ஒரு மதம்; 4- அலி ரிஸாவை தெய்வீகப்படுத்தும் ஒரு மதம். முதலாவது கர்பலாவுக்கு ஏற்றது, இரண்டாவது இஸ்ஃபாஹானுக்கு, மூன்றாவது ஒன்று சமர்ராவுக்கு, நான்காவது கொராசனுக்கு. இதற்கிடையில், தற்போதுள்ள நான்கு ஸுன்னி மத்ஹப்களை சீரழித்து நான்கு சுய-நிலை மதங்களாக செய்ய வேண்டும். இதைச் செய்த பிறகு, நாங்கள் நஜ்தில் முற்றிலும் புதிய இஸ்லாமிய பிரிவை நிறுவுவோம், பின்னர் இந்த அனைத்து குழுக்களுக் கிடையில் இரத்தக் களரியைத் தோற்றுவிக்கக்கூடிய பிரிவினையை தூண்டுவோம். நாங்கள் நான்கு மத்ஹபுகளைச் சேர்ந்த புத்தகங்களை அழிப்போம் அதனால் இந்த குழுக்கள் ஒவ்வொன்றும் தாங்கள் மட்டும் ஒரே முஸ்லீம் குழுவாகக் கருதுவார்கள். மற்ற குழுக்களை வழி தவறிய வர்களாக, கொல்லப்பட வேண்டியவர்களாகவும் கருதுவார்கள்.

7- விபச்சாரம், மது பாவனை, மற்றும் சூதாட்டம், போன்ற மாய வலைகள், மற்றும் தீங்கான பழக்கங்கள் முஸ்லிம்கள் மத்தியில் பரப்பப்படும். சம்பந்தப்பட்ட நாடுகளில் வாழும் முஸ்லீம் அல்லாதவர்கள் இதற்குப் பயன்படுத்தப்படுவார்கள். இந்த

இலக்கை அடைவதற்கு மக்களின் மிகப்பெரிய இராணுவம் தேவையாக உள்ளது.

8- தீயவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கும் கல்வி கற்பதற்கும் நாம் எந்த முயற்சியையும் விடக்கூடாது. முஸ்லீம் நாடுகளில் தலைவர்கள் மற்றும் கொடூரமான தளபதிகளை அதிகாரத்தில் அமர்த்தி ஷரியா (மத சட்டங்களுக்கு) கீழ்ப்படிவதை தடைசெய்யும் சட்டங்களை இயற்ற வேண்டும். காமன்வெல்த் அமைச்சகம் செய்யச் சொல்லும் எதையும் செய்யுமளவுக்கு போதுமான அளவு அவர்கள் நமக்கு அடிபணிய வேண்டும். மற்றும் அவர்களை நாம் பயன்படுத்தவும் வேண்டும். முஸ்லிம் நாடுகளில், சட்டங்களை அமுலாக்குவதன் மூலம் அவர்கள் நமது விருப்பங்களை முஸ்லிம்கள் மீது திணிக்க முடியும். ஒரு சமூக வாழ்க்கை முறையை நிறுவி, அதில் ஷரீஆவுக்கு கீழ்ப்படிவது ஒரு குற்ற உணர்வாகவும் வழிபாட்டை பிற்போக்கான செயலாகவும் பார்க்கப்படும் ஒரு சூழளை ஏற்படுத்துவோம். நமது தந்திரத்தினால் முஸ்லிம்களை ஏமாற்றி அவர்களின் தலைவர்களாக முஸ்லீம் அல்லாதவர்களை தேர்ந்தெடுக்க வழி செய்ய வேண்டும். இதைச் செய்வதற்கு சிலவற்றை மறைக்க வேண்டும். எங்கள் முகவர்களை இஸ்லாமிய அதிகாரிகளாக அவர்களை உயர்ந்த நிலைக்கு கொண்டு வந்து நம் விருப்பங்களை[1] நிறைவேற்ற வேண்டும்.

9- அரபு கற்றலை தடுப்பதற்கு உங்களால் முடிந்த அனைத்தையும் செய்வது. பாரசீக, குர்திஷ் மற்றும் புஷ்து போன்ற அரபி தவிர்ந்த பிற மொழிகளை பிரபலப்படுத்துவது. அரபுநாடுகளில் வெளிநாட்டு மொழிகளை உக்குவிப் பது இலக்கிய, சொற்பொழிவை அழிக்க உள்ளூர் பேச்சுவழக்குகளை பிரபலப் படுத்துவது. அரபு, இது குர்ஆன் மற்றும் சுன்னாவின் மொழி.

10- நமது ஆட்களை அரச அதிகாரிகளைச்சுற்றி இருக்க வைப்பது மேலும் அவர்களை படிப்படியாக அதிகாரிகளின் செயலாளர்களாக வேண்டும். அதன் மூலம் எங்களது அமைச்சின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு எளிதாக இருக்கும். இதை எய்வதற்கு அடிமை வியாபரத்தை செய்வது மிக இலகுவான வழி. முதலில் நாம் எமது உளவாளிகளுக்கு போதுமான அளவு பயிற்சி அளிக்க வேண்டும் பின்னர் அடிமைகள் என்ற போர்வையில் நாம் அனுப்ப வேண்டும்.பிறகு நாம் அவர்களை முஸ்லிம் அரசின் நெருங்கிய உறவினர்களுக்கு உதாரணமாக, அவர்களின் குழந்தைகள் அல்லது மனைவிகள்,அல்லது அவர்களால் மதிக்கப்பட்ட விரும்பிய மற்றவர் களுக்கு விற்க வேண்டும். நாங்கள் இந்த அடிமைகளை விற்ற பிறகு, அவர்கள் படிப்படியாக அரச அதிகாரிகளை அணுகுவார்கள். அவர்களின் தாய்மார்களை பராமரிப்பவர்களாக மாறி முஸ்லீம் அரசியல்வாதிகளை ஒரு மணிக்கட்டை சுற்றிக்கொள்ளும் வளையல்போல சுற்றி வளைப்பார் கள்.

11- மிஷனரி பகுதிகள் அகலப்படுத்தப்பட வேண்டும், அதனால் சகல சமூக வகுப்புகள் மற்றும் தொழில்புரிபவர்கள் குறிப்பாக மருத்துவம், பொறியி யல் மற்றும் கணக்காளர்கள் போன்ற தொழில் புரிபவர்கள். அனைவரும் ஊடுருவ வேண்டும். இஸ்லாமிய நாடுகளில் தேவாலயங்கள், பள்ளிகள், மருத்துவமனைகள், நூலகங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் போன்ற பெயர்களில் பிரச்சார, வெளியீடு மையங்களை திறக்க வேண்டும். அவற்றை வெகு தொலைவிற்கு பரப்ப வேண்டும். நாம் மில்லியன் கணக்கான கிறிஸ்தவ புத்தகங்கள் இலவசமாக விநியோகிக்க வேண்டும். இஸ்லாமிய வரலாறுகளுக்கு சமனாக கிறிஸ்தவமத வரலாறு மற்றும் அரசுகளுக்கு இடையேயான சட்டம் வரலாறு என்பவற்றை நாம் வெளியிட வேண்டும். நமது ஒற்றர்களை துறவிகள் மற்றும் கன்னியாஸ்திரிகள் வேடத்திலும் அவர்கள் தங்குமிடமாக தேவாலயங்கள் மற்றும் மடங்களில் இருக்க வேண்டும். அவர்களை நாம் கிறிஸ்தவ இயக்கங்களின் தலைவர்

[1] ஆங்கிலேயர்கள் இந்த முயற்சிகளில் வெற்றி பெற்றனர். அவர்கள் முஸ்தபா ரஷித் பாஷா, அலி பாஷா ஃபுவாட் பாஷா, மற்றும் தலத் பாஷா போன்ற அவர்களின் கொத்து அடிமைகளை அழைத்து வந்தனர். மற்றும் சீரழிந்த ஆர்மீனிய அல்லது யூத குலத்தில் மற்றும் கொத்தடிமைகள் மதம், அப்துல்லா செவ்டெட், மூசா காசிம், ஜியா கோகல்ப் மற்றும் அப்துஹ் போன்றவர்கள் மத அதிகாரிகளாக ஆக்கப்பட்டனர்

களாகப் பயன்படுத்த வேண்டும். இந்த மக்கள் அதே நேரத்தில் இஸ்லாமிய உலகின் இயக்கங்கள் மற்றும் போக்குகள் அனைத்தையும் கண்டுபிடித்து எங்களுக்கு அறிக்கை சமர்பிப்பார்கள். கிறிஸ்தவர்களின் இராணுவத்தை நாம் நிறுவ வேண்டும். அவர்கள் 'பேராசிரியர்', 'விஞ்ஞானி', மற்றும் 'ஆராய்ச்சியாளர்' என பெயர்களில் இருந்து, இஸ்லாமிய வரலாறுகளை சிதைப்பது மட்டுமல்லாமல், முஸ்லிம்களின், நடைமுறைகள், மார்க்க கோட்பாடுகள் பற்றிய அனைத்து உண்மைகளையும் கற்றுக் கொள்வார் கள். பின்னர் அவர்களின் புத்தகங்கள் அனைத்தையும் அழிக்கவும், இஸ்லாமிய போதனைகளை ஒழிக்கவும் முயற்சி செய்ய வேண்டும்.

12- இஸ்லாமிய இளைஞர்களின் மனதை நாம் குழப்ப வேண்டும், சிறுவர்கள் மற்றும் பெண்களும் ஒரே மாதிரியாக, அவர்களின் மனதில் சந்தேகங் களையும் தயக்கத்தையும் எழுப்ப வேண்டும். பாடசாலைகள், புத்தகங்கள், பத்திரிகைகள் விளையாட்டு கழகங்கள், வெளியீடுகள், திரைப்படங்கள், தொலைக்காட்சிகள் மூலம் அவர்களின் இஸ்லாத்தின் தார்மீக விழுமியங்களை அவர்களிடமிருந்து முற்றிலும் அகற்ற வேண்டும். மற்றும் எங்கள் சொந்த முகவர்கள் இந்த வேலைக்கு பயிற்சி பெற்றனர். நாங்கள் யூதர்கள், கிறிஸ்தவ மற்றும் பிற முஸ்லீம் அல்லாத இளைஞர் களுக்கு கல்வி மற்றும் பயிற்சி அளிக்க இரகசிய சமூகங்களை

திறக்க வேண்டும். அவர்களை முஸ்லிம் இளைஞர்களைப் கவர்வதற்கும் ஏமாற்றுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

13- உள்நாட்டுப் போர்கள் மற்றும் கிளர்ச்சிகளை தூண்ட வேண்டும்; முஸ்லிம்கள் எப்போதும் ஒருவருக்கொருவர் போராடிக்கொண்டே இருக்க வேண்டும். முஸ்லிம்களின் ஆற்றல்கள் வீணாக்கப்பட்டு அவர்களின் முன்னேற்றம், ஒற்றுமை அவர்களுக்கு சாத்தியமற்றதாக வேண்டும், அவர்களின் மன உத்வேகம், மற்றும் நிதி ஆதாரங்கள் அழிக்கப்பட வேண்டும். சுறுசுறுப்பான இளைஞர்கள் அகற்றப்பட வேண்டும். அவர்களின் வயதினர்கள் பயங்கரவாதத்திற்கு மற்றும் அராஜகத்துக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

14- அவர்களின் பொருளாதாரம் அனைத்து பகுதிகளிலும் அழிக்கப்பட வேண்டும், அவற்றின் வருமானத்தின் மூலாதாரங்கள் மற்றும் விவசாயப் பகுதிகள் கெட்டுப்போக வேண்டும், அவற்றின் பாசன வசதிகள் கால்வாய்கள் அழிக்கப்பட வேண்டும், மற்றும் ஆறுகள் வறண்டு போக வேண்டும். மக்கள் சலாத் (தொழுகை) நிறைவேற்றுவதை வெறுக்க வேண்டும். தொழில்களில் ஈடுபடுவது குறைய வேண்டும். சோம்பல் முடிந்தவரை பரவலாக செய்யப்பட வேண்டும். சோம்பேறிகளுக்காக விளையாட்டு மைதானங்கள் திறக்கப்படவேண்டும். போதைப்பொருள் மற்றும் மதுபாவனை பொதுவான தாக இருக்க வேண்டும்.

[நாம் மேலே குறிப்பிட்டுள்ள கட்டுரைகள் மிகவும் தெளிவாக வரைபடங்கள், படங்கள் மற்றும் வரைபடங்கள் போன்ற உதவிகளுடன் எக்கப்பட்டுள்ளன.] இந்த பெரிய ஆவணத்தின் நகலை எனக்கு வழங்கிய செயலாளருக்கு நன்றி கூறினேன். லண்டனில் ஒரு மாதம் தங்கிய பிறகு, எனக்கு ஒரு செய்தி வந்தது. முஹம்மது நஜ்தியை மீண்டும் பார்க்க ஈராக் செல்ல அமைச்சகம் எனக்கு உத்தரவிட்டது. நான் எனது பணிக்கு புறப்பட்டுச் சென்றபோது, செயலாளர் என்னிடம் கூறினார், " முஹம்மது நஜ்தி பற்றி ஒருபோதும் அலட்சியமாக இருக்காதீர்கள்! இதுவரை எங்கள் உளவாளிகள் அனுப்பிய அறிக்கைகளில் இருந்து புரிந்தது, நஜ்தின் முஹம்மது ஒரு சாதாரண முட்டாள் எங்கள் நோக்கங்களை அடைவதற்கு பொருத்தமானவன்.

"முஹம்மது நஜ்தியுடன் வெளிப்படையாக பேசுங்கள். எங்கள் முகவர்கள் அவருடன் வெளிப்படையாக இஸ்ஃபஹானில் பேசினார்கள், மேலும் அவர் எங்கள் விருப்பங்களை ஏற்றுக்கொண்டார். அவர் விதித்த நிபந்தனைகள்: அரசியல்வாதிகளிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள போதுமான அளவு சொத்துக்கள் மற்றும் ஆயுதங்கள் அவர் கொடுக்கப்படுவார். அவரது யோசனைகள் மற்றும் கருத்துக்களை அறிவிக்கின்ற போது இஸ்லாமிய அறிஞர்கள் நிச்சயமாக அவரைத் தாக்குவார்கள். அவரது நாட்டில், ஒரு சமஸ்தானம் நிறுவப்படும், அது

சிறியதாக இருந்தாலும் சரி. அமைச்சகம் இந்த விதிமுறைகளை ஏற்றுக் கொண்டது. இந்தச் செய்தியைக் கேட்டபோது நான் மகிழ்ச்சியிலிருந்து பறப்பது போல் உணர்ந்தேன். இது குறித்து நான் என்ன செய்ய வேண்டும் என்று செயலாளரிடம் கேட்டேன். அவரது பதில், "அமைச்சகம் ஒரு நுட்பமான திட்டத்தை வகுத்துள்ளது. முஹம்மது நஜ்தி பின்வருமாறு செயல்படுத்த வேண்டும்:

"1- அவர் அனைத்து முஸ்லிம்களையும் அவிசுவாசிகளாக (காபிர்களாக) அறிவிக்க வேண்டும் அவர்களைக் கொல்வது, அவர்களின் சொத்துக் களைக் கைப்பற்றுவது, அவர்களின் கற்பு மீறல் ஆகியன ஹலால் ஆகும், அவர்களின் ஆண்களை அடிமைகளாகவும் அவர்களின் பெண்களை மறுமனையாளி களாக்கவும் மற்றும் அடிமை சந்தைகளில் அவர்களை விற்கவும்.
"2- கஃபா ஒரு சிலை என்று அவர் கூற வேண்டும், எனவே ஹஜ் வழிபாட்டை நீக்குவதற்காக அது அவசியம் இடிக்கப்பட வேண்டும்.[1], அவர் அதை பழங்குடியினரை கொண்டு தூண்டி விடுவதற்காக முஸ்லீம் யாத்ரீகர் களின் குழுக்களை தாக்குவதுடன் அவர்களின் உடமைகள் கொள்ளை யடித்து அவர்களை கொல்ல வேண்டும்."
"3- அவர் முஸ்லிம்களை கலிபாவுக்கு கீழ்ப்படிவதைத் தடுக்க முயல வேண்டும். அவர்களை கலிபாவுக்கு எதிராக கிளர்ச்சி செய்யவும் அவர் அவர்களைத் தூண்ட வேண்டும். இந்த நோக்கத்திற்காக படைகளை தயார் செய்யவேண்டும். அவர் ஹிஜாசிலுள்ள (சவுதி அரேபியாவின் மேற்கில் உள்ள பகுதி) முக்கியஸ்தர்களுக்கு எதிராக போராடுவது அவசியம் என்ற நம்பிக்கையை பரப்புவதற்கும் அவர்களின் மீது அவமரியாதை ஏற்படுத்து வதற்கும் ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்."
"4- முஸ்லிம் நாடுகளில் உள்ள சியாரம்கள், குப்பாக்கள் மற்றும் புனித இடங்கள் சிலைகள் மற்றும் பலதெய்வ சமூக சூழல்கள் என்று அவர் குற்றம்சாட்டி, எனவே இடிக்கப்பட வேண்டும் என்று அவர் கூறவேண்டும்.

______________________________

[1] நபர்கள், சிலைகள், (அல்லது சின்னங்கள்) வழிபட்டனர், சுஜூது செய்தனர். ஒருவரின் விருப்பத்தை வழங்கும் ஒரே அதிகாரம் என அழைக்கப்படும் 'சிலைகள்'. முஸ்லீம்கள் கஅபாவை வணங்குவதில்லை. கஅபாவை முன்னோக்கி, அவர்கள் அல்லாஹுத் தலாவை வணங்குகிறார்கள். சலாத்தின் ஒவ்வொரு பிரார்த்தனையிலும், அவர்கள் சூரா பாத்திஹாவைஓதுகிறார்கள். இந்த சூராவில் கூறப்பட்டுள்ளது, "ஓ நீ, தனித்துவமான [ஒரே ஒரு] ஆலம்களின் ரப் (பிரபஞ்சம்)! உன்னையே வணங்குகிறோம். உன்னிடமே , நாங்கள் எல்லாவற்றையும் கேட்கிறோம்."

அவர் முஹம்மது நபி, அவரது கலீபாக்கள் மற்றும் மத்ஹப்களின் முக்கிய அறிஞர்கள் அனைவரையும் அவமதிக்கும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்த வேண்டும்."

"5- முஸ்லீம் நாடுகளில் அடக்குமுறை மற்றும் அராஜகம் கிளர்ச்சிகளை ஊக்குவிக்க அவர் தன்னால் முடிந்த அனைத்தையும் செய்ய வேண்டும்."

"6- அவர் குர்ஆனின் நகலை, ஹதீஸ்களை செய்தது போலவே சேர்த்தல் மற்றும் நீக்குதல், மற்றும், இடைசெருகலுடன் பிரசுரிக்க அவர் முயற்சி செய்ய வேண்டும்."[1]

இந்த ஆறு பந்தி திட்டத்தை விளக்கிய பிறகு, செயலாளர் மேலும், "இந்த பெரிய திட்டத்தில் பயப்படவேண்டாம். இஸ்லாத்தை அழிப்பதற்கான விதைகள் விதைப்பதே நமது கடமை. இந்த வேலையை முடிப்பதற்கு தலை முறைகள் வரும். பிரிட்டிஷ் அரசாங்கம் ஒரு பழக்கத்தை உருவாக்கியுள்ளது பொறுமையாக இருப்பது மற்றும் படிப்படியாக முன்னேறுவது. பெரும் திகைப்பூட்டும் இஸ்லாமிய புரட்சிசெய்த தீர்க்கதரிசி முஹம்மது, ஒரு மனிதர் அல்லவா?. இந்த முஹம்மது நஜ்தி எங்களது இந்த புரட்சியை அவரது தீர்க்கதரிசிபோன்று நிறைவேற்றுவதாக உறுதியளித்துள்ளார்."

சில நாட்களுக்குப் பிறகு, நான் அமைச்சரிடம் செயலாளர், எனது குடும்பத் தினர் மற்றும் நண்பர்களிடம் விடைபெற்று அனுமதி வாங்கி, பஸ்ராவுக்கு புறப்பட்டேன். நான் வீட்டை விட்டு வெளியேறும்போது, என் சிறிய மகன், "அப்பா விரைவில் வாருங்கள்!" என் கண்கள் ஈரமாகின. என் துயரத்தை என் மனைவியிடமிருந்து என்னால் மறைக்க முடியவில்லை. சோர்வான பயணத்திற்குப் பிறகு நான் இரவில் பஸ்ராவுக்கு வந்தேன். நான் அப்துர் ரிசாவின் வீடு சென்று அவரை எழுப்பினேன். அவர் அவர் என்னை பார்த்த போது மிகவும் மகிழ்ச்சியடைந்தார். அவர் எனக்கு அன்பான விருந்தை வழங்கினார். நான் இரவை அங்கு கழித்தேன். அங்கு மறுநாள் காலையில் அவர் என்னிடம், "முஹம்மது நஜ்தி என்னை அழைத்து, இந்த கடிதத்தை உங்களுக்காக விட்டுவிட்டு, கிளம்பினார். நான் கடிதத்தைத் திறந்தேன். அவர் தனது நாட்டிற்கு, நஜ்த், புறப்படுவதாக எழுதினார், , மற்றும் அவரது அங்கு முகவரியை கொடுத்தார். நானும் உடனே அங்கு செல்ல கிளம்பினேன். மிகவும் கடினமான பயணத்தின் பிறகு நான் அங்கு சென்றேன். நான் முஹம்மது நஜ்தியை அவர் வீட்டில் கண்டேன். அவர் நிறைய எடையை இழந்திருந்தார். நான் இது குறித்து அவரிடம் எதுவும் சொல்லவில்லை. அதன் பிறகு, அவர் திருமணம் செய்து விட்டார் என்று நான் அறிந்தேன் அவர் நான் அவரது அடிமை என்றும், அவர் என்னை அனுப்பிய சில இடங்களிலிருந்து திரும்பி வந்தேன் என்றும், மற்றவர்களுக்கு சொல்ல வேண்டும் என்று எங்களுக்கு இடையே முடிவு செய்தோம். அவர் அப்படியே செய்தார்.

[1] நன்கு அறியப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட ஹதீஸ் புத்தகங்களில் உள்ள ஹதீஸ் ஷெரீஃப்களில் நீக்குதல் மற்றும் இடைச் செருகல்கள் உள்ளன என்று கூறுவது மிகவும் கடுமையான அவதூறாகும். ஆயிரக்கணக்கான ஹதீஸ்களைக் கற்றுக்கொண்ட ஒரு நபர், ஹதீஸ் ஷெரீஃப்களைத் தொகுத்த

அறிஞர்கள் அத்தகைய அருவருப்பான பொய்யை ஒருபோதும் சொல்ல முடியாது. அல்லது இந்த வகையான பொய்களை அவர் நம்பவும் மாட்டார்.

நான் முஹம்மது நஜ்தியுடன் இரண்டு ஆண்டுகள் தங்கினேன். நாங்கள் அவரது அழைப்பை அறிவிக்க திட்டம் ஒன்று செய்தோம். இறுதியில் நான் அவருடைய தீர்மானத்தை 1730/1143 இல் உருவாக்கினேன். அவர் தன்னைச் சுற்றியுள்ள ஆதரவாளர்களை சேகரித்தத்துடன் நெருங்கி இருந்தவர்களுக்கு இரகசியமாக அறிக்கைகளை வழங்குவதன் மூலம் அவரது அழைப்பை வெளிப்படுத்தினார். பின்னர், நாளுக்கு நாள், அவர் தனது அழைப்பை விரிவு படுத்தினார். நான் அவரது எதிரிகளிடமிருந்து அவரைப் பாதுகாப்பதற்காக அவரைச் சுற்றி காவலர்களை வைத்தேன். நான் அவர்கள் விரும்பும் அளவுக்கு சொத்து மற்றும் பணத்தைக் கொடுத்தேன். முஹம்மது நஜ்தியின் எதிரிகள் அவரை தாக்க விரும்பும்போதெல்லாம், நான் அவர்களை சமாளித்து ஊக்க மளித்து மனம் மகிழ்ந்தேன். அவரது அழைப்பு பரவலாக பரவியதால், அவருக்கு எதிர்ப்புகள் அதிகரித்தது. அவ்வப்போது அவர் தனது அழைப்பை கைவிட முயன்றார், குறிப்பாக அவர் மீது அதிகமாக தாக்குதல்கள் நடத்தப்பட்ட போது, ஆனாலும் நான் அவரை தனியாக விட்டு விலகவில்லை, எப்போதும் அவரை ஊக்குவித்தேன். நான் அவரிடம், "ஒ முஹம்மது, நபி உங்களை விட அதிக துன்புறுத்தலை அனுபவித்தார். உங்களுக்கு தெரியும், இது மரியாதைக்குரிய வழி. மற்றய புரட்சியாளர்களை போலவே, நீங்கள் சிரமங்களை சகிக்க வேண்டும்!. எதிரிகளின் தாக்குதல் எந்த நேரத்திலும் இருக்கலாம். அதனால் நான் அவரது எதிரிகள் மீது உளவாளிகளை வேலைக்கு அமர்த்தினேன். அவரது எதிரிகள் அவருக்கு தீங்கு விளைவிக்கும் போதெல்லாம், உளவாளிகள் என்னிடம் புகாரளிப்பார்கள். அதனால் நான் அவர்களின் தீங்கை தடுப்பேன். ஒருமுறை எதிரிகள் அவரைக் கொல்ல திட்டமிடுகிறார்கள் என்று எனக்குத் தெரிவிக்கப்பட்டது. நான் உடனடியாக அவர்களின் ஏற்பாடுகளை முறியடிக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்தேன். முஹம்மது நஜ்தியை சுற்றி இருந்த மக்கள் அவர்களின் எதிரிகளின் சதியை கேட்டபோது, அவர்கள் மேலும் மேலும் வெறுக்கத் தொடங்கினர். அவர்கள் வைத்த வலையில் அவர்களே விழுந்தனர்.

முஹம்மது நஜ்தி திட்டத்தின் ஆறு விடயங்களையும் செயல்படுத்துவதாக எனக்கு உறுதியளித்தார். எனினும், “தற்போதைக்கு என்னால் அவற்றில் ஓரளவு மட்டுமே செயல்படுத்த முடியும் என்றார். அவருடைய இந்த வார்த்தை யில் அவர் சரியாக இருந்தார். அந்த நேரம் அவரால் அனைத்தையும் நிறைவேற்ற இயலாது. அவர் கஃபாவை இடிப்பது சாத்தியமில்லை என்று விளங்கினார். அதனால் கஃபா ஒரு சிலை என்று அறிவிக்கும் யோசனையை கைவிட்டார். அதற்கு மேலாக, அவர் குர்ஆனின் இடை செருகப்பட்ட நகலை வெளியிட மறுத்தார். இந்தவகையில் அவர் பெரும்பாலும் மக்காவில் உள்ள ஷெரீஃப்களிடமும், இஸ்தான்புல்

அரசிடமும் அச்சப்பட்டார். அவர் என்னிடம் சொன்னார், "நாங்கள் இந்த இரண்டையும் செய்திருந்தால் ஒரு சக்திவாய்ந்த இராணுவத்தால் நாங்கள் தாக்கப்படுவோம். நான் அவரது கூற்றை ஏற்றுக்கொண்டேன். அவர் செய்தது சரிதான், நிலைமைகள் அனைத்தும் சாதகமாக இருக்கவில்லை.

சில வருடங்களுக்குப் பிறகு காமன்வெல்த் அமைச்சகம் டரியாவின் அமீர் முஹம்மது பின் ஸுஊது என்பவரை சம்மதப்படுத்த முடிந்தது. எங்களின் பக்கத்தில் இணைவதற்கு அவர் சம்மதம் தெரிவித்து மற்றும் பரஸ்பர நட்பு மற்றும் இரண்டு முகமதுகளுக்கு இடையில் ஒத்துழைப்பை ஏற்படுத்துவது குறித்து எனக்கு ஒரு தூதர்மூலம் தகவல் அனுப்பினார். முஸ்லிம்களின் இதயங்களை மற்றும் நம்பிக்கையை அடைவதற்காக, நாங்கள் முஹம்மது நஜ்தியை மதரீதியாகவும், மற்றும் முஹம்மது பின் ஸுஊதை அரசியல் ரீதியாகவும் அணுகினோம். மதத்தை அடிப்படையாகக் கொண்ட நாடுகள் நீண்ட காலம் நிலைத்தவை, அதிக சக்தி வாய்ந்தவை, மற்றும் கட்டுப்பாடு உள்ளவை என்பது ஒரு வரலாற்று உண்மை. இதனால் நாங்கள் தொடர்ந்து மேலும் மேலும் சக்திவாய்ந்தவர்களாக மாறினோம். நாங்கள் தரியா நகரத்தை எங்கள் தலைநகராக ஆக்கினோம். நாங்கள் எங்கள் புதிய மதத்திற்கு வஹாபி மதம் என்று பெயரிட்டோம். எங்கள் அமைச்சகம் வஹாபி அரசாங்கத்தை ஆதரித்து ஒரு குறைவான வழியில் வலுவூட்டியது. புதிய அரசு அரபு மொழி மற்றும் பாலைவனப் போரில் பயிற்சி பெற்ற பதினொரு பிரிட்டிஷ் அதிகாரிகளை அடிமைகள் என்ற பெயரில் வாங்கியது. நாங்கள் இந்த அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் எங்கள் திட்டங்களைத் தயாரித்தோம். இரண்டு முஹம்மதுவும் நாங்கள் காட்டிய வழியை பின்பற்றி னார்கள். நாங்கள் அமைச்சிலிருந்து ஏதேனும் உத்தரவுகளைப் பெறாதபோது நாங்கள் எங்கள் சொந்த முடிவுகளை எடுத்தோம். நாங்கள் அனைவரும் பழங்குடியின பெண்களை திருமணம் செய்து கொண்டோம். நாங்கள் ஒரு முஸ்லீம் மனைவியின் மகிழ்ச்சியையும் கணவருக்குரிய பக்தியையும் அனுபவித்தோம். இதனால் நாங்கள் பழங்குடியினருடனான உறவுகள் மூலம் பலம் பெற்றோம். இப்போது எல்லாம் நன்றாக நடக்கிறது. எங்கள் மையப்படுத்தல் ஒவ்வொரு நாளும் மேலும் மேலும் தீவிரமடைந்து வருகிறது. எதிர்பாராத துன்பம் ஒன்று ஏற்பட்டால் தவிர நாங்கள் உண்டாக்கிய பழத்தை நாம் சாப்பிடுவோம். ஏனென்றால் தேவையானதை விதைகளை நாங்கள் விதைத்தோம்..

**எச்சரிக்கை:** இந்த புத்தகத்தை கவனத்துடன் படிக்கும் ஒருவர், இஸ்லாத்தின் பரம எதிரி பிரிட்டிஷார் என்பதை நன்கு உணர்வார்கள். அவர்களால் நிறுவப் பட்டு உதவியளித்து வளர்க்கப்பட்ட வஹாபி பிரிவின் ஆதரவாளர்கள் உலகெங்கிலும் உள்ள ஸுன்னி முஸ்லிம்களை தாக்கி வருகின்றனர். இந்த புத்தகம் வஹாபிபிரிவு இஸ்லாத்தைஅழிக்கும் நோக்கில் பிரிட்டிஷ் முஸ்ரிக்

குகளால் உருவாக்கப்பட்டது என்பதை அத்தாட்சிகளுடன் நிரூபிக்கின்றது. ஒவ்வொரு நாட்டிலும் வழிதவறியவர்கள் வஹாபிசத்தை பரப்புவதற்கு பாடுபடுவதை நாம் கேள்விப்படுகிறோம். ஹம்பரின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றவர்கள் எழுதிய கற்பனை கதைகள் என்று கூறிக்கொள்ளும் மக்கள் கூட இருக்கிறார்கள். ஆனால் அவர்களின் இந்த கூற்றை நிரூபிக்க எந்த ஆதாரத் தையும் அளிக்கவில்லை. வஹாபிச புத்தகங்களைப் படித்து உள்ளுனர்வுடன் அத்தியாவசிய உண்மைகளைக் கற்றுக் கொண்டவர்கள் அவர்களைப் பற்றிய இந்த வாக்குமூலங்கள் உண்மை என்பதை உணர்கின்றனர். வஹாபிகள் இஸ்லாத்தை அழிப்பதற்கு உதவுகிறார்கள். அவர்கள் எவ்வளவு முயற்சி செய்தாலும், அவர்கள் உண்மையான முஸ்லிம்களான அஹ்ல்-சுன்னாவை அழிக்க முடியாது, ஆனால், மாறாக அவர்களே அழிந்து போவார்கள்.

அல்லாஹு தஆலா சூரா இஸ்ராவின் எண்பத்தோராவது ஆயத்தின் மூலம் நல்ல செய்தியை தெரிவிக்கிறான். தோன்றும் மதவெறியர்கள் சரியான வழியில் உள்ள மக்களால் அடித்து அழிக்கப்படுவார்கள்.

### பிரிவு இரண்டு

## இஸ்லாத்துக்கு எதிரான பிரிட்டிஷாரின் பகை

**பிரிட்டிஷ் உளவாளியின் வாக்குமூலங்களின் முதல் பிரிவை படித்தவர்கள் பிரித்தானியர்கள் உலகம் முழுவதும் உள்ள முஸ்லிம்களைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்று விளங்கியிருக்கும். பின்வருபவை, பிரிட்டிஷ் உளவாளிகள் காமன்வெல்த் அமைச்சகத்திடம் இருந்து பெற்ற உத்தரவுகளை உலக முஸ்லிம்கள்மீது எப்படி பயன்படுத்தினர், மற்றும் மிஷனரிகள் என்ன நடவடிக்கைகளை தொடர்கிறார்கள் என்பதை விளக்குகின்றது.**

பிரிட்டிஷார் கர்வம் மற்றும் மூர்க்க புத்தி கொண்டவர்கள். அவர்கள் தங்களுக்கும் தங்கள் சொந்த நாட்டுக்கும் கொடுக்கும் உயர்ந்த மதிப்பு, மற்ற நாடுகளிடமும், அங்குள்ள மனிதர்களிடமும் வரும்போது, அவர்கள் அதற்கு சரி எதிரான வெறுப்பை காட்டுகிறார்கள்.

பிரிட்டிசாரின்படி, பூமியில் மக்களில் மூன்று குழுக்கள் உள்ளனர். முதல் குழு பிரிட்டிஷ், அவர்கள் சுயமாக சித்தரிக்கப்படுகிறார்கள். அல்லாஹ் படைத்த மனிதர்களில் மிகவும் வளர்ந்த மனிதர்கள். இரண்டாவது குழு; வெள்ளை நிற ஐரோப்பியர்கள் மற்றும் அமெரிக்கர்கள். இந்த மக்களும் மரியாதைக்கு தகுதியானவர்கள் என்று ஒப்புக்கொள்கிறார்கள். மூன்றாவது குழு; முதல் இரண்டு குழுக்களில் பிறக்கும் அதிர்ஷ்டம் இல்லாதவர்கள். அவர்கள் மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் இடையிலான உயிரினங்கள். அவர்கள் மரியாதைக்கு உரியவர்கள் அல்லர்; அவர்களுக்கு சுதந்திரம் மற்றும் சுதந்திரமான நாடு போன்ற விஷயங்களுக்கு

தகுதியற்றவர்கள். அவர்கள் மற்றவர்களின் ஆதிக்கத்தின் கீழ், குறிப்பாக பிரிட்டிஷ் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தின் கீழ் வாழ்வதற்காக படைக்கப்பட்டுள்ளனர். மற்றவர்களைப் பற்றி இதுபோன்ற பாரபட்சத்தை வைத்திருக்கும், பிரிட்டிஷார் ஒருபோதும் அவர்களின் காலனிகளில் வசிப்பவர்கள் மத்தியில் வாழ்வதில்லை. அவர்களின் காலனிகள் முழுவதும் கிளப்புகள் ,கசினோக்கள், உணவகங்கள், குளியல் மற்றும் பிரிட்டிஷ் மக்களுக்கு மட்டுமே திறந்திருக்கும் கடைகள் கூட உள்ளன. பூர்வீக மக்களால் இந்த இடங்களில் நுழைய முடியாது. பிரெஞ்சு எழுத்தாளர் மார்செல் பெர்னியோ, புகழ்பெற்றவர். இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் அவர் இந்தியாவிற்கு மேற்கொண்ட பயணங்களை பற்றி, **எனது இந்தியா பணம்** என்ற அவரது அவரது குறிப்புகளில்:

"நான் ஒரு இந்திய அறிஞருடன் சந்திப்பு செய்தேன் அவர் ஐரோப்பாவில் பரவலாக அறியப்பட்டதால், அவருக்கு சில பல்கலைக் கழகங்களின் பேராசிரியர் பதவி வழங்கப்பட்டது: நாங்கள் இந்தியாவில் ஒரு பிரிட்டிஷ் கிளப்பில் சந்திக்க முடிவு செய்தோம். இந்தியர் வந்தபோது, ஆங்கிலேயர்கள் அவரது புகழை அவமதிக்கும் வகையில் அவரை அனுமதிக்கவில்லை. அங்கு என்ன நடக்கின்றது என்று நான் கண்டுபிடித்த பிறகு, இந்தியனை நான் பார்க்க வேண்டும் என்று வலியுறுத்திய பின்னர் தான் இந்தியரை கிளப்பினுள் அனுமதித்தார்கள்.

பிரிட்டிஷார் மற்ற மக்களுக்கு விலங்குகளுக்கு கூட செய்யக்கூடாத கொடுமைகளை செய்தார்கள். அவர்களின் மிகப்பெரிய காலனி இந்தியா, அங்கு அவர்கள் காட்டுமிராண்டி தனமான பல சோகமான கொடுமைகளை பல ஆண்டுகளாக நிகழ்த்தினார்கள்.; இந்த நாட்டின் அமிர்தசரஸ் நகரில் ஒரு மத சடங்கிற்காக ஒன்று கூடிய இந்துக்களின் குழு ஒன்று ஒரு பிரிட்டிஷ் பெண் மிஷனரிக்கு உரிய மரியாதை செலுத்தவில்லை. மிஷனரி பிரிட்டிஷ் ஜெனரல் டையரிடம் புகார் செய்தார். இதன் மீது ஜெனரல் அந்த மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்த உத்தரவிட்டார்.மத சடங்கை செய்து கொண்டிருந்த மக்களில் எழுநூறு பேர் பத்து நிமிடங்களில் கொல்லப்பட்டனர், மேலும் பல ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் காயமடைந்தனர். இதில் திருப்தியடையாத அந்த பிரிட்டிஷ் ஜெனரல் பொது மக்களை மூன்று நாட்களுக்கு விலங்குகள் போல் தங்கள் கைகளிலும் கால்களிலும் நடக்கும் படி கட்டாயப்படுத்தினார். ஒரு முறைப்பாடு சமர்பிக்கப்பட்டு லண்டனுக்கு அறிவிக்கப்பட்டது. அதன் பிறகு அரசு ஒரு விசாரணை நடத்தும்படி ஆணை பிறப்பித்தது.

இந்தியாவுக்கு விசாரணைக்காக அனுப்பப்பட்ட இன்ஸ்பெக்டர் தளபதியிடம் அவர் என்ன காரணத்திற்காக பாதுகாப்பற்ற மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்த தனது வீரர்களுக்கு உத்தரவிட்டார் என்று கேட்டார். அதற்கு ஜெனரல் பதிலளித்தார், "நான் தான் இங்கே

தளபதி. நான் இராணுவத்தைப் பற்றிய முடிவுகளை எடுக்கிறேன். நான் சரி என்று நினைத்ததை கட்டளை யிட்டேன்." மக்கள் முகத்தை கீழ்நோக்கி வலம் வர அவர் உத்தரவிட்டதற்கான காரணம் என்ன என்று இன்ஸ்பெக்டர் கேட்டார். தளபதி பதிலளித்தார்; "இந்தியர்கள் தங்கள் தெய்வங்களுக்கு முன் முகத்தை கீழ்நோக்கி ஊர்ந்து செல்கின்றனர். நான் அவர்களுக்கு ஒரு பிரிட்டிஷ் பெண் இந்து கடவுளைப் போன்று புனிதமானவர் என்பதை அவர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என விரும்பினேன், அவர்கள் அந்த பெண்ணுக்கு உரிய மரியாதை செலுத்த வில்லை என்பதற்காக அவர்கள் அவள் முன்னாலும் ஊர்ந்து செல்ல வேண்டும்". "மக்கள் ஷாப்பிங் மற்றும் பிற விஷயங்களுக்கு வெளியே செல்ல வேண்டும் என்று இன்ஸ்பெக்டர் அவருக்கு நினைவூட்டிய போது, ஜெனரலின் பதில் "இந்த மக்கள் மனிதர்களாக இருந்தால் அவர்கள் தெருக்களில் அவர்களின் முகங்கள் கீழ்நோக்கி ஊர்ந்து செல்ல மாட்டார்கள். அவர்கள் குடியிருப்புகளுடன் பக்கத்து கூரைகள் வீடுகளில் வசிக்கிறார்கள். அவர்கள் மனிதர்களைப் போல தங்கள் கூரையில் நடப்பார்கள்".

இந்த ஜெனரலின் அறிக்கைகள் பிரிட்டிஷ் பத்திரிகைகளால் விளம்பரப் படுத்தப்பட்டன மற்றும் ஜெனரல் ஒரு ஹீரோவாக அறிவிக்கப்பட்டார். [டயர், ரெஜினோல்ட் எட்வர்ட் ஹாரி 1864/1281 இல் பிறந்தார் மற்றும் 1927/1346 இல் லண்டனில் இறந்தார். உலக வரலாறுகள் அவரை" அமிர்தசரஸ் நகரில் பிரிட்டிஷ் அடக்குமுறைக்கு எதிரான கலவரத்தை அடக்கி (ஏப்ரல் 13, 1919) அன்று நகரத்தை இரத்தக் குளமாக மாற்றிய பிரபல பிரிட்டிஷ் ஜெனரல்" என்று குறிப்பிடுகின்றன.

ஆங்கிலேயர்களுக்கு எதிரான பாரிய ஆர்ப்பாட்டங்கள் இந்தியா முழுவதும் நடத்தப்பட்டன, அது பெரியதாக இருக்கும்போது, அவர் பதவியில் இருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்டு ஓய்வு பெற்றார். எனினும், பிரிட்டிஷ் அவரது செயல்கள் பாராட்டுக்கு உரியது என்று ஹவுஸ் ஆஃப் லார்ட்ஸ் முடிவு செய்தது. எனவே அவர் ஆதரிக்கப்பட வேண்டும். இந்த உண்மை, பிரிட்டிஷ் பிரபுக்களும் மற்றவர்களும் மற்ற மக்களை எப்படிப் பார்க்கின்றனர் என்பதை மிகவும் தெளிவுபடுத்துகிறது.]

நிறமுடைய மக்கள் மற்றும் ஆதிவாசி உள்ள நாடுகளில் குடியேறும் பிரிட்டிஷார், வெள்ளை மற்றும் ஐரோப்பிய மக்களுக்கு வேறு நிர்வாக முறையைப் பயன்படுத்துகின்றனர். முதல் குழு சலுகை பெற்றது; அதாவது, அவர்கள் ஓரளவு தன்னாட்சி அதிகாரம் கொண்டவர்கள். இரண்டாவது குழு கொடுமையின் வலிகளுடன் புலம்புகிறது. அவர்களின் காலனிகளின் இந்த இரண்டாவது குழு, அவர்கள் (Dominions) 'ஆதிக்கங்கள்' என்று அழைக்கிறார் கள், அவர்கள் உள்விவகாரங்களில் சுயமாக ஆட்சி செய்யும் மாநிலங்களைக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் வெளிப்புற விஷயங்களில் பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் கீழ்உள்ளனர்.

உதாரணத்துக்கு; இந்த காலனிகள் கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து போன்றவை.

காலனிகள் தொடர்பான விஷயங்கள் இரண்டு அமைச்சுக்களுக்கு ஒதுக்கப் பட்டுள்ளன. அவர்கள் காமன்வெல்த் அமைச்சு, மற்றும் இந்திய அமைச்சு. காமன்வெல்த் அமைச்சு காலனித்துவ துறைக்கு மாநில செயலாளர் தலைமை வகிக்கிறார். இந்த செயலாளருக்கு (அல்லது அமைச்சர்) இரண்டு கவுன்சிலர்கள் மற்றும் நான்கு உதவியாளர்கள் உள்ளனர். ஒன்று பொதுச் சபை உறுப்பினர்களிடமிருந்து கவுன்சிலர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். மற்ற கவுன்சிலரும் உதவியாளர்களும் நிரந்தரமாக அலுவலகத்தில் இருக்கி றார்கள். அதிகார மாற்றத்தால் அவர்கள் தங்கள் அலுவலகத்தை இழக்க மாட்டார்கள். நான்கு உதவியாளர்களில் ஒருவர் கனடா,ஆஸ்திரேலியா மற்றும் சில தீவுகள் தொடர்பான விஷயங்களுக்கு பொறுப்பாக இருப்பார். மற்றொருவர் தென்னாபிரிக்காவுக்கும், மூன்றாமவர் கிழக்கு ஆபிரிக்காவுக் கும் மேற்கு ஆபிரிக்காவுக்கும் நான்காமவர் இந்தியாவுக்கும் பொறுப்பாக இருப்பார்கள்.

இஸ்லாத்திற்கு எதிரான விரோதம், சர்வாதிகாரம், தந்திரம் மற்றும் குழப்பம், போன்ற அசிங்கங்களின் அடிப்படையில் அமைக்கப்பட்ட பிரிட்டிஷ் பேரரசு முன்பு தன்னை "சூரியன் மறையாத" நாடு என்று அழைத்தது. அத்தகைய கனடா, தென்னாப்பிரிக்கா, பிஜி, பசிபிக் தீவுகள், பப்புவா போன்ற நாடுகள் டோங்கா, ஆஸ்திரேலியா, பிரிட்டிஷ் பலுசிஸ்தான், பர்மா, ஏடன், சோமாலி, போர்னியோ, புருனே, சரவாக், இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், மலேசியா, இந்தோனேசியா, ஹாங்காங், சீனாவின் ஒரு பகுதி, சைப்ரஸ், மால்டா, (மற்றும் உள்ளே 1882/1300) எகிப்து, சூடான், நைஜர், நைஜீரியா, கென்யா, உகாண்டா, ஜிம்பாப்வே, சாம்பியா, மலாவி, பஹாமாஸ், கிரெனடா, கயானா (கயானா), போஸ்ட்வானா, காம்பியா, கானா, சியரா லியோன், தான்சானியா, மற்றும் சிங்கப்பூர் பிரிட்டிஷ் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டது. இந்த நாடுகள் அவற்றின் மதங்கள், மொழிகள், மரபுகள், பழக்க வழக்கங்களை இழந்துவிட்டன. அத்துடன், அவற்றின் வளங்கள் மற்றும் ஆதாரங்கள் என்பன ஆங்கிலேயர்களால் சுரண்டப்பட்டன. பத்தொன்பதாம் நூற்றாண்டில் கடைசியில் அவர்களின் படையெடுப்புகளின் முடிவில், உலகின் ஏறக்குறைய பூமியின் நான்கில் ஒரு பகுதியை பிரிட்டிஷ் பேரரசு கைப்பற்றி, பூமியின் மேற்பரப்பின் மக்கள் தொகையில் நான்கில் ஒரு பங்கிற்கு மேல் குடியேற்றியது.

பிரிட்டிஷ் காலனிகளில் இந்தியா மிக முக்கியமான, மிகச்சிறந்த நாடாக இருந்தது. இது இந்தியாவின் மிகப்பெரிய மக்கள் தொகை நன்றாக ஒரு பில்லியன் முன்னூறு மில்லியன் [இன்றைய நிலவரப்படி ஒரு பில்லியன் முந்நூறு மில்லியனுக்கும் மேல்] மற்றும் அதன் முடிவில்லாத இயற்கை செல்வம் பிரிட்டிஷாரின்

உலகளாவிய ஆதிக்கத்துக்குள் வர காரணமானது. முதலாவது உலகப் போரில் மட்டும், இந்தியாவின் மக்கள் தொகையில் ஒன்றரை மில்லியனை போராடும் வீரர்களாகவும் மற்றும் அதன் கருவூலத் தின் ஒரு பில்லியன் ரூபாய் பிரிட்டன் பயன்படுத்தியது. ஒட்டோமான் பேரரசை அடித்து நொறுக்க இந்த சொத்துக்களில் பெரும்பாலானவற்றை அவர்கள் பயன்படுத்தினர். சமாதான காலத்தில், பிரிட்டனுக்கு அவர்களின் தொழில்சாலைகள் தொடர்வதற்கும், அவர்களின் நிதி மற்றும் பொருளாதா ரத்தை தக்கவைத்துக் கொள்வதற்கும் இந்தியா உதவியது. இந்தியா ஒப்பிட முடியாத முக்கியமான காலனியாக இருப்பதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன: முதலில், உலகம் முழுவதிலும் பிரிட்டிஷாரின் சுரண்டலுக்கு மிகப் பெரும் தடையாகக் கருதிய இஸ்லாம் இருந்த நாடு இந்தியா, மற்றும் முஸ்லிம்கள் இந்த நாட்டில் உயர்ந்த நிலையில் இருந்தனர். இரண்டாவது, இந்தியாவின் இயற்கை செல்வம்.

இந்தியாவை தங்கள் ஆதிக்கத்தின்கீழ் வைத்துக் கொள்வதற்காக, இந்தியா வுடன் போக்குவரத்து தொடர்புகள் இருந்த அனைத்து முஸ்லிம் நாடுகளின் மீதும் ஆங்கிலேயர்களால் தாக்குதல் நடத்தப்பட்டது. ஏமாற்று மோசடி வேலைகளினால், மற்றும் குழப்பங்களை தூண்டுவதற்கான வித்துக்களை விதைத்து சகோதரர்கள் ஒருவருக் கொருவர் எதிராக குழப்பங்களை ஏற்படுத்தி இந்த நாடுகளை தங்களின் ஆதிக்கத்தின் கீழ் எடுத்துக் கொண்டனர். மற்றும் அவர்களின் அனைத்து இயற்கை செல்வங்கள் மற்றும் தேசிய வளங்களையும் அவர்களின் நாட்டுக்கு கொண்டு சென்றனர்.

பிரிட்டிஷாரின் இயல்பில் இருந்த உள்ளார்ந்த துரோக கொள்கை அவர்கள் ஒட்டோமான் பேரரசின் இயக்கத்தை உன்னிப்பாக பின்பற்றினர் என்பதை நிரூபிக்கிறது. அவர்களை இந்தியாவுக்கு எந்த உதவியும் செய்வதற்கு சாத்தியமற்ற நிலையில் வைப்பதற்கு அனைத்து வகையான அரசியல் தந்திரங்களையும் பயன்படுத்தி ஒட்டோமான்களை ரஷ்யர்களுடன் மோத விடுவதற்கு ஒரு போரை உருவாக்கினார்கள்.

இந்தியாவின் ஐரோப்பிய முன்னோடிகளாக போர்த்துகீசியர்கள் இருந்தனர். போர்த்துகீசியர்கள் இந்தியாவின் கடலோர மலபார் பகுதியில் உள்ள கல்கத்தா என்ற துறைமுக நகரத்தில் 1498/904,ல் இறங்கி வர்த்தகத்தில் ஈடுபட்டனர் மற்றும் இந்தியாவின் வர்த்தக வணிகத்தை கைப்பற்றினர், சிறிது காலத்தின் பின்னர் அதை அவர்கள் டச்சுக்காரர்களிடம் இழந்தனர். டச்சுக்காரர்களிடம் இருந்து இந்தியாவின் வர்த்தகத்தை பறித்தவர்கள் பிரஞ்சு நாட்டினர். இருப்பினும், இருப்பினும் சிறிது காலத்துக்குள் அவர்கள் ஆங்கிலேயர்களை எதிர்கொண்டனர்.

**அஸ்-சவ்ரத்-உல்-ஹிந்தியா**('**இந்தியப்புரட்சி**') புத்தகத்தில் குறிப்பிட்டவாறு இது இந்தியாவின் சிறந்த இஸ்லாமிய

அறிஞர்களில் ஒருவரான பள்ஹுல் ஹக் கைர்-அபாதி அல்லாமா முஹம்மது பள்ஹுல் ஹக் எழுதியது. அதன் **அல்-யவாகித்-உல்-மிஹ்ரிய்யா** என்ற தலைப்பில் அதன் விவரணத்தில் 1600/1008 ஆண்டு ஆங்கிலேயர்கள் இந்தியாவின் கல்கத்தாவில் வர்த்தக மையங்களை திறக்க அக்பர் ஷாவின் அனுமதியை பெற்றனர். அதே ஆண்டு **கிழக்கிந்திய கம்பனியை** நிறுவுவதற்கு ராணி எலிசபெத் I விதி முறையை அனுமதித்தார். இந்த விதிமுறைக்கு இணங்க, பிரிட்டனில் இராணுவத்தை சேர்ப்பதற்கும் அதன் சொந்த பயன்பாட்டிற்காக அவற்றை ஆயுதம் வழங்குவதற்கும்,அதன் சொந்த கடற்படையை நிறுவுதல் மற்றும் இந்தியாவிற்கு இராணுவ மற்றும் வணிக பயணங்களை ஏற்பாடு செய்வதற்கும் நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது. .

அவர்கள் முதலாவது ஷாஆலம் காலத்தில் (1712/1124 )கல்கத்தாவில் நிலம் வாங்கினார்கள். அவர்களின் நிலத்தைப் பாதுகாத்தல் என்ற போர்வையில் படையினரை அழைத்து வந்தனர். நம்பிக்கையை பொறுத்தவரை அக்பர் ஷா ஒரு ஊழல்நபர். அவர் எல்லா மதங்களையும் சமமாக நடத்தினார். உண்மையில், அறிஞர்களைக் கூட்டினார். அவர் பல்வேறு மதங்களில் இருந்து அனைத்து மதங்களின் கலவையாகும் ஒரு பொதுவான உலகளாவிய மதம் ஒன்றை நிறுவினார். இந்த புதிய மதத்தின் அதிகாரப்பூர்வமான அறிவிப்பு 1582/990ல் செய்தார்., இதற்கு அவர் **தீனில்-இலாஹி**(தெய்வீக மதம்) என்று பெயரிட்டார். அந்த நேரம் முதல் அவர் இறக்கும் வரை, இஸ்லாமிய அறிஞர்களுக்கான மரியாதை இந்தியா முழுவதும் தொடர்ந்து குறைந்து வந்தது. குறிப்பாக அரண்மனையில், மற்றும் அக்பர்ஷாவின் மதத்தை விரும்பிய மக்கள் மிகவும் மதிப்பளிக்கப்பட்டனர். அது அந்த நாட்களில் ஆங்கிலேயர்கள் இந்தியாவில் நுழைந்தனர். 1714/1126 இல் சுல்தான் ஃபர்ரூ சர் ஷாவின் மருத்துவ சிகிச்சை வெற்றிக்கு பதிலாக, இந்தியா முழுவதும் பிரிட்டிஷாருக்கு அவர்கள் விரும்பும் இடத்தில் நிலம் வாங்கும் உரிமை வழங்கப்பட்டது. ஷா ஆலம்II அரியணையை ஏற்ற பிறகு 1760/1174, அவர்கள் தங்கள் ஆதிக்கத்தை வங்காளத்திலிருந்து மத்திய இந்தியா மற்றும் ராஜஸ்தான் வரை நீடித்தனர். அவர்களின் ஏமாற்று வேலைகளையும் குழப்பங்களையும் இந்தியாவில் எல்லா இடங்களிலும் தூண்டினார்கள். இறுதியில் 1803/1218 இல் பிரிட்டிஷார் ஷா ஆலம் IIவை அவர்களின் அதிகாரத்தின் கீழ் முழுமையாக எடுத்துக்கொண்டனர். டெல்லியில் இருந்து அவர்கள் அறிவித்த கட்டளைகள் இப்போது ஷாவின் பெயரில் வெளியிடப் பட்டன. பிரிட்டிஷ் கவர்னர் ஜெனரலின் அதிகாரங்களை ஷா ஆலம் II உடன் சமப்படுத்த அவர்களுக்கு அதிக நேரம் எடுக்கவில்லை. அவர்கள் இஸ்லாமிய இந்திய பேரரசர்களின் பெயர்களை இந்தியாவின் நாணயங்களிலிருந்து நீக்கியது.

1837/1253 இல் பகதீர் ஷா II பேரரசர் ஆனார். பிரிட்டிஷ் அடக்குமுறைகளுக்கு அவரால் நீண்ட நேரம் தாங்க முடியவில்லை.

இராணுவம் மற்றும் மக்களால் ஊக்கப்படுத்தப்பட்ட ஒரு பெரிய ஆங்கிலேயர்களுக்கு எதிரான கிளர்ச்சியை 1857/1274 இல் தொடங்கியது. இதனால், அவரது பெயரைக் கொண்ட பணம் நாணயம் மற்றும் அவர் வீட்டில் அவர் பெயரில் வழங்கப்படும் புனித குத்பாவை (வெள்ளிக்கிழமை தொழுகை) மீளப்பெற்றார். இதற்கு பிரிட்டிஷ் எதிர்வினை மிகவும் கடுமையாக மற்றும் கொடூரமான இருந்தது. டில்லிக்குள் நுழைந்த பிரிட்டிஷ் வீரர்கள் நகரத்தை நாசப்படுத்தினர். வீடுகள் மற்றும் கடைகளை சூறையாடி, கொள்ளையடித்தது, சொத்து மற்றும் பணம் பெயரில் எதைக்கண்டாலும் அவர்கள் கொள்ளையடித்தார்கள். அனைத்து முஸ்லீம்களையும் வாளுக்கு இரையாக்கினார்கள். அவர்கள் இளைஞர்களாக இருந்தாலும் சரி அல்லது வயதானவர், ஆண் அல்லது பெண், வயது வந்தவர் அல்லது குழந்தை வித்தியாசமின்றி கொலை செய்தார்கள். மக்கள் குடிக்க தண்ணீர் கூட கிடைக்காத அளவுக்கு அழிவு பெரியதாக இருந்தது.

இரண்டாம் பகதிர்ஷாவின் தளபதிகளில் ஒருவர், ஜெனரல் பாத்கான், சுல்தானை தனது இராணுவத்தை திரும்பப் பெறும்படி வற்புறுத்தினார். எனினும், மிர்சா இலாஹிபக்ஷ் என்ற மற்றொரு தளபதி, அந்த முயற்சியில் பிரிட்டிஷாரிடம் சேர்ந்து கொண்டு பஹாதிர்ஷா தனது இராணுவத்தை விட்டு சரணடைந்தால் மட்டுமே அவர் குற்றமற்றவர் என்றும் புரட்சிக்கு தலைமை தாங்க நிர்ப்பந்திக்கப்பட்டார் என்றும் பிரிட்டிஷாரை சமாதானப் படுத்த முடியும் மற்றும் பிரிட்டிஷினால் மன்னிக்கப்படும் என்று பஹாதிர் ஷாவை தவறாக வழிநடத்தினார். எனவே பஹதிர் ஷா தனது பின்வாங்கும் இராணுவத்தின் முக்கிய அமைப்பை விட்டு வெளியேறி ஹுமாயூன் ஷாவின் (சியாரம்) சன்னதியில் தஞ்சம் அடைந்தார், அது டெல்லியிலிருந்து பத்து கிலோமீட்டர் தூரத்தில் கலாமுஅல்லா எனும் இடத்தில் உள்ளது.

ரஜப்அலி என்ற துரோகி பேரரசரை ஹட்சன் பாதிரியார் என்ற ஆங்கிலேய னுக்கு காட்டிக்கொடுத்தான். ஹட்சன் என்ற ஒழுக்கக் கேடான மற்றும் விகாரமான பாதிரி பிரிட்டிஷ் இராணுவத்தின் புலனாய்வு அதிகாரியாக பணியாற்றினான். இவன் இருந்த நிலைமையை அப்போதைய இராணுவத் தளபதி ஜெனரல் வில்சனுக்கு அறிவித்தான். ஹட்சன் அவரிடம் கேட்டான். சக்கரவர்த்தியை கைதுசெய்ய உதவுங்கள். வில்சன் அவரிடம் கொடுப்பதற்கு கூலிப்படையினர் இல்லை என்று பதிலளித்தபோது, ஹட்சன் தன்னால் சில நபர்களுடன் சென்று அதை தன்னால் செய்ய முடியும் என்று கூறினான். சக்கரவர்த்தியும் அவரது குடும்பமும் சரணடைந்தால் பாதிப்புக்கு ஆளாக மாட்டார்கள் என்ற உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும். ஜெனரல் வில்சன் ஆரம்பத்தில் இதற்கு மறுத்தார். பின்னர் சம்மதித்தார்.

இந்த ஹட்சன் தன்னுடன் தொண்ணூறு பேரை அழைத்துச் கொண்டு ஹுமாயூன் ஷாவின் அடக்கஸ்தலத்துக்கு சென்று,

பேரரசருக்கு அவரது பிள்ளைகளுக்கும், மனைவிக்கும் எந்தவித தீங்கும் விலைவிக்கமாட்டாது என்று உறுதியளித்தான். பாதிரியின் வாக்குறுதியின் பேரில் பகதிர்ஷா சரணடைந்தார். பேரரசருக்கு இன்னும் சரணடையாத மகன்கள் மற்றும் பேரன் இருந்தார்கள். எனவே அவர்களை கைது செய்ய ஹட்சன் செட் சென்றது. இன்னும் அவர்களிடம் பல காவலர்கள் இருந்தார்கள் என்பதால் அவனால் அவர்களை கைது செய்ய முடியவில்லை. எனவே அவர் ஜெனரல் வில்சன் கொடுத்த அவர்கள் சரணடைந்தால் தீங்கு விளைவிக்கப்பட மாட்டாது என்ற உத்தரவாதத்தை அவர்களிடம் கூறி பல்வேறு தூதர்களை அனுப்பினான். பேரரசரின் இரண்டு மகன்கள் மற்றும் பேரன், வில்லன் ஹட்சனின் உறுதி மொழியை ஏற்றுக்கொண்டு சரண் அடைந்தார்கள். பிரிட்டிஷாருக்கே சொந்தமான விசித்திரமான கொள்கை மற்றும் தந்திரத்தினால் , ஷாவின் இரண்டு மகன்களும் பேரனும் சங்கிலிகளினால் பிணைத்து டெல்லிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

கைகள் கட்டப்பட்ட நிலையில், ஹட்சன் இளம் இளவரசர்களின் உடைகளை அகற்றிவிட்டு அவனே அவர்களின் நெஞ்சில் தோட்டாக்களால் சுட்டு அவர்களை தியாகிகளாக ஆக்கினான். அவர்களின் மார்புகலிலிருந்து அவர்களின் இரத்தத்திலிருந்து குடித்தான். மக்களை மிரட்டவுதற்காக இந்த இளம் தியாகிகளுடைய சடலங்கள் கோட்டை வாயிலில் தொங்கவிடப் பட்டன. அடுத்த நாள் அவர் அவர்களின் தலைகளை பிரிட்டிஷ் கவர்னர் ஜெனரல் ஹென்றி பெர்னார்டுக்கு அனுப்பினான். பிறகு, அவனிடம் ஒரு கிண்ணத்தில் தியாகிகளின் மாமிசத்திலிருந்து சூப் தயாரிக்கப்பட்டு ஷாவுக்கும் அவருடைய மனைவிக்கும் அனுப்பப்பட்டது. அவர்கள் மிகவும் பசியாக இருந்தால் அவர்கள் அவசரமாக சிலவற்றை அவர்களுக்குள் வாய்க்குள் சேர்த்துக் கொண்டனர். அது எந்த வகையான இறைச்சி என்று அவர்களுக்குத் தெரியாது என்றாலும், அவர்களால் அதை மெல்லவோ அல்லது விழுங்கவோ முடியவில்லை. அதை அவர்கள் தரையில் வாந்தி எடுத்து வைத்தனர். ஹட்சன் என்ற வில்லன் என் நீங்கள் அதை சாப்பிட வில்லை இந்த சுவையான சூப்பை நான் உங்கள் மகன்களின் சதையிலிருந்து சமைத்தேன்” என்றான்.

1858/1275 இல் பகதீர் ஷா II பதவி நீக்கம் செய்யப்பட்டார். கலகம் மற்றும் ஐரோப்பியர்களின் படுகொலைக்கு காரணமான குற்றத்திற்காக நீதி விசாரணை நடைபெற்று மார்ச் 29 அன்று, அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு இந்தோ-சீனா [ரங்கூன்]க்கு வெளியேற்றப்பட்டார். இஸ்லாமிய ர்களின் கடைசி சுல்தான் குர்கானி பேரரசர், பஹதிர்ஷா நவம்பர் 1862/1279ல் வரின் நாட்டிலிருந்து வெகு தூரத்தில் ஒரு நிலவறையில் காலமானார். மறுபுறம், அல்லாமா (முஹம்மது) ஃபத்ளூல் ஹக் அந்தமான் தீவில் உள்ள நிலவறையில் ஆங்கிலேயர்களால் 1861/1278ல் ஷஹீதானார்..

ஒட்டோமான்-ரஷ்யப் போரின் போது, 1877/1294 இல், பிரிட்டிஷ், இந்தியாவை பிரிட்டிசில் சார்ந்த நாடாக அறிவித்தது. மோசமான ஸ்காட்ச் மேசோனிக் லாட்ஜ்(இரகசிய ஒற்றர்) இன் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர் மிதாத் பாஷா, ஒட்டோமான் பேரரசை இந்தப் போரில் மூழ்கடிப்பதன் மூலம் இஸ்லாமிய மார்க்கத்திற்கு மிக மோசமான சேதத்தை ஏற்படுத்தினான். அவன் ஆங்கிலேயர்களுக்கு செய்த மற்றொரு உதவி சுல்தான் அப்துல் அஜீஸ் கானை கொன்று அவரை ஷஹீத் ஆக்கினான்.

பிரிட்டிஷ் சிறப்பு முகவர்களுக்கு பயிற்சி அளித்து அவர்களை ஒட்டோமான் அரசாங்கத்தில் உயர் பதவிகளில் நியமிக்கப்பட்டார்கள். இந்த அதிகாரிகள் பெயரளவில் ஒட்டோமான்கள் ஆனால், மனதிலும் பேச்சிலும் ஆங்கிலேயர் கள். முஸ்தபா ரஷித் பாஷா, இவர்களில் மிகவும் இழிவானவன். அவர் கடைசி பிரதம மந்திரியாக ஆறு நாட்கள் மட்டுமே அலுவலகத்தில் இருந்த நிலையில், பிரிடிஷார் 28 அக்டோபர், 1857 அன்று, இந்திய முஸ்லிம்கள் மீது ஏற்படுத்திய டெல்லி படுகொலைக்காக பிரிட்டிஷாரை வாழ்த்தினான். அதற்கு முன்ன தாக, இந்தியாவில் பிரிட்டிஷ் கொடுமைக்கு எதிராக கிளர்ச்சி செய்த முஸ்லிம்களை ஒடுக்க பிரிட்டன் பிரிட்டனிலிருந்து இருந்து வரும் பிரிட்டிஷ் வீரர்களை அனுப்ப எகிப்திய பாதையை பயன்படுத்த ஒட்டோமானிடம் பிரிட்டிஷ் அனுமதி கேட்டது. இதற்கான அனுமதி அவர்களின் ஒற்றர் முகவர்கள் மூலம் வழங்கப்பட்டது.

பிரிட்டிஷார் இந்தியாவில் புதிய பாடசாலைகள் திறப்பதை தடுத்தார்கள். அது மட்டுமல்ல, அவர்கள் அஹ்காம் இஸ்லாமியாவின் அடித்தளங்களாக இருந்த முக்கியமான சின்னங்களாக இருந்த ஆரம்ப பாடசாலைகளையும் அனைத்து மதரஸாக்களையும் மூடினார்கள். அவர்கள் மக்களை வழி நடத்தக்கூடிய மார்க்கத்தின் அதிகாரிகளான அனைத்து அறிஞர்களையும் கொன்று ஷஹீதாக்கினார்கள்.

இந்த கட்டத்தில், இந்தியாவுக்கும், மற்றும் பாகிஸ்தானுக்கும் 1971/1391ல் பிரயாணத்தை மேற்கொண்டு திரும்பிய ஒரு நண்பரின் உண்மையான கதையை கூறுவது பொருத்தமானது என்று நாங்கள் கருதுகிறோம். "அவ்லியாவின் கல்லறைகளைப் பார்வையிட்ட பிறகு, குறிப்பாக, இமாம் ரப்பானி இன்னும் மற்றவர்கள் (கத்தஸல்லாஹு சிர்ரஹு'-அல்லாஹு த'ஆலா தனது மர்மங்களை மறைத்து ஆசீர்வதித்தான்) செர்ஹெண்ட் நகரில், நான் பானிபுட் நகரத்திற்கும், அங்கிருந்து டெல்லிக்கும் சென்றேன். வெள்ளிக்கிழமை ஜும்மா தொழுகைக்கு பானிபுட்டில் உள்ள மிகப்பெரிய மசூதிக்கு சென்றேன். நான் இமாமின் அழைப்பின் பேரில் அவர் வீட்டுக்கு சென்றேன்

வழியில் ஒரு பெரிய கதவு தடித்த வளையங்களுடன் ஒரு சங்கிலியுடன் பூட்டப்பட்டிருப்பதைக் கண்டேன். வாசலில் உள்ள கல்வெட்டு அதை ஆரம்பப் பள்ளியாக இருந்தது என்று சொன்னது.

அது ஏன் பூட்டப்பட்டது என்று நான் இமாமிடம் கேட்டேன். இமாம் கூறினார், 'இது 1947/1367 முதல் மூடப் பட்டுள்ளது. ஆங்கிலேயர்கள் முஸ்லீம்களுக்கு எதிராக இந்துக்களை தூண்டி ஒரு படுகொலையை ஏற்படுத்தியது. அனைத்து முஸ்லிம்கள், பெண்கள், ஆண்கள், குழந்தைகள் மற்றும் முதியவர்கள், அனைவரும் கொல்லப் பட்டனர். அன்று முதல் இந்தப் பள்ளி மூடப்பட்டுள்ளது. இந்த சங்கிலி மற்றும் பூட்டு எங்களுக்கு பிரிட்டிஷ் இளைத்த கொடுமையை நினைவூட்டுகின்றது. நாங்கள் பிறகு இங்கு வந்து குடியேறியவர்கள்".

பிரிட்டிஷ் அனைத்து இஸ்லாமிய அறிஞர்களையும், இஸ்லாமியர்களையும் புத்தகங்கள், மற்றும் இஸ்லாமிய பள்ளிகளையும் ஒழித்தது. அவர்களின் இந்த நடைமுறை எல்லா இஸ்லாமிய நாடுகளுக்கும் நடந்தது. இவ்வாறு அவர்கள் முற்றிலும் அவர்களின் மதம்பற்றி தெரியாத இளம் தலைமுறை யினரை வளர்த்தனர். பிரிட்டனின் மிகவும் இழிவான பிரபு மெக்கோலி, என்பவன் 1834 ல் கல்கத்தாவுக்கு வந்தவுடன், எல்லாவகையான அரபு மற்றும் பாரசீக வெளியீடுகள் தடை செய்தான். மற்றும் அந்த உத்தரவு அச்சிடும் பணியில் இருந்த நூல்களையும் தடை செய்தது. அவரது இந்த அணுகுமுறை பிரிட்டிஷ் சகாக்களிடமிருந்து அவனுக்கு பெரும் பாராட்டைப் பெற்றுக் கொடுத்தது. இந்த ஒடுக்குமுறை முஸ்லீம் பெரும்பான்மை உள்ள இடங்களில் குறிப்பாக, வங்காளத்தில் உறுதியுடன் மேற்கொள்ளப்பட்டது.

ஒருபுறம் இந்தியாவில் இஸ்லாமிய மதரஸாக்களை மூடும் போது, பிரிட்டிஷ் நூற்றி அறுபத்தைந்து கல்லூரிகளைத் திறந்தது, அதில் எட்டு பெண்களுக் கானவை. இந்த கல்லூரிகளில் படித்த மாணவர்கள் மூளைச்சலவை செய்யப் பட்டு, அவர்களின் தந்தையரின் மதத்துக்கும் அவர்களின் முன்னோர்களுக் கும் விரோதிகளாக ஆக்கப்பட்டனர். மேற்கூறிய காட்டுமிராண்டி தனமான கொடுமைகளைச் செய்த பிரிட்டிஷ் இராணுவத்தில் மூன்றில் இரண்டு பங்கினர் மூளைச்சலவை செய்யப்பட்டு கிறிஸ்தவ மதத்திற்கு மாற்றப் பட்டு வாடகைக்கு அமர்த்தப்பட்ட இந்தியாவின் பூர்வீக குடி மக்கள்.

1833/1249ல் இயற்றப்பட்ட சட்டங்கள் இந்தியாவில் மிஷனரி நடவடிக்கை களின் விரிவாக்கத்திற்கும், அங்கு உள்ள புராட்டஸ்டன்ட் அமைப்புக்களை ஒருங்கிணைத்து பலப்படுத்துவதற்கும் உதவியது. மிஷனரி நடவடிக்கைகள் பரவுவதற்கு முன்பு இந்தியா முழுமையாக பிரிட்டிஷ் ஆதிக்கத்தில் இருந்ததால், ஆங்கிலேயர்கள் முஸ்லிம்களின் மத நம்பிக்கைக்கு மதிப்பளிப் பவர்களாக இருந்தனர்; முஸ்லிம்களின் புனித நாட்களைக் கொண்டாட அவர்கள் பீரங்கிகள் சுடப்பட்டன, முஸ்லிம்களுக்கு அவர்களின் மசூதிகள் மற்றும் பிற வழிபாட்டுத் தலங்களை திருத்தி அமைப்பதற்காக, உதவி வழங்கினர் மற்றும் மசூதிகள், பள்ளிகள், அடக்கஸ்தலங்கள் மற்றும் மதரஸாக்கள் தொடர்புடைய புனிதமான அமைப்புகளில் கூட சேவைகளில்

சேர்ந்திருந்தனர். 1833 மற்றும் 1838 இல் பிரிட்டனில் இருந்து வந்த கண்டிப்பான செய்திகள் பிரிட்டிஷாரை இந்த வகையான நடவடிக்கை களிலிருந்து தடை செய்தது.

இந்த உண்மைகள், ஆங்கிலேயர்களின், உலக முஸ்லிம்களை மற்றும் இஸ்லாமிய மதத்தை தாக்குவதற்கு முன்னர், முதலில் நட்பு மற்றும் உதவிகர மானவர்கள் என்ற மாய தோற்றத்தை உருவாக்குபவர்கள் என்பதை தெளிவாகக் காட்டுகிறது. அவர்கள் முஸ்லிம்களை நேசிக்கிறார்கள் மற்றும் இஸ்லாத்திற்கு சேவை செய்கிறார்கள் என்ற நயவஞ்சகமான தோற்றத் தினை வெகுதூரம் பரப்பி, இந்த துணை இலக்கை அடைந்த பின்னர், படிப்படியாக இஸ்லாத்தின் அத்தியாவசியமான, அறிவு நூற்கள், பள்ளிகள் மற்றும் அறிஞர்கள் அழிக்கப்பட்டன. அவர்களின் இந்த இரட்டைமுக கொள்கை முஸ்லிம்களுக்கு மிக மோசமான தீங்கை விளைவித்தது மற்றும் இஸ்லாத்துக்கு அழிவை ஏற்படுத்தியது. பின்னர், அவர்கள் தங்கள் அக்கிரமங்களை அதிகரித்தனர். ஆங்கிலம் அதிகாரப்பூர்வ மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. பூர்வீக மக்களிடமிருந்து கிறிஸ்தவத்துக்கு மாற்ற ப்பட்ட புதிய தலைமுறைகள் வளர்க்கப்பட்டது. இந்த நோக்கத்துக்காக அவர்கள் பாட்சாலைகளை முழுமையாக மிஷனரிகள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தார்கள். உண்மையில், பிரிட்டிஷ் பிரதமர் லார்ட் பால்மர்ஸ்டன் மற்றும் பல பிரிட்டிஷ் பிரபுக்கள் கூறினார்கள் "கடவுள் இந்தியாவை பிரிட்டிஷ்க்கு கொடுத்தார், அதனால் இந்திய மக்கள் கிறிஸ்தவத்தின் ஆசீர்வாதத்தை அனுபவிக்க வேண்டும். "

இரத்தத்தில் இந்தியராகவும், நிறம், எண்ணங்கள், நம்பிக்கை, தார்மீக மதிப்புகளில் பிரிட்டிஷ் சார்பாக இருந்த பிரபு மெக்கோலே தனது அதிக பட்ச ஆற்றலையும் ஆதரவையும் இந்தியாவை ஒரு பிரிட்டிஷ் தேசமாக உருவாக்குவதற்கு செலவிட்டார். எனவே, மிஷனரிகளினால் திறக்கப்பட்ட பள்ளிகளில் ஆங்கில மொழி மற்றும் இலக்கியம் கற்பிப்பதற்கான பாடத் திட்டம் மற்றும் கிறிஸ்தவம் கற்பிப்பதற்கு அதிக முக்கியத்துவத்தையும் மற்றும் நேரத்தையும் ஒதுக்கினர். அறிவியல் அறிவு, கணிதம், விஞ்ஞானம், போன்றவை பாடங்கள் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டது. இவ்வாறு கிறிஸ்தவ பாடசாலைகளுக்கு சென்ற பலருக்கு ஆங்கில மொழியையும் இலக்கியத்தையும் தவிர வேறு எதுவும் தெரியாதவர்களாக இங்கு உற்பத்தி செய்யப்பட்டனர். பின்னர் இவர்கள் சிவில் சர்வீஸில் பணியாற்றினார்கள்.

இஸ்லாமிய சட்டத்தில் ஒரு முஸ்லீம் தனது நம்பிக்கையை கைவிடுவதால் ஒரு முர்த்தத்-விசுவாச துரோகியாக மாறுவான். இந்து மதத்திலிருந்து பிரிந்து விடும் இந்துக்கள் மதமற்றவர்களாக கருதப்படுவார்கள், கிறிஸ்தவத்துக்கு மாற்றப்பட்டவர்கள் பெற்றோரிடமிருந்து சொத்தை பெற முடியவில்லை. இந்த சட்டத்தை அகற்றுவதற்காக, மிஷனரிகள் ஒரு சட்டத்தை கொண்டு வந்தார்கள். இது முதலில் 1832 இல் வங்காளத்தில் இயற்றப்பட்டது, பின்னர் 1850ல்

இந்தியா முழுவதும் பிரகடனப்படுத்தபட்டது. கிறிஸ்தவத்துக்கு மாற்றப்பட்ட பூர்வீக விசுவாச துரோகிகளுக்கு தங்கள் பெற்றோரின் சொத்துகளிலிருந்து பங்குகளை பெறுவதற்கு இது சாத்தியமாக்கியது. இதன் காரணத்தினால், இந்தியர்கள் இந்தியாவில் உள்ள பிரிட்டிஷ் பள்ளிகளை **சற்றனிக் பதிவுகள்** என்று அழைத்தனர். [இந்தியாவிலும் ஒட்டோமான் பேரரசிலும் அதிகாரப்பூர்வ பணியகங்கள் மற்றும் நிறுவனங்கள் டஃப்ட்டர் (பதிவு) என்று அழைக்கப்பட்டன. பிரெஞ்சு எழுத்தாளர் மார்செல் பெர்மியோ 1925/1344 இல் இந்தியாவிற்கு சென்று அவர் திரும்பி வந்தபோது ஒரு புத்தகத்தை வெளியிட்டார். அவர் தனது இந்த புத்தகத்தில், “கல்கத்தா, இந்தியாவின் முதன்மையான நகரம், வறுமையில் வாடும் அளவுக்கு பரிதாபகரமான நிலையில் இருந்தது. பாரிஸ் மற்றும் லண்டனைச் சுற்றியுள்ள வறுமையில் வாடும் பகுதிகளை விட உதாரணம் இல்லாத அளவுக்கு மிகவும் தாழ்ந்த நிலையில் இருந்தது. குடிசைகளில் மக்களும் விலங்குகளும் ஒன்றாக வாழுகின்றார்கள். குழந்தைகள் அழுகிறார்கள், நோய்வாய்ப்பட்டவர்கள் புலம்புகிறார்கள். அவர்களை தவிர ஆல்கஹால் மற்றும் போதைப் பொருட்களின் தொடர்ச்சியான பயன் பாட்டினால் முற்றிலும் உற்சாகமிழந்த, சக்தியிழந்த மக்களைப் பார்க்கிறீர்கள். அவர்களுக்கும் தரையில் பரந்து கிடக்கும் செத்த பிணங்களுக்கும் வேறுபாடு இருக்கவில்லை. மிகுந்த பசியுடன், துன்பகரமான, பலவீனமான மற்றும் சோர்வடைந்த மக்கள் இருப்பதைப் பார்த்து, பூமியில் இந்த மக்கள் என்னதான் செய்ய முடியும் என்று ஒருவர் கேட்காமல் இருக்க முடியாது.

"மக்கள் கூட்டங்கள் தொழிற்சாலைகளை நோக்கி செல்கின்றார்கள், இந்த தொழிற்சாலைகள் இவர்களுக்கு இலாபத்தின் என்ன பகுதியை கொடுக் கின்றது? மறுபக்கம் தேவைகள், சிரமங்கள், தொற்று நோய்கள், மது மற்றும் மருந்துகள் ஏற்கனவே சக்தியிழந்த, பாதுகாப்பற்ற மக்களை அழிக்கின்றது. பூமியில், மனித வாழ்க்கை இங்கே இருப்பது போன்று வெட்கமில்லாத அலட்சியத்துடன் கவனிப்பார் அற்று வேறு எந்த இடத்திலும் வேறு எங்கும் நடத்தப்படவில்லை. வேலை இல்லை, எந்த உழைப்பும் இங்கே கடினமாக அல்லது ஆரோக்கியமற்றதாக கருதப்படவில்லை. ஒரு தொழிலாளி இறந்தால் அது பிரச்சனையல்ல. அவருடைய இடத்தை இன்னொருவர் பிடிப்பார். ஆங்கிலேயர்களுக்கு ஒரே கவலை உற்பத்தி விகிதங்களை எப்படி அதிகரி ப்பது, மற்றும் எப்படி மேலும் பணத்தை அதிகம் சம்பாதிப்பது என்பதுதான். "

வில்லியம்ஸ் ஜென்னிங்ஸ் பிரையன், முன்னாள் அமெரிக்க வெளியுறவு செயலாளர், பிரிட்டிஷ் அரசாங்கம் ரஷ்யாவை விட மிகவும் கொடுமை யானது மற்றும் கீழ்த்தரமானது என்பதை அவர் தனது **இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி** என்ற புத்தகத்தில் ஆதாரங்களுடன் உறுதிப்படுத்தினார். அந்த நூலில் அவர் கூறும்

அறிக்கைகளை பின்வருமாறு உரைக்கலாம்: "பிரிட்டிஷார், இந்திய மக்கள் வாழ்கையில் நலன் மற்றும் மகிழ்ச்சியை வழங்கியதாக கூறுகின்றனர், ஆனால், கோடிக்கணக்கான இந்தியர்களை தங்கள் கல்லறைகளுக்கு அனுப்பினர். இந்த தேசம் (பிரிட்டிஷ்), அவர்கள் சட்ட நீதிமன்றங்களையும் மற்றும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் சக்திகளை நிறுவியதாக எல்லா இடங்களிலும் பெருமை பேசுகிறார்கள். அவர்கள் அரசியல் மூலம் இந்தியாவை அதன் அடிமட்ட நிலைவறை வரை கொள்ளை அடித்தது. 'கொள்ளை' என்பது மிகவும் கேவலமான வார்த்தையாக இருக்கலாம், ஆனால் வேறு எந்த வார்த்தையும் பிரிட்டிஷின் கொடூரத்தை இன்னும் தெளிவாகச் சித்தரிக்க முடியாது.

"பிரிட்டிஷ் மக்களின் மனசாட்சி என்று கூறிக்கொள்ளும் கிறிஸ்தவர்கள், இந்திய முஸ்லிம்களின் உதவிக்கான அழைப்பை கேட்க தயாராக இல்லை."

மிஸ்டர் ஹோட்பர்ட் கியோம்ப்டூன் தனது **இந்தியரின் வாழ்க்கை** என்ற புத்தகத்தில் கூறுகிறார், "இந்தியர்கள் தனது எஜமானரால் (பிரிட்டிஷ்) துன்புறுத்த படுகிறார்கள், அவர் அவர் தன்னிடம் உள்ள அனைத்தையும் இழந்தாலும், இறக்கின்ற வரை, அவர் தொடர்ந்து பணியாற்றுகிறார். "மற்ற பிரிட்டிஷ் காலனிகளில் வேலை செய்த இந்திய முஸ்லீம் தொழிலாளர்கள் இன்னும் மோசமான சூழ்நிலையில் இருந்தனர். 1834 இல் பிரிட்டிஷ் தொழிலதிபர்கள் ஆப்பிரிக்க பூர்வீகவாசிகள் பதிலாக இந்திய தொழிலாளர் களை வேலைக்கு அமர்த்தினர். ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் இந்தியாவி லிருந்து தென்னாபிரிக்க காலனிவரை கொண்டு செல்லப்பட்டனர். இந்த தொழிலாளர்கள் கூலியாட்கள் என்று அழைக்கப்பட்டனர். அடிமைகளை விட மோசமாகநடத்தப்பட்டனர். அவர்கள் 'ஒப்பந்தம் செய்யப்பட்ட தொழிலாளர்' எனப்படும் ஒப்பந்தத்தினால் பிணைக்கப்பட்டிருந்தனர். இதற்கிணங்க ஒப்பந்தம், கூலி ஐந்து ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் செய்யப் படும். இந்த காலத்துக்குள் அவரால் வேலையை விட்டுவிடவோ அல்லது திருமணம் செய்யவோ முடியவில்லை. அவர் தொடர்ச்சியான சவுக்கடியில் இரவும் பகலும் வேலை செய்ய நிப்பந்திக்கப்பட்டனர். இதற்கு மேலதிகமாக,, அவர்களுக்கு ஆண்டுதோறும் மூன்று பிரிட்டிஷ் தங்க நாணயங்கள் வரி விதிக்கப்பட்டது. "இந்த உண்மைகள் **இந்தியாவில் தொழிலாளர், நியூயார்க் பல்கலைக்கழகத்தில் பிந்தைய-விரிவுரையாளர்"** எனும் பிரசுரங்கள் மூலம் உலகெங்கிலும் அறிவிக்கப்பட்டது.

பரவலாக அறியப்பட்ட இந்திய ஆட்சியாளரான காந்தி தனது கல்வியை பிரிட்டனில் பெற்றார் பின்னர் இந்தியா திரும்பினார். அவர் ஒரு கிறிஸ்தவ மதத்துக்கு மாற்றப்பட்ட இந்தியரின் மகன். உண்மையில், அவரது தந்தை போர்பந்தர் பேராயர் ஆவார். 1893/1311 இல் அவர் இந்தியாவில் ஒரு பிரிட்டிஷ் நிறுவனத்தால் தென்னாப்பிரிக்காவுக்கு அனுப்பப்பட்டார். அவர், இந்தியர்கள் அங்கு

காட்டுமிராண்டித்தனமான அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டு வேலை செய்வதற்கு அமர்த்தப்பட்டுள்ளனர் என்பதை கண்டு, அவர் ஆங்கிலேயர்களுக்கு எதிராக ஒரு போராட்டத்தை நடத்தினார். அவர் ஆங்கிலேயர்களால் கிறித்துவமயமாக்கப்பட்டு வளர்க்கப்பட்ட ஒரு நபரின் மகன் என்றாலும் கூட, அவரால் பிரிட்டிஷ் கொடுமைகளையும் காட்டு மிராண்டி தனத்தையும் பார்த்துக்கொண்டிருக்க முடியவில்லை. இந்த இயக்கம் பின்னர் அவர் புகழ் பெற்றுகொள்வதற்கு அவரது முதல் படியாக அமைந்தது.

ஆங்கிலேயர்கள் முஸ்லீம்களுக்கெதிராக உலகம் முழுவதும் பின்பற்றிய கொள்கை அடிப்படையில் இந்த மூன்று வார்த்தை கொண்ட கோசம் ஆகும் : "அவர்களின் நம்பிக்கையை உடைத்துவிடு,ஆதிக்கம் செலுத்து, அழித்துவிடு." கொள்கை எதுவாக இருந்தாலும் இதன் அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்ய அவர்கள் தயங்கவில்லை. இந்தியாவில் அவர்கள் செய்த முதல் காரியம் அவர்களுக்கு சேவை செய்யும் மக்களைக் கண்டுபிடிப்பதாகும். இந்த நபர்களைப் பயன்படுத்தி, அவர்கள் மெதுவாக தீங்கு செய்தல் எனும் நெருப்பை பற்ற வைத்தனர். இந்த நோக்கத்திற்காக மிகவும் பொருத்த மானவர்கள் முஸ்லிம்களின் ஆதிக்கத்தின் கீழ் வாழ்ந்த இந்துக்கள்; அதனால் ஆங்கிலேயர்கள் அவர்களை பயன்படுத்தினர். இந்துக்கள் முஸ்லிம்களின் நீதியான ஆட்சியின் கீழ் அமைதியான வாழ்க்கையை நடத்தி வந்தனர். ஆங்கிலேயர்கள் அவர்களை படிப்படியாக அணுகி இந்தியாவின் உண்மை யான உரிமையாளர்கள் இந்துக்கள் என்ற எண்ணத்தை ஊக்குவித்தனர். முஸ்லிம்கள் மதம் தியாகம் என்ற பெயரில் இந்துக்களின் கடவுள்களை கொல்கின்றனர். இந்த நடைமுறை விரைவில் முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும் என்றனர். இந்துக்கள் இப்போது பிரிட்டிஷ் பக்கம் மாறினர். இப்போது அவர்களில் சிலரை கூலிப்படையாக வேலைக்கு அமர்த்தினார்கள். இவ்வாறு இஸ்லாமியர் மீது இந்துக்களின் அவநம்பிக்கை மற்றும் பிரிட்டிசாரின் விரோதம், பணத்தின்மீது பேராசை என்பன ஒன்று சேர்க்கப் பட்டு ராணி எலிசபெத்திடம் ஒரு இராணுவத்தை உருவாக்குவதற்கான யோசனை முன் வைக்கப்பட்டது. இதற்கிடையே முஸ்லீம் கவர்னர்கள் மற்றும் இந்து மகாராஜாக்களுக்கு இடையே கருத்து வேறுபாடுகள் விதைக்கப்பட்திருந்தது. மேலும், முஸ்லிம்கள் மத்தியில் இருந்து, தங்கள் நம்பிக்கையில் குறைபாடான மக்கள் வாடகைக்கு அமர்த்தப்பட்டனர்.

பிரிட்டிஷ் சர் லார்ட் ஸ்ட்ரேசி, அவர் ரீஜண்டாக பல சந்தர்ப்பங்களில் பணியாற்றியவர், மற்றும் அவர் (இந்தியர் அமைப்பு)களில் உறுப்பினராக இருந்தார். அவர் முஸ்லீம்-இந்து பகைமை பற்றி கூறுகிறார்". ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்காக அல்லது முரண்பாடுகளை விதைப்பதற்கு ஏற்றதாக இருக்கும் எதுவும் எங்கள் அரசாங்கத்தின் கொள்கையுடன் ஒத்துப்போகும். எங்கள் கொள்கைக்கு அதிக ஆதரவாக இருப்பது, இந்தியாவில் இரண்டு

ஒருவருக் கொருவர் விரோதம் கொண்ட சுதந்திர சமுதாயங்களின் இருப்பு உள்ளது. இந்த விரோதத்தை அதிகரிக்கும் நோக்கில் பிரிட்டிஷ் 1750/1164 முதல் 1870/1287 வரை தொடர்ந்து இந்துக்களை ஆதரித்தார்கள், மற்றும் அனைத்து முஸ்லிம்களின் படுகொலைகளும் அவர்களுடன் சேர்ந்து நிகழ்த்தப்பட்டது.

1858 ல் தொடங்கி, முஸ்லீம்-இந்து மோதல்கள் பரந்த அளவில் விரிவடைந்தன. ஆங்கிலேயர்கள் இந்துக்களை முஸ்லிம்களுக்கு எதிராக தூண்டிவிடுவார் கள், பின்னர் இந்துக்கள் தாக்குவதை உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருப் பார்கள். இரத்தக்களரி நிகழ்வுகள் மற்றும் குழப்பங்கள் இல்லாமல் ஒரு வருடம் கூட கடந்து செல்லவில்லை. மார்க்க தியாகத்துக்காக மாடுகள் அறுக்கப்ப்பட்டதால் ஏற்பட்ட கொந்தளிப்புகளின் விளைவாக நூற்றுக் கணக்கானோர் படுகொலை செய்யப்பட்டனர், இல்லை ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். இருபக்கமிருந்தும் குழப்பங்களைத் தூண்டு வதற்காக, அவர்கள், ஒருபுறம், முஸ்லிம்களிடையே ஏழு ஆடுகள் கொலை செய்வதை விட ஒரு மாட்டை பலியிடுவது பயபக்தியாக இருக்கும் என்றும், மறுபுறம், தங்கள் இந்துக்கள் மாட்டு கடவுள்களை மரணத்திலிருந்து காப்பாற்றினால் அவர்களுக்கு அடுத்த உலகில் நிறைய வெகுமதிகள் சம்பாதிக்க முடியும் என்று அவர்கள் மத்தியில் கூறினார்கள். அவர்களின் இந்த தந்திர வேலைகள் அவர்கள் இந்தியாவில் இருந்து விலகிய பின்னரும் தொடர்ந்தது. ஒரு பத்திரிகையில் எழுதப்பட்ட ஒரு நிகழ்வைப் பற்றி இந்த உண்மையை எடுத்துக்காட்ட நாங்கள் விரும்புகிறோம். இட்டிலா’அத் என்ற தலைப்பில், ஈரானில் பிரதமர் முசாதிக் காலத்தில் வெளியிடப்பட்டது.

குர்பானுடைய[1] நாள் ஒன்றில் தாடிவைத்த இரண்டு முஸ்லிம்கள் தலைப்பா கை அணிந்து மற்றும் நீண்ட அங்கிகளுடன் பலியிடுவதற்காக ஒரு மாட்டை வாங்கினர். அவர்கள் வீட்டிற்கு செல்லும் வழியில் ஒரு இந்து பிரதேசத்தை கடந்து செல்லும் போது, ஒரு இந்து அவர்களைத் தடுத்து, அவர்கள் பசுவை என்ன செய்யப் போகிறார்கள் என்று அவர்களிடம் கேட்க. அவர்கள் அப்போது அதை ஒரு தியாகத்துக்கு கொல்லப் போகிறோம் என்று கூறினார்கள். அந்த இந்து சத்தம் போட தொடங்கினான், "ஏய், மக்களே! உதவிக்கு வாருங்கள்! இந்த மனிதர்கள் எங்கள் கடவுளை தியாகம் செய்யப் போகிறார்கள்." அந்த இரண்டு முஸ்லிம்களும், சத்தம் போட்டார்கள் "ஓ முஸ்லிம்களே! உதவிக்கு வாருங்கள்!. இந்த மனிதர்கள் எங்கள் தியாகத்தை கைப்பற்றப் போகிறார்கள். இந்துக்களும் முஸ்லிம்களும் அந்த இடத்தைச் சுற்றி கூடி, தடிகளை, கத்திகளை பயன்படுத்தி சண்டையிடத் தொடங்கினர்.. நூற்றுக் கணக்கான முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். எனினும், பின்னர், இருவரும் இந்து பிரதேச வழியாக மாட்டை எடுத்து வந்தவர்கள் பிரிட்டிஷ் தூதரகத்தி னுள் மறைந்து செல்ல காணப்பட்டது.

இந்த நிகழ்வு ஆங்கிலேயர்களால் தூண்டப்பட்டது என்று தெளிவாகின்றது. இந்த நிகழ்வை தொடர்புபடுத்தும் நிருபர் மேலும் கூறுகையில், "நீங்கள் முஸ்லிம்களின் குர்பானின் நாளை எப்படி கெடுத்தீர்கள் என்று எங்களுக்குத் தெரியும். இந்த வகையான தந்திரங்களுடன் மற்றும் எண்ணற்ற பிற கொடுமைகளினால் அவர்கள் முஸ்லிம்களை அழிக்க முயன்றனர். பின்னர், இந்துக்கள் இதை படிப்படியாக உணர்ந்து ஆங்கிலேயர்களுக்கு எதிராக வருவதை அவதானித்த பிரிட்டிஷ் 1870/1287ல், இந்துக்களுக்கு எதிராக முஸ்லிம்களை ஆதரிக்கத் தொடங்கினர்.

முஸ்லீம் பெயர்களை வைத்திருந்த விசித்திரமான மக்கள் தோன்றினர். அவர்கள் அஹ்லு-சுன்னாவுக்கு விரோதமாக, ஜிஹாத் வாளினால் செய்வது ஃபார்ளு இல்லை என்று கூறினார்கள், இஸ்லாத்தில் ஹராம் என்று கூறியதை 'ஹலால்'என்றுகூறினார்கள். இஸ்லாத்தின் நம்பிக்கையின் கோட்பாடுகளை மாற்ற முயற்சித்த சேர் சையத் அகமது, குலாம் அஹ்மத் காதியானி, அப்துல்லா கஸ்னவி, இஸ்மாயில் தஹ்லவி, நசீர் ஹுசைன் தஹ்லவி, சித்திக்

---

[1] முஸ்லீம்களின் புனித நாட்கள் ஒன்றில், ஒரு மத தியாகத்துக்காக அவர்கள் ஆடு, மாடு, அல்லது ஒட்டகம்களை அறுக்கிறார்கள்.

ஹசன் கான் பெஹுபாலி, ரஷித் அஹ்மத் கென்குஹ், வாஹித் உஸ்ஸமான் ஹைதர் அபாதி, அஷ்ரப் அலி தானவி மற்றும் ஷா அப்துல் அஜீஸின் பேரன் முஹம்மதுஇஷாக் ஆகியோர் அவர்களில் ஒரு சிலர் மட்டுமே. ஆங்கிலேயர் இவர்களை ஆதரித்து புதிய பிரிவுகளின் தோற்றத்தை ஏற்படுத்தினார்கள். அவர்கள் முஸ்லிம்களை இந்த பிரிவுகளை பின்பற்ற வைக்கவும் முயன்றனர்.

இந்த பிரிவுகளில் மிகவும் பிரபலமானது **காதியானி**, இது 1879/1296 இல் தோன்றியது. அதன் நிறுவனர் குலாம் அஹ்மத் கூறினார் ஆயுதங்கள் மூலம் ஜிஹாத் (புனிதப் போர்) செய்ய ஃபர்ளு (இஸ்லாத்தின் கட்டளை) இல்லை, அறிவுரை, மற்றும் ஆலோசனைகள் மூலம் செய்யப்படும் ஜிஹாத் ஃபர்ளு. இதைத்தான் பிரிட்டிஷ் உளவாளி ஹம்பர் முஹம்மது நஜ்தி யிடம் கூறினான். குலாம் அஹ்மத் இஸ்மாயிலி குழுவைச் சேர்ந்த ஒரு வழி தவறியவர். அவர் 1908/1326 இல் இறந்தார். பிரிட்டிஷ் அவரை கணிசமான தொகை பணத்து க்கு வேலைக்கு அமர்த்தியது. முன்பு அவர் ஒரு 'முஜத்தித்' என்று கூறினார்; பின்னர் அவர் பதவி உயர்வு பெற்றார், வாக்குறுதியளிக்கப்பட்ட மஹ்தி என்று கூறினான். அவரது அடுத்த படி உறுதியாக இருந்தது, அவர் இயேசு மேசியா என்று. இறுதியாக, அவன் தான் ஒரு தீர்க்கதரிசி என்றும் தனக்கு ஒரு ஒரு புதிய மதம் வெளியாக்கியதாகவும் கூறினான். அவனால் ஏமாற்றப்பட்ட மக்களிடம் (உம்மா)விடம், அவனைப் பற்றி பல ஆயத்துகள் முன்னறிவிப்பு செய்திருந்த தாகவும், மற்றும் அவன் வேறு எந்த நபியும் செய்யாத அற்புதங்களை வெளிப்படுத்தியதாகவும் கூறினான். அவனை ஏற்றுக் கொள்ளாதவர்கள் நிராகரிப்பவர்கள் என்றும் கூறினான்.

அவனுடைய பிரிவு பஞ்சாப் மற்றும் பம்பாயில் இருந்த அறிவற்ற மக்களிடையே பரவியது. காதியானி பிரிவு இன்னும் **அஹ்மதியா** இயக்கம் என்ற பெயரில் ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் பரவி வருகிறது .

சுன்னி முஸ்லீம்கள் ஆயுதங்கள்மூலம் ஜிஹாத் செய்வது ஃபர்ளு, மற்றும் ஆங்கிலேயர்களுக்கு சேவை செய்வது வழிகேடு என்று கூறினார்கள். இதைப் போதித்த முஸ்லிம்கள் கடுமையாக தண்டிக்கப்பட்டனர், கொல்லப்பட்டனர். சுன்னி கிதாபுகள் சேகரிக்கப்பட்டு அழிக்கப்பட்டன. பிரிட்டிசாரின் தேவை களுக்கு பணிக்கமர்த்த முடியாத சேவை செய்ய மறுக்கும் இஸ்லாமிய அறிஞர்களை முஸ்லிம் சமூகத்திலிருந்து தனிமைப் படுத்தப்படும். அவர்கள் பிரபலமடைவார்கள் என்பதால் அவர்களை தூக்கிலிட மாட்டார்கள், ஆனால் அந்தமான் தீவுகளில் மோசமான நிலவறைகளில் அவர்களுக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது புரட்சியின் போது கிளர்ச்சியாளர்களுக்கு ஒத்துழைக்கிறார்கள் என்ற போர்வையில் இந்தியா முழுவதும் இருந்த இஸ்லாமிய அறிஞர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு, அவர்கள் அதே நிலவறைகளுக்கு அனுப்பப்பட்டனர். [அதேபோல், முதலாவது உலக யுத்தத் துக்கு பிறகு அவர்கள் இஸ்தான்புல்லின் மீது படையெடுத் தபோது அவர்கள் ஒட்டோமான் பாஷாக்கள் மற்றும் அறிஞர்களை மால்டா தீவுக்கு விரட்டினார் கள்.] முஸ்லிம்கள் இஸ்லாத்திற்கு எதிரான தங்கள் பகையை கவனிக்க கூடாது என்பதற்காக, இந்தியாவை தாருல் இஸ்லாமாக வரையறுக்கும் ஃபத்வாக்களை அவர்கள் பெற்றனர் (முஸ்லிம்கள் தங்கள் மதத்தை பின்பற்றக்கூடிய நாடுகள் ஆளும் பிரிவு) மற்றும் ஒரு தார் அல்-ஹார்ப் (அந்த நாடுகள் இஸ்லாமிய ஆட்சி கீழ் இல்லை), மற்றும் இந்த ஃபத்வாக்களை எங்கும் பரப்பினார்கள். அவர்கள் பயிற்றுவித்த நயவஞ்சகர் களை அறிஞர்கள் என்று பெயரிட்டனர். அவர்கள் மூலம் ஒட்டோமான் சுல்தான்கள் கலீபாக்கள் இல்லை என்ற எண்ணத்தை பரப்பினார்கள். அந்த கலீஃபா உரிமை குறைஷிகளுக்கு உரியது, ஒட்டோமான் சுல்தான்கள் கிலாபத்தை பலத்தால் கைப்பற்றினர் எனவே கீழ்ப்படியக்கூடாது.

[ஹதீஸ் ஷெரீப்: "**கலிபா குரைஷ் குடியினராக இருக்க வேண்டும்** (அவர்களிட மிருந்து வழித்தோன்றல்கள்)" என்பதன் கருத்து:"கலிபாவாக இருப்பதற்கு நிபந்தனைகளை பூர்த்தி செய்ய தகுதியுள்ள மக்களிடையே, குறைஷிகள்,அதாவது, சையிதுகள் இருந்தால், நீங்கள் அவர்களில் ஒருவரை தெரிவு செய்ய வேண்டும். அத்தகைய நபர் இல்லை என்றால், வேறு எவரையாவது தேர்ந்தெடுக்க வேண்டும். ஒரு நபர் கலீபாவாக தேர்ந்தெடுக்க படாத காரணத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட கலீபாவுக்கு கீழ்ப்படிய மறுத்துவிட்டால், அல்லது பலம் அல்லது வன்முறையைப் பயன்படுத்தி அதிகாரத்தைக் கைப்பற்றினால், இந்த நபர் கீழ்ப்படிய வைக்கப்பட வேண்டும். பூமியின் மேல் ஒரே ஒரு கலீபா மட்டுமே

இருக்க முடியும். எல்லா முஸ்லிம்களும் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும்.]

மத போதனைகளை ஒழித்து இஸ்லாத்தை உள்ளிருந்து தகர்ப்பதற்காக இஸ்லாமிய அறிவு போதனைக்காக மதரஸாவையும் மற்றும் அலிகாரில் ஒரு இஸ்லாமிய பல்கலைக்கழகம் திறந்தனர். இந்தப் பள்ளிகளில் அவர்கள் மார்க்கத்தை பற்றி அறியாத இஸ்லாத்திற்கு விரோதமான மனிதர்களுக்கு கல்வி கற்பித்தனர். இந்தமக்கள் இஸ்லாத்திற்கு பெரும் தீங்கு விளைவித்த னர். இங்கு மக்கள் குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டு, பிரிட்டனுக்கு பயிற்சிக் காக அனுப்பப்பட்டார்கள், இஸ்லாத்தை உள்ளிருந்து தகர்த்து அழிக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு முஸ்லீம்களுக்கு அவர்கள் தலைமை தாங்கும் அரசு பதவிகளில் அமர்த்தப்பட்டனர். அவர்களில் ஒருவர் அய்யூப் கான் முஹம்மத் ஜின்னாவுக்கு பதிலாக, பாகிஸ்தானின் ஜனாதிபதியாக நியக்கப்பட்டார்.

இரண்டாம் உலகப் போரில் பிரிட்டிஷ் வெற்றியாளர்களில் ஒருவராகத் தோன்றினாலும், உண்மையில் அவர்கள் போரில் தோற்றனர். பிரிட்டன், "சூரியன் மறையாத நாடு" என்று பிரிட்டிஷார் அழைத்தனர். அது உண்மையில் போருக்குப் பிறகு, "சூரியன் உதிக்காத நாடு" ஆனது. அனைத்து காலனிகளையும் இழந்ததால், அது தோல் பறிக்கப்பட்ட கோழி போல் இருந்தது.

பாகிஸ்தானின் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்ட அலி ஜின்னா ஒரு ஷியா பிரிவினர், மற்றும் ஒரு பிரிட்டிஷ் ரசிகர். அவர் 1948/1367 இல் இறந்தபோது அய்யூப் கான், ஒரு மதமற்றவர் (ஃப்ரீமேசன்), ஒரு சதித்திட்டத்தை நடத்தி அதிகாரத்தைக் கைப்பற்றினார். மேலும் யஹ்யா கான், இந்த ஈமான் இல்லாதவரின் இடத்தை பிடித்தவர், ஒரு பெரிய ஷியா பிரிவில் உள்ளவர். 1972/1392 ஆரம்பத்தில் பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான போரில் அவர் தோற்கடிக்கப்பட்டபோது, அவர் கிழக்கு பாகிஸ்தானின் கட்டுப்பாட்டை இழந்தார். சிறையில் அடைக்கப்பட்டார். 1971 இல் யஹ்யா கான் அரசை, சுல்பிகர் அலி பூட்டோ, மற்றொரு பிரிட்டனில் படித்து பயிற்சிபெற்ற, பிரிட்டிஷ் ஏஜென்டிடம் ஒப்படைத்தார். 1974 இல் அவரின் எதிரிகளை கொல்வதற்கு அவர் கொடுத்த உத்தரவுக்காக அவரது எதிரிகள் அவரைத் தூக்கிலிட்டனர்.

ஜியா-உல்-ஹக், ஸுல்ஃபிகர் அலியை தூக்கி எறிந்து ஆட்சியைப் பிடித்தவர். இஸ்லாம் மற்றும் முஸ்லிம்களை அழிக்கும் எதிரிகளின் திட்டங்களை அழிக்க ஆர்வமாக இருந்தார். அவர் பிரிட்டிஷ்’ன் விருப்பங்களை நிறை வேற்றாமல் இருந்தார். தனது நாட்டின் முன்னேற்றத்திற்காக அவர் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் கலை ஆகியவற்றை முன்னேற்ற முயன்றார். இஸ்லாத்தை முழுமையாக அறிந்துகொள்வதில் மட்டுமே தனி நபர்களுக்கும், குடும்பங்களுக்கும், சமூகம் , மற்றும் முழு தேசத்திற்கும் நலன் மற்றும் செழிப்புக்கான ஆதாரம் என்பதில் உறுதியாக இருந்தார்.

அஹ்காம் இஸ்லாமியாவுடன் இணக்கமான சட்டங்களை அவர் உருவாக்க நினைத்தார். இதை அவர் மக்களின் கேள்விக்காக குறிப்பிட முடிவு செய்தார். ஒரு ரெஃபரண்டம் வாக்கெடுப்பு நடைபெற்றது. மக்கள் முன்மொழிவுக்கு சார்பாக வாக்களித்தார்கள்.

பிரிட்டிஷ் வில்லன்கள் தங்கள் எஜமானர்களுக்கு மற்றொரு சேவையை செய்தனர். ஜியா-உல்-ஹக்கையும் அவரது அனைத்து ஆதரவாளர்களையும் ளையும் படுகொலை செய்தனர். சிறிது காலம் கழித்து அலி பூட்டோவின் மகள் பிரதமரானார். அவர் மக்கள், இஸ்லாம்,மற்றும் தேசத்துக்கு எதிராக பல்வேறு குற்றங்களுக்காக சிறையில் அடைக்கப்பட்டிருந்த வில்லன்கள் அனைவரையும் விடுவித்தார். அவர்களை உயர்ந்த நிர்வாக நிலைகளுக்கு நியமித்தார். குழப்பங்கள் மற்றும் மோதல்கள் தொடங்கின. பாகிஸ்தானின் இந்த நிலைதான் பிரிட்டிஷார் விரும்பியது.

முதல் மற்றும் இரண்டாம் உலகப் போர்களுக்குப் பிறகு, பல நாடுகளில் பிரிட்டிஷ் திட்டங்களை செயல்படுத்தி பிரிட்டிஷ் நலன்களை பாதுகாக்கும் மக்கள் பிரிட்டிஷ் உயர் பதவிகளுக்கு கொண்டு வந்தது. இந்த நாடுகள் தங்கள் சொந்த தேசிய கீதங்கள், தேசிய கொடிகள் மற்றும் ஜனாதிபதி களைக்கொண்டுள்ளன.ஆனால், இன்னும் மத சுதந்திரத்தை அடையவில்லை.

கடந்த மூன்று நூற்றாண்டுகளாக துருக்கியர்களுக்கு எதிராகவும் மற்றும் இஸ்லாமிய உலகின் பிற பகுதிகளில் செய்யப்பட்ட எந்தவொரு துரோகமும் அதன் சதித்திட்டங்களின் வேரில் பிரிட்டிஷார் இருந்தனர். அவர்கள் ஒட்டோமான் சாம்ராஜ்யத்தை தகர்த்து இருபது சிறிய பெரிய நாடுகளை நிறுவினர். இதைச் செய்வதில் அவர்களின் நோக்கம் முஸ்லிம்கள் ஒரு சக்திவாய்ந்த ஒரு தேசத்தை நிறுவுவதைத் தடுப்பதாகும்.

அவர்கள் எப்போதும் இஸ்லாமிய நாடுகளுக்கிடையே விரோதங்களையும் போர்களையும் தூண்டினார்கள். உதாரணமாக, சிரியாவில் ஒன்பது சதவிகித நுசைரிகள் ஆதிக்கம் செலுத்துகின்றனர். அங்கு சுன்னிகள் பெரும்பான்மையாக உள்ளனர். 1982 இல் ஆயுதப்படைகள் ஹமா மற்றும் ஹுமஸ் எனும் இரண்டு நகரங்களை நகரங்களை தாக்கி அழித்தது. நிராயுதபாணிகளான பாதுகாப்பற்ற சுன்னி முஸ்லிம்கள் மீது குண்டு வீசினார்கள். அவர்கள் உண்மையான சன்னி அறிஞர்களைக் கொன்றனர், இஸ்லாமிய புத்தகங் களை அழித்தனர், **குர்ஆன் அல்-கரீமின்** நகல்கள் உட்பட. இந்த இஸ்லாமிய அறிஞர்களுக்கு பதிலாக அவர்களினால் கற்பிக்கப்பட்ட மத அறிவற்ற, வழி கேடர்களை கொண்டு வந்தனர்.

இவர்களில்: **ஜமால்தீன் ஆப்கானி** ஆப்கானிஸ்தானில் 1838/1254ல் பிறந்தார். அவர் தத்துவ புத்தகங்களைப் படித்திருந்தார்.அவர் ஆப்கானிஸ்தானில் ரஷ்யாவுக் காக உளவு பார்த்தார். அவர்

எகிப்துக்குச் சென்று, அங்கு அவர் ஃப்ரீமேசன் (இரகசிய ஒற்றர்) ஆனார். அவர் அங்கு இரகசிய ஒற்றர் தலைவராக நியமிக்கப்பட்டார். எகிப்தின் அதிப் இஷாக் தனது **அத் துறர்** என்ற நூலில் அவர் கெய்ரோ மேசோனிக் லாட்ஜ் தலைவராக இருந்தார் என்று கூறுகிறார். பிரான்சில் அச்சிடப்பட்ட **லெஸ் பிராங்கோ-மேக்கன்ஸ்** புத்தகத்தின் நூற்று இருபத்தி ஏழாம் பக்கத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. 1960 இல்: "ஜமால்தீன் ஆப்கானி எகிப்தில் நிறுவப்பட்ட இரகசிய ஒற்றர் லாட்ஜ்களின் தலைவராக நியமிக்கப்பட்டார். அவருக்கு பின் முஹம்மது அப்துஹ் ஆனார். முஸ்லீம்கள் மத்தியில் கூலிப்படையினர் உருவாக்குவதில் அவர்கள் பெரும் உதவியை வழங்கினர்.

அலி பாஷா, சுல்தான் அப்துல் மஜித் மற்றும் சுல்தான் அப்துல்-அஜீஸ் ஆட்சிக் காலத்தில் ஐந்து முறை கிராண்ட் விஜியர்(பிரதம மந்திரி)ஆக இருந்தவர், ஒரு இரகசிய பிரிட்டிஷ் லாட்ஜுடன் இணைந்தவர். அவர் ஆப்கானியை இஸ்தான்புல்லுக்கு அழைத்து அவருக்கு சில கடமைகளை கொடுத்தார். அந்த நேரத்தில் இஸ்தான்புல் பல்கலைக்கழகத்தின் தவிசாளராக இருந்த ஹசன் தஹ்சின் வழிதவறியவர் என ஃபத்வா கொடுக்கப்பட்டவர், ஆப்கானியை பலமுறை உரை நிகழ்த்துவதற்கு அழைத்தார். ஹசன் தஹ்சின், தனது முறைப்படி, பிரிட்டிஷ் இரகசிய ஒற்றர் லாட்ஜின் உறுப்பினர், கிராண்ட் விஜியர் முஸ்தபா ரஷித் பாஷாவினால் ஒரு துணை நிறுவனத்தால் பயிற்சி பெற்றார். ஆப்கானி தனது வழிகேட்டு சிந்தனைகளை பரப்புவதற்கு மிகவும் முயற்சி செய்தார். அந்த நேரத்தில் ஷெய்குல் உல்-இஸ்லாம், ஹசன் ஃபஹ்மி எஃபெண்டி ஆப்கானியின் தவறுகளை சுட்டிக்காட்டி, அவர் வழி தவறியவர் என்பதை நிரூபித்தார். எனவே, அலி பாஷா அவரை இஸ்தான்புல் லிலிருந்து வெளியேற்ற வேண்டியிருந்தது.

இந்த முறை அவர் எகிப்தில் புரட்சிகரமான மத சீர்திருத்தம் பற்றி அவரது கருத்துக்களை அறிவிக்க முயன்றார். அவர் ஆங்கிலேயர்களுக்கு எதிரான அரபி பாஷாவின் சதித்திட்டங்களை ஆதரிப்பது போல் நடித்தார். அவர் அந்த நாட்களில் எகிப்தின் முஃப்தி முஹம்மது அப்துவுடன் நட்பை உருவாக்கி அவர் இஸ்லாத்தில் சீர்திருத்தங்களைச் செய்வதற்கான அவரது கருத்துக்களால் அவரை வழிகெடுத்தார். இரகசிய ஒற்றர் சபையின் உதவி யோடு பாரிஸ் மற்றும் லண்டனில் அவர் ஒரு சஞ்சிகைகளை வெளியிடத் தொடங்கினார். பின்னர் அவர் ஈரான் சென்றார். அவர் அங்கும் ஒழுங்காக நடந்து கொள்ளாததால், அவரை சங்கிலிகளால் கட்டி ஒட்டோமான் எல்லை யில் எங்கோ விட்டுச்சென்றார்கள். அவர் எப்படியோ விடுவிக்கப்பட்டார். பின்னர் பக்தாத் சென்று அங்கிருந்து லண்டனுக்குச் சென்றார், அங்கு அவர் ஈரானை இழிவுபடுத்தும் கட்டுரைகளை எழுதினார். பின்னர் அவர் இஸ்தான்புல்லுக்குச் சென்று ஈரானின் பஹாய்களுடன் ஒத்துழைப்பதன் மூலம் அரசியல் நோக்கங்களுக்கான வழிமுறையாக மதத்தைப் பயன் படுத்தினார்.

ஜமால்தீன் ஆப்கானியின் பிரச்சாரங்கள் இஸ்லாத்தை உள்ளிருந்து தகர்க்கும் நோக்கம் கொண்டது. அதில் விழுந்து பாதிக்கப்பட்டவர்களில் மிகவும் மோசமானவர், ஒரு மார்க்க அறிஞரின் ஆடையின் கீழ் இருந்த முஹம்மதுஅப்து 1849/1265ல் எகிப்தில் பிறந்து 1905/1323ல் இறந்தார். அவரது வாழ்க்கையில் ஒரு பகுதியை பெய்ரூட்டில் செலவிட்டு பின்னர் பாரிஸ் சென்றார். அங்கு அவர் ஜமால்தீனுடன் சேர்ந்தார். மேசோனிக் லாட்ஜ் (இரகசிய ஒற்றர் சபை) இனால் பரிந்துரைக்கப்பட்ட ஆப்கானியின் நடவடிக்கைகளுடன் சேர்ந்தார். **அல்-உர்வாத்-உல்-வுத்கா** என்ற பெயரிடப் பட்ட இதழை வெளியிட்டார்கள். பின்னர் அவர் பெய்ரூட் மற்றும் எகிப்துக்கு திரும்பி வந்தார். பாரிஸ் இரகசிய ஒற்றர் சபை எடுத்த முடிவுகளை இந்த இடங்களில் தொடர்ந்து மேற்கொள்ள முயற்சி செய்தார். பிரிட்டிஷ் ஆதரவுடன் அவர் கெய்ரோவின் முஃப்தி ஆனார் மற்றும் அஹ்ல் சுன்னாவை தாக்கும் நடவடிக்கைகளை ஏற்றுக்கொண்டார். இந்த வழியில் அவர் எடுத்த முதல் படி ஜாமியுல் அஸ்ஹர் மதரஸாவின் உள்ள பாடத்திட்டங்களை மாசுபடுத்தி கெடுக்கவும், இளைய தலைமுறைக்கு மதிப்புமிக்க மதக்கல்வி கற்பித்தலைத் தடுப்பதுமாகும். அவர் பல்கலைக் கழக அளவில் கற்பிக்கப்பட்ட பாடங்களை ரத்து செய்து தற்போது இரண்டாம் நிலை அளவில் கற்பிக்கப்படுகின்ற புத்தகங்களை பாடங்களை பல்கலைக் கழக அளவில் கற்பிப்பதற்கும் அவர்களின் பாடத்திட்டத்தில் சேர்த்தார். ஒருபுறம் அறிவின் நிலையங்களாக இருக்கும் பாடசாலைகளை அவற்றின் திறன்கள் மற்றும் வசதிகளை குறைத்துவிட்டு, மறுபுறம், அவர் இஸ்லாமிய அறிஞர்களைத் திட்டினார், இந்த அறிஞர்கள் விஞ்ஞான அறிவியல் அறிவைக் கற்பிப்பதற்கு தடையாயிருந்தனர், நான் இந்த வகை அறிவை சேர்ப்பதன் மூலம் இஸ்லாத்தை வளப்படுத்துவேன் என்று கூறினார்.

அவர் **இஸ்லாமும் கிறிஸ்தவமும்** என்ற தலைப்பில் ஒரு புத்தகத்தை எழுதினார். அதில் அவர் "எல்லா மதங்களும் ஒன்றே. அவர்கள் அவர்களின் வெளித்தோற்றத்தில் மட்டுமே வேறுபடுகிறார்கள். யூதர்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் முஸ்லிம்கள் ஒருவருக்கொருவர் ஆதரவாக இருக்க வேண்டும் என்று கூறுகிறார்." லண்டனில் உள்ள ஒரு பாதிரியாருக்கு அவர் எழுதிய கடிதத்தில், "நான் இரண்டு பெரிய மதங்களான இஸ்லாமும் கிறித்துவமும் ஒன்றை ஒன்று தழுவ வேண்டும் என எதிர்பார்க்கிறேன். பின்னர் தோரா மற்றும் பைபிள் மற்றும் குர்ஆன் ஒன்றை ஒன்று ஆதரிக்க வேண்டும், எங்கும் படிக்கப்பட வேண்டும் , எல்லா இனத்தவராலும் மதிக்கப்படவேண்டும். இன்னும் அவர், தோரா மற்றும் பைபிளை முஸ்லிம்கள் படிப்பதைப் எதிர்பார்க்கிறேன் என்று எழுதுகிறார். அவர் ஜாமியுல் அஸ்-ஹரின் இயக்குநரான **ஷல்துத்**தின் ஒத்துழைப்புடன் எழுதிய குர்ஆன் அல்-கரீமின் தஃப்சீரில் (விளக்கத்தில்) வங்கியின் வட்டி அனுமதிக்கப்படுகிறது என்று அவர் ஃபத்வா கொடுக்கிறார். பின்னர், இது முஸ்லீம்களின்

கோபத்திற்கு ஆளாகக்கூடும் என்ற பயத்தினால் அவர் இந்தக் கருத்தில் இருந்து விலகிக்கொண்டதாக நடித்தார்.

பெய்ரூட்டில் உள்ள இரகசிய ஒற்றர் சபை தலைவர், ஹன்னா அபு ரஷீத் எழுதிய **தைரதுல்-ம'ஆரிஃபுல்-மசோனிய்யா** எனும்1961/1381 இல் வெளியிட ப்பட்ட நூலின் நூற்றி தொண்ணூற்றி ஏழாவது பக்கத்தில் பின்வரும் ஒப்புதலை வெளியிடுகிறார்: "ஜமால்தீன் ஆப்கானி எகிப்தில் இரகசிய ஒற்றர் சபை தலைவர் இருந்தார். அந்த லாட்ஜில் கிட்டத்தட்ட முந்நூறு உறுப்பினர்கள் இருந்தார்கள். அவர்களில் பெரும்பாலோர் அறிஞர்கள் மற்றும் அரசியல்வாதிகள். அவருக்குப் பிறகு இமாம், மாஸ்டர், முஹம்மது அப்து தலைவரானார். அப்து ஒரு முக்கிய இரகசிய ஒற்றர் ஆக இருந்தார். அவர் எல்லா அரபு நாடுகளில் இரகசிய ஒற்றர் உணர்வை ஊக்குவித்தார் என்ற உண்மையை யாரும் மறுக்க முடியாது

இந்தியா முழுவதும் இஸ்லாமிய அறிஞராக, பிரிட்டிஷ்' இனால் முன் வைக்கும் மற்றொரு மிக மோசமான நிராகரிப்பவர் சேர் சையத் அகமது கான். அவர் 1818/1234 இல் டெல்லியில் பிறந்தார். அவரது தந்தை அக்பர் ஷாவின் ஆட்சிக் காலத்தில். 1837 இல் இந்தியாவிற்கு குடிபெயர்ந்தார்.அவர், பிரிட்டிஷ் டெல்லி சட்ட நீதிமன்றத்தின் நீதிபதி, அவரது மாமாவின் செயலாளராக வேலை செய்யத் தொடங்கினார் அவர் 1841ல் நீதிபதியாக நியமிக்கப்பட்டார் மற்றும்1855ல் நீதிபதி உயர் பதவிக்கு உயர்த்தப்பட்டார்.

ஆங்கிலேயரினால் கல்வி கற்பிக்கப்பட்ட இந்தியாவின் மற்றொரு மதவாதி ஹமீதுல்லா. அவர் 1908/1326 இல் ஹைதராபாத்தில் பிறந்தார். அங்கு இஸ்மாயீலி பிரிவினர் பெரும்பான்மையாக இருந்தனர். அவர் இஸ்மாயிலி பிரிவினரால் வளர்க்கப்பட்டார். எனவே, அஹ்லுஸ் சுன்னாவுக்கு எதிரான வெறித்தனமான எதிரியாக இருந்தார். அவர் பாரிஸில் CNRS என்ற ஆராய்ச்சி நிறுவனத்தின் உறுப்பினர். அவர் முஹம்மது அலைஹி சலாம் முஸ்லிம்களு க்கு மட்டுமே நபி என்று அறிமுகப்படுத்த முயன்றார்.

இஸ்லாத்தை அழிப்பதற்கான பிரிட்டிஷாரின் போரில் பயனுள்ள ஆயுதமாக பயன்படுத்துவதற்காக, நாட்டுக்கும் சமுதாயத்துக்கும் சேவை செய்ய வைராக்கியம் உள்ளவர்களை ஏமாற்றுவதற்காக இஸ்லாம் காலத்துக்கு ஏற்ப மாற்றியமைக்கப்பட வேண்டும், நவீனமயமாக்கப்பட்டு அதன் அசல் நிலைக்கு மீட்கப்பட வேண்டும் என்றார்கள். ஆனால் இது உண்மையில் ஒரு மதமற்ற சமூகத்தை மீண்டும் நிறுவுவதை நோக்கமாகக் கொண்டது. ஷெய்குல்-இஸ்லாம் முஸ்தபா சப்ரி எஃபெண்டி, ஒரு சிறந்த இஸ்லாமிய அறிஞர், இதை நன்கு உணர்ந்தவர்களில் ஒருவர். அவர் கூறுகிறார்; மத்ஹப்களை ஒழிப்பது என்பது, அது ஒரு பாலம் கட்டுவதை போன்று மதச்சார்பின்மைக்கு வழிவகுக்கின்றது". அவர்களின் உண்மையான நோக்கங்கள் என்ன என்பதை அவர் தெளிவுபடுத்தினார்.

பிரிட்டிஷாரும் இஸ்லாத்தின் மற்ற எதிரிகளும் மார்க்கத்தின் பக்திமிகுந்த இடங்களையும், தசவ்வுஃப்பின் பாதைகளையும் மாசுபடுத்துவதற்கு மிகவும் முயன்றனர். அவர்கள் இக்லாஸை (உள்ளச்சம் நிறைந்த பக்தி; நிய்யத்து நோக்கம்,அல்லாஹுதலாவுக்காக மட்டுமே எல்லாவற்றையும் செய்வது) என்பதை அழிக்க கடுமையாக பாடுபட்டனர். இது அஹ்காம் இஸ்லாமியா வின் மூன்றாவது அங்கமாகும். தசவ்வுஃப்பின் உயர்ந்த தலைவர்கள் தங்களை அரசியலில் ஈடுபடுத்தவில்லை, அல்லது அவர்கள் யாரிடமிருந்தும் உலக நன்மைகளை எதிர்பார்க்க மாட்டார்கள். அந்த சிறந்த மனிதர்களில் பெரும்பாலோர் ஆழமாக கற்ற முஜ்தஹித்'கள். ஏனெனில், 'தசவ்வுஃப்'என்பது முஹம்மது (அலைஹி-சலாம்) அவர்களினால் வழிநடத்தப்பட்ட வழியைப் பின்பற்றுவதாகும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், இதன் பொருள் ஒருவர் எதைச் சொன்னாலும், செய்தாலும் அஹ்காம் இஸ்லாமியாவைக் கண்டிப்பாக கடைப்பிடிப்பது.

இருப்பினும், நீண்ட காலமாக, அறியாமையிலுள்ள, பாவம் செய்பவர்கள், மற்றும் வெளிநாட்டு முகவர்கள் கூட, தங்கள் மோசமான குறிக்கோள்களை அடைவதற்காக தசவ்வுஃபுடைய பெரியார்களின் பெயர்களைப் பயன்படுத்தி பல்வேறு சபைகளை நிறுவினார்கள். இதனால் இஸ்லாமிய மதத்தையும் அதன் அஹ்காம் இஸ்லாமியாவின் வீழ்ச்சிக்கும், சீரழிவுக்கும் வழி வகுத்தார் கள். உதாரணத்திற்கு, திக்ர் என்பது அல்லாஹு த'ஆலாவை நினைவில் கொள்வதற்கு. இது அடிப்படையில் இதயத்தின் செயலாகும். திக்ர் அல்லாஹுவை தவிர வேறு எந்த உலகரீதியான அல்லது பிற உயிரினங்கள் மீதான அன்பிலிருந்து இதயத்தை தூய்மை படுத்துகிறது. அதனால் அல்லாஹு த'ஆலாவின் காதல் இதயத்தில் உறுதியாக குடியேறுகின்றது. மாறாக, ஆண்கள் மற்றும் பெண்கள், ஒன்றாக இருந்து திக்ர் என்ற பெயரில் சில விசித்திரமான ஒலிகளை வெளிப்படுத்துவது திக்ர் அல்ல. P- 92

மார்க்கத்தின் உயர்ந்த மனிதர்களான சஹாபாத் அல் கிராம்களினால் பின்பற்றப்பட்ட வழி ஏற்கனவே மறந்துவிட்டது. அஹ்மத் இப்னி தைமியா, ஒரு ஒரு குறிப்பிட்ட மத்ஹப் இல்லாத வழி தவறியவர் மற்றும் தசவ்வுஃப்பின் எதிரி இஸ்லாமிய அறிஞராக அறிவிக்கப்பட்டார். ஒரு புதிய பிரிவு, அதாவது **வஹாபிசம்** அவரின் நினைவாக பின்பற்றுவதற்காக பிரிட்டிஷ் ஆதரவுடன் நிறுவப்பட்டது. அவர்கள் உலகளாவிய வஹாபி மையம் **றாபிதத்துல்- ஆலமில்-இஸ்லாமி** என்ற நிறுவனத்தை நிறுவி, வஹாபிசத்தை பரப்பும் நூல்கள் அனைத்து நாடுகளிலும் வெளியிடப்பட்டது. ஒவ்வொரு நாட்டிலும் கட்டப்பட்ட பெரிய கட்டிடங்களில் அவர்களின் அடையாளங்கள்: 'இப்னி தைமியா மதரஸா' என தொங்க விடப்பட்டுள்ளது. இப்னி தைமிய்யாவின் வழிகெட்ட கொள்கைகளும் ஹம்பர் எனப்படும் பிரிட்டிஷ் உளவாளியின் பொய்யான மதவெறி கருத்துக்களும் சேர்ந்த கலவை

வஹாபிசம் என்று அழைக்கப்பட்டது. உண்மையான முஸ்லிம்களான அஹ்ல்-சுன்னாவின் அறிஞர்கள் இப்னிதைமியாவின் புத்தகங்கள் வழிகேடு என்று பல நூற்களை எழுதினார்கள். அந்த புத்தகங்களில் ஒன்று சோமாலிய அறிஞர் ஷெய்க் அப்துர்-ரஹ்மான் அப்துல்லா பின் முஹம்மது ஹாரி எழுதிய **அல்-மகலாத் துஸ்-சுன்னிய்ய ஃபீ கஷ்ஃபி-ளலாலத்தி அஹ்மத் இப்னி தைமியா.** அந்த அறிஞர் சோமாலியாவின் ஹராரில் 1920/1339ல் பிறந்தார் (இன்றைய எத்தியோப்பியாவில்). அவரது புத்தகம் பெய்ரூட்டில் 1994/14146ல் அச்சிடப் பட்டு வெளியிடப்பட்டது. இந்த நூல் இப்னி தைமியாவினால் எழுதப்பட்ட புத்தகங்களை மறுத்து எழுதிய அறிஞர்களின் விரிவான தகவல்களை வழங்குகிறது. தசவ்வுஃபுக்கு எதிரான பகை, வழிகெட்ட குழுக்களான வஹாபிசம், லாமதுஹபிசம், சீர்திருத்தவாதிகள், சலபிகள், காதியானி இயக்கம், மௌதூதிசம், தப்லீக் ஜமா'அத் என்று அழைக்கப்படும் அனைத்து வழி தவறியவர்களுக்கும் பொதுவானது. இவை அனைத்தும் பிரிட்டிஷ் சதிகாரர்களால் ஏற்பாடு செய்யப்பட்டு நிறுவப்பட்டவை.

இஸ்லாத்தின் எதிரிகள், குறிப்பாக பிரிட்டிஷ், அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தில் முஸ்லிம்களை பின்வாங்க வைப்பதற்கான எல்லா வகையான தந்திரங்களையும் பயன்படுத்தினர். வர்த்தகம் மற்றும் கலைகளும் தடைப் பட்டது. இஸ்லாமிய நாடுகளில் இருக்கும் இஸ்லாமிய நாகரிகங்களை அழிப்பதற்கும், அழகான தார்மீக குணங்களை கெடுக்கும் பொருட்டும் மது பவனை அநாகரிகம், களியாட்டம் மற்றும் சூதாட்டம் போன்ற தீய செயல்கள் ஊக்குவிக்கப்பட்டன, பிரபலப்படுத்தப்பட்டன. மக்களை இழிவு நிலைக்கு தூண்டுவதற்காக, கிரேக்கம், ஆர்மீனிய மற்றும் பிற முஸ்லீம் அல்லாத பெண்கள் முகவர்களாக பணியமர்த்தப்பட்டனர். இளம் பெண்கள், பேஷன் ஹவுஸ், நடன, மொடலிங், மற்றும் நடிகை களுக்கான கற்கைகள் போன்ற கீழ்தர நாகரிக சிதைவுகக்கு கவர்வதன் மூலம் தங்கள் கற்பை இழக்கும்படி தூண்டப்பட்டனர். இந்த விஷயத்தில் முஸ்லீம் பெற்றோர்கள் இன்னும் நிறைய செய்ய வேண்டும். அவர்கள் தங்கள் குழந்தைகள் இழிந்த மக்களால் அமைக்கப்பட்ட பொறிகளில் விழாதபடி விழிப்பாய் இருக்க வேண்டும்..

ஒட்டோமான் பேரரசு அதன் வீழ்ச்சியடைந்த ஆண்டுகளில், மாணவர்களை யும் அரசியல்வாதிகளையும் ஐரோப்பாவிற்கு அனுப்பியது. இவர்களில் சில மாணவர்கள் மற்றும் அரசியல்வாதிகள் மேசொனிக் லொஜ்களில் சேர்வத ற்கு வற்புறுத்தப்பட்டனர். அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தைக் கற்றுக் கொள்வதற்கு சென்றவர்களுக்கு இஸ்லாத்தை அழிப்பதற்கும் ஒட்டோமான் பேரரசை இடிப்பதற்கான நுட்பங்களையும் கற்றுக் கொடுத்தார்கள்.

அவர்களில் பேரரசிற்கும் முஸ்லிம்களுக்கும் மிகப்பெரிய தீங்கு செய்தவர் முஸ்தபா ரஷித் பாஷா. லண்டனில் அவர் தங்கியிருந்தபோது அவரை முற்றிலும் இஸ்லாத்தின் தீவிரமான மற்றும் நயவஞ்சகமான எதிரியாக ஒழுங்கு படுத்துவதற்கு ஏற்றதாக இருந்தது. அங்கு அவர் ஸ்கொட்டிஷ் மேசொனிக் (இரகசிய ஒற்றர்) லாட்ஜ்களுடன் ஒத்துழைத்தார். சுல்தான் மஹ்மூத் கான் முஸ்தபா ரஷித் பாஷாவின் துரோகத்தை கவனித்தார், அவர் அவரை தூக்கிலிட உத்தரவிட்டார்; சுல்தானின் உத்தரவை நிறைவேற்ற மிகவும் தாமதமாகிவிட்டது, ஏனென்றால் அவரது வாழ்நாள் அவருக்கு போதுமானதாக இருக்கவில்லை. சுல்தான் இறந்த பிறகு, முஸ்தபா ரஷித் பாஷா மற்றும் அவரது சகாக்கள் இஸ்தான்புல் திரும்பினர். இஸ்லாமும் முஸ்லிம்களும் அனுபவித்த மிக மோசமான தீங்கை செய்து முடித்தார்கள்.

அப்துல் மஜித் கான், தனது பதினெட்டாவது வயதில் 1839/1255 இல் பாதிஷா ஆனார். அவர் மிகவும் இளமையாகவும், அனுபவமற்றவராகவும் இருந்தார். அவரைச் சுற்றி இருந்த அறிஞர்கள் யாரும் அவரை எச்சரிக்கவில்லை. இந்த மோசமான நிலைமை ஒட்டோமான் வரலாற்றில் திருப்புமுனையை ஏற்படுத்தியது. இறுதியில் பெரிய இஸ்லாமிய அரசு கலைக்கப்பட்டது. தூய இதயம் கொண்ட அப்பாவியான, இளம் பேரரசர் வலிமையான, நயவஞ்சக மான பிரிட்டிஷின் வலைக்குள் வீழ்ந்தார். பயிற்சி பெற்ற இஸ்லாத்தின் எதிரிகளான, ஸ்காட்டிஷ் ஒற்றர்களை நிர்வாக பதவிகளுக்கு நியமித்தார். அரசை உள்ளிருந்து தகர்க்கும் அவர்களின் கொள்கையை உணர்வதற்கு அவர் மிகவும் முதிர்ச்சியற்றவராக இருந்தார். அவரை எச்சரிக்க யாரும் இருக்கவில்லை. லோர்ட் ரேடிங், பிரிட்டனில் இஸ்லாத்தை தகர்க்கும் நோக்கில் நிறுவப்பட்ட **ஸ்காட்டிஷ் ஒற்றர் அமைப்பின்** ஒரு தந்திரமான உறுப்பினர் இஸ்தான்புல்லுக்கு பிரிட்டிஷ் தூதுவராக அனுப்பப்பட்டவர்.

இவரின் இழிவான அறிக்கை என்னவென்றால்: நீங்கள் இந்த தேர்ச்சி பெற்ற வெற்றிகரமான வைசியரை (மந்திரி) பிரதம மந்திரியாக நியமிப்பீர்கள் என்றால், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கும் உங்கள் பெரிய பேரரசுக்கும் இடையிலான அனைத்து கருத்து வேறுபாடுகளும் தீர்க்கப்படும், மற்றும் ஒட்டோமான் பேரரசு பொருளாதார, சமூக மற்றும் இராணுவப் ரீதியில் முன்னேற்றம் ஏற்படும் என்று கூறி அவரால் கலீபாவை சம்மதிக்க வைக்க முடிந்தது.

ரஷித்பாஷா அந்த பிரதம மந்திரியின் இடத்தை, 1846/1262 ல், கைப்பற்றிய வுடன் அவர் மேசோனிக்(ஒற்றர்) லாட்ஜ்களை பெரிய நகரங்களில் திறக்கத் தொடங்கினார். லோட் ராட்க்ளிஃப் வெளியுறவு அமைச்சராக இருந்தபோது அவருடன் இணைந்து அவர்1837/1253 ல் தயாரித்திருந்த பெரிய நகரங்கள் சட்டம் என்று அழைக்கப்படும் தான்சிமாட் [மறுசீரமைப்பு] 1839/1255ல் அதிகார

பூர்வமாக அறிவிக்கப்பட்டது. இது அவரது நகர்வுக்கு ஒரு அடிப்படை யாக பயன்படுத்தப்பட்டது. உளவு மையங்கள் மற்றும் தேசத்துரோக செயல்கள் செயல்பட தொடங்கியது. இளைஞர்கள் எந்த மத அறிவும் இல்லாமல் கல்வி அளிக்கப்பட்டார்கள். ஒருபுறம், நாட்டு மக்களை தவறாக நடத்துவதற்காக லண்டனில் இருந்து கட்டளை இடப்பட்ட திட்டங்களை பின்பற்றி அவர்கள், நிர்வாக, விவசாய, இராணுவ மறுசீரமைப்புகள் நடவடிக்கைகள் செய்யப்பட்டன. இஸ்லாமிய ஒழுக்கத்தையும், முன்னோர் களின் ஒற்றுமையையும் தேசிய ஒருமைப்பாட்டையும் அழித்துவிடும் நடவடிக்கைகள்முன்னெடுக்கப்பட்டன. இந்த நோக்கங்களுக்கு பொருத்த மான பயிற்சிபெற்ற (உளவு) முகவர்களை முக்கியமான நிர்வாக பதவிகளில் அமர்த்தப்பட்டனர்.

அந்த கால கட்டத்தில், பௌதீகவியல், இரசாயனவியலில் மற்றும் தொழில் நுட்பத்தில் ஐரோப்பா பாரிய முன்னேற்றங்களை கண்டு வந்தது. புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் மேம்பாடுகள் செய்யப்பட்டன. பெரிய தொழிற் சாலைகள், தொழில்நுட்ப பல்கலைக்கழகங்கள் மற்றும் நவீன யுத்த தளபாடங்களின் உற்பத்தி நிறுவப்பட்டன. இந்த சீரமைப்பு அனைத்தும் ஒட்டோமான்களால் புறக்கணிக்கப்பட்டது. மாறாக, ஃபத்திஹ் முஹம்மது (இஸ்தான்புல்லை கைப்பற்றியவர்)ஆட்சிகாலத்திலிருந்து மதராசா அமைப்பு பாடத்திட்டத்தில் இருந்த விஞ்ஞானம், எண்கணிதம், திரிகோண கணிதம், வானியல், போன்ற அறிவியல் பாடங்கள் உடனடியாக ரத்துசெய்யப்பட்டது. "மார்க்க வாதிகளுக்கு விஞ்ஞானக்கல்வி அவசியமில்லை" என்ற வாதத்தின் அடிப்படையில். விஞ்ஞான கல்வியை பெற்ற அறிஞர்களை உருவாக்கும் செயல்திட்டம் தடைப்பட்டது. பின்னர் வந்த இஸ்லாத்தின் எதிரிகள் முஸ்லிம் சிறுவர்களை அவர்களுக்கு மார்க்கத்தை படிப்பவர்களுக்கு விஞ்ஞானம் தெரியாது என்று கூறி அவர்களை தள்ளி வைத்தார்கள். ஏனெனில், அவர்கள் முட்டாள்கள், பிற்போக்கானவர்கள்". முஸ்லிம்களுக்கும் இஸ்லாத்திற்கும் எவை தீங்கானவையோ, அவை 'நவீனமனது' மற்றும் 'முற்போக்கானது என்று அழைக்கப்பட்டது. நிறைவேற்றப்படும் ஒவ்வொரு சட்டமும் அரசுக்கு எதிராக இருந்தது. நாட்டின் உண்மையான உரிமையாளர் துருக்கியர்கள் இரண்டாம் தர குடிமக்களாக நடத்தப்பட்டனர்.

அதேசமயம் முஸ்லிம்கள் தங்கள் இராணுவ சேவையை செய்யத் தவறுபவர் களுக்கு அவர்களின் சக்திக்கு அப்பாற்பட்ட அதிகதொகை பணம் அபராத மாக விதிக்கப்பட்டது. அதேநேரம், முஸ்லிம் அல்லாதவர்களுக்கு அதே குற்றத்திற்காக அற்பமான தொகை அபராதமாக விதிக்கப்பட்டது. நாட்டின் உண்மையான குழந்தைகள் திட்டமிட்ட வகையில் போர்களில் வீரமரணம் அடைய வைக்கப்பட்டார்கள். ரஷீத் பாஷா மற்றும் அவரது கைக்கூலிகள் நடத்திய சூழ்ச்சிகளின் விளைவாக நாட்டின் தொழில்கள் மற்றும்

வர்த்தக நடவடிக்கைகள் படிப்படியாக முஸ்லிமல்லாதவர்கள் மற்றும் ஒற்றர்களின் கைகளுக்கு மாற்றப்பட்டது.

ரஷ்ய ஜார் முதலாவது நிக்கோலஸ் கத்தோலிக்கர்களுக்கு எதிராக ஜெருசலேமில் உள்ள ஆர்த்தடாக்ஸ் சமூகத்தை தூண்டிவிட்டார் என்று குற்றம் சாட்டி, பிரிட்டிசார் ஏற்கனவே மத்திய தரைக்கடலில் ரஷ்யாவின் பலத்தைப் பற்றி பதட்டமாக இருந்த பிரான்சின் பேரரசர் போனாபார்ட் III ஐ துருக்கியர்களுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான கிரிமியன் போரில் இணைந்து கொள்ள வலியுறுத்தினர். ரஷித் பாஷாவின் இராஜதந்திர சாதனைகளின் முடிவுக்காக துருக்கிய மக்களுக்கு வழங்கப்பட்ட இந்த ஒத்துழைப்பு உண்மையில் பிரிட்டிஷின் நலன்களையே பிரதான நோக்க மாக கொண்டது. அரசர், எதிரிகளின் பொய்களினாலும் போலியான நட்பினாலும் அலங்கரிக்கப்பட்ட விளம்பரங்களையும் மறைக்க முயன்ற அழிவு உத்திகளை மீண்டும் மீண்டும் கவனித்தார். அவர் அவ்வப்போது கசப்பான தனது வருத்தத்தை உணர்ந்தார், அவர் அரண்மனையில் உள்ள தனது தனிப்பட்ட பிரிவில் அடிக்கடி தன்னை மூடிகொண்டு மனவருத்தத் துடன் கலங்குவார். அவர் இந்த எதிரிகளிடம் இருந்து தனது போட்டியாளர் களை வீழ்த்தி தனது நிலையை மீண்டும்தொடரவும், நாட்டையும் மக்களையும் மீட்பதற்கும் வழிகளை தீவிரமாக தேடுவார். அல்லாஹு தலாவிடம் உதவிக்காக பிரார்த்தினை புரிவார். அவர் பிரதம மந்திரி ரஷித் பாஷாவை பல முறை அலுவலகத்திலிருந்து பணிநீக்கம் செய்தார். ஆனால் ஒவ்வொரு முறையும் இந்த நரி மனிதன், அவரே 'கிராண்ட்' மற்றும் 'கிரேட்' போன்ற புனைப்பெயர்களை கூறி எப்படியோ சமாளித்து அவரை மீண்டும் பதவியில் அமர்த்தினான். சுல்தான் அனுபவித்த ஆழ்ந்த துன்பம் மற்றும் வருத்த உணர்வு டியுபர்குலோசிஸாக வளர்ந்தது, இது இளம் பேரரசரின் வாழ்க்கையை முன்கூட்டியே முடிவுக்கு கொண்டு வந்தது.

தற்போது, முஸ்தபாரஷீத் பாஷாவுக்கு இனிவரும் வருடங்களில் உறுதி செய்ய என்ன இருக்கின்றது. அனைத்து வகையான நிர்வாக பதவிகளும், பல்கலைக்கழக பெலோஷிப், மற்றும் சட்டநீதிமன்ற தலைவர் பதவிகளும் அவருடைய சீடர்களுக்கு மத்தியில் மட்டுமே பகிரப்பட்டது. இதனால் அவர் **கஹ்த்தில்-ரிஜால்** (திறமையானவர்களின் பற்றாக்குறை) என்று அழைக்கப் படும் காலத்துக்கு வழி வகுத்தார். ஒட்டோமான் வரலாறு, ஒட்டோமான் பேரரசு **நோய்பிடித்த மனிதன்** என்று அழைக்கப்படுவதற்கு வழியாக அமைந்தது.

பொருளாதாரப் பேராசிரியரான ஓமர் அக்ஸு, ஜனவரி 22, 1989ல் துர்கியின் தினசரி செய்தித்தாளில் இதழில் வெளியிடப்பட்ட தனது கட்டுரையில் கூறுகிறார்; "1839 தன்சிமாத் ஃபிர்மன் (மறுசீரமைப்பு ஆணை) என்பது மேற்கத்தைய மயமாக்கலின்(westernization) நமது ஆரம்ப புள்ளியாகக் காட்டப்பட்டுள்ளது. மேற்கில் இருந்து நாம் கடன் வாங்க வேண்டியது தொழில்நுட்பம் என்பத இதுவரை நாம்

புரிந்து கொண்டதாக தெரியவில்லை. மறுபுறம், கலாச்சாரம் என்பது எங்களிடம் உள்ள தேசியமாக இருக்க வேண்டும். நாங்கள் மேற்கத்திய மயமாக்கல் என்பது கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொள்வதாக பார்த்தோம். முஸ்தபா ரஷித் பாஷா ஆங்கிலேயருடன் செய்துகொண்ட வர்த்தகம் ஒப்பந்தம் தொழில் மயமாக்கலின் எங்கள் முயற்சிகளுக்கு மிகக் கடுமையான அடியாக அமைந்தது".

ஸ்காட்ச் (ஒற்றர் பிரிவு) ஒட்டோமன் பேரரசின் மீது தங்கள் ஆதிக்கத்தை கொண்டிருந்தது. பாதிஷாக்கள் வீரமரணம் அடைந்தனர். நாட்டுக்கும் மக்களுக்கும் பயனுள்ளதாக எதுவாக இருந்தாலும் அது ஆட்சேபிக்க பட்டது. கிளர்ச்சிகளும் புரட்சிகளும் ஒன்றன் பின் ஒன்றாக வெடித்தன. இந்த துரோகிகளுக்கு எதிராக மிகவும் கடுமையான போராட்டத்தை நடத்தியவர் சுல்தான் அப்துல் ஹமித்கான் II (அவர்தங்குமிடம் சொர்க்கமாக இருக்கட்டும்). அதனால் அவர்கள் அவரை "சிவப்பு சுல்தான்" என்று அறிவித்தார்கள். சுல்தான் அப்துல்ஹமித் பேரரசை பொருளாதார ரீதியாக மேம்படுத்தினார் , பல பள்ளிகளையும் பல்கலைக்கழகங்களையும் திறந்தார், மற்றும் நாட்டை முன்னேற்றப்பாதைக்கு வளர்த்தார். அவர் உருவாக்கிய மருத்துவக்கல்லூரி க்கு சமனாக வியன்னாவில் உள்ளதைத் தவிர ஐரோப்பா எங்கும் இருக்க வில்லை. அரசியல் அறிவியல் பீடம் 1876/1293ல் நிறுவப்பட்டது. அவர் 1880/1297 இல் ஒரு சட்ட பீடத்தையும் கணக்காய்வாளர் பிரிவையும் நிறுவினார். 1884/1301ல் அவர் ஒரு பொறியியல் பீடத்தையும் பெண்களுக்கான ஒரு உறைவிட உயர்நிலை கல்லூரியை தங்குமிட வசதிகளுடன் நிறுவினார். டெர்கோஸ் ஏரியிலிருந்து நீர் இஸ்தான்புலுக்கு அனுப்பப்பட்டது. அவர் பர்சாவில் பட்டுப்புழு வளர்ப்பிற்கான ஒரு கல்வி நிலையத்தை திறந்தார். மற்றும் ஹல்கலியில் நிறுவப்பட்ட விவசாயம் மற்றும் கால்நடை மருத்துவ கல்லூரியை திறந்தார். ஒரு காகித தொழிற்சாலை மற்றும் கடிகோயில் ஒரு நிலக்கரி-எரிவாயு தொழிற்சாலை ஹமிதியேயில் கட்டப்பட்டது, மற்றும் பெய்ரூட் துறைமுகத்திற்கு ஒரு ஜெட்டியை நிர்மாணித்தார். ஒட்டோமான் காப்பீட்டு நிறுவனத்தை நிறுவினார். அவர் நிலக்கரி சுரங்கங்களை ஏறக்லி மற்றும் சொங்குல்டக்'ல் திறக்கப்பட்டன. அவர் மனநோயாளர்களுக்கு தங்குமடமும் ஹமீதியா அத்பால் எனும் பெயரில் மருத்துவ மனை ஒன்றையும் சிஸ்லியில் நிர்மாணித்தார். ஏழைகள், வீடற்றவர்களுக்கு வீடு மற்றும் ஊனமுற்றோர்களுக்காக தாருலசீஸை நிறுவினார். அவர் அவரது காலத்தில் உலகின் மிக சக்திவாய்ந்த இராணுவத்தை உருவாக்கினார். அவர் பழைய மற்றும் பாவனையில் இல்லாத கப்பல்களை கோல்டன் ஹோர்னுக்கு இழுத்துச் சென்றார். உயர்தர குருசர் கப்பல்கள் மற்றும் ஐரோப்பாவில் புதிதாக தயாரிக்கப்பட்ட போர்க்கப்பல்களை வாங்கி கடற் படையை வலுப்படுத்தினார். மற்றும் அவர் இஸ்தான்புல்-எஸ்கிசெஹிர், அங்காரா, எஸ்கிசெஹிர்-அதனா-

பாக்தாத், மற்றும் அதனா-டமாஸ்கஸ்-மதீனா ரயில்வே என்பவற்றை அமைத்தார். இதனால் உலகின் மிக நீளமான ரயில்வே நெட்வொர்க் அந்த நாட்களில் ஒட்டோமான் நாட்டில் இருந்தாது. இந்த வேலைகள் அப்துல்ஹமித் கான் (அவருடைய தங்குமிடம் சொர்க்கமாக இருக்கட்டும்) இன்று வரை ரயிலில் பயணம் செய்யும் மக்கள் அதை பெருமையுடன் பார்கிறார்கள். துருக்கி முழுவதும் உள்ள அனைத்து ரயில் நிலையங்களும் ஒரே நேரத்தில் அப்துல்ஹமித் கானின் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டவை..

யூதர்களுக்கு பாலஸ்தீன பிரதேசத்தில் ஒரு யூத அரசை நிறுவ வேண்டும் என்பது பிரிட்டிஷ் இனால் திட்டமிட்டு ஆதரிக்கப்பட்டு ஊக்குவிக்கப்பட்டது. அப்துல் ஹமித் கான் அவர்கள் சியோனிச நடவடிக்கைகள் மற்றும் அவர்களின் அபிலாஷைகளைப்பற்றி அறிந்த புத்திசாலியாக இருந்தார், எனவே இப்பகுதியில் ஏற்படக்கூடிய யூத அச்சுறுத்தல் பற்றி நன்கு அறிந்திருந்தார். பாலஸ்தீனியர்களின் நிலத்தை எவரும் யூதர்களுக்கு விற்க வேண்டாம் என்று பலஸ்தீனர்களுக்கு அறிவுறுத்தினார். உலகளாவிய சியோனிஸ்ட் அமைப்பின் தலைவர் தியோடர் ஹெர்ஸ்ல், ரப்பி மோஷே லெவியை அழைத்துக்கொண்டு, சுல்தான் அப்துல்ஹமீட்டைச் சந்தித்து யூதர்களுக்கு நிலத்தை விற்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். சுல்தானின் பதில் இதுதான்: "உலகம் முழுவதும் உள்ள நாடுகள் என்னிடம் வந்து அனைத்து உலக பொக்கிஷங்களையும் என் முன் கொட்டினாலும், நான் உங்களுக்கு மிகச்சிறிய நிலத்தைகூட கொடுக்க மாட்டேன். இந்த நிலத்துக்காக எங்கள் மூதாதையர்களின் உயிர்களை இழந்திருக்கிறார்கள், அது இன்று வரை பாதுகாக்கப்படுகிறது, விற்பனைக்கு இல்லை."

இதன்பிறகு, யூதர்கள் இத்திஹத் வே தராக்கி (ஒற்றுமையும் முன்னேற்றம்) என்ற கட்சியுடன் ஒத்துழைத்தனர். பூமியில் உள்ள அனைத்து தீய சக்திகளும் சுல்தானுக்கு எதிராக ஒன்றிணைந்தது, இறுதியில் அவரை 1909/1327ல் வீழ்த்தியது. அனைத்து முஸ்லீம்களையும் அநாதையாக்கியது. ஒன்றியத்தின் மற்றும் முன்னேற்றக் கட்சியின் தலைவர்கள் மாநிலத்தின் மிக உயர்ந்த பதவிகளை மார்க்கத்தின் எதிரிகள் ஃப்ரீமேசன்களுடன் (ஒற்றர்களுடன்) இணைந்து நிரப்பினார்கள். உண்மையில், ஷேக்-உல்-இஸ்லாமாக நியமிக்க ப்பட்ட ஹைரி மற்றும் மூசாகாசிம் ஃப்ரீமேசன்களாக இருந்தனர். அவர்கள் நாடு முழுவதும் இரத்தத்தை ஓட்டினார்கள். பால்கன், (டார்டனெல்லஸ்), கனக்கலே, ரஷ்ய மற்றும் பாலஸ்தீனியப்போர்கள், இது உண்மையில் பிரிட்டிஷ் அடியாட்களால் ஏற்படுத்தப்பட்டது. அப்துல்ஹமித் கான் நிறுவிய மிகப்பெரிய ஆயுதப்படை துரோகமான பரந்த திட்டங்கள் மூலம் அழிக்கப் பட்டது. அவர்கள் பல்லாயிரக்கணக்கான அப்பாவி இளைஞர்களை தியாகி களாக்கி விட்டு மற்ற காலங்களை விட நாட்டிற்கு ஒற்றுமையும் பாதுகாப்பும் தேவையான ஒரு நேரத்தில்

நாட்டை விட்டு தப்பி ஓடி தாங்கள் துரோக குணங்களுக்கு சொந்தமானவர்கள் என்பதை தங்களே நிரூபித்தனர்.

முஸ்லிமல்லாத சகநாட்டு மக்களினால் ஒட்டோமான் பேரரசின், உள்நாட்டில் மிஷனரிபள்ளிகள் திறக்கப்பட்டன ஒட்டோமான் நிர்வாகத்துக்கு எதிராக தேவாலயங்களும் எழுந்தன. பள்ளிகளுக்கு ஆசிரியர்கள் என்றும் 'தேவாலய ங்களுக்கு பாதிரியார்கள் என்ற போர்வையிலும் கறுப்பு தொப்பியுடன் உளவாளிகள் அனுப்பப்பட்டனர். பத்திரிகை நிருபர்கள் என்று அழைக்கப்படு பவர்கள் பணம் மற்றும் ஆயுதங்களை எடுத்துக்கொண்டனர். அவர்கள் எங்கு சென்றாலும். கிளர்ச்சிகளை தூண்டினர். பெரிய கிளர்ச்சிகள் வெடித்தன. ஆர்மீனியர்கள் மற்றும் பல்கேரியர்கள் கிரேக்கர்களால் நடத்தப்பட்ட படுகொலைகள் இன்னும் வரலாற்றில் மனித கொடுமையின் கறைகளாக படிந்துள்ளது. மீண்டும், பிரிட்டிஷ்சார் கிரேக்கர்களை இஸ்மிருக்கு அழைத்து வந்தனர். அல்லாஹு தலா துருக்கிய தேசத்திற்கு கருணை காட்டினான், அதனால் அவர்கள் இந்த அழகான நாட்டை இறுதியில் சுதந்திரத்திற்கான பெரும் போராட்டத்தினால் பாதுகாக்க முடிந்தது.

ஒட்டோமான் பேரரசு வீழ்ச்சியடைந்தபோது, உலகம் முழுவதும் முற்றிலும் குழப்பமான நிலையில் இருந்தது. ஒட்டோமான் பேரரசு நாட்டுகளுக்கிடை யில் ஒரு தடுப்பு சுவர் போல் சேவை செய்து வந்தது. அது முஸ்லிம்கள் மற்றும் காபிர்களுக்கிடையே போரைத் தடுக்கும் ஒரு பாதுகாவலனாக இருந்தது. சுல்தான் அப்துல்ஹமித் கான்'க்கு பிறகு இனி எந்த நாட்டிலும் ஆறுதலும் அமைதியும் இல்லை. ஐரோப்பா நாடுகளில் படுகொலைகள் ஒருபோதும் முடிவுக்கு வரவில்லை. அதன் நாடுகள் உலகப் போரில் முதலில் நுழைந்தன, பின்னர் இரண்டாம் உலகப் போருக்கு உட்பட்டது, அதன் பின்னர் கம்யூனிஸ்ட் படையெடுப்பு மற்றும் கொடுமை கீழ் நசுக்கப்பட்டது.

ஆங்கிலேயர்களுடன் ஒத்துழைத்து பின்னால் இருந்து ஒட்டோமான்களைத் தாக்கிய அந்த நாடுகள் இப்போது மிகவும் பரிதாபமாக உள்ளன. அவர்கள் ஒருபோதும் அமைதியை மீண்டும் அனுபவிக்கப் போவதில்லை என்று தோன்றியது. அவர்கள் தங்கள் தவறுகளுக்காக மிகவும் வருந்தினார்கள். ஒட்டோமான் கலீபாவின் பெயரில் மீண்டும் குத்பா செய்தார்கள். இறுதியாக பிரிட்டிஷினால் ஒரு இஸ்ரேல் அரசு பாலஸ்தீனத்தில் நிறுவப்பட்டது. ஒட்டோமானின் இருப்பு எவ்வளவு மதிப்புமிக்கது என்பது தெளிவாகியது. இஸ்ரேலியக் கொடுமையின் கீழ் பாலஸ்தீனியர்கள் காட்டுமிராண்டித் தனமாக பாதிக்கப்பட்டுள்ளனர், செய்தித்தாள்கள் மற்றும்உலகம் முழுவதும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் காட்டப்பட்டது. எகிப்திய வெளிநாட்டு அமைச்சர் அஹ்மத் இஸ்மத் அப்துல் மஜித் 1990 இல் பின்வரும் அறிக்கையை வெளியிட்டார்: "ஒட்டோமான்களின் காலத்தில் எகிப்து அதன் மிகவும் வசதியான மற்றும் அமைதியான நாட்களை அனுபவித்தது."

ஐரோப்பாவின் கிறிஸ்தவ நாடுகளிலும் அமெரிக்காவின் தேவைகள் இருந்த இடங்களிலும் கிறிஸ்தவ மிஷனரிகள் தவிர்க்க முடியாதவர்களாக இருந்தனர். இந்த மிஷனரிகள் சேவையை வழங்குவதற்கு பின்னால், மறைந்திருக்கும் நன்மைகளை வேட்டையாடுபவர்கள் மற்றும் அமைதியை கெடுப்பவர்கள். ஈஸா அலைஹி-சலாமை தெய்வீகப் படுத்துபவர்கள். அல்லாஹுதலா இதுபோன்ற அவர்களின் தீங்குகளில் இருந்து நம்மைப் பாதுகாக்கட்டும். மேலும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நாடுகளை கிறிஸ்தவ நாடுகளைச் சார்ந்ததாக உருவாக்குவதே முக்கியமான பணியாக இருந்தது. மிஷனரிகள் அவர்கள் செல்லும் நாடுகளின் மொழிகள், பழக்கவழக்கங்கள் மற்றும் மரபுகள் துல்லியமாக கற்றுக்கொள்கிறார்கள். அவர்கள் ஒரு நாட்டில் தங்கள் பணியைத் தொடங்கியவுடன், அவர்கள் அதன் அரசியல் நிலை, இராணுவ சக்தி, புவியியல் நிலை, பொருளாதார நிலை, மற்றும் மத அமைப்புகள் பற்றி மிக துல்லியமான சிறிய விவரங்களுடன் அவர்களின் கண்டுபிடிப்புகளை அவர்கள் பணிபுரியும் கிறிஸ்தவ அரசாங்கத்திற்கு தெரிவிக்கிறார்கள். அவர்கள் எங்கு சென்றாலும் அவர்களுக்கு ஒத்துழைக்க ஆட்களை தேடி அவர்களை வேலைக்கு அமர்த்துகிறார்கள். அதே பூர்வீக மக்களின் பெயர்களை வைத்திருந்தாலும் அவர்கள் ஒன்றில் இப்போது கிறிஸ்தவத்துக்கு மாற்றப்பட்டுள்ள அறிவற்றவர்கள் அல்லது பணிக்கு ஆமர்த்தப்பட்ட துரோகிகள்.

ஒரு மிஷனரி நபர் அவர் தனது பணியை மேற்கொள்ளும் நாட்டில் பயிற்சி பெற்றவர் அல்லது அதே நாட்டில் பயிற்சி பெற்ற மற்றொரு மிஷனரியால் பயிற்சி அளிக்கப்பட்டவராக இருப்பார்.

குல்ஹான் ஃபிர்மானுக்கு பிறகு மிஷனரி நடவடிக்கைகள் அதிகரித்தன. ஒற்றன் ரஷீத்பாஷா, அவற்றை தயாரித்து அவர்களுக்கு அறிவித்தார். அனடோலியாவின் மிக அழகான இடங்களில் கல்லூரிகள் திறக்கப்பட்டன. 1859/1276ல் ஃபிரத் (யூப்ரடீஸ்) கல்லூரி ஹார்புட்டில் திறக்கப்பட்டது. இந்த பள்ளியை நிர்மாணிப்பதில் செலவின் அளவு அதிகமாக கருதப்படவில்லை. இதற்கிடையில் ஹார்பூட் சமவெளியில் மிஷனரிகள் அறுபத்திரண்டு மையங்களை நிறுவினார்கள். இருபத்தொரு தேவாலயங்கள் கட்டப்பட்டன. ஆர்மீனிய கிராமங்கள் அறுபத்தாறில் அறுபத்து இரண்டில் மிஷனரி நிறுவனங்கள் நிறுவப்பட்டன, மூன்று கிராமங்களுக்கு ஒரு தேவாலயம் கட்டப்பட்டது. அனைத்து ஆர்மீனியர்களும், அவர்களின் வயதைப் பொருட் படுத்தாமல் ஒட்டோமான்களுக்கு எதிராக விரோதத்தை காட்டினார்கள். பெண் மிஷனரிகள் ஆர்மீனிய பெண்களுக்கும் மற்றும் சிறுமிகளுக்கும் பயிற்சி அளிக்க எந்த முயற்சியும் எடுக்கவில்லை. பிரபல பெண் மிஷனரி மரியா ஏவெஸ்ட் தனது **'றோமன்ஸ் ஆஃப் மிஷன்'** என்ற புத்தகத்தில் அவரது விளக்கத்தை பின்வருமாறு எழுதினார்; பின்னர் அது வெளியிடப்பட்டது: "நாங்கள் ஆர்மீனியர்களின் ஆன்மாவை ஊடுருவினோம். அவர்களின்

வாழ்க்கையில் நாங்கள் ஒரு புரட்சியை நடத்தினோம்." இந்த செயல்பாடு ஆர்மீனிய மக்கள் தொகையை கொண்ட எந்த இடத்திலும் நடத்தப்படுகிறது. காஜியான்டெப்பில் உள்ள ஆன்டெப் கல்லூரி,, மெர்சிஃபோனில் உள்ள அனடோலு கல்லூரி மற்றும் இஸ்தான்புல்லில் உள்ள ராபர்ட் கல்லூரி சில உதாரணங்கள் மட்டுமே. உதாரணமாக, மெர்சிஃபோன் கல்லூரியில் துருக்கிய மாணவர்கள் எவரும் இல்லை. அதில் உள்ள நூற்று முப்பத்தைந்து மாணவர்கள், நூற்றி எட்டு பேர் ஆர்மீனியர்கள் மற்றும் இருபத்தேழு பேர் உள்ளூர் கிரேக்கர்கள். இந்த மாணவர்கள் அனடோலியா வின் அனைத்து பகுதிகளிலிருந்தும் சேகரிக்கப்பட்ட விடுதி மாணவர்கள். இயக்குனர் மற்றவர்களைப் போலவே பாதிரியாராக இருந்தார். இதற்கிடையில் ஒரு வகையான கொதிப்பு இயக்கம் அனடோலியாவில் தொடங்கியது. ஆர்மீனிய சமூகத்தில் இரகசியமாக இருந்த போராளிகள் முஸ்லிம்களை இரக்கமின்றி கொன்றது மற்றும் முஸ்லிம் கிராமங்களை எரித்தது, ஒட்டோமான்கள் நாட்டின் காவலர்கள், அதன் உரிமையாளர்களுக்கு வாழ்வதற்கான உரிமையை அங்கீகரிக்கவில்லை. ஆர்மீனியர்களால் பின்தொடரப்பட்டது மற்றும் 1893/1311ல் பழிவாங்கும் நடவடிக்கை மற்றும் அடக்குமுறை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. பின்னர், போராளிகள் அந்த கல்லூரி களில் மறைத்து வைக்கப்பட்டு அவர்கள் நாசகார நடவடிக்கைகள் அனைத்தையும் அங்கு திட்டமிட்டனர் என்பது கண்டு பிடிக்கப்பட்டது., மற்றும் அவர்களின் தலைவர்கள் கயாயன் மற்றும் துமயன் எனும் இரண்டு கல்லூரி ஆசிரியர்கள் என்று பெயரிடப்பட்டது. இதன் போது இந்த இரண்டு ஆர்மீனிய வில்லன்களைக் காப்பாற்றுவதற்காக மிஷனரிகள் உலகளாவிய ரீதியில் ஆர்பாட்டங்களை செய்தனர். அமெரிக்கா மற்றும் இங்கிலாந்தில் பொது ஆர்ப்பாட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. இந்த நிகழ்வு பிரிட்டனுக்கும் ஒட்டமான் பேரரசுக்கும் முரண்பாட்டுக்கு ஒரு காரணமாக இருந்தது. இன்னும் விசித்திரமானது என்னவென்றால், 1893 இல் பிரிட்டிஷ் மிஷனரிகள் ஆர்ப்பாட்டங்கள் ஏற்பாடு செய்தபோது மெர்சிஃபோன் அனடோலு கல்லூரியின் இயக்குனர் லண்டனில் இருந்தார். ஆர்ப்பாட்டம் நடக்கும்போது அவர்களுடனும் அவர் இருந்தார். அனடோலியாவில் கிறிஸ்தவர்களால் நிகழ்த்தப்பட்ட முஸ்லிம்களின் படுகொலையை புத்தகங்களில் பின்னர் கிறித்துவ எழுத்தாளர்கள் முற்றிலும் முரணான தகவல்களை எழுதினார்கள். இந்த பொய்களில் ஒன்று அரபு அகராதி **அல்-முன்ஜித்** என்ற புத்தகத்தின் மொராஷ் அத்தியாயத்தில் எழுதப்பட்டது. இது பெய்ரூட்டில் தயாரிக்கப்பட்டது.

1893ல், பைபிளின் மூன்று மில்லியன் பிரதிகளும் மற்றும் நான்கு மில்லியன் கிறிஸ்தவ புத்தகங்களின் பிரதிகளும் துருக்கியில் இருந்த ஆர்மீனியர் களுக்கு மிஷனரிகளால் விநியோகிக்கப்பட்டன. அதன்படி, ஆர்மீனியர்கள் ஒவ்வொருவருக்கும் புதிதாகப் பிறந்த

குழந்தைகளுக்கு சேர்த்து, ஏழு புத்தகங்கள் வழங்கப்பட்டன. இலட்சக்கணக்கான டாலர்கள் ஆண்டுதோறும் அமெரிக்க மிஷனரிகளால் மட்டுமே செலவிடப்பட்டது. இந்த பணம் எவ்வளவு பெரியது என்பதை தெளிவுபடுத்துவதானால் நாங்கள் இந்த பணத்தை கொண்டு ஆயிரத்து எழுநூற்றி இருபத்தி எட்டு மெர்சிஃபோன் அனடோலு கல்லூரியை போன்ற பிரம்மாண்டமான பள்ளிகளை கட்டியிருக்க முடியும் என்று குறிப்பிட விரும்புகிறோம். மத வைராக்கியத் தினால் மிஷனரிகளை இவ்வளவு பெரிய பணத்தை செலவிட்டார்கள் என்று கருதுவது சுத்த அப்பாவித்தனம். ஏனெனில் மிஷனரி களின் பார்வையில் மதம் என்பது ஒரு வியாபாரம். அனடோலியாவில் மிஷனரிகள் செலவழித்த இந்த தொகை இஸ்லாத்தையும் ஒட்டோமானையும் அழிக்கும் நோக்கத்திற் காக, அவர்கள் "துருக்கியர்கள் ஆர்மீனியர்களை படுகொலை செய்கிறார்கள் அவர்களுக்கு உதவுவோம்." என்ற பிரச்சாரம் மூலம் சேகரித்த பணத்தின் ஒரு சிறிய பகுதி.

அதே ஆண்டுகளில் ஏதென்ஸில் மற்றும் யெனிசெஹிரில் இருந்த கிரேக்கர் கள், கல்லூரிகள் மற்றும் தேவாலயங்களில் இருந்த மிஷனரிகளால் தூண்டப்பட்டு கலகம் விளைவித்தனர். இதற்கு ஆதரவாக பிரிட்டனில் இருந்து ஆயுதப் படைகளின் உதவியுடன் இலட்சக்கணக்கான முஸ்லிம்கள் குழந்தை கள், மற்றும் பெண்கள் கொல்லப்பட்டனர். இந்த கலகம் 1895/1313ல் அத்ஹம பாஷாவின் கட்டளையின் கீழ் இருந்த படைகளால் அடக்கப்பட்டது. இந்த வெற்றி கிரேக்கப் படைகளுக்கு எதிராக மட்டுமல்ல, உண்மையான சூழ்ச்சிக்காரரர் பிரிட்டிஷ் படைகளுக்கு எதிராகவும் சாதித்தது.

பிரிட்டன் மூன்று அதிகார மட்டங்களினால் நிர்வகிக்கப்படுகிறது: அரசன், பாராளுமன்றம், மற்றும் தேவாலயம் (அதாவது வெஸ்ட்மின்ஸ்டர்).1512/918 வரை,பாராளுமன்றம் மற்றும் ராஜாவின் அரண்மனை வெஸ்ட்மின்ஸ்டரு க்குள் இருந்தது. 1512 இல் ஏற்பட்ட தீக்கு பிறகு, ராஜா பக்கிங்ஹாம் அரண்மனைக்கு குடிபெயர்ந்தார், பாராளுமன்றம் மற்றும் தேவாலயம் ஒரேகூரையின் கீழ் இருந்தது. பிரிட்டனில் தேவாலயமும் அரசும் ஒன்றோ டொன்று இணைக்கப்பட்டுள்ளன. அரசர்கள், ராணிகள் தேவாலயத்தில் பேராயரால் முடிசூட்டப் படுகிறார்கள்.

"சமூக சாய்வுகள்" என்ற தலைப்பில் ஒரு அறிக்கையின் பிரிட்டிஷ் மத்திய புள்ளிவிவரவியல் அலுவலகம் வெளியிட்டது. அதன்படி, பிரிட்டனில் பிறக்கும் நூறு குழந்தைகளில் இருபத்தி மூன்று, சட்டவிரோத உறவின் விளைவாக பிறக்கின்றன.

பிரிட்டிஷ் பெருநகர போலீஸ் ஸ்காட்லாந்து யார்ட்டினால் அறிவிக்கப்பட்ட புள்ளிவிவர அறிக்கையின்படி.(இஸ்தான்புல்லில் மே7, 1990 தேதியிட்ட தினசரி செய்தித்தாள் வெளியிடப்பட்டது), லண்டனில் வாழ்க்கையில் இனி பாதுகாப்பு இல்லை, அது குறிப்பாக பெண்களுக்கு மிகவும் ஆபத்தான நகரமாக மாறியுள்ளது.. பிரிட்டிஷ் போலீஸ் அறிக்கையின்படி, கடந்த பன்னிரண்டு ஆண்டுகளில்

அனைத்து வகை குற்றங்களிலும் அதிகரிப்பு உள்ளது; முக்கியமாக கற்பழிப்புகள் மற்றும் கொள்ளைகள். குடும்பம், அனைத்து நாடுகளிலும் மதங்களிலும், ஒரு ஆணும் பெண்ணும் முறையான வழியில் ஒன்றாக இணைவதால் உருவாக்கிய ஒரு நிறுவனம். மறுபுறம், பிரிட்டிஷ் சட்டங்கள் இரண்டு ஆண்களின் ஓரினச்சேர்க்கையை சட்ட பூர்வ மாக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டுள்ளன.

இது நவம்பர் 12, 1987,தேதியிட்ட தினசரி இஸ்தான்புல் செய்தித்தாளில் 'பிரிட்டிஷ் இராணுவத்தில் ஊழல்' என்ற தலைப்பில் ஒரு அறிக்கை வெளிவந்தது. அதில் ராணி இரண்டாம் எலிசபெத்துக்கு சொந்தமான படைப்பிரிவில் காவலர்களில் புதிதாக இணைந்த லான்ஸ் கோர்ப்பிரல்கள் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளானார்கள் மற்றும் சோகமான சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டனர்.

டிசம்பர் 28, 1990, **துருக்கியி** தினசரி இதழில் வெளியிடப்பட்ட ஒரு ஆய்வுக் கட்டுரையில், பிரிட்டிஷ் தேவாலயங்கள் ஓரினச்சேர்க்கையாளர் களின் விகிதம் 15 சதவீதத்தை எட்டியுள்ளன. லோட்ஸ் அண்ட் கொமன்ஸ் வீடுகளில் இன்னும் அதிகம் என்றும். அந்த அநாகரிகங்கள் பாராளுமன்றம் வரை பரவி உள்ளன. மற்றும் Profumo போன்ற ஊழல்கள் வெடித்தது. ஓரின சேர்க்கையாளர்களின் ஒரு அமைப்பு இருக்கும் முதல் ஐரோப்பிய நாடு பிரிட்டன். இது போன்ற அநாகரிகங்கள் நடைமுறையில் இருக்கும் இடங்களில் கூட இஸ்லாத்திற்கு எதிரான பிரிட்டிஷ் விரோதம் மிகவும் வெளிப்படையானது. லண்டனின் பின் வீதிகளில் விபச்சாரம், நடைபயிற்சி மற்றும் அனைத்து வகையான அநாகரீகங்கள் செய்யப்படுகின்றன, இவ்வகையான அனாச்சாரங்கள் நடக்கும் இடங்களுக்கு இஸ்லாமிய நிறம் புனிதமானது என்று கூறும் பச்சை வண்ணம் பூசப்பட்டுள்ளன. இந்த அருவருப்பான கூடுகளின் கதவுகளில் மக்காவை சித்தரிக்கும் பலகைகள் தொங்குகின்றன..

பிரிட்டிஷ் தினசரி செய்தித்தாள் **கார்டியனில்** வெளியிடப்பட்ட அறிக்கை யின்படி, இரண்டு இலட்சம் பெண்கள் அவர்கள் பருவ வயதை அடைந்தபோது அவர்கள் பாலியல் தொந்தரவு செய்த தங்கள் தந்தையருக்கு எதிராக சட்ட நீதிமன்றங்களை நாடினர், பாதுகாப்பு கேட்டனர். பிபிசியின் கூற்றுப்படி, மறுபுறம், அந்த எண்ணிக்கை சட்ட நீதிமன்றங்களை நாடாதவர்களையும் சேர்த்து சுமார் ஐந்து மில்லியன் பெண்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.

நிலப் பங்குகளைப் பொறுத்தவரை, பிரிட்டன் உலகம் முழுவதிலும் மிகவும் சமத்துவமற்ற அமைப்பு உள்ளது. பிரிட்டிஷ் நடத்திய இடைவிடாத போராட்டங்கள் பிரபுக்களுக்கு எதிரான விவசாயிகள் வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இன்று பிரிட்டிஷ் நிலத்தின் எண்பது சதவிகிதம் சலுகை பெற்ற சிறு குளுவினருக்குரியது என்பது கூட ஒரு உண்மையாகும்.

**துர்கியி** நாளிதளின் மே மாதம் 31,1992 ஞாயிறு பதிப்பில் எழுதப்பட்டுள்ளது" இங்கிலாந்தில் பொருளாதார சரிவுகாரணமாக ஏற்பட்ட வேலையின்மை, வறுமை, மற்றும் மனச்சோர்வினால் தற்கொலைகள் அதிகரிக்கிறது என்று தெரிவிக்கப்பட்டது. பிரிட்டிஷ் மருத்துவ காலஇதழ், ஆக்ஸ்போர்டு மருத்துவ மனையைச் சேர்ந்த இரண்டு மருத்துவர்கள் செய்த ஒரு ஆய்வை மேற்கோள் காட்டுகின்றது; பிரிட்டனில் ஒவ்வொரு ஆண்டும் ஏறக்குறைய ஒரு இலட்சம் பேர் தற்கொலை செய்து கொள்கிறார்கள், அவர்களில் 4500 பேர் இறந்தனர். அவர்களில் 62 சதவீதம் பேர் இளம் பெண்கள். வேறு எந்த நாடும் பிரிட்டனை போல் சூழ்ச்சி செய்பவர்கள், துரோகிகள், வைராக்கியமானவர்கள் அல்ல. தங்களின் ஜெட், குண்டுகள், எறிகணைகள் மூலம் இலட்சக்கணக்கான முஸ்லிம்களை ஒவ்வொரு வருடமும் கொன்றவர்கள். இப்பொழுது ஒவ்வொரு ஆண்டும் அவர்களின் சொந்த குடிமக்கள் இலட்சக்கணக்கான மனிதர்கள் தற்கொலை செய்யும் அளவுக்கு தள்ளுகிறார்கள் என்பது காணக்கூடியதாக இருக்கிறது. மறுபுறம், அயர்லாந்து பிரிட்டனுக்கு ஒரு தொல்லையாக மாறியுள்ளது. அவர்கள் நமக்காக வைத்த வலையில் அவர்களே விழும் அந்த மகிழ்ச்சியான நாட்களைக் காண நாம் அனைவரும் வாழ்வோம் என்று நம்புகிறோம்.

சையித் அப்துல்ஹகிம் அர்வாசியின்(ரஹ்மதுல்லாஹி அலைஹி)அவர்களின் அருள்பாலிக்கப்பட்ட பெயரினால் நாங்கள் பரக்கத்தை எதிர்பார்த்து, இந்த இரண்டாவது பகுதியை அவர்கள் ஆங்கிலேயர்களை வரையறுக்கும் பின்வரும் அறிக்கைகளுடன் எங்கள் புத்தகம் முடிக்க விரும்புகிறோம். அது தொடர்பில்லாதவற்றை தவிர்த்துவிட்டு, அனைத்து முக்கிய விடயங்களையும் அடக்கியுள்ளது.

"பிரிட்டிஷார் இஸ்லாத்தின் மிகப்பெரிய எதிரிகள். இஸ்லாத்தை ஒரு மரத்திற்கு ஒப்பிட்டு பார்ப்போம்; மற்ற காஃபிர்கள் அவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் இந்த மரத்தை அதன் அடியிலுள்ள இடத்தில் வெட்டி வீழ்த்துவார்கள். அதனால் முஸ்லிம்கள் அவர்கள் மீது விரோதத்தை உணரத் தொடங்குவார்கள். இன்னும் இந்த மரம் சிலநேரங்களில் வேர்களை ஊன்றி மரம் தளிர்விட தொடங்கலாம். ஆனால், பிரிட்டிஷ் கொள்கை, மறுபுறம், முற்றிலும் வேறுபட்டது. அவர் இந்த மரத்திற்கு சேவை செய்வார்கள்; அவர் உணவளிப்பார்கள். அதனால் முஸ்லிம்கள் அவர்கள்மேல் விருப்பை வளர்த்துக் கொள்வார்கள். எனினும், ஒரு இரவு, அனைத்து மக்களும் நன்றாக தூங்கும்போது, அவர்கள் அதன் வேருக்கு யாரும் கவனிக்காமல் விஷம் வைப்பார்கள், மரம் நன்றாக காய்ந்துவிடும். மேலும் ஒருபோதும் முளைக்காது. அவர்கள் முஸ்லிம்களை ஏமாற்றிக்கொண்டே இருப்பார்கள். முஸ்லிம்களுடன் தனது ஒற்றுமையை வெளிப்படுத்தி கொண்டிருப்பர்கள் . இந்த விஷமிடுதல் உதாரணம் இஸ்லாத்தை அழிக்கும் பிரிட்டிஷ் தந்திரத்தை பிரதிபலிக்கிறது. இஸ்லாமிய அறிஞர்களை

இஸ்லாமிய நூல்களை மற்றும் இஸ்லாமிய கற்றலை இல்லாமலாக்குவது. அதற்கு மாற்றீடாக, நயவஞ்சக த்தனமான அறிவற்றவர்களை கொண்டு பதிலுக்கு வேலைக்கு அமர்த்தி, அவர்களுக்கு பணம், பதவி, பதவிகள் மற்றும் பெண்கள் போன்ற உணர்ச்சிகரமான ஆசைகளை திருப்திப்படுத்துவதன் மூலம் இஸ்லாத்தை முற்றிலுமாக அழிப்பது.”

அல்லாஹுதஆலா அனைத்து முஸ்லிம்களையும் அனைத்து விதமான தீமைகளிலிருந்தும் பாதுகாக்கட்டும். அரசியல்வாதிகள், இஸ்லாமிய அறிஞர்கள் மற்றும் அனைத்து முஸ்லிம்களையும் மிஷனரிகள் மற்றும் பிரிட்டிஷாரின் வஞ்சகம் மற்றும் தந்திரங்களிலிருந்தும், அவர்களுக்கு சேவை செய்வதிலிருந்தும் பாதுகாக்கட்டும்!

## பிரிவு மூன்று

# குலாசத்துல் கலாம்

**யூசுப் நப்ஹானி'யின், (இறப்பு. பெய்ரூட் 1932/1305)யின் குலாசத் உல் கலாம் என்ற கையேட்டின் மொழிபெயர்ப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.**

ஹம்து (பாராட்டும் மற்றும் நன்றியும்) அல்லாஹு தலாவுக்கு இருக்கும்! அவன் விரும்பும் எவரையும் ஹிதாயத்தை கொடுத்து சரியான வழியில் நடத்திவைக்கிறான் அதன் மூலம் அவன் இரட்சித்து அருள்பாலிக்கின்றான். மற்றும் அவன் விரும்பும் எவரையும் ளலாலத் (தவறான வழியில்) விட்டு விடுவான். [வழிகேட்டிலிருந்து பாதுகாப்பை கேட்பவர்களுக்கு மற்றும் நித்திய இன்பத்தை அடைய விரும்புபவர்களின் பிரார்த்தனைகளை அவன் நீதியுடன் ஏற்றுக் கொள்கிறான்.] எங்கள் எஜமான் முஹம்மது (அலைஹி-சலாம்) மீது சலவாத்தை சொல்கிறோம், அவர் அனைத்து தீர்க்கதரிசிகளிலும் மற்றும் தேர்ந்தெடுக்கபட்டவர்களிலும் மிகவும் உயர்ந்தவர். அவர்மீது அல்லாஹ் அவனுடைய எல்லையற்ற சலாத்தையும் சலாமையும் பொழி வானாக; மேலும் அவனுடைய அருள்பாலிப்புகள் அஹ்லு பைத்துகள், மற்றும் அனைத்து அஷ்ஹாபுகள் மீதும் உண்டாகட்டும், அவர்கள் வானத்தில் நட்சத்திரங்களைப் போன்று பூமியில் பிரகாசிக்கிறார்கள்.

இந்த சிறிய கையேட்டில் சில பக்கங்களே உள்ளன. ஆயினும் அதில் உள்ள அறிவு மரியாதைகுரியது மிக வளமானது. அறிவு மற்றும் ஞானம் கொண்ட மக்கள் அதை பாரபட்சமின்றி படித்தால் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள். அல்லாஹு தஆலாவின் ஹிதாயத்தை பெற்றவர்கள், மற்றும் சரியான வழியில் நடப்பவர்கள் அதை உடனடியாக நம்புவார்கள்.

இந்த கையேடு **சிராத்தல்-முஸ்தகிம்** (உண்மையான பாதை), அல்லாஹு தஆலா முஸ்லிம்களுக்கு வழங்கிய ஒரு நற்பேறு. அவன் தனது எதிரிகளை ளலாலத்தில் விட்டுவிட்டான். நான் இந்த நூலுக்கு **குலாசத் உல் கலாம் ஃபி தர்ஜிஹி தீனில் இஸ்லாம்** அதாவது 'இஸ்லாமிய மதத்தை தெரிவு செய்ய உதவும் அறிக்கைகளின் சுருக்கம்' என்று பெயரிட்டேன்.

ஓ மனிதனே, தன்னை நித்திய வேதனையிலிருந்து காப்பாற்றி எல்லையற்ற நற்பேறுகளை அடைய விரும்புபவனே! நீ உனது முழு

நேரத்தையும் இந்த மிக முக்கியமான,மிகப்பெரிய உண்மையை பற்றி யோசித்துக்கொண்டிருந்தால், நீ உனது ஆற்றல் அனைத்தையும் பயன்படுத்தி முடிவில்லா வேதனை யிலிருந்தி உன்னை பாதுகாத்துக் கொள்வதற்கான வழிமுறைகளைக் கண்டறியுவும், எப்போதும், எல்லா இடங்களிலும், நீ அனைத்து மக்களுடனும் ஒத்துழைத்து உனது மிகச்சிறந்த மனித ஆற்றல்களை பயன்படுத்தி அந்த இலக்கை அடைய முயற்சிகள் அனைத்தும் செய்தாலும், இந்த பொருளின் முக்கியத்துவத்துடன் ஒப்பிடும் போது அது மிகவும் அற்பமானது. உண்மையில், இவை அனைத்து உலக பொக்கிஷங்களுக்கும் பதிலாக ஒரு மணல் தானியத்தைக் கொடுப்பதற்கு ஒத்ததாக இருக்கும்.

இந்த உண்மையின் முக்கியத்துவத்தை எங்களின் இந்த எழுத்து மூலம் விளக்க முடியாது. எங்களுடைய இந்த எழுத்து புத்திசாலிகளுக்கு சில சகிக்கினைகளை (தடயங்களை) கொடுப்பதை ஒத்தது. ஒரு புத்திசாலி நபருக்கு உண்மையான நோக்கத்தை உணர ஒரு அடையாளம் போதுமான தாக இருக்கும். எனவே, நான், இந்த சிந்தனையை தூண்டுவதற்கு சில குறிப்புகளை கொடுக்கிறேன். மக்கள் இயற்கையாக அவர்களுக்கு பழக்கப் பட்டவைகளை விரும்புகிறார்கள். அவர்கள் அவற்றை செய்வதை நிறுத்த விரும்பவில்லை.

உதாரணமாக, அவர்கள் பிறந்த போது, பால் உறிஞ்சுவதற்குப் பழகுவார்கள், மற்றும் பாலூட்டுவதை வெறுக்கிறார்கள். அவர்கள் வளரும் போது, அவர்கள் அவர்களின் வீடுகளுக்கு, பிரதேசத்துக்கு, சொந்த ஊருக்கு பழக்கமாகி விடுகிறார்கள். அவற்றை பிரிவது மிகவும் கடினம் ஆகின்றது. பின்னர், அவர்கள் அவர்களின் கடைக்கு, அவர்களின் தொழில் துறைகளுக்கு, அவர்களின் அறிவியல் கிளைக்கு, அவர்களின் குடும்பத்திற்கு, அவர்களின் மொழிக்கு மற்றும் மதத்திற்கு பழகி விடுகிறார்கள், அவற்றை பிரிவதை அவர்கள் வெறுக்கின்றார்கள். இவ்வாறு பல்வேறு சமூகங்கள், கூட்டத்தினர், நாடுகள் வருகின்றன. பின்னர், ஒரு சமூகத்தின் மதத்தின் மீதான அன்பு அவர்களின் மதமே மதங்களில் சிறந்தது என்பதை உணர்தலின் விளைவாக வருவது இல்லை. ஒரு புத்திசாலி நபர் அவரது மதத்தை படிக்க வேண்டும், மற்ற மதங்களுடன் ஒப்பிட்டு, எந்த மதம் உண்மையானது என்பதை கண்டுபிடிக்க வேண்டும், பின்னர் அதை மிக பேணுதலுடன் பிடித்துக் கொள்ள வேண்டும். ஒருவர் பிழையான மதத்தை பின்பற்றுவதால் அவர் நித்தியமான பேரழிவுகள் தண்டனைகள், வேதனைகளை பெற்றுக்கொள்ள வழி வகுக்கும்.

ஒ மனிதனே!, மறதியிலிருந்து எழுந்திரு! நீ, "எனக்கு எப்படி, எது உண்மை யான மதம் என்று தெரியும்? நான் பின்பற்றும், பழக்கப்பட்ட மதம் உண்மை யானது என்று நம்புகிறேன். நான் இந்த மதத்தை நேசிக்கிறேன்," என்று நீ கூறினால்; "நீ அறிய வேண்டும் மதம் என்றால் அல்லாஹுு தஆலா தீர்க்கதரிசிகள் மூலம்

அனுப்பிய கட்டளைகளுக்கும் தடைகளுக்கும் கீழ்ப்படிவது மற்றும் இந்த உத்தரவுகள் அவனுடைய ரப்பு(அல்லாஹ்) மீது மனிதர்கள் ஒவ்வொருவருக்கும் கடமைகளாகும்.

தற்போதுள்ள அனைத்து மதங்களிலும், ரப்பின் பண்புகள்பற்றி , வழிபாடுகள், மற்றும் உயிரினங்களுக்கு இடையிலான உறவுகள் பற்றி எது மிகவும் பயனுள்ள விளக்கம் அளிக்கின்றது? ஞானம் என்பது நல்லதையும் கெட்டதை யும் வேறுபடுத்துகின்ற ஒரு உணர்வு. எது கெட்டதோ அது நிராகரிக்கப் பட்டது மற்றும் எது நல்லதோ அதை படிக்க வேண்டும். ஒரு மதத்தைப் பற்றி படிப்பது என்பது; அதன் ஆரம்பம், அதன் தீர்க்கதரிசி, அவருடைய அஸ்ஹாபு (தோழர்கள்),மற்றும் உம்மா (பின்தொடர்பவர்கள்) விசேடமாக குறிப்பிடத் தக்கவர்கள் பற்றி படிப்பது என்று பொருள்.

நீ அவர்களை விரும்பினால், அந்த மதத்தைத் தேர்ந்தெடு! உங்கள் மனதை பின்பற்றவும், உனது நஃப்ஸை அல்ல. உனது நஃப்ஸ் தீய அவமான உணர்வு களைத் தூண்டுவதன் மூலம் உன்னை தவறாக வழிநடத்தும், உனது குடும்பம், உனது நண்பர்கள் மற்றும் தீயவர்கள் மற்றும் மதத்தில் உள்ள தவறான மனிதர்கள் குறித்து உனக்கு பயத்தை ஏற்படுத்தும். அத்தகைய மனிதர்கள் ஏற்படுத்தக்கூடிய தீங்குகள் நித்திய வேதனையுடன் ஒப்பிடும் போது அவை ஒன்றும் பெரிதானது இல்லை, மிகவும் இலேசானது.

இந்த உண்மையை முழுமையாக உணர்ந்த ஒருவர் இஸ்லாமிய மதத்தை தேர்ந்தெடுப்பார். அவர்கள் முஹம்மதுவை (அலைஹி சலாம்) கடைசியாக தீர்க்கதரிசி என நம்புகிறார்கள். தவிர, இஸ்லாம் அனைத்து நபிமார்களையும் நம்பிக்கை வைக்கும்படி கட்டளை இடுகின்றது. இது அவர்களின் மதங்கள் உண்மையானவை, ஒவ்வொரு புதிய தூதரின் வருகையின் மூலம், அவருக்கு முந்தைய மதத்தை பின்பற்றுவது செல்லுபடியற்றதாக ஆக்கியது என்று கற்பிக்கிறது. மற்றும் அதே வரிசையில் முஹம்மது(அலைஹி-சலாம்)இன் மதம் முந்தைய மதங்கள் அனைத்தையும் பின்பற்ற முடியாததாக ஆக்கியது.

ஒரு நபர் தான் பின்பற்றி வந்த மதம் பிழையானது என்று உணர்கிறார். எனினும் அந்த மதத்தை கைவிட்டு, முஹம்மது (அலைஹி சலாமின்) மார்க்கத்தை சரியானது என்று உணர்ந்து ஈமான் கொண்டு பின்பற்றுவதை அவரது நஃப்ஸுக்கு பொறுத்துக்கொள்ள மிகவும் கடினமாக இருக்கும். ஏனெனில் நஃப்ஸு இயற்கையில் அல்லாஹு தலா, முஹம்மது (அலைஹி சலாம்) மற்றும் அவரது மதத்திற்கு விரோதமாக படைக்கப்பட்டது. நஃப்ஸின் இந்த விரோத இயல்பு **ஹமியாத்-உல்-ஜஹிலியா**(தவறான வைராக்கியம், மதவெறி, சகிப்பு தன்மையற்றது) என்று அழைக்கப்படுகிறது. தவறான மதத்தில் உள்ள பெற்றோர்கள், ஆசிரியர்கள், தீயநண்பர்கள், வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், அரசியல்வாதிகள் இந்த விரோத உணர்வை ஆதரிப்பார்கள். எனவே இந்த பழமொழி, "குழந்தைக்கு கற்பிப்பது கல்லில் பதிப்பது போன்றது."எனவே, இந்த

விரோத உணர்வை நீக்குவதற்கு மதவெறிக்கு எதிராக கடுமையாக முயற்சி செய்ய வேண்டும், நப்சை பகுத்தறிவு மூலம் இணங்கவைக்க போராட வேண்டும். நீ என்னுடைய பின்வரும் குறிப்புகளை கவனத்துடன் படித்தால் அது உன்னுடைய போராட்டத்தில் உனக்கு உதவியாக இருக்கும்.

ஒருவர் குறிப்பிட்ட மதத்தை தழுவிக்கொள்வது முடிவில்லா இன்பத்தை அடைவதற்காகவும், நித்திய பேரழிவுகளுக்கு எதிராக தன்னை பாதுகாத்துக் கொள்வதற்காகவும் ஆகும். இது ஒருவர் தனது பெற்றோரிடம் இருந்து பெற்ற மதத்தைப் பற்றி பெருமை பேசுவதற்காக அல்ல. மேலும் ஒவ்வொரு தீர்க்கதரிசியும் தீர்க்கதரிசனத்தின் தகுதிகளை பெற்ற மனிதர். அவர் அல்லாஹு தஆலா தனது மனித உயிரினங்களுக்கு அனுப்பிய கட்டளை களை மற்றும் தடைகளை தெரிவிப்பார். மனிதர்கள் ஒவ்வொருவரும் இந்தத் தகுதிகளைக் கொண்ட ஒரு தீர்க்கதரிசியின் மதத்தில் தன்னை தழுவிக் கொள்ள வேண்டும். சின்னங்கள் மற்றும் சிலைகளை வழிபடும் மக்கள் வெசெனி என்று அழைக்கப்படுகிறார்கள் மற்றும் படைப்பாளன் ஒருவன் இருக்கின்றான் என்பதை நம்பாதவர்கள் தஹ்ரி என்று அழைக்கப்படு கிறார்கள், [நாத்திகர், ஃப்ரீமேசன்கள் மற்றும் கம்யூனிஸ்டுகள்] மிருகங் களை போன்றவர்கள். மேலும், நசரேன்(கிறிஸ்தவர்) மற்றும் யூத மதங்கள் பின்வரும் காரணங்களால் செல்லுபடியாகதாக ஆகிவிட்டன.

1- இஸ்லாமிய மதத்தில், அல்லாஹு தஆலா சம்பூரணமான பண்புகளைக் கொண்டுள்ளான். அவனிடம் உள்ள எந்த பண்பும் குறைபாடுள்ளதல்ல. அவனுக்கு செய்ய வேண்டிய வழிபாடுகள் செய்வதற்கு இலகுவானது. சமூக உறவுகள் நீதியை அடிப்படையாகக் கொண்டவை. மற்ற மதங்களில் கற்பிக்கப்பட்ட வழிபாடுகள் மற்றும் சமூக உறவுகள் இருப்பினும், அவை காலப்போக்கில் மாறிவிட்டன, அதனால் அவை நியாயமானவையோ நடைமுறைக்கு ஏற்றவையோ அல்ல.

2- முஹம்மது, ஈசா (இயேசு) மற்றும் மூசா (மோசஸ்) 'அலைஹிமுஸ் ஸலாம்' ஆகியோரின் வாழ்க்கை பற்றிய ஒப்பீட்டு ஆய்வில்: முஹம்மது 'அலைஹி ஸலாம்' மிக உயர்ந்த பரம்பரை, உன்னதமான நடத்தையுடையவர், மிகவும் தைரியமானவர், மிகவும் நன்மை பயக்ககூடியவர், மிகவும் அறிவுநிறைந்த புத்திசாலி, அறிவில் உயர்ந்த ஞானம் மிக்கவர், மிகவும் சாமர்த்திய மானவர், இந்த உலகம் மற்றும் மறு உலகம் சம்பந்தப்பட்ட அறிவில் ஈடு இணை இல்லாதவர் என்பதை காட்டுகிறது. அவர் உம்மி (படிக்காதவர்) அதாவது; அவர் புத்தகங்களைப் படித்ததில்லை, அல்லாஹுவை தவிர வேறு எவரிடமும் கற்றுக்கொள்ளவில்லை.

3- மு'ஜீஸாக்கள் (தீர்க்கதரிசிகள் மூலம் அல்லாஹு தஆலாவினால் செய்யப்பட்ட அற்புதங்கள்) முஹம்மது 'அலைஹி சலாம்' மூலம் நிகழ்த்திய அற்புதங்கள் ஏராளம். மற்ற நபிமார்களை விட

மு’ஜிசாக்கள் அதிகமாக நடத்தியுள்ளார்கள். மற்றவர்களின் மு’ஜிசாக்கள் நடந்து முடிவுற்றன, முஹம்மது ‘அலைஹி ஸலாமி’ ன் முஜிசாக்கள், மறுபுறம், குறிப்பாக குர்ஆன் அல்-கரீமின் மு’ஃஜிசா தொடர்கிறது, அது உலக இறுதிவரை நீடிக்கும். அவரது உம்மாவின்(முஸ்லிம்களின்) கராமத்துக்கள்[1] குறிப்பாக அவ்லியாக்கள் வழியாக [2], எல்லா இடங்களிலும் தொடர்ந்து நிகழ்ந்து வருகின்றன.

4- இந்த மூன்று மதங்களையும் தொடர்புபடுத்தும் தகவல்கள் எங்களுக்கு, குர்ஆன் அல்-கரீம் மற்றும் ஹதீஸ் ஷரீஃப்கள் மூலம் தெரிவிக்கப்பட்டவை அதிக எண்ணிக்கையிலானவை மற்றும் நம்பகமானவை. அவை அனைத்தும் புத்தகங்களாக தொகுக்கப்பட்டு உலகம் முழுவதும் பரப்பப்பட்டுள்ளது. முஹம்மது ‘அலைஹி சலாம்’ அவர்களுக்கு நாற்பது வயதில் அவர்கள் நபி என்று அறிவிக்கப்பட்டார். அவருடைய தீர்க்கதரிசனம் இருபத்தி மூன்று ஆண்டுகள் வரை நீடித்தது. மேலும் அவர் அறுபத்து மூன்றாவது வயதில் மறைந்தார். அவர் மறைவதற்கு முன்பு அரேபிய தீபகற்பம் முழுவதும் அவருடைய மதம் பரவியதுடன் மக்களும் அவருக்கு கீழ்ப்படிந்தார்கள். எல்லா இடங்களிலும் அவரது மார்க்கத்தை கற்றுக்கொண்டார்கள். மற்றும் அவரது அஸ்ஹாபிகளின் எண்ணிக்கை ஒரு இலட்சத்தி ஐம்பதினாயிரத்தை தாண்டிய பிறகு அவரது அழைப்பு கிழக்கு மற்றும் மேற்கு நாடுகளில் கேட்டது. அவர் ஒரு இலட்சத்தி இருபதினாயிம் சகாபாக்களுடன் உடன் சேர்ந்து பிரியாவிடை ஹஜ் செய்தார். அதன் பின் எண்பது நாட்களுக்குப் பின்பு காலமானார்கள். சூரா மாயிதாவின் மூன்றாவது ஆயத் அல்-கரிமா:, "இன்று உங்கள் மதத்தை நிறைவு செய்து, எனது நல்லருளை நிறைவு செய்தேன். இஸ்லாம் உங்கள் மதம் என்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்”. இது இந்த ஹஜ்ஜின் போது வெளிப்படுத்தப்பட்டது. இந்த சஹாபாக்கள்

[1] அல்லாஹு தலா, அவன் யாரை விரும்புகிறானோ அவர் மூலம் உருவாக்கும் ஒரு அசாதாரண நிகழ்வு, ஒரு அதிசயம் அல்லது ஒரு **கறாமாத்** என்று அழைக்கப்படுகிறது. அது ஒரு நபியின் மூலம் நிகழ்த்தப்படும்போது அது ஒரு **முஜீஸா** என்று அழைக்கப்படுகிறது. தயவுசெய்து எங்கள் ‘***தீர்க்கதரிசனத்தின் சான்று’*** என்ற புத்தகத்தைப் பார்க்கவும்.

[2] வலியின் பன்மை வடிவம் அவ்லியா.

அனைவரும் உண்மையாகவும் நம்பிக்கையாளர்களாகவும் இருந்தனர். அவர்களில் பெரும்பாலோர் இஸ்லாத்தை ஆழமாக கற்றுக்கொண்ட வலிமார் களாக இருந்தனர். அவர்கள் ரசூலுல்லாவின் மதத்தையும் முஜிசாக் களையும் பூமியின் மீது பரப்பினர். ஏனென்றால் அவர்கள் ஜிஹாத்துக்காக மற்ற நாடுகளுக்கு பிரயாணம் செய்தனர். அவர்கள் எங்கு சென்றாலும் அவர்கள் அங்கு வாழும் அறிவுபடைத்த மனிதர்களுக்கு மார்க்க போதனைகளையும் முஜிசாக்களையும் அறிவித்தார்கள். இந்த மக்கள் அங்கு இருந்த மற்றவர் களுக்கு கற்பித்தனர். இதனால், ஒவ்வொரு நூற்றாண்டிலும் வாழும் அறிஞர்கள் அடுத்த

தலைமுறையை சேர்ந்த பல அறிஞர்களுக்கு கற்று கொடுத்தார்கள். மேலும் இந்த அறிஞர்கள் இந்த போதனை களையும் அவற்றை அறிவித்த அறிஞர்களின் பெயர்களையும் ஆயிரக்கணக்கான புத்தகங்களில் எழுதினார்கள். இந்த போதனைகளை வெளிப்படுத்திய அறிஞர்கள் ஹதீது ஷரீஃப்களை வகைப்படுத்தினார்கள். அவற்றை பல வகைகளாக பிரித்து, அவைகளுக்கு சஹிஹ் (சரியானது), ஹசன் (நல்லது) போன்ற பெயர்களை வழங்கினார்கள். அவர்கள் ஹதீது என்ற பெயரில் பொய்யர்களால் [மற்றும் யூதர்களால்] புனையப்பட்ட கதைகளை அவர்களின் புத்தகங்களில் சேர்ப்பதற்கு அனுமதிக்கவில்லை. அவர்கள் இந்த விடயத்தில் மிகவும் தீர்க்கனவர்கள், மிகவும் உணர்திறன் உடையவர்கள். அவர்களின் கடுமையான முயற்சி காரணமாக இஸ்லாமிய மதம் மிகவும் உறுதியான அடித்தளங்கள்மீது நிறுவப்பட்டு எவ்வித மாற்றம் இன்றி பரவியது. மற்ற மதங்கள் எதுவும் அவ்வளவு ஆரோக்கியமான முறையில் பரவவில்லை. எங்கள் அன்புக்குரிய தீர்க்கதரிசி முஹம்மது 'அலைஹி ஸலாம்' அவர்களின் முஜிஸாக்கள், அவர் உண்மையான தீர்க்கதரிசி என்பதை திட்டவட்டமாக நிரூபிக்கிறது.

இஸ்லாத்தின் அடிப்படையான, மற்றும் அத்தியாவசிய போதனைகள், அல்லாஹு தஆலா வின் இருப்பு மற்றும் தனித்தவன்(ஒருவன்) என்பதையும், அவனது பண்புகளின் பூரணத்தன்மையையும், முஹம்மது 'அலைஹி ஸலாம்' அவர்களின் தீர்க்கதரிசனத்தையும், அவர் உண்மையானவர், நம்பிக்கைக்கு உரியவர் மற்றும் எல்லா தீர்க்கதரிசிகளிலும் உயர்ந்தவர் என்பதையும், மனிதர்கள் மரணத்திற்குப் பிறகு மீண்டும் எழுப்பப் படுவார்கள், கேள்வி கணக்குகள் கேட்கப்படும், சிராத்தல் முஸ்தகீம் பாலம், சுவர்க்கதின் இன்பம், நரகத்தின் வேதனைகள் என்பன உண்மை எனவும் நம்பிக்கை கொள்வது. மற்றும், தெளிவான இஸ்லாமிய கட்டளைகள்: தினசரி ஐந்து நேர கட்டாய பர்ளான தொழுகைகள்[லுஹர்(பகல்),அசர்(பிற்பகல்), இஷா(இரவு), தொழுகை கள் ஒவ்வொன்றும் நான்கு ரகாஅத்துகள்,(பஜ்ர்) காலை தொழுகை இரண்டு ரகாஅத்துகள், மகரிப் (முன் இரவு), தொழுகை மூன்று ரகாஅத்துகள் தொழ வேண்டும். ரமளான் மாதம் நோன்பு நோற்பது, மற்றும் ஹஜ் வணக்கம் வாழ்க்கையில் ஒருமுறை செய்வது கடமை.

பெண்கள் தலை, தலைமுடியை மறைக்காமல் வெளியே செல்வது ஹராம் (தடைசெய்யப்பட்டுள்ளது). ஆண்கள் மற்றும் பெண்கள் ஒரே மாதிரியாக [இயற்கைக்கு மாறான உடலுறவு கொள்வது] விபச்சாரம் செய்வது, மது அருந்துவது, ஜுனூபா இருப்பவர் மற்றும் மாதவிடாய் உள்ளவர் (குளிப்பு அவசியமானவர்) குளிக்காமல் தொழுவது போன்ற அனைத்துவிதமான அவசியமான மார்க்க வழிகாட்டுதல்களும் அனைத்து முஸ்லீம்களுக்கும் படித்தவர்கள், படியாதவர்கள் மற்றும் அறிவில்லாதவர்கள் அனைவருக்கும் சரியாக ஒரேமாதிரியாக அறிவிக்கப்பட்டுள்ளன. இறுதியில் அவற்றில் எந்த மாற்றமும் செய்யாமல் எங்களிடம்

அறிவிவிக்கப்பட்டுள்ளது. இந்த உண்மை நியாயமான கிறிஸ்தவர்கள் மற்றும் யூதர்களும் அறிந்திருக்கிறார்கள்.

இந்த மக்கள் தாங்கள் தங்கள் சொந்த மதத்தை எதன் மூலம் கற்று அறிந்து கொண்டார்களோ அவை சமமாக நம்பகத்தன்மை இல்லாதது என்று ஒப்புக் கொள்கிறார்கள். ஏனெனில் முஹம்மது 'அலைஹி சலாம்' இன் காலம் மற்ற மதங்களை விட எங்களுக்கு நெருங்கியது மற்றும் இஸ்லாமிய மதத்தை எங்களுக்கு அறிவித்த அறிஞர்களின் எண்ணிக்கை மிகப்பெரியது, ஆதலால், இஸ்லாத்தில் மூட நம்பிக்கைகளை இடைச் செருகல்கள் செய்ய முடிய வில்லை. கிறிஸ்தவம் மற்றும் யூத மதத்தில் இந்த இரண்டு நல்ல வாய்ப்புகள் இருக்க வில்லை. வரலாற்றாசிரியர்களின் கூற்றுப்படி, ஈசா 'அலைஹி சலாம்' மற்றும் முஹம்மது 'அலைஹி சலாமி'ன் தோற்றத்திற்கு இடையில் சுமார் அறுநூறு வருட இடைவெளி உள்ளது.

அவர்கள் கூறுவதின்படி ஈசா 'அலைஹி ஸலாமி'ன் பிறப்புக்கும் முஹம்மது 'அலைஹி ஸலாமி'ன் (ஹிஜ்ரா) மக்காவிலிருந்து மதீனாவிற்கு இடம்பெயர்த லுக்கும் இடையில் அறுநூற்று இருபத்தொரு வருடங்கள் உள்ளன. மறுபுறம், இஸ்லாமிய அறிஞர்களின் கருத்துப்படி இந்த காலம் ஆயிரம் ஆண்டுகள் ஆகும். இந்த கால இடைவெளியில் பூமியில் அறியாமை பரவலாக இருந்தது. எனவே, உண்மையான மற்றும் பொய்யானவை அறிக்கைகளை வேறுபடு த்துவது மிகவும் கடினமானது.

ஈசாவின் 'அலைஹி-சலாம்' உடைய அழைப்பு நீண்ட காலம் நீடிக்கவில்லை. அல்லாஹு தஆலா அவருக்கு முப்பத்தி மூன்று வயதாக இருந்தபோது அவரை வானுக்கு உயர்த்தினான். இந்த குறுகிய காலத்தின் போது அவர் பலவீனமானவராக, நிராகரிப்பவர்களுக்கு எதிராக பாதுகாப்பற்றவராகவும் இருந்தார். இந்த நிலைமைகள் அவருக்கு அவரது ரப் அவருக்கு வழங்கிய கடமையை வெற்றிகரமாக செய்ய வசதியாக இருக்கவில்லை. அந்த காலத்தின் யூத சமூகமும் அவர்களது அரசாங்கமும் கூடுதலாக இடையூறாக இருந்தன. ஹவாரிஸ் (அப்போஸ்தலர்கள்) என்று அழைக்கப்படும் அந்த சிலரைத் தவிர அவருக்கு ஆதரவாளர்கள் யாரும் இருக்கவில்லை. அவருடைய ஒரே விசுவாசிகள் பன்னிரண்டு அப்போஸ்தலர்கள். அவர்கள் வேட்டைக்காரர்களாக இருந்தனர். அவர் வானுக்கு உயர்த்தப்பட்ட [1], பிறகு இஞ்ஜில் என்று அழைக்கப்படும் [நான்கு] புத்தகங்களில் பல்வேறு அறிக்கை கள் மற்றும் அறிவிப்புகள் தொகுக்கப்பட்டு இருந்தன. அந்த புத்தகங்கள் ஒரு திறமையற்றவரின் கையிலிருந்து இன்னொரு திறமையற்றவரின் கைக்கு மாற்றப்பட்டது, மற்றும் ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டது, இவ்வாறு அந்த புத்தகங்கள், பல்வேறு இடைச் செருகல்களுக்கு உட்பட்டது. எனவே இந்த நற்செய்திகளில் உள்ள தகவல்கள்

[1] ஈஸா (அலைஹிஸலாம்) சிலுவையில் அறையப்பட்டார் பின்னர் சொர்க்கத்திற்கு ஏறினார் என்ற கிறிஸ்தவ நம்பிக்கைக்கு மாறாக, இந்த உயர்ந்த நபியை சிலுவையில் அறையவில்லை அல்லாஹு தலா அவரை, உயிருடன், சொர்க்கம் வரை எழுப்பினான் என்று இஸ்லாம் போதிக்கின்றது. தயவுசெய்து **பதிலளிக்க முடியவில்லை** என்ற எங்கள் புத்தகத்தைப் பார்க்கவும்.

ஒன்றுக்கொன்று முரண்பாடானதாகவும் மற்றும் உடன்பாடற்றதுமாகியது. உண்மையில், அவற்றில் ஒன்றில் கொடுக்கப்பட்டுள்ள தகவல் மற்றதில் எழுதப்பட்டவற்றை குழப்பவும், பொய்யாக்கும் வகையிலும் உள்ளது. ஒரே புத்தகத்தின் வெவ்வேறு பதிப்புகளில் இதே மாதிரி குழப்பங்கள் காணப் படுகின்றன. இந்த வேறுபாடுகள் மற்றும் முரண்பாடுகளை அகற்றுவதற் காக ஒவ்வொரு நூற்றாண்டிலும் பாதிரியார்கள் கூடி, அவ்வப்போதுள்ள நற்செய்திகளை சரிசெய்தார்கள். சேர்த்தல் மற்றும் கழித்தல் செய்யும் நேரத்தில், மதத்துடன் தொடர்பு இல்லாத அபத்தங்களையும் சேர்த்தார்கள். மேலும், அவர்கள் மக்கள் அவற்றை நம்பவேண்டும் என்று கட்டாயப் படுத்தினார்கள். இந்த புத்தகங்களில் உள்ள பெரும்பாலான அறிக்கைகள் ஈசா 'அலைஹி ஸலாம்' அல்லது அவருடைய அபோஸ்தலர்களுடையது அல்ல. இதனால், அவர்கள் பல்வேறு குழுக்களாகப் பிரிந்தனர். புதிய பிரிவுகள் தோன்றின. ஒவ்வொரு நூற்றாண்டிலும், அவர்களில் பெரும்பாலோர் முந்தியதிலிருந்து மாறுபட்டார்கள். இப்போது அவர்களிடம் உள்ள நற்செய்தி கள் ஈசா 'அலைஹி-சலாம்'க்கு வெளிப்படுத்தப்பட்ட, கற்பித்த புனித இன்ஜீல் மதத்தின் புத்தகம் அல்ல என்பது அனைவருக்கும் தெரியும்

முஜிசாக்களை விவரிக்கும் யூத மத புத்தகங்களும் அவ்வாறே உள்ளன. மூசாவின் 'அலைஹி-சலாம்' இங்கு கால இடைவெளி மிகவும் நீண்டது. மூசா 'அலைஹி-சலாம்' முஹம்மது 'அலைஹி-சலாம்'இன் ஹிஜ்ரத்துக்கு இரண்டா யிரத்து முந்நூற்று நாற்பத்து எட்டாவது (2348) வருடங்களுக்கு முன் காலமானார். யூதமக்களுக்கு அவர்களுக்கிடையே நீண்ட கால அறியாமை யினால் யூத மதத்தை சரியாக தெரிவிப்பதற்கு சாத்தியமற்றது. மேலும் ,யூத மத அறிஞர்கள் கூடுதலாக, நெபுச்சட்னேசர் போன்ற கொடூரமான கொடுங் கோலர்களால் கொல்லப்பட்டனர். மற்றவர்கள் பைத்துல் முகத்தஸில் இருந்து கைதிகளாக பாபிலோனுக்கு அழைத்துச் கொண்டு செல்லப்பட்டனர்.

உண்மையில், ஒரு காலம் இருந்தது அப்பொழுது ஜெருசலேமில் தோராவை படிப்பதற்கு நன்குபடித்த ஒரு தனிநபர் கூட இருக்கவில்லை. டன்யல் (டேனியல்) 'அலைஹி -சலாம்' தோராவை இதயத்தால் அறிந்திருந்தார். அவர் அதை ஓதுவார் மற்றும் கட்டளையிடுவார். தோரா இந்த அருள் பெற்ற நபியின் மரணம்வரை மட்டுமே இடைச்செருகல் ஏற்படாமல் இருப்பதை தாமதப்படுத்த உதவியது. உண்மையில், அவருக்குப் பிறகு செய்யப்பட்ட இடைச் செருகல் அல்லாஹு தஆலாவுக்கும் அல்லது

தீர்க்கதரிசிகளுக்கு மிகவும் ஒழுக்கக்கேடான பண்புகள் புனையப்பட்டன..

முஹம்மது (அலை) அனைத்து மக்களாலும் அறியப்பட்ட காலத்திற்கு பிறகு அந்த அறியாமை பரவலாகவில்லை. உண்மையில், அறிவு என்பது முஸ்லீம் கள் அனைவருக்கும் பொதுவான ஒரு பொதுவான பண்பாக மாறியது. சிறந்த இஸ்லாமிய நாடுகள் நிறுவப்பட்டன. அவர்கள் அறிவு, விஞ்ஞான அறிவியல், நீதி மற்றும் மனித உரிமைகள் என்பவற்றை எல்லா இடங்களுக்கும் பரப்பினர். இப்போது, அறிவுள்ள மற்றும் நியாயமாக சிந்திக்கும் நபர் இந்த மூன்று மதங்களையும் ஆராய்ச்சி செய்தார் என்றால், கண்டிப்பாக இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வார். நோக்கம் உண்மையான மதத்தை கண்டுபிடிப்பதாக இருக்க வேண்டும். பொய் கூறுவதும் அவதூறு சொல்வதும் இஸ்லாத்தில் ஹராம். குர்'ஆனின் ஆயத் அல்-கரிமாக்கள் மற்றும் ஹதீஸ் ஷெரீஃப்கள் இந்த இரண்டு தீமைகளையும் கடுமையாகத் தடை செய்கின்றன. ஒரு சாதாரண நபரை அவதூறு செய்வது பெரும் பாவமாக இருக்கும்போது, அல்லாஹுـ த'ஆலாவின் தூதரை அவதூறு செய்வது மிகவும் மோசமான ஹராம். இந்த காரணத்திற்காக, முஹம்மது 'அலைஹிசலாம்' மற்றும் அவரது முஜிசாக்கள் பற்றி புத்தகங்கள் சொல்வதில் எந்த பொய்யும், பிழையும் இருக்க முடியாது.

ஒரு புத்திசாலி நபர் அவரின் பிடிவாதத்தை வெல்ல வேண்டும். அழிவுக்கு வழிவகுக்கும் மதத்தை கைவிட்டு இன்ப வாழ்வுக்கு வழிகாட்டும் உண்மையான மார்க்கத்தை ஏற்று அதற்கு ஏற்ப தன்னை மாற்றியமைக்க வேண்டும். இவ்வுலக வாழ்க்கை மிகக் குறுகியது. அதன் நாட்கள் வெறும் தரிசனங்களாக ஒவ்வொன்றாக எம்மை கடந்து சென்று விடுகின்றன. ஒவ்வொரு மனிதனின் வாழ்வும் மரணத்தில் முடிவடையும், அதன் பிறகு நித்தியமான வேதனை அல்லது முடிவுறாத நித்திய இன்ப வாழ்க்கை இருக்கும். அந்த நேரம் ஒவ்வொருவரையும் மிகுந்த வேகத்தில் அணுகுகிறது.

ஓ மனிதனே! நீ கருணையுடன் இரு!. உன் மனதில் இருந்து மறதி எனும் திரைச்சீலை அகற்றி விடு! நீ தவறுசெய்யும்போது என்ன தவறு என்று பார்த்து அதிலிருந்து விலகிவிடு! எது சரி என்று பார்த்து, அதற்கேற்ப உன்னை மாற்றிக்கொள். கட்டியாக பிடித்துக் கொள்!. நீ எடுக்கும் முடிவு மிகவும் பெரியது, முக்கியமானது, மிகவும் முக்கியமானது. மற்றும் நேரம் மிகக் குறைவு. நீ நிச்சயமாக இறப்பீர்! நீ இறக்கும் நேரம் பற்றி சிந்தித்துக்கொள்! நீ என்ன அனுபவிக்கபோகிறாய் என்பதற்கு உன்னை தயார்படுத்து! இல்லாவிடில் நீ நித்திய வேதனையிலிருந்து தப்ப முடியாது. உன்னை ஹக்கிற்கு (சரியானது, உண்மை, அல்-ஹக் அல்லாஹுவின் பெயர்களில் ஒன்று) ஏற்ப மாற்றிக்கொள். மிகவும் தாமதமாகும் போது மனந்திரும்புவது பயனற்றதாக இருக்கும். இறுதி மூச்சில் உண்மையை உறுதிப் படுத்துவது ஏற்றுக்கொள்ளப்பட்டதாக

இருக்காது, மரணத்திற்குப் பிறகு தவ்பா செய்வது (மனந்திரும்புவது) செல்லாது.

அந்த நாளில், அல்லாஹு தஆலா "ஓ என் மனித படைப்பே! நான் உனக்கு மனதின் ஒளியை கொடுத்தேன். அதைப் பயன்படுத்தி என்னை அறிந்து கொள்ளுமாறும், என் மீதும் என் தீர்க்கதரிசி முஹம்மது அலைஹிஸலாம் மீதும், மற்றும் நான் அவர் மூலம் வெளிப்படுத்தப்பட்ட இஸ்லாமிய மதத்தையும் நம்பிக்கை வைக்குமாறும் நான் உங்களுக்குக் கட்டளை யிட்டேன் என்று கூறினால். மேலும், நான் அந்த தீர்க்கதரிசியின் வருகை பற்றி தோரா மற்றும் பைபிளில் அறிவித்தேன். நான் அவருடைய பெயரை யும் மதத்தையும் ஒவ்வொரு நாட்டிலும் வெளிப்படுத்தினேன் என்று கூறினால், நீ அவரை பற்றி கேள்விப்படவில்லை என்று சொல்ல முடியாது. நீ உலகை சம்பாதிக்கவும், உலக இன்பங்களுக்காகவும் இரவும் பகலும் வேலை செய்தீர். மறுமையில் நீ என்ன அனுபவிக்கப் போகின்றீர் என்பதை நீ நினைத்தும் பார்க்கவில்லை. அறியாமயிலேயே நீ மரணத்தின் உச்சியில் விழுந்தீர் என்ற நிலையில், "நீ எப்படி பதில் அளிப்பீர்? ஓ மனிதனே! உனக்கு என்ன நடக்கப்போகிறது என்று சிந்தித்துபார்! உனது வாழ்நாள் முடிவதற்குள் உன் உணர்வுகளை திறந்து விடு. நீ, உன்னைச் சுற்றி இருந்த மக்களை பார்த்தால்,நீ பேசிக்கொண்டிருந்தவர்கள், நீ அனுதாபத் துடன் பார்த்தவர்கள், நீ பயந்தவர்கள் எல்லோரும் ஒவ்வொருவராக இறந்து விட்டார்கள். அவர்கள் இப்போது இல்லை. அவர்கள் கற்பனை போல வந்து போனார்கள். நன்றாக சிந்தி!. என்றும் முடிவடையாத நெருப்பில் எரிவது எவ்வளவு பயங்கரமானது! மாறாக, முடிவுறாத இன்பங்களுடன் வாழ்வது எவ்வளவு பெரியது, எவ்வளவு ஒரு பெரிய அதிர்ஷ்டம். தெரிவு உன் கையில் உள்ளது. எல்லோரும் இந்த இரண்டு உச்ச நிலைகளில் ஒன்றை அடைவார்கள் என்பதை மறவாதே. இதைவிட மற்றொரு சாத்தியமற்றது. இதைக் கருத்தில் கொண்டு அதற்கு ஏற்ப முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்காமல் இருப்பது முற்றிலும் அறியாமை மற்றும், பைத்தியமானதாக இருக்கும். அல்லாஹு தஆலா நம் அனைவரையும் பின்வரும் காரணங்களை கொண்டு அருள் புரிவானாக! ஆமீன்.

இது **கௌலுஸ் ஸப்த் பி ரத்தி அலா டெவில் ப்ரோடேஸ்தானத்** எனும் புத்தகத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது: அல்லாமா ரஹ்மத்துல்லா ஹிந்தி[1] தனது '**இள்ஹாருள் ஹக்**' என்ற புத்தகத்தில் கூறுகிறார்கள்; "இஸ்லாத்தின் ஆரம்பத்திற்கு முன்பு தோரா அல்லது பைபிளின் அசல் பிரதிகள் எங்கும் இருக்கவில்ல. இன்று இருப்பவை உண்மை மற்றும் பொய்யால் ஆன வரலாற்று புத்தகங்கள். குர்ஆன் அல்-கரீமில் குறிப்பிடப் பட்டுள்ள தோரா மற்றும் பைபிள், தற்போது தோரா மற்றும் பைபிள் பெயரில் இருக்கும் புத்தகங்கள் அல்ல. இந்த புத்தகங்களில் எழுதப்பட்ட போதனை களில் **குர்ஆன் அல்-கரீமினால்** உறுதி செய்யப்பட்டவை உண்மையானவை மற்றும் அது நிராகரிப்பவை

பொய்யானவை. நாங்கள் **குர்ஆன் அல்-கரீம்** குறிப்பிடப்படாதவற்றைப் பற்றி உண்மை அல்லது பொய் என்று சொல்ல மாட்டோம். இப்பொழுதுள்ள நான்கு நற்செய்திகளும் அல்லாஹு தலாவின் வார்த்தை என்று நிரூபிக்க எந்த ஆவண ஆதாரமும் இல்லை. நான் இந்தியாவில் ஒரு பிரிட்டிஷ் பாதிரியாருடன் பேசினேன், இந்த உண்மையை ஒப்புக் கொண்டார். இது தொடர்பான எல்லா ஆவணங்கள் A.D. 313 வரை உலகில் நடந்த ஏற்பட்ட குழப்பங்களால் இழந்துவிட்டன என்று கூறினார். இது ஹெர்ன் என்பவரால் எழுதப்பட்ட பைபிளின் விளக்கத்தின் இரண்டாவது பாகத்திலும்,வரலாற்றாசிரியர் மொஷைமின் விளக்கத்தின் முதல் பாகத்தின் அறுபத்தைந்தாவது பக்கம் [2] 1913/1332 இல் அச்சிடப்பட்டது. மற்றும் லார்டிஸின் பைபிளின் விளக்கத்தின் ஐந்தாவது பாகத்தின் நூற்றி இருபத்தி நான்காவது பக்கத்தில் நற்செய்திகள் பல்வேறு இடைச்செருகல்களுக்கு உட்பட்டதாக கூறுகிறார். ஜெரோம்[3] கூறுகிறார், "நான் பைபிளை மொழி பெயர்த்தபோது, நான் அதன் வெவ்வேறு பிரதிகள் வித்தியாசமாக இருப்பதை பார்த்தேன், பிரதிகள் ஒன்றுக்கொன்று முரண்படுகின்றன."

---

[1] ரஹ்மத்துல்லா ஹிந்தி 1889/1306 இல் மக்காவில் காலமானார்.

[2] ஜோஹன் லோரன்ஸ் வான் மோஷெய்ம், ஜெர்மன் லூத்தரன் தேவாலய வரலாற் றாசிரியர். லுபெக்கில் 1693 இல் பிறந்தார், 1755 இல் கோட்டிங்கனில் இறந்தார். அவருடைய மிகவும் பிரபலமானவர்வேலை முக்கடேஸ் பைபிள் வரலாறு.

[3] செயிண்ட் ஜெரோம், பாதிரியார் மற்றும் தேவாலய வரலாற்றாசிரியர், 347 இல் ஸ்ட்ரிடனில் பிறந்தவர், பாலஸ்தீனத்தில் 420ல் இறந்தார். அவருடைய வல்கேட் என்று அழைக்கப்படும் பைபிளின் லத்தீன் மொழிபெயர்ப்பு மிகவும் பிரபலமானது.

அடம் கிளார்க்[1]அவருடைய விளக்கத்தின் முதல் தொகுதியில் கூறுகிறார், "பைபிள் லத்தீன் மொழியில் அதன் மொழிபெயர்ப்பின் போது பல்வேறு விதமான இடைச்செருகல்கள் ஏற்படுத்தப்பட்டன. முரண்பாடான இடைச் செருகல் செய்யப்பட்டது." வார்டு[2] தனது விளக்கத்தின் (1841 ல் அச்சிடப் பட்டது) பதினெட்டாம் பக்கத்தில் கூறுகிறார்; ஓரியண்டல் மதவெறியர்கள் பைபிளின் அநேக பகுதிகளை மாற்றிவிட்டார்கள். புராட்டஸ்டன்ட் பாதிரி யார்கள் அரசர் முதலாவது ஜேம்சிடம் ஒரு அறிக்கையை சமர்ப்பித்து கூறினார்கள்: ஹீப்ருவில் உள்ளதைப் போலல்லாமல் எங்கள் பிரார்த்தனை புத்தகத்தில் கிட்டத்தட்ட இருநூறு மாற்றங்கள் உள்ளன. மறுபுறம், புராட்டஸ்டன்ட் பாதிரியார்கள் இன்னும் அதிகமாக மாற்றங்களை செய்தனர்." இந்த மாற்றங்களின் அநேக எடுத்துக்காட்டுக்கள் **இல்ஹாருல் ஹக்** எனும் புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. கொஸ்பலின் பல்வேறு பதிப்புகளில் செய்யப்பட்ட இடைச்செருகல்களை இஸ்ஸதீன் முஹம்மதி எழுதிய **அல்-ஃபஸிலு-பய்ன்-அல்-ஹக் வல் பாத்தில்** என்ற புத்தகத்திலும்,

அப்துல்லா தர்ஜுமன் எழுதிய **துஹ்பத்துல்-அரிப்** என்ற புத்தகத்திலும் எடுத்து காட்டப்பட்டுள்ளன.

ஈசா'அலைஹி-சலாம்' எதையும் எழுதவில்லை என்பது அனைத்து பாதிரியார் களுக்கும் தெரியும். அவர் எந்த எழுதப்பட்ட ஆவணங்களையும் விட்டு செல்ல வில்லை. அல்லது யாரையும் எழுத வைக்கவும் இல்லை. அவர் தனது மதத்தை எழுத்துப்பூர்வமாக போதிக்கவில்லை. அவர் வானத்துக்கு உயர்த்தப்பட்ட பின்னர் நசரேன்களுக்கிடையில் கருத்து வேறுபாடுகள் ஏற்படத்தொடங்கி யது. அவர்களின் மார்க்க அறிவை பலப்படுத்துவதற்கு அவர்களால் ஒருங்கிணைய முடியவில்லை. இதன் விளைவாக, ஐம்பதுக்கும் மேற்பட்ட நற்செய்திகள் (கொஸ்பல்கள்) எழுதப்பட்டன. அவற்றில் நான்கு தேர்ந்தெடுக் கப்பட்டது. ஈசா 'அலைஹி சலாமின்' உயர்வுக்கு எட்டு அல்லது பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு கொஸ்பல் **மத்தேயு**வின் நற்செய்தி பாலஸ்தீனத்தில் சிரிய மொழியில் எழுதப்பட்டது. இந்த நற்செய்தியின் அசல் நகல் இன்று இல்லை. அதன் கிரேக்க பதிப்பு என்று ஒரு புத்தகம் உள்ளது. கொஸ்பல் **மார்க்** நற்செய்தி அவருக்கு முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு ரோமில் எழுதப்பட்டது. **லூக்கா**வின் நற்செய்தி ஈசா 'அலைஹி சலாமின்' உயர்வுக்கு இருபத்தெட்டு ஆண்டுகளுக்கு பிறகு கிரேக்க மொழியில் அலெக்ஸாண்ட்ரியாவில் எழுதப் பட்டது. மற்றும் அவருக்கு முப்பத்தெட்டு ஆண்டுகளுக்குப் பிறகு, கொஸ்பல் **ஜோன்** எபேசஸில் எழுதப்பட்டது. இந்த நற்செய்திகள் அனைத்தும் அறிவிப்புகளையும் கதைகளையும் கொண்டுள்ளன. லூக் மற்றும் மார்க் அப்போஸ்தலர்களிடையே இருக்க வில்லை. அவர்கள் மற்றவர்களிடமிருந்து கேட்டதை எழுதினார்கள். இந்த நற்செய்திகளை (கொஸ்பல்) எழுதியவர்கள் அவற்றை இன்ஜீல் (பைபிள்) என்று அழைக்க வில்லை. அவர்கள் அதை புத்தகங்கள் வரலாற்று புத்தகங்கள் என்று கூறினார்கள். பின்னர் அவற்றை மொழிபெயர்த்தவர்கள் அவற்றை பைபிள் என்று அழைத்தார்கள்.

---

[1] ஆடம்கிளார்க், பிரிட்டிஷ் தேவாலய வரலாற்றாசிரியர் 1760 - 1832. அவர் பைபிள் பற்றிய அவரது வர்ணனை மிகவும் பிரபலமானவர்..

[2] வில்லியம் ஜார்ஜ் வார்ட், ரோமன் கத்தோலிக்க தேவாலய வரலாற்றாசிரியர், 1882 இல் இறந்தார்

1923/1341 இல் சையத் அப்துல் காதிர் இஸ்கெந்தெரானி எழுதிய **கௌலுஸ் சப்த்** எனும் இந்த புத்தகம், புராட்டஸ்டன்ட் பாதிரியாரால் 1990 இல், அரபியில் எழுதி எகிப்தில், அச்சிடப்பட்ட **அகாவிலுல்-குரானியா** புத்தகத்திற்கு பதில் அழிப்பதற்காக எழுதப்பட்டது. (ஹக்கிகத் பதிப்பாளர்கள்) இந்த புத்தகத்தை மீண்டும் **அஸ்-சிராத்தல்-முஸ்தக்கிம்** மற்றும் **குலசத்துல் கலாம்** ஆகிய புத்தகங்களுடன் மீள் பதிப்பு செய்தனர்.

துருக்கிய புத்தகம் **இசா-உல்-மெரம்** கூறுகிறது: இஞ்சிலின் அசல் ஹீப்ரு மொழியில் இருந்தது. அது ஈசா 'அலைஹி சலாமை'

சிலுவையில் அறை வதற்கு கைது செய்த போது யூதர்களால் அழிக்கப்பட்டது.

ஈசாவின் 'அலைஹி-சலாம்'இன் அழைப்பின் காலம் மூன்று வருடங்களில் புனித 'இன்ஜீலின்' அசல் புத்தகத்தின் ஒரு நகல் கூட எழுதப்படவில்லை. கிறிஸ்தவர்கள் இஞ்ஜில் இன் அசலை மறுக்கின்றார்கள். அவர்கள் பைபிள் என்று அழைக்கும் நான்கு நற்செய்திகளிலும் எந்த வழிபாட்டு முறையும் இல்லை. அவை கொண்டுள்ள அனைத்தும் ஈசா 'அலைஹி-சலாம்' மற்றும் யூதர்களுக்கிடையிலான உரையாடல்கள். எனினும், மத புத்தகம் வழிபாட்டு முறைகளை கற்பிக்க வேண்டும். அவர்கள் தவ்ராத்துக்கு ஏற்ப தங்கள் வழிபாட்டை செய்து வருகின்றனர் என்றால் பின்னர் அவர்கள் அதன் மிக முக்கியமான கட்டளைகளை ஏன் புறக்கணிக்கிறார்கள். சப்பாத்தை [சனிக்கிழமை]களில் கடைப்பிடிப்பது, விருத்தசேதனம் மற்றும் பன்றி இறைச்சி சாப்பிடுவதிலிருந்து தவிர்ப்பது? அவர்களின் நற்செய்திகளின் இந்த கட்டளைகளை புறக்கணிக்க வேண்டும் என்று எந்த தகவலும் இல்லை. மறுபுறம்,குர்ஆன் அல்-கரீம் அனைத்து வகையான வழிபாடுகள் தொடர்பான விரிவான அறிவை உள்ளடக்கியது., நெறிமுறைகள், சட்டம், வர்த்தகம், விவசாயம் மற்றும் அறிவியல், மற்றும் இந்த கிளைகளை ஊக்குவிக்கிறது. இது உடல் மற்றும் ஆன்மீகம் பற்றிய அனைத்து வகையான பிரச்சினை களுக்கும் தீர்வுகளையும் பரிந்துரைக்கிறது.

பதினான்கு நூற்று ஆண்டுகளாக குர்ஆன் அல்-கரீமின் எந்த ஒரு ஆயத்துக் கும் அதை போன்ற ஒன்றை வெளிப்படுத்த முடிந்த எந்த கவிஞரும் இருக்கவில்லை, இலக்கிய மனிதனும் இல்லை, பிடிவாதமான நிராகரிப் பவரும் இல்லை. அவர்கள் முயற்சி செய்தும் முடியவில்லை. அதன் ஒரு ஆயத்தை கூட அதன் துல்லியமான தன்மையில் கூற முடியவில்லை. உண்மையில் அதில் பயன் படுத்தப்பட்டுள்ள வார்த்தைகள் சொல்லகராதி பொதுவாகப் காணப்படும் வார்த்தைகளையே கொண்டுள்ளது. அது ஒரு முஜிஸா என்பதை தெளிவாகக் காட்டுகிறது (அல்லாஹுதஆலா ஒரு தீர்க்கதரிசி மூலம் செய்த அதிசயம்). முஹம்மது 'அலை-சலாம்' இன் மற்ற முஜிசாக்கள் கடந்த கால நிகழ்வுகள்; அவை இன்று பெயரில் மட்டுமே உள்ளன. ஆனால், **குர்ஆன் அல்-கரீம்**; அது சூரியனைப் போல எப்போதும், எல்லா இடங்களிலும் பிரகாசமாக பிரகாசிக் கின்றது. மற்றும் அது ஒவ்வொரு நோய்க்கும் மருந்தாகவும், ஒவ்வொரு நோய்க்கும் தீர்வாகவும் அல்லாஹு தலா அதை தனது ஹபீப் அக்ரம் மீது இறக்கி (ஆசீர்வதிக்கப்பட்டவர், பிரியமானவர்) அனைத்து மனித படைப்புகளும் மகிழ்ச்சியாக இருக்கும் பொருட்டு அதை அவருக்கு வெளிப்படுத்தினான். அவனது எல்லையற்ற கருணையும் இரக்கமும் காரணமாக அவன் அதை மாற்றங்கள் மற்றும் இடை செருகலில் இருந்து பாதுகாகின்றான். இந்த வாக்குறுதியை மற்ற வேத வாக்கியங்களுக்கு அளிக்கவில்லை.

ஒவ்வொரு நபிமார்களினது ஷரீஅத்தும் அவர்கள் வாழ்ந்த காலத்திற்கு பொருத்தமானவையாக அல்லாஹுதஆலாவினால் அமைத்து கொடுக்கப் பட்டன. அவை இயற்கையாகவே ஒவ்வொரு நபிமாருக்கும் வேறுபட்டதா யிருந்தது. இருப்பினும், நம்பிக்கையின் கோட்பாடுகள் அவை அனைத்திலும் ஒரே மாதிரியாக இருந்தன. அல்லாஹு தஆலா ஒருவன் என்றும், மற்றும் மரணத்திற்குப் பிறகு மீண்டும் உயிர்த்தெழுதல் இருக்கும் என்றும் அவர்கள் அனைவரும் போதித்தனர்.

உபாகமத்தின் முப்பத்தொன்பதாவது வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது : "... கர்த்தர் அவரே கடவுள் மேலே வானத்திலும், பூமியிலும் அதன் கீழேயும் அவனை தவிர வேறு யாரும் இல்லை."

(உபா:4-19), ஆறாவது அத்தியாயத்தில்: "கேளுங்கள், ஓ இஸ்ரேலியர்களே: எங்கள் கடவுளாகிய ஆண்டவர் ஒரே கடவுள்: ".

(ஐபிட்: 6-4). II நாளாகமத்தில், சுலைமான் (சொலமன்) 'அலைஹி-சலாம்' கூறியதாக அறிவிக்கப்படுகின்றது, "... ஓ இஸ்ரவேலின் கடவுளாகிய ஆண்டவரே, உன்னைப் போன்ற வேறு கடவுள் பரலோகத்திலோ அல்லது பூமியிலோ இல்லை; ..."

(2Chr:6-14) "... இதோ, வானம் மற்றும் சொர்க்கத்தின் வானம் உன்னைக் கொள்ள முடியாது; நான் எவ்வளவு சிறிய இந்த வீட்டை கட்டியுள்ளேன்! "

(ஐபிட்: 6-18) பைத்துல் முகத்தஸ் கட்டிய பிறகு (ஜெருசலேமில் மஸ்ஜிதுல் அக்ஸா).இது சாமுவேல் இன் பதினைந்தாம் அத்தியாயத்தில் எழுதப் பட்டுள்ளது; நபி சாமுவேல் (சுலைமான்) 'அலைஹி சலாம்' கூறினார், "... இஸ்ரேலின் வலிமை பொய்க்காது அல்லது மனம் வருந்தாது: ஏனென்றால் அவர் ஒரு பொய் சொல்லக்கூடிய மனிதர் அல்ல."

(சாம்: 15-29) இது நாற்பத்தைந்தாவது அத்தியாயத்தில் தீர்க்கதரிசி ஈசையா 'அலைஹிஸலாம்' ஐ குறிக்கும் இடத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது: "நான் தான் கடவுள், வேறு யாருமில்லை, ..."

(இஸ்: 45-5) "நான் ஒளியை உருவாக்குகிறேன், இருளை உருவாக்குகிறேன்: நான் சமாதானத்தை உருவாக்குகிறேன், தீமையை உருவாக்குகிறேன்...".

(ஐபிட்: 45-7) இது மத்தேயு நற்செய்தியின் பத்தொன்பதாம் அத்தியாயத்தில் எழுதப்பட்டுள்ளது, "இதோ, ஒருவர் வந்தார், அவரிடம் சொன்னார், எனது நல்ல எஜமானே, நான் நித்திய ஜீவனைப் பெற என்ன நல்ல காரியத்தைச் செய்ய வேண்டும்? என்று கேட்டார். அவர் அவரிடம்,"ஏன் என்னை நல்லவர் என்று அழைக்கிறீர்? நல்லது எதுவும் இல்லை, ஆனால் ஒன்றை தவிர,

அதாவது கடவுள்: ஆனால் நீங்கள் வாழ்க்கையில் நுழைந்தால், கட்டளைகளை நிறைவேற்றுங்கள்''.

(மத்:19-16,17) இது **மார்க்**கின் பன்னிரண்டாவது அத்தியாயத்தில் பின்வரு மாறு குறிப்பிடப்பட்டுள்ளது: "மேலும் வேதத்தை எழுதுபவர்களில் ஒருவர் வந்தார், மற்றும் ... எல்லாவற்றிலும் முதல் கட்டளை எது? என்று அவரிடம் கேட்டார், "மற்றும் இயேசு அவருக்கு பதிலளித்தார். அனைத்து கட்டளை களிலும் முதலில், கேளுங்கள், ஓ இஸ்ரேல்; எங்கள் கடவுளாகிய இறைவன் ஒரு இறைவன்: "நீங்கள் உங்கள் கடவுளாகிய இறைவனை உங்கள் முழு இருதயத்தோடும், உங்கள் முழு ஆத்மாவோடும், மற்றும்உங்கள் முழு மனதுடனும், உங்கள் முழு பலத்துடனும் நேசிப்பீர்கள்: ... "(மார்க்: 12-28, 29, 30).

முஹம்மது 'அலைஹி சலாம்' அவர்களும் அவ்வாறே கூறினார்கள். முஹம்மது 'அலைஹிசலாமை' நிராகரிக்கும் எந்த நபரும் மற்ற அனைத்து நபிமார்களையும் நம்பவில்லை. திரித்துவத்தில் நம்பிக்கை [மூன்று கடவுள்கள் இருப்பு] **ட்ரினிட்டி** கோட்பாடு என்பது அனைத்து நபிமார்களை யும் மறுப்பது. இந்த கொள்கை ஈசா 'அலைஹி-சலாம்' வானலோகத்திற்கு ஏறி நீண்டகாலத்திற்கு பிறகு தோன்றியது. முன்னதாக, அனைத்து நசாராக்களும் தவ்ஹித்தின்(அல்லாஹு தஆலாவின் தனித்துவத்தில்) நம்பிக்கை கொண்டி ருந்தனர். தோராவில் உள்ள பெரும்பாலான கொள்கைகளை கடைப் பிடித்தனர். சிலை வழிபாட்டாளர்களான கிரேக்க தத்துவவாதிகள் பலர் நசாராக்களுடன் சேர்ந்து அவர்களின் முந்தைய நம்பிக்கையான திரித்து வத்தை நசாராக்களின் மதத்துடன் கலந்தார்கள். கிறிஸ்தவ சகாப்த த்தின் 200ம் ஆண்டில், செபிலியஸ் என்ற மதகுரு திரித்துவ கோட்பாட்டை முதன்முதலில் நசரேயன் மதத்துடன் இடைசெருகல் செய்தவராவர். இது ஒரு பிரெஞ்சு புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளது. பின்னர் அது அரபு மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு குர்ரத்துன்-நுஃபுஸ் என்ற தலைப்பு வழங்கப்பட்டது. இந்த முதல் இடைச்செருகல் பெரிய இரத்தக் களரியை ஏற்படுத்தியது. அந்த நேரத்தில் பல அறிஞர்கள் கடவுளின் 'தனித்துவம்' மற்றும் ஈசா 'அலைஹி-சலாம்' ஒரு மனிதர் மற்றும் தீர்க்கதரிசி' என்ற நம்பிக்கையைப் பாதுகாத்த னர். அலெக்ஸாண்ட்ரியாவின் ஏரியஸ் 300 ஆம் ஆண்டின் போது கடவுளின் 'தனித்துவத்தில்' நம்பிக்கையையும் திரித்துவ கோட்பாடு தவறானது மற்றும் வெற்றிடமானது என்றும் அறிவித்தார்.

325ல் கான்ஸ்டன்டைன் தி கிரேட், நிசீனில் கூட்டிய முதல் கவுன்சிலில், 'தனித்துவ' நம்பிக்கை நிராகரிக்கப்பட்டு ஏரியஸ் வெளியேற்றப்பட்டார். **பரிசுத்த ஆவி** என்பதன் அர்த்தம் என்ன வென்று அவர்களுக்கு தெரியாது. இது திரித்துவத்தின் மூன்றாவது கடவுளாக அவர்கள் கருதுகின்றனர். ஈசா 'அலைஹிஸலாம்' அவர்கள் பரிசுத்த ஆவி மூலம் அவரது தாயார் மேரியின் வயிற்றில் தோன்றினார் என்று அவர்கள் கூறுகிறார்கள். இஸ்லாம் மதம்

மலக்குகளின் தலவர், தேவதூதர் ஜிப்ரீலை (கேப்ரியல்) (அலைஹி-சலாம்) [1] **ருஹ்-உல்-குத்ஸ்** (பரிசுத்த ஆவி) என்று கற்பிக்கின்றது.

சமி ஃப்ரேஷேரி 1898/1316ல் **காமுஸுல் அஃ'லம்** பதிப்பில் எழுதினார்: இஸ்லாமிய தீர்க்கதரிசி முஹம்மது 'அலைஹி சலாம்'. அவரது தந்தை அப்துல்லா மற்றும் அவரது பாட்டனார் அப்துல்முத்தலிப் பின் ஹிஷாம் பின் அப்துல் மனாஃப் பின் குசே பின் கிலாப். வரலாற்றாசிரியர்களின் படி , அவர்

---

[1] அப்துல்லா அப்தி பின் தஸ்தான் முஸ்தபா மனஸ்திரின் (ரஹ்மதுல்லாஹி அலிஹி) அவர்களின் இஷா-**உல்-மெராம்** என்ற துருக்கிய புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளது. அவர்கள் 1885/1303ல் காலமானார். . அந்த புத்தகம், இஸ்தன்புளில்,முஸ்தபா பாஷா மதரஸாவிற்கு அருகில் உள்ள யஹ்யா எஃபெண்டியின் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

ரபீவுல்-அவ்வல் மாதத்தின் பன்னிரண்டாவது நாள் திங்கள்கிழமை காலை மக்காவில் பிறந்தார். இது, ஏப்ரல் இருபதாம் தேதி, கி.பி 571 இல், அவரது தாயார் வஹாபின் மகள் ஆமினா,மற்றும் அவரது பாட்டன் அப்துல்மனாஃப் பின் ஸுஹ்ரா பின் கிலாப் ஆவார். . கிலாப் அப்துல்லாவின் பெரிய தாத்தா. அப்துல்லா டமாஸ்கஸுக்கு வணிக பயணத்திலிருந்து திரும்பி வரும் போது, மதீனாவிற்கு அருகில் உள்ள **தார்-அன்-நபிகா** என்ற இடத்தில் காலாமாகி அடங்கப்பெற்றார். அவருக்கு அப்பொழுது இருபத்தைந்து வயது. அவர் தனது மகனைப் பார்க்கவில்லை.

முஹம்மது(அலைஹிஸலாம்) அவரது பால்குடி செவிலியர் ஹலிமாவுடன் அவர்களின் குலத்தினருடன் ஐந்து வருடங்கள் தங்கியிருந்தார். 115 பனி சைது என்று அழைக்கப்படும் இந்த குலத்தினர், அரேபியாவின் மிகவும் திறமை யான பேச்சாற்றல் மிக்கவர்கள். இந்த காரணத்திற்காக, முஹம்மது'அலைஹி சலாம்' அவர்கள் மிகவும் பேச்சாற்றல் மிக்கவர்களானார். அவருக்கு ஆறு வயதாக இருந்தபோது அவரது தாய் ஆமினா அம்மையார் அவரது அருள் பாலிக்கப்பட்ட தாய், அவரை மாமன்களிடம் மதீனாவுக்கு அழைத்துச் சென்றார், அங்கேயே காலமானார். அவரது செவிலியர், உம்மு அய்மன் அவரை மக்காவிற்கு கொண்டு சென்று அவருடைய தந்தைவழி பாட்டன் அப்துல்-உல்முத்தலிப்பிடம் ஒப்படைத்தார். அவருக்கு எட்டு வயதான போது அப்துல் உல்முத்தலிப் காலமானார். பின்னர் அவர் தனது சிறிய தந்தை அபு தாலிபின் வீட்டில் தங்கினார். அவருக்கு பன்னிரண்டு வயதாக இருந்தபோது அபுதாலிபுடன் டமாஸ்கஸுக்கு வணிகப் பயணத்தில் சேர்ந்தார். அவர் பதினேழு வயதாக இருந்தபோது அவரது தந்தை மாமா சுபைர் அவரை ஏமனுக்கு அழைத்துச் சென்றார்.

அவருக்கு இருபத்தைந்து வயதாக இருந்தபோது அவர் கதீஜா ரலியல்லாஹு தஆலா அன்ஹா அவர்களின் வணிக கரவனை டமாஸ்கஸுக்கு தலைமை தாங்கி சென்றார். அவர் தனது சிறந்த பழக்கவழக்கங்கள், அழகான தார்மீக தன்மை மற்றும் கடின உழைப்பு காரணமாக பிரபலமானார். இரண்டு மாதங்களுக்குப்

பிறகு அவர் ஹதிஜாவை மணந்தார். அவருக்கு நாற்பது வயதாக இருந்தபோது ஜிப்ரயில் (கெப்ரியல்)-'அலைஹிசலாம்' அவரைச் சந்தித்து அவருக்கு தீர்க்கதரிசனத்தின் செய்தியை அறிவித்தார். ஹதீஜா ரலியல்லாஹு தஆலா அன்ஹா அவர்களை முதலில் நம்பிக்கை கொண்டார். தொடர்ந்து அபுபக்கர், பின்னர் அலி (அவர், இன்னும் சிறுவராக இருந்தார்), பின்னர் சயீத் பின் ஹரிசா. அவருக்கு நாற்பத்தி மூன்று வயதாக இருந்த போது அனைவரையும் இஸ்லாத்திற்கு அழைக்க உத்தரவிடப்பட்டது. பிற ஜாதியினர் அவரைத் கடுமையாக துன்புறுத்தினார்கள். அவருக்கு ஐம்பத்து மூன்று வயது ஆனபோது அவர் மதீனா முனவ்வாரா வுக்கு குடிபெயர்ந்தார். அவர் ரபீவுல்-அவ்வலின் எட்டாவது நாள் திங்களன்று மதீனாவின் குபா கிராமத்திற்கு வந்தார். இது கிறிஸ்தவ சகாப்தத்தின் 622 வது ஆண்டில் செப்டம்பர் இருபதாம் தேதியில் நடந்தது. இந்த தினம் ஹஸரத் உமர் ரலியல்லாஹு த'ஆலா'வின் கிலாபத்தின் போது (அதாவது ஏ.டி.622), முஸ்லிம் வருடத்தின் தொடக்கமாகவும் முஹர்ரம் மாதத்தின் முதல் நாள் (புத்தாண்டு நாள்) ஹிஜ்ரி கமரி (சந்திர) வருடத்தின் ஆரம்பமாகவும் ஏற்றுக்கொள்ளப் பட்டது.அது ஜூலை மாதத்தில், அது பதினாறாம் நாள், வெள்ளிக்கிழமையாக இருந்தது. மற்றும் செப்டம்பர் இருபதாம் நாள் ஹிஜ்ரி ஷம்சி (சூரிய) ஆண்டின் முதல் நாளாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டு, காபிர்களுக்கு எதிரான முதலாவது புனித யுத்தம் (**பத்று)** யுத்தத்துக்காண கட்டளை அல்லாஹு தஆலாவினால் வழங்கப் பட்டது. தொள்ளாயிரத்து ஐம்பது-வலுவான காபிர்களின் இராணுவத்தில் ஐம்பதுபேர் கொல்லப்பட்டனர் மற்றும் நாற்பத்து நான்கு பேர் சிறைபிடிக்கப் பட்டனர். ஹிஜ்ரி மூன்றாம் ஆண்டில், **உஹது** யுத்தத்தில் காபிர்களின் எண்ணிக்கை மூவாயிரம், முஸ்லிம்கள் எழுநூறுபேர். எழுபத்தைந்து சஹாபிகள் ஷஹீதானார்கள். ஹிஜ்ரி நான்காம் ஆண்டில் **ஹன்தக்** (அகழி) யுத்தம் ஹிஜ்ரி ஐந்தாவது ஆண்டு **பனி முஸ்தலக்கின்** யுத்தம் நடைபெற்றது. இது அதே வருடத்தில் பெண்கள் தங்களை மறைத்துக் கொள்ளும்படி கட்டளையிடப்பட்டது. ஆறாவது ஆண்டில், **ஹுதைபியா** என்ற இடத்தில் **பைஅத் அல்-ரிள்வான்** என்ற அமைதி உறுதிமொழி எடுக்கப்பட்டது. ஏழாம் ஆண்டில், **ஹைபர்** யுத்தம் நடந்தது. கைசர் மற்றும் சோஸ்ரோக்களுக்கு இஸ்லாத்திற்கான அழைப்புக் கடிதங்கள் தயாரிக்க ப்பட்டு அனுப்பப்பட்டன. எட்டாம் ஆண்டில், ஹெராக்ளியஸின் கட்டளையின் கீழ் பைசாண்டைன் இராணுவத்திற்கு எதிராக **முட்டா** யுத்தம் நடத்தப் பட்டது, மக்கா கைப்பற்றப்பட்டது. மற்றும் **ஹுனைன்** யுத்தம் நடைபெற்றது. ஒன்பதாம் ஆண்டில், **தபூக்** யுத்ததுக்க்கான பயணம் மேற்கொள்ளப்பட்டது. பத்தாவது ஆண்டு **ஹஜ்சுள் விதா** (பிரியாவிடை ஹஜ்) செய்யப்பட்டது.

பதினோராம் ஆண்டு, பதின் மூன்று நாட்கள் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட பிறகு, அல்லாஹ்வின் அருளாக வந்த நபிகள் நாயகம் 'அலைஹ் சலாம்' அவர்களின் மஸ்ஜிதுக்கு அருகில் உள்ள அறையில் ரபியுல் அவ்வல் பன்னிரண்டாவது நாள் திங்களன்று காலமானார்கள். ரசூலுல்லாஹ் 'ஸல்லல்லாஹு அலைஹி வசல்லம்' அவர்கள் மறையும் பொது அவர்களுக்கு வயது அறுபத்தி மூன்று. ரசூலுல்லாஹ் 'ஸல்லல்லாஹு அலைஹி வசல்லம்' அவர்கள் எப்போதும் அன்பானவர், மென்மையாக பேசக்கூடியவர்கள். அவருடைய அருள்பெற்ற முகத்தில் மீது ஒரு நூர் (ஒளி) பிரகாசித்து கொண்டி ருக்கும். அவரைப் பார்த்தவர்கள் அவரை காதலிப்பார்கள். அவரது மென்மை, பொறுமை,அழகான தார்மீக பழக்கங்கள் ஆயிரக்கணக்கான புத்தகங்களில் எழுதப்பட்டுள்ளன. அவர்களுக்கு கதீஜா 'ரலியல்லாஹு த ஆலா அன்ஹா' விலிருந்து நான்கு மகன்கள் மற்றும் நான்கு மகள்கள் இருந்தனர். மேலும் அவருக்கு எகிப்தின் மரியாவிலிருந்து ஒரு மகன் இருந்தார். அவர் உயிருடன் இருந்தபோது ஹசரத் பாத்திமா (ரலியல்லாஹு த ஆலா அன்ஹா) வைத் தவிர மற்ற குழந்தைகள் இறந்துவிட்டனர். **காமுஸூல் அ'ஃலமிலி**ருந்து எங்கள் மேற்கோள் இத்துடன் முடிவடைகிறது.

இமாம் அல்-கஸ்ஸாலி தனது **கிமியா-சஆதத்** (முடிவற்ற பேரின்பம் ,ரசவாதம்) என்ற புத்தகத்தில் எழுதினார்கள்: "அல்லாஹுதஆலா தனது மனித படைப்புக்கு நபிமார்களை அனுப்பினான். இந்த உயர்ந்த தூதர்கள் மூலம் அவன் தனது மனித படைப்புகளுக்கு இன்பத்தை அடைவதற்கு வழிகாட்டும் மற்றும் வழிநடத்தும் செயல்கள் பற்றியும், பேரழிவுகளுக்கு வழி நடத்தும் செயல்கள் பற்றியும் அறிவித்தான். அவர்களில் மிக உயர்ந்தவர் கடைசி தீர்க்கதரிசியாக வந்தவர் முஹம்மது 'சல்லள்ளாஹு அலைஹி வசல்லம்'. அவர் உலகில் உள்ள அனைத்து மக்களுக்கும், அனைத்து நாடுகளுக்கும் தீர்க்கதரிசி. உலகம் முழுவதும் உள்ள அனைத்து மக்களும் அந்த உயர்ந்த நபியை நம்பிக்கை கொள்ள வேண்டியது கட்டாயமாகும். அவரை நம்பிக்கை கொண்டு அவரை பின்பற்றும் நபர் உலகிலும், மறு உலகிலும் நற்பேறுகளை பெறுவார். மறுபுறம், அவரை நம்பாதவர்கள் மறுமையில் என்றென்றும் வேதனை அனுபவிப்பார்கள்.

# முடிவுரை

சுருக்கமாக, தீன் என்பது; நம்பிக்கைகள், நடத்தை, வார்த்தைகள் மற்றும் அணுகுமுறைகள், ஆகியவற்றைக் கற்பிப்பதற்கும், வணக்கங்களை நிறை வேற்றுவதற்கும், மற்றும் இந்த உலகத்திலும் மறுமையிலும் மகிழ்ச்சியை அடைவதற்கான வழிகளை காட்டுவதற்காகவும் அல்லாஹுு தஆலாவினால் தீர்க்கதரிசிகளுக்கு வெளிப்படுத்திய விதிகளின் அமைப்பு. அரைகுறை மனித மனத்தினால் புனையப்பட்ட மாயைகள் மற்றும் கற்பனை கதைகள் தீன் என்று அழைக்கப்பட தகுதியற்றவை.

மார்க்க கட்டளைகள் மற்றும் தடைகளை கற்பதற்கும் கீழ்ப்படிவதற்கும் மனம் பயனுள்ளதாக இருக்கும். இருந்தும், அது கட்டளைகள் மற்றும் தடைகளின் பின்னணியிலுள்ள மர்மங்களையும், அதிஉச்ச தெய்வீக காரணங்களையும் புரிந்துகொள்ள முடியாது. அதை ஆய்வுசெய்து விளங்கவும் முடியாது. இது போன்ற அமானுஷ்ய உண்மைகளை அறிய அல்லாஹுுதஆலா அவைகளை அவனுடைய தீர்க்கதரிசிகளுக்கு

அறிவுறுத் தினால் அல்லது அவ்லியாவின் இதயங்களுக்கு அவைகளை வெளிப்படுத் துவதால் மட்டுமே அவற்றை கற்றுக்கொள்ள முடியும். மேலும் இது, அல்லாஹு தஆலா வினால் மட்டுமே வழங்கப்பட்ட ஆசீர்வாதமாக இருக்க முடியும்.

இம்மையிலும் மறுமையிலும் மகிழ்ச்சியை அடைவதற்கும் அல்லாஹு தஆலாவின் தகுதியான அன்பை பெறுவதற்கும் ஒரு முஸ்லிமாக இருக்க வேண்டியது அவசியம். முஸ்லீம் அல்லாதவர் **காபிர்** (நம்பிக்கையற்றவர்) என்று அழைக்கப்படுகிறார். ஒருவர் **முஸ்லீமாக** இருப்பதற்கு **ஈமான்** (நம்பிக்கை) மற்றும் **வணக்கம்** (வழிபாடு) அவசியமாகின்றது. வணக்கம் என்பது தன்னை முஹம்மது 'அலைஹி சலாமின்' **அஹ்காம் இஸ்லாமியா** வை வார்த்தைகளிலும் செயல்களிலும் முற்றாக அடிபணிந்து பின்பற்று வதாகும். பரிந்துரைக்கப்பட்ட வணக்கங்கள் அவை அல்லாஹுத ஆலாவின் கட்டளைகள் என்பதால் மட்டுமே செய்யப்படுகின்றன. அவற்றை எந்த உலக நன்மைகளையும் எதிர்பார்க்காமல் செய்யப்பட வேண்டும்.

**அஹ்காம் இஸ்லாமியா** (வரையறுக்கப்பட்ட கோட்பாடுகள், ஷரீஅத்) என்பது **குர்ஆன்-அல்-கரீம்** இல் போதிக்கப்பட்டு மற்றும் ஹதீஸ் ஷரீஃப் களின் மூலம் விளக்கி கூறப்பட்ட கட்டளைகள் மற்றும் தடைகள் என்று பொருள். அவற்றை நாம் ஃபிக்ஹ் (குர்ஆனில் கரீம் மற்றும் போதனைகளை ஹதீஸ் ஷெரீஃப்களை அடிப்படையாகக் கொண்ட இஸ்லாமிய சட்டம்) புத்தகங்களிலிருந்து கற்றுக்கொள்ள முடியும். அவை **இல்முல் ஹால்** (இஸ்லாமிய அறிவு) புத்தகங்கள் என்று அழைக்கப்படுகிறது.

அஹ்காம் இஸ்லாமியாவை கற்றுக்கொள்வது ஆண்கள் பெண்கள் சமமாக அனைவருக்கும் ஃபர்ளுஅய்ன் ஆக இருக்கும். அதாவது மார்க்க கோட்பாடு களை (செய்யும்படி கட்டளை இடப்பட்டவை அல்லது செய்யக் கூடாது என்று தடை செய்யப்பட்டவை) ஒவ்வொரு முஸ்லிம் தனிமனிதனும் அறிந்திருக்க வேண்டும். இந்த கோட்பாடுகள் மனிதர்களை ஆன்மீக மற்றும் உடல் நோய்களிலிருந்து பாதுகாக்கும் தீர்வுகளாகும். மருத்துவம், கலை, வர்த்தகம், சட்டம் போன்றவற்றை கற்பதற்கு ஒரு நபர் உயர்நிலைப் பள்ளியில் அல்லது ஒரு பல்கலைக்கழகத்தில் பல ஆண்டுகள் எடுக்கும். அதே வழியில், அரபு மொழியை படிப்பதற்கும் **இல்முல்-ஹால்** புத்தகங்களைக் கற்பதற்கும் பல வருடங்கள் படிக்க வேண்டும். இவற்றைக் கற்றுக்கொள்ளாத மக்கள் பிரிட்டிஷ் உளவாளிகளின், கூலிப்படையினரின், இஸ்லாத்தின் துரோகி களின், இஸ்லாமிய அறிஞர் என்ற பெயரில் இருக்கும் முனாபிக்குகளின் இட்டுக்கட்டப்பட்ட பொய்கள் மற்றும் அவதூறுகளுக்குள் எளிதில் சிக்கிக் கொள்வார்கள். அவர்கள் இந்த உலகிலும் மறு உலகிலும் பேரழிவை மற்றும் முடிவுறாத வேதனைகளை அடைவதற்கு அது காரணமாக இருக்கும்.

**கலிமத் அஷ்ஷஹாதா**'வை மொழிவது மற்றும் அதன் மீது நம்பிக்கை வைப்பது **ஈமான்** என்று அழைக்கப்படுகிறது. கலிமத் அஷ்ஷஹதாவை கூறி இந்த வார்த்தையால் கூறப்பட்ட உண்மைகளை நம்பிக்கை கொள்ளும் நபர் மு'ஃமின்(விசுவாசி) என்று அழைக்கப்படுகிறார். கலிமத் அஷ்-ஷஹாதா **"அஷ்'ஹது அன் லா இலாஹ இல்லல்லாஹ், வஅஷ்'ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வறசூலுஹு"** இதன் பொருள்: "வணங்கப்படு வதற்கு இலாஹ் இல்லை அல்லாஹ்வைத் தவிர; மற்றும் முஹம்மது 'அலைஹி சலாமை' அவனது மனித படைப்பு, அவனது தூதர், அவரை மனித இனம் அனைத்துக்கும் வழிகாட்டியாக அனுப்பியுள்ளான். "அவருக்குப் பின் எந்த நபியும் வரமாட்டார். என குறிப்பிடப்பட்டுள்ளது.

நன்கு அறியப்பட்ட **மரகில் ஃபலாஹ்** என்ற ஹனஃபி மத்ஹப் ஃபிக்ஹ் புத்தகம். இதில் ஒருவர் தவறவிட்ட தினசரி தொழுகை தொழுகையை எப்படி செய்வது என்பது பற்றிய விஷயத்தின் கீழ் அடிக்குறிப்பில் பின்வருமாறு கூறுகிறது: "அல்லாஹு தலா இருப்பதாக நம்புவது மட்டும் இஸ்லாம் இல்லை. அந்த அல்லாஹ்வுக்கு பங்காளிகள் சேர்க்கும் நிராகரிப்பவர்கள் கூட அல்லாஹு தலா இருப்பதாக நம்புகிறார்கள். ஒரு முமின் (விசுவாசி) ஆக இருப்பதற்கு, அவன் ஒருவனாக இருக்கிறான், மற்றும் உயிருடன் பரிபூரண பண்புகளைக் கொண்டுள்ளான். சர்வ வல்லமை மற்றும் சர்வ அறிவாற்றல் உள்ளவன், நாட்டம் உள்ளவன், எல்லாவற்றையும் பார்ப்பவன், எல்லாவற்றை யும் கேட்பவன், அவனைத் தவிர வேறு எந்த படைப்பாளனும் இல்லை என்று நம்புவது அவசியமானது."

முஹம்மது 'அலைஹி சலாம்' அவனுடைய தூதர், தீர்க்கதரிசி என்பதன் பொருள்: அவருடைய போதனைகள் அனைத்தும் அல்லாஹுவினால் கட்டளையிடப்பட்டவை என்று நம்புவது. அல்லாஹு தலா இஸ்லாத்தை அவருக்கு வெளிப்படுத்தினான். அதாவது குர்ஆன் அல்-கரீம் மூலம் அவருக்கு ஈமான் மற்றும் அஹ்காமுல் இஸ்லாமியாவின் போதனைகளை வெளிப்படுத்தினான். கடைபிடிக்க வேண்டிய கட்டளைகள் ஃபர்ளு என்றும் தடைகள் ஹராம் என்றும் அழைக்கப்படுகின்றன. மொத்தத்தில் அவை அஹ்காமுல் இஸ்லாமியா என்று அழைக்கப்படுகின்றன.

ஒரு நபர் ஒரு முஸ்லீம் ஆனவுடன், தினசரி( ஐந்து வேளை) தொழுகை அவருக்கு ஃபர்ளு ஆகின்றது. மற்றும் மக்களிடையே பொதுவாக அறியப்பட்ட இஸ்லாமிய போதனைகளை கற்பது அவருக்கு பர்ளு ஆகின்றது. அவர் அவற்றை கற்றுக்கொள்ள தேவையற்றது என்று அவர் சொன்னால் அவர் தனது ஈமானை இழந்து ஒரு காபிர் (நிராகரிப்பவர்) ஆகிறார்.

எங்கள் மக்துபாத் எனும் புத்தகத்தில் 266 வது கடிதத்தில் (இமாம் ரப்பானி 'குத்திச சிர்ரஹுஅவர்களின் கடிதங்கள்)

எழுதப்பட்டுள்ளது காபிர்களாக இறந்தவர்கள் மன்னிக்கப்பட மாட்டார்கள், நரகத்தில் நித்திய நெருப்புக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று கூறுகிறார்கள். தனது ஈமானை இழந்த நபர் முர்த்தத் (மதம் மாறியவர், துரோகி ) என்று அழைக்கப்படுகிறார்.

**குர்ஆன் அல்-கரீமில்** மற்றும் ஹதீஸ் ஷெரீஃப்களில் கற்பிக்கப்பட்ட உண்மை கள் குறித்து சரியான நம்பிக்கை வைத்திருப்பவர்கள் **அஹ்லுஸ் ஸுன்னா** (சுன்னி) முஸ்லிம்கள் என்று அழைக்கப்படுகின்றனர். அல்லாஹு தஆலா மிகவும் இரக்கமுள்ளவன் ஆகையால் எல்லாவற்றையும் வெளிப் படையாக அறிவிக்கவில்லை. அவன் சில உண்மைகளை இரகசியமான மொழியில் வெளிப்படுத்தினான். **குர்ஆன் அல்-கரீம்** மற்றும் ஹதீஸ் ஷரீஃப்களை நம்பும் அதேவேளை அவற்றின் சில பகுதிகளை விளக்குவத்தில் அஹ்லு சுன்னாவின் அறிஞர்களுடன் உடன்படாதவர்கள் **மத்ஹப் அற்றவர் கள்** என்று அழைக்கப்படுகிறனர். மத்ஹப் இல்லாத மக்களில், இரகசியமாக வெளிப்படுத்தப்பட்ட ஈமானின் போதனைகளை தவறாக புரிந்து விளக்கம் கூறுபவர்கள் **பித்அத்** உடையவர்கள், **வழி தவறியவர்கள்** என்று அழைக்க படுகிறார்கள். வெளிப்படையாக அறிவிக்கப்பட்டவைகளை தவறாக விளங்கு பவர்கள் **முல்ஹிது**கள் என்று அழைக்கப்படுகிறார்கள். முல்ஹித் ஆன ஒருவர் தன்னை முஸ்லிமாக கருதினாலும் அவர் காபிர். ஆனால், ஒரு பித்’ அத்தான நபர் ஒரு காபிர் அல்ல. இருப்பினும், அவர் நிச்சயமாக நரகத்தில் மிகவும் கசப்பான வேதனைக்கு உள்ளாக்கப்படுவார்.

அஹ்லுஸ் சுன்னா உலமாக்களில் இஸ்லாமிய சட்டங்கள் மற்றும் இறை ஞானத்தில் விசேட நிபுணத்துவம் கொண்ட இஸ்லாமிய அறிஞர்கள் மிகவும் உயர்ந்தவர்கள் சரியான பாதையில் உள்ளவர்கள். சூடான் நாட்டின் மிக நல்லொழுக்கமுள்ள மனிதர், முஹம்மது சுலைமானின் **மஹ்ஸான் உல்-ஃபிக்ஹில்-குப்ரா** எனும் புத்தகம் மிகவும் மதிப்புமிக்கது. மறுபுறம், முஸ்லீம்களை போல் காட்டிக்கொள்ளும் காஃபிர்கள் குர்ஆன் அல்-கரீமின் வெளிப்படையான போதனைகளை அவர்களின் சொந்த மனத்திறன்கள் மற்றும் அறிவுக்கேற்ப விளக்குபவர்கள், மற்றும் முஸ்லீம்களை தவறாக வழி நடத்துபவர்கள் **ஜிந்திக்கு**கள் என்று அழைக்கப் படுகிறார்கள்.

அஹ்காமுல் இஸ்லாமியாவில் இரகசியமாக வெளிப்படுத்தப்பட்ட தகவல் களிலிருந்து அஹ்ல்-சுன்னாவின் வெவ்வேறு அறிஞர்கள் வெவ்வேறு அர்த்தங் களையும் முடிவுகளையும் எடுத்தனர். இவ்வாறு அஹ்காமுல் இஸ்லாமியா வின் மத நடைமுறைகளை பேணுவதற்காக நான்கு வெவ்வேறு மத்ஹபுகள் தோன்றின. அதாவது, ஒருவர் மார்க்க நடைமுறைகளை பின்பற்றி கொள்வதற்காக. இந்த மத்ஹபுகள் **ஹனாஃபி, மாலிகி, ஷாஃபி** மற்றும் **ஹன்பலி**. இந்த நான்கு மத்ஹபுகளும் ஈமான் (நம்பிக்கை)

தொடர்பான விஷயங்களில் உடன்படுகின்றன. அவை வழிபாடு முறைகளில் மட்டுமே சற்று வேறுபடுகின்றன. இந்த நான்கு மத்ஹபுகளைச் சேர்ந்தவர்கள் இஸ்லாத்தில் ஒருவருக்கொருவர் சகோதரர்கள் என்று கருதுகின்றனர். ஒவ்வொரு முஸ்லிமும் நான்கு மத்ஹப்களில் ஏதேனும் ஒன்றைப் தெரிவு செய்யவும் பின்பற்றவும், அந்த மத்ஹபுக்கு ஏற்ப வழிபட்டு செயல்களை செய்யவும் பூரண சுதந்திரம் உண்டு. மேலும், முஸ்லிம்கள் நான்கு மத்ஹபுகளாக பிரிவது அல்லாஹு தஆலா முஸ்லிம்கள்மீது உள்ள இரக்கம் மற்றும் பெரிய கருணையின் விளைவாகும். ஒரு முஸ்லீம் தான் இருக்கும் மத்ஹபுடன் இணக்கமாக ஒரு வழிபாட்டைச் செய்வதில் பிரச்சினைகள் இருந்தால், அவர் மற்றொரு மத்ஹப்பை பின்பற்றி அந்த வணக்கத்தை எளிதாக செய்யமுடியும். ஆனால், மற்றொரு மத்ஹபை பின்பற்றுவதற்கான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். **முடிவற்ற பேரின்பம் என்ற** எங்கள் ஆங்கில புத்தகத்தில் எழுதப்பட்டது.

மிக முக்கியமான வணக்கம் தொழுகை ஆகும். ஒரு நபர் தொழுபவரானால் அவர் ஒரு முஸ்லிம் என்பதை புரிந்து கொள்ள முடியும். ஒரு நபர் தொழ வில்லையாயின் அவர் ஒரு முஸ்லிமா என்பது சந்தேகமாக இருக்கும். தொழுகையை மதிக்கும் ஒருவர் அக்கறையின்மை காரணமாக அதை புறக்கணிக்கிறார், அவ்வாறு செய்யாததற்கு அவருக்கு ஒரு நல்ல காரணம் இல்லை என்றால், மாலிகி, ஷாஃபி மற்றும் ஹன்பாலி மத்ஹபின் சட்டப்படி, (அவர் இந்த மத்ஹபுகளில் ஒன்றில் இருந்தால்) அவருக்கு மரண தண்டனை கொடுக்கப்படும். ஹனாபி மத்ஹபில் அவர் ஐந்து நேர தொழுகைகளை தொடங்கும் வரை அவர் கைதியாக வைக்கப்படுவார் மற்றும் தவிர்த்துவிட்ட தொழுகைகளை நிறைவேற்றுமாறும் கட்டளையிடப்படும். இது **துர்ருல்-முந்தகா** மற்றும் **இப்னி ஆபிதீன்** மற்றும் (எங்கள் ஆங்கில புத்தகம் **Book of Salat**'ல் (துருக்கியில் ஹக்கிகத் பதிப்பகத்தால் வெளியிடப்பட்டது.) அதில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

"தினசரி ஐந்து தொழுகைகளைத் தவிர்ப்பது, மற்றும் உரிய காரணமின்றி அதற்குரிய நேரத்தில் நிறைவேற்றாமல் இருப்பது பெரும் பாவம். இந்த பாவத்தின் மன்னிப்புக்காக ஒரு ஹஜ் (யாத்திரை) செய்ய வேண்டும் அல்லது தவ்பா (மனந்திரும்புதல்) செய்ய வேண்டும். இதற்காக தொழுகையை அல்லது , விடுபட்ட தொழுகைகளை நிறைவேற்றாமல் செய்யப்படும் தவ்பா ஏற்றுக்கொள்ள படமாட்டாது. ஒருவர் தினசரி **ரவாத்திப்**'ஆன சுன்னத்தான தொழுகைகளை செய்வதற்கு முன் தவிர்க்கப்பட்ட ஃபர்ளான தொழுகை களை நிறைவேற்றி ஹராம் நிலையில் இருந்து தன்னை விடுவிக்கப்பட வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட மார்க்க கிதாபுகளில் எழுதப்பட்டுள்ளது ஒரு நபர் ஃபர்ளான தொழுகைகள் கடனாக (நிறைவேற்றாமல்) இருக்கும் போது அவருடைய மேலதிக சுன்னத்தான தொழுகைகள் வணக்கங்கள் எவ்வளவு (ஸஹீஹ்) ஒழுங்காக நிகழ்த்தப்பட்டாலும்

அவை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. அதாவது, அவர் அதற்கான அல்லாஹு தஆலா வாக்களித்த (தவாபை) நன்மைகளை பெறமாட்டார். **எண்ட்லெஸ் பிளிஸ்** எனும் எங்கள் ஆங்கில நூலில் அவை மேற்கோள் காட்டப்பட்டுள்ளன.

இஸ்லாத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொருத்தமான காரணங்களுக்காக ஒருவர் தொழுகையை விடுவது பாவம் அல்ல. ஆனால் நான்கு மத்ஹபு களும், ஒருவர் காரணத்துடனோ அல்லது காரணமின்றியோ தவறவிட்ட அல்லது தவிர்த்த தொழுகைகளை விரைவில் செய்யவேண்டும் என்பதை ஏற்றுக் கொள்கின்றன. ஹனபி மத்ஹபில் மட்டும், ஒருவரின் வாழ்வுக்காக உழைப்பதற்கு தேவையான நேரம்வரை அவற்றை ஒத்திவைக்க அனுமதிக்க ப்படுகிறது. ரவாதிப் என்று அழைக்கப்படும் சுன்னத்தான தொழுகைகளை அல்லது மேலதிக சுன்னத்தான தொழுகைகளை ஹதீஸ் ஷெரீஃப்கள் மூலம் அறிவுறுத்தப்பட்டபடி ஒத்திவைக்க அனுமதிக்கப் படுகின்றது. அதாவது, 'களா' வான தொழுகைகளை இந்தக் காரணங்களுக்காக ஒத்திவைக்க முடியும். மற்ற மூன்று மத்ஹபுகளிலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட காரணங்களு க்காக 'களா' வான தொழுகைகள் இருப்பவர்கள் எந்தவிதமான சுன்னத்தான தொழுகைகளை நிறைவேற்றுவதற்கு அனுமதியில்லை. அது ஹராம் ஆனது.

நல்ல ஏற்றுக்கொள்ளப்பட்ட காரணங்களுக்காக தவிர்க்கப்பட்ட தொழுகை களும், காரணமிலாமல் புறக்கணிக்கப்பட்ட தொழுகைகளும் ஒன்றல்ல என்று **துர்ருல் முக்தார், இப்னி ஆபிதீன் துர்ருல்-முந்தகா, மறகில் பலாஹ்**வின் குறிப்பு தஹ்தாவி மற்றும் **ஜவ்ஹாரா** ஆகிய ஃபிக்ஹ் கிதாப்களில் எழுதப்பட்டுள்ளன.

**P.O. Box 4249 – கடுனா, நைஜீரியா** **1 வது. நவ. 1991**

**“பிஸ்மில்லாஹிர்-ரஹ்மானிர்-ரஹீம்”**

‘அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி தஆலா வபறகாத்துஹு’ அன்பான சகோதரர்(களு)க்கு, நான் இந்த கடிதத்தை எனக்கும் எனது குடும்பத்தினருக்கும் உங்கள் நிறுவனத்திலிருந்து இஸ்லாமிய நூல்களை எதிர்பார்த்து எழுதுகிறேன்.

எனக்கு குறிப்பாக இஸ்லாத்தைப் பற்றி, அதன் வரலாறு மற்றும் பொதுவான அதன் கொள்கைகள் பற்றி ஆழமான புரிதல்இல்லை என்பதே எனது பிரச்சினை. ஏனெனில் முற்றிலும் இஸ்லாத்துக்கு அப்பாற்பட்ட கணிசமான மேற்கத்திய அறிவை பெற்ற எனக்கு, இது எனது கவலையின் பிறப்பிடமாக இருக்கின்றது. இஸ்லாத்தில் எந்தவொரு பற்றும் இல்லாமல் என் உள்ளத்தில் நான் அறியாம லேயே ஏற்படுத்தப்பட்டுள்ள கட்டமைப்பும் சார்பு மனப் பான்மையும் எனக்கும் எனது நம்பிக்கைக்கும் எப்போதுமே கடுமையான சேதத்தை ஏற்படுத்துகின்றது. நான் இந்த சார்புகளுடன் ஒரு நிரந்தர போராட்டத்தில் இருப்பதாக தெரிகிறது. பகுத்தறிவு செய்யும் எனது போக்கில் அடிக்கடி வெளிப்படும் போராட்டம் நமது புனித குர்ஆன் இல் உள்ள சில முக்கியமான விடயங்களுடனும் எனது போக்கில் பகுத்தறிவு மூலம் விளங்குவதற்கு முயல்கின்றது. மேலும், என் முஸ்லீம் அல்லாத பல சகாக்கள் மற்றும் நண்பர்கள், குறிப்பாக, கிறிஸ்தவர்கள் எப்போதும் இஸ்லாத்தைப் பற்றி, குர்’ஆனைபற்றி, முஸ்லீம்கள் சம்பந்தப்பட்ட சமகால பிரச்சினைகள் பற்றி மற்றும் பொதுவாக என்னிடமிருந்து இஸ்லாமிய எல்லைகள் பற்றி அறிய முயல்கின்றனர். நான் அவர்களுக்கு போதுமான அளவு பதிலளிப் பதற்கு பெரும்பாலும் நான் கையாலாகாதவனாக இருப்பதைக் காண்கிறேன். அவர்களின் விசாரணைகளுக்கு என்னால் திறம்பட, பதில்கூற முடியவில்லை. ஏனென்றால் என்னிடம் பலமான விரிந்து பட்ட இஸ்லாமிய அறிவு இல்லை. இஸ்லாமிய அறிவு நூற்களும் இல்லை. மேலும், எனக்கு அரபு மொழி புரியவில்லை. நான் இஸ்லாத்தை தெரிந்து கொள்ள வேண்டும்

என்ற எனது ஆழ்ந்த ஆர்வம் மற்றும் அனைத்தையும் அறியும் மன உறுதி காரணமாக அந்த விஷயத்தில் நிறைய முயற்சி செய்கின்றேன்.

எனவே, எனக்கு உங்கள் உதவி மிகவும் தீவிரமாக தேவைப்படுகிறது. இன்ஷா -அல்லாஹ், நீங்கள் எனக்கும் என் குடும்பத்திற்கும் நல்ல அறிவை வழங்குவதன் மூலம் எங்கள் நம்பிக்கையை வலுப்படுத்த நிறைய உதவ முடியும் என்று உண்மையிலேயே நம்புகிறேன். இது எங்களை போதுமான அளவில் தயார்படுத்தும், இன்ஷா அல்லாஹ். இஸ்லாமிய ஒளியை நமக்குள் நமது சூழலில், மற்றும் அதற்கு அப்பால் கூட திறம்பட பரப்ப வேண்டும்.

நான் குறிப்பாக உங்களுக்கு நன்றியுள்ளவனாக இருப்பேன். எனது வேண்டுகோளுக்கு உங்கள் அன்பான பதிலில் வெளியீடுகள் அடங்கும் இஸ்லாமிய மத அறிவு பொதுவாக அதே போல் எங்கள் சொந்த ஆன்மீக வளர்ச்சிக்கு நீங்கள் பொருத்தமாகவும் பயனுள்ளதாகவும் கருதும் வேறு எந்த உதவியையும் உங்களிடம் எதிர்பார்த்து சாதகமான பதிலுக்காக ஆவலுடன் காத்திருக்கிறேன்.

வஸ்ஸலாம்.
இஸ்லாத்தில் உங்கள் சகோதரர்
இஸ்மாயில் அல்ஹாசன் சதி

**BOOKS PUBLISHED BY HAKIKAT KITABEVI**

**ENGLISH:**

1– Endless Bliss I, 304 pp.
2– Endless Bliss II, 400 pp.
3– Endless Bliss III, 336 pp.
4– Endless Bliss IV, 432 pp.
5– Endless Bliss V, 512 pp.
6– Endless Bliss VI, 352 pp.
7– The Sunni Path, 128 pp.
8– Belief and Islam, 128 pp.
9– The Proof of Prophethood, 144 pp.
10– Answer to an Enemy of Islam, 128 pp.
11– Advice for the Muslim, 352 pp.
12– Islam and Christianity, 336 pp.
13– Could Not Answer, 432 pp.
14– Confessions of a British Spy, 128 pp.
15– Documents of the Right Word, 496 pp.
16– Why Did They Become Muslims? 304 pp.
17– Ethics of Islam, 240 pp.
18– Sahaba ‘The Blessed’, 560 pp.
19– Islam’s Reformers, 320 pp.
20– The Rising and the Hereafter, 112 pp.
21– Miftah-ul-janna, 288 pp.
22– Book of Namâz, 240 pp.
23– O Son, 352 pp.

**DEUTSCH**:

1– Islam, der Weg der Sunniten, 128 Seiten
2– Glaube und Islam, 128 Seiten
3– Islam and Christentum, 352 Seiten
4– Beweis des Prophetentums, 160 Seiten
5– Geständnisse von einem Britischen Spion, 176 Seiten
6– Islamische Sitte, 288 Seiten
EN FRANÇAIS:
1– L'Islam et la Voie de Sunna, 112 pp.
2– Foi et Islam, 160 pp.
3– Islam et Christianisme, 304 pp.
4– Proof of Lvidence, et temps de Priers, 144 pp.
5– Ar-radd al Jamil, Ayyuha'l-Walad (Al-Ghazâli), 96 pp.
6– Al-Munqid min ad'Dalâl, (Al-Ghazâli), 64 pp.

**SHQIP:**

1- Besimi dhe Islami, 96 fq.

2- Libri Namazit, 208 fq.

3- Rrefimet e Agentit Anglez, 112 fq.

**ESPAÑOL:**

1- Creencia e Islam, 112.
2- Libro Del Namâz, 224.

**PO RUSSKI**

1- Vsem Nuynaq Vera, (128) str.
2- Priznaniq Anglijskogo Wpiona, (128) str.
3- Kitab-us-Salat (Molitvennik) Kniga o namaze, (224) str.
4- O Syn Moj, (256) str.
5- Religq Islam, (320) str.

**BOSHNJAKISHT:**

1- Iman i Islam, (128) str.
2- Odgovor Neprijatelju Islama, (144) str.
3- Knjiga o Namazu, (192) str.
4- Nije Mogao Odgovoriti, (432) str.
5- Put Ehl-i Sunneta, (128) str.
6- Ispovijesti Jednog Engleskog Spijuna, (144) str.

**Note:** Add Arabic pages